# மானிடம் வீழ்ந்ததம்மா

**இ.தியாகலிங்கம்**

**சுயவெளியீடு**

**உதவி**

**lulu.com**

# MAANIDAM VEEZNTHATHAMMAA

**(A new Novel from Norway)**

**First Edition**

**March  2015**

ISBN:978-1-329-02323-9

**Publication Editor**

**R.Thiagalingam**

**Tyristubbveien 77**

**0687 Oslo**

**Norway**

**TEL:004747235303**

**Pages: 168**

**Printed & Published by**

**Lulu.com**

# என்னுரை

மனிதர்களாகிய நாங்கள் யேசுபிரானாய், புத்தபிரானாய், காந்தியாய் மனிதம் போதித்த மகான்கள் போல மனிதத்தின் உச்சியை அடையவேண்டாம்; அதன் பாதாளத்தைத் தரிசிக்காமல் இருப்பதே நாங்கள் செய்யும் பாக்கியமாகும். மனிதம் மதிக்கும் மனிதனாக இருத்தல் மனிதப்பிறவியின் பயன். இந்த நவீன உலகத்தில் மனிதம் மிதிக்கப்படுகிறது. அதற்குச் சுயநலத்தோடு மனச்சாட்சிக்கு எதிராக நியாயம் கற்பிக்கப்படுகிறது. அகிம்சை பேசிய காந்திதேசமே, குருதி தோய்ந்த கைகளை முதுகிற்குப்பின் மறைத்த வைத்தவண்ணம் சட்டாம்பி வேலை செய்கிறது.

வரலாற்றை மனிதன் மறக்கும் போது அது மீண்டும் மீண்டும் உயிர்பெற்றுக் கொள்ளும். உலகம் பல மனிதநேயச் சுடலைகளை உருவாக்கி வைத்திருக்கிறது. வசதிக்கு ஏற்ப அவற்றை மறக்கப் பார்க்கிறது. சுடலைகளை மறந்ததால் உருவாக்கப்பட்ட பிணமலைகளை இரண்டாம் உலகயுத்தம் கண்டது. கருவாடாக்கப்பட்ட நிர்வாணப் பிணங்களின் காட்சிகள் மனிதநேயரின் மனதைவிட்டு என்றும் அகலா. அந்தக் காட்சிகள் நினைவில் உள்ள மனிதனால் அதே தவற்றை மீண்டும் செய்ய முடியாது. மனிதன், வாழ்வதற்காய் மறதியோடு படைக்கப்பட்ட மிருகம். அதற்காக வரலாற்றை மறந்தால் அது மீண்டும் மனிதத்திற்குச் சோதனையாகும். இன்றைய யூதர்களாக நிறமான வந்தேறுகுடிகள் ஐரோப்பா எங்கும் பரந்து வாழ்கிறார்கள். மனிதனின் மிருகமுகம் முன்வருகிறது. சுதேசிகளின் வெறுப்பு, நிறமான மனிதர்கள்மேல் பாய்கிறது.

உலகம் பிரயாணிக்கக்கூடாத தடத்தில், தெரிந்தோ தெரியாமலோ பிரயாணிக்கிறது. வரலாறு மீண்டும் உயிர் பெற்றுவிட்டது. போகங்கள் தங்களுக்கு மட்டுமே என்கின்ற சுயநலத்தில் வெறுப்புகள் விளைகின்றன. மனிதம் வதைபடுகிறது. பொருளாதாரத்தில் மனிதநேய ஆதாரங்கள் அடிபட்டுப் போகின்றன. சிறிய தவறுகள் தட்டிக் கேட்கப்படாத போது, அதுவே பெரிய தவறுகளின் விளைநிலமாகிறது. மனிதம் வஞ்சிக்கப்படுவதைப் பார்த்தும் பாராமல் இருப்பது எதற்கு உரம் இடுவதற்கு? மனிதகுலம் இனியாவது விழிப்படைய வேண்டும். நாசகாரமான அந்த வரலாற்றை மீண்டும் ஓடவிடலாகாது. அதை நிறுத்தப் போராடவேண்டும்.

அந்த நாசகாரம் உலகத்தில் மீண்டும் ஏற்படக்கூடாது என்கின்ற ஆதங்கத்தில் இந்த நாவல் எழுதப்பட்டது. நான் நாவலுக்குள் செல்லவில்லை. அது உங்கள் சுவைப்பிற்கு.

இந்த நாவலை ஈழத்து இலக்கிய மேதை அமரர் எஸ்பொவின் பார்வைக்கு அனுப்பியிருந்தேன். அவர் அதை வாசித்துவிட்டு, தியாகலிங்கத்தின் உன்னதமான படைப்புகளில் இதுவும் ஒன்று எனக் கூறினார். முதிர்ந்த இலக்கிய மேதையின் அந்த வார்தைகள் என் பாக்கியம். இலக்கிய உலகத்திற்கும் எனக்குமான தொடர்பை ஏற்படுத்தியவர் அமரர் எஸ்பொ. அவரது அந்த உதவியே இன்று உங்களோடு நான் தொடர்ந்தும் என் படைப்பினுடாகப் பயணிக்க உதவி செய்தது. அந்த நன்றிவிசுவாசம் என்மனதைவிடடு அகலாது. அவர் ஆத்மா சாந்தி அடையட்டும்.

இந்த நாவலின் எழுத்துப் பிழைகளை மனமுவந்து திருத்த உதவிய நண்பர் இளவாலை விஜயேந்திரன் அவர்களுக்கு எனது நன்றிகள். என் இலக்கியப்பயணத்திற்கு உலகெங்குமிருந்து ஆதரவுதரும் வாசகர்களாகிய உங்களுக்கும் எனது மனமாாந்த நன்றிகள்.

அன்புடன்

இ.தியாகலிங்கம்

[http://www.karainagaran.com](http://www.karainagaran.com)

ratnamt67@gmail.com

# 1

## 1.1 இந்தியா

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டிற்கும் இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டிற்கும் இடையில் பலவருடங்கள் மழைக்கால ஆறாக வேகமாக உருண்டோடின. இந்தியாவின் பொருளாதாரப் பேரவாவில் அது காந்தியின்தேசம் என்னும் முகத்தை நிரந்தரமாக இழந்திற்று. அந்தத் தேசம் காந்தியம் தொலைத்து... மனிதம் துறந்து... வெகுதூரம் காந்தியின் கனவுக்கு எதிர்ப்பாதையிற் குருட்டுத்தனமாய்ப் பயணம் செய்தது. சினிமாவில் மூழ்கிவிடுகின்ற இந்திய மக்களின் மறதிக்கு இருபத்தியொரு வருடங்கள் இருபத்தியொரு யுகங்களாகிவிட்டன. இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இந்துத் தேசியவாதக் கட்சியொன்றை இந்தியமக்கள் பெரும்பான்மைப் பலத்தோடு தம்மை ஆளத் தெரிவுசெய்தார்கள். “பெரிய பொய்களாய்க் கூறுங்கள் மக்கள் இலகுவாக நம்பிவிடுவார்கள்” என்றான் ஹிட்லர். அது எங்கு நம்பப்படாவிட்டாலும் இந்தியாவிலும், ஈழத்திலும் நம்பப்படும். உலகம் முழுமையும் வரலாறுகள் மனித இனத்தால் மறக்கப்படுவது வழமையாகிறது. மறக்கப்பட்ட வரலாறு மீண்டும் திருப்பி எழுதப்படவேண்டியது வரலாற்றுக் கட்டாயமாகிறது. ஆயிரம் சோகவரலாறுகள், உலகம் இருக்கும் வரையும் அதன் முதுகைப் புண்ணாக்குவது ஓயப்போவதில்லை என்பது மீண்டும் உண்மையாகும் காலம் வந்தது.

முஸ்லீம்களுக்கு எதிராக மும்பாயில் ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி இரண்டு, ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டுகளில் நடந்த கலவரத்தின் சீழ் அம்மக்களின் மனதில் துர்நாற்றத்தோடு தொடர்ந்தும் காயாது வடிந்தது. அந்த

கலவரத்தின் கொடுமையை உணராத இந்துமத வெறியர்கள் மீண்டும் கத்திகளைத் தீட்டத் தொடங்கினர். அவர்கள் ஒரு வரலாற்றை மறந்து... அதையே மீண்டும் திருப்பியெழுதத் திட்டமிட்டனர். உலகத்தில் மனிதத்தை மதிக்கின்ற இடமுண்டா என்கின்ற கேள்வியின் இடையறா எதிரொலிப்பு. இந்தியாவில் வாழும் சில முஸ்லீம்களின் நினைவில் சொந்த நாட்டையே அன்னியமாகப் பார்க்கும் நிலவரம். நாடு ஒருவனை அன்னியப்படுத்தும்போது அவன் அந்த நாட்டை அன்னியமாகப் பார்ப்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடுகிறது. வெறுப்பு என்னும் விசநாகங்கள் பல, மனிதமனங்களின் இருட்டான மூலைகளில் சுருண்டு கிடக்கின்றன. அவை சீறிப்பாயும் போது அழிவை அறுவடை செய்கின்றன.

எளியவனுக்கு வலியவன் மீது ஏற்படும் தார்மீகக் கோபத்திற்குப் பதிலாக, வலியவனுக்கு எளியவன் மீது ஏற்படும் கோபமே இந்த நவீன உலகில் எங்கும் தாண்டவமாடுகிறது. அது, இந்தப் புதியயுகத்தின் சாபம் கலந்த சோகமான விதியாகிவிட்டது. ஏழைகள் மேலும் மேலும் எங்கும் ஏழைகளாக... பணக்காரன் மேலும் மேலும் எங்கும் பணக்காரனாக... சுரண்டப்படுபவன் மேலும் மேலும் சுரண்டப்பட... அடிமைகள் மேலும் மேலும் அடிமைகள் ஆக... இனவெறி, மதவெறி, சாதிவெறியென மனிதன் தனது கோரமுகத்தை மட்டும் கூர்மையாக்கிக்கொண்டு வருகிறான். அதன் அசிங்கம் அவனுக்குப் புரிந்தாலும் சுயநலத்திற்காய் அதைப் புறம்தள்ளி வைக்கிறான்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஏழைகளின் உற்பத்தியை, வறுமையின் செழிப்பைக் குறைத்துவிடவில்லை. அது சேரிகளின் வளர்ச்சிக்கு மேலும் உரமூட்டியது. வசதிகள் பெருகப் பெருக, வசதி படைத்தவனின் ஆசைகளும் பெருகிக்கொண்டே சென்றன. ஆசையின் கோரப்பிடியில் வன்மங்கள்கூட நியாயங்களாக்கப்பட்டன. அனுதாபங்களற்ற மனிதர்களின் பார்வை வேட்டையாடும் விலங்குகளைவிடக் கோரமாகியது.

அன்று இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு ஆனிமாதம் பதினாறாம் திகதி சனிக்கிழமை. இந்தியாவில் தேர்தல் முடிந்து சிலநாட்கள் அமைதியாகக் கழிந்து போயின. சில இந்துத் தீவிரவாத அரசியல்வாதிகள் மனதில் சாம்பல்பூத்த நெருப்பாக வெறுப்பும், கோபமும், காலம் பார்த்து... கட்டளை நோக்கிப்... பதுங்கி இருந்தன. முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழுமிடங்களில் மட்டும் அந்த இந்துத் தீவிரவாதக்கட்சி படுதோல்வியடைந்த வேதனை அவர்களை வாட்டியது. அது அந்தக் கட்சியினருக்குத் தாங்கமுடியாத வெறுப்பை

அந்தச் சிறுபான்மையினர்மீது ஏற்படுத்தியது. இந்துத்துவத்திற்கு அடங்கி அடிபணியாத ஒரு சிறுபான்மை இனத்தை வேரோடு கருவறுத்து... இனச்சுத்திகரிப்பு செய்யவேண்டும் என்கின்ற அந்தக் கட்சியின் மறைமுகக் கொள்கையை நடைமுறைப்படுத்தச் சந்தர்ப்பம் பார்த்து அவர்கள் காத்திருந்தார்கள். உலகெங்கும் சிறுபான்மையிரைத் தங்களுக்குள் கரைப்பதற்கோ, அல்லது கருவறுப்பதற்கோ பல நாடுகள் உன்னிப்பாகச் செயல்படுகின்றன. அதைப் பூசிமெழுகுவதற்கு ஆயிரம் சமாதானம் சொல்லப்பட்டாலும், திரைமறைவுக்குப் பின்னே வக்கிரமான திட்டங்கள் சந்தடி இல்லாமல் நிறைவேற்றப் படுகின்றன.

தங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டதான வக்கிரமான சந்தோசம் அவர்கள் அடிமனதில் இப்போது களைகட்டத் தொடங்கலாயிற்று. இம்முறை அயோத்தி மசூதி போன்ற பிரச்சனைக்காகக் காத்திருக்கும் பொறுமை அவர்களிடம் இருக்கவில்லை. கட்சியின் கட்டளைப்படி அதைத் திட்டமிட்டு சனிக்கிழமை இரவு தொடங்குவதாய் முடிவெடுக்கப்பட்டது. கலவரங்களைச் செயற்கை முறையில் உண்டுபண்ணுவது கல்வி அறிவு குறைந்தவர்கள் வாழும் நாட்டில் சிரமமாய் இருப்பதில்லை. குளவிக்கூட்டிற்கு கல் எறிவது போல, அதை இலகுவாகச் செய்துவிடமுடியும்.

அந்த இரவுச் சந்தைக்கு அருகில் சற்று மறைவான இடமொன்று, இருட்டில் ஒளிந்து விளையாடியது. அந்த இருட்டிற்குள் அம்மன் கோவிலொன்று பாழ்பட்டுப்போய்க் கிடந்தது. அந்த கோவிலுக்கு முன்னால் லொறியொன்று வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து வயிறு ஒட்டிப்போன பசுமாடொன்று கீழே இறக்கப்பட்டது. மூன்று முஸ்லீம்கள் கத்தி, சம்மட்டி போன்றவற்றோடு இறங்கினார்கள். பின்பு அவர்கள் யாருடனோ கைத்தொலைபேசியிற் கதைத்துவிட்டு, பசுமாட்டைச் சம்மட்டியால் அந்தக் கோவிலுக்கு முன்பு வைத்து அடித்தார்கள். அது அலறியடித்தவண்ணம் நிலத்தில் விழுந்தது. பின்பு விரைவாக அதன் கழுத்தை அறுத்து இரத்தத்தை அந்தக் கோவிலின் முன்பு ஓடவிட்டார்கள். அதன் தோலைச் சிறிது உரித்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தது போல் எதிரத்திசையில் பல மனிதர்கள் அவசர அவசரமாய் ஆயுதங்களோடு அம்மன் கோவிலை நோக்கி வந்தார்கள்.

அதைக் கண்ட அம்மூவரும் மீண்டும் லொறிக்குள் ஏறித் தங்கள் உடைகளை அவசரமாக மாற்றிக்கொண்டனர். கை, கால்கள் கட்டி வைத்திருந்த மூன்று முஸ்லிம்களின் கட்டுக்களை அவிழ்த்து, அவர்களை லொறிக்கு வெளியே தள்ளினார்கள். என்ன நடக்கிறது

என்பதை அந்த முஸ்லீம்கள் ஊகிக்க முன்பு, லொறியில் இருந்து பாய்ந்த அந்த வஞ்சக இந்துக்கள் கீழே கிடந்த முஸ்லீம்களைத் தாக்கத் தொடங்கினார்கள்.

எதிரே அவசரமாக வந்த அந்தக் கூட்டம் அவர்களோடு சேர்ந்துகொண்டது. அத்தோடு இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு மும்பைக் கலவரம் ஆரம்பமாகியது. முதலில் கொல்லப்பட்ட மூன்று முஸ்லீம்கள் தாங்கள் எதற்குக் கொல்லப்படுகிறோம் என்பதே புரியாது இந்திய நாட்டில் பிறந்ததிற்காய் உயிர்விட்டார்கள். அந்த ஊழித்தாண்டவம் ஆடிமுடிந்தபோது, பிணங்களும், அழியா வடுக்களும் மட்டுமே மிஞ்சின. அந்த வடு சொந்த நாட்டிற்கு எதிராகப் பலரையும் சிந்திக்கத் தூண்டியது. ஆட்சிக்கு, வந்த இந்துக் கட்சிக்குப் பெரும்பான்மை மக்களிடம் அதீத வரவேற்புக் கிடைத்தது. அவர்களால் இயற்றப்பட்ட சட்டங்கள் முஸ்லீம் மக்களின் சுதந்திர வாழ்வுக்கான அத்தனை பக்கங்களையும் இறுக்கமாக அடைத்தன. அவர்களின் கோபமும் இயலாமையும் அந்தநாட்டின் வீழ்ச்சியே தமக்கு விடுதலை தரும் என்கின்ற வெறியைப் பற்றவைத்தது. யூதர்களின் உரிமையை ஹிட்லர் பறித்தபோது யாராலும் தட்டிக்கேட்க முடியவில்லை. முஸ்லீம்களின் உரிமை இந்தியாவில் பறிக்கப்படும்போதும் யாரும் காத்திரமாகத் தட்டிக்கேட்கவில்லை. பொருளாதாரக் கணக்கில் மனிதாபிமானம் தொலைந்து போயிற்று. காலந்தாழ்ந்து பேசப்படும் நியாயங்களில் கருணை இருந்தென்ன, காருண்யம் வடிந்தென்ன? அவை அழிவுகளின் கல்லறையில் நின்றுதானே கூக்குரல் எழுப்பமுடியும்? சிலகாலத்தில் அதையும் மறக்க முடியும். இந்தியாவின் தயவில் நடந்த மனிதப் படுகொலைக்கு ஈழம் ஒரு வரலாற்றுப் பாடமல்லவா?

## 1.2 இலங்கை

இரண்டாயிரத்துப் பத்தொன்பதாமாண்டு தை மாதம் பதின்மூன்றாந் திகதி ஞாயிற்றுக்கிழமை. அனல் தணியும் அந்த மாலை நேரத்து அந்திவானத்தில்... சிவந்து அக்கினிக் கோளமாக ஆதவன் பரிணமித்து... மெல்ல மெல்ல அவன் கடலைத் தொட்டு... தட்பவெட்பம் பார்ப்பதான தவிசில் காலலம்பத் தொடங்கினான். இரத்தத்தில் ஆதவன் காலலம்புவதாக இராவணதேசத்து முகில்கள் அவன் முன்னே தீக்குளித்துக் கொண்டன. வேறுசில முகில்கள் கொலைக்களத்தைத் துடைத்து வந்ததாகச் சூரியனைச் சுற்றி நின்று ஒப்பாரி வைத்தன. அவை போர்க்களத்தின் நிறம் இதுதான் என்கின்ற நிர்வாணம் காட்டின. அது பார்ப்பார் மனம்கதறக் கடந்தகால

வரலாற்றை மீண்டும் நினைவுகளில் ஓடவிட்டது. சாட்சிகள் இல்லாத சாவுகளை சதா பார்க்கும் எனக்கே நீ சாவுநிறம் காட்டுகிறாயாவெனக் கேட்டவண்ணம்... இரத்த ஆழியில் மெல்ல மூழ்கி, கோர உலகில் இருந்து விடுபட எண்ணினான் கதிரவன். முடிவின் நிறம்காட்டிச் சலித்த மேகங்கள் சோகத்தால் கருமை எய்தி... போகுமிடம் தெரியாது மெல்ல அலமலக்கப் பட்டன. இரத்த வெடுக்கு எங்கும் வீசுவதால், பாதை தெரியாது பயணம் புறப்பட்டதாய் வானிற் தள்ளாடின.

பண்டாரநாயக்கா விமானநிலையம் யுத்தச் சுவடுகளைத் தனது மேனியில் அழிந்துபோன வடுக்களாக்கிவிட்டது. இப்பொழுது அமைதியை ஆரத்தழுவி... இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு... மிடுக்கோடு... இலங்கையின் பெரிய விமான நிலையமாகத் தொடர்ந்தும் பயணிகளை வரவேற்றது. விட்டுக்கொடுக்காத சுயநல அரசியலில், குட்டிச்சுவராகிப்போன நாடொன்றின் பிரதான விமான நிலையம் என்கின்ற உறுத்தல் அதற்கு உண்டா என்பது அதற்கு மட்டுமே வெளிச்சம்.

அப்துல் காதர் ஐந்தடி எட்டு அங்குலம் உயரமானவன். மாநிறமான அவன் கண்களில் பொறுமை தொலைந்து கோபம் பொங்கி வழிந்தது. நிலைகொள்ள முடியாத ஒருவித அவதியில் அவன் தவித்தான். கடிகாரத்தை அடிக்கடி பார்த்தான். கைக்குட்டையை எடுத்து முகம், கழுத்து என்பனவற்றிற் பொங்கி வந்த வியர்வையைத் துடைத்தான். காத்திருப்பு அவஸ்தைதான். அது காதலாக இருந்தாலும், கடமையாக இருந்தாலும் காத்திருப்பு அவஸ்தைதான்.

காதர், தலையில் முஸ்லீம்கள் அணியும் வெள்ளைத் தொப்பி ஒன்றை அணிந்திருந்தான். மதநம்பிக்கைக்கு ஏற்ப மீசை தாடி வைத்திருந்தாலும் அதன் அளவின் பஞ்சம் அவன் அழகைக் கூட்டிற்று. காலத்திற்கு ஏற்ப மதமும் நவீனப்பட வேண்டும் என்பதில் அவனுக்குச் சற்று விருப்புண்டு. இமாம்கள் போல் கத்தரிக்கோல் படாத தாடியுடன் அலைவது அவனுக்கு இரசிக்கவில்லை. அதேவைளை மதநம்பிக்கையை முற்றுமாய்ப் புறக்கணிக்கும் துணிவும் அவனிடம் இருந்ததில்லை. மதம் என்பது மனிதனில் இருந்து பிரிக்க முடியாத உயிர்நாடி என்பது அவன் முடிவு. அல்லா காட்டியவழி இப்போது இங்கு நிற்பதற்குக் காரணமென்று எண்ணிக்கொண்டான்.

மொத்தத்தில் மதத்திற்கும் நவீன யுகத்திற்குமான சமாதானத்தில் குறைக்கப்பட்ட, முற்றுமாய் மழிக்கப்படாத தாடியும் மீசையும்

அவனது முகத்தை அரைச்சந்திரனாக்கியது. அவன் வெள்ளை நிறத்தில் சேட்டும் நீலநிற ஜீன்சும் அணிந்திருந்தான்.

அப்துல் காதருக்குப் பரந்துகிடக்கும் பண்டாரநாயக்கா விமானநிலையத்தைப் பார்க்க வெறுப்பாக வந்தது. "மதிப்புக் கொடுக்கப்பட வேண்டிய சக மனிதர்களுக்கோ, அல்லது சகவினங்களுக்கோ மதிப்புக் கொடுக்கப்படுவதில்லை. சுயநலமும், குறுகிய எண்ணமுமே பெரும்பான்மை அரசியல்வாதிகளின் கலாசாரம் ஆகிவிட்டது. சிறுபான்மை இனங்கள், என்றும் பெரும்பான்மையின் அடக்குமுறையில், அதிகாரத்தில், திமிர்த்த அவர்களின் மேலாண்மையில் அவமானப்படுகின்றன" என அவன் மனதிற்குள் எண்ணி வெதும்பினான்.

"கூட்டிற்குள் வைத்துக் குயிலைக் கூவச்சொல்லும் உலகம்" என்கின்ற பாட்டுவரிகள் அவன் நினைவில் வந்தன. "வலுவில் சிறைவைக்கப்பட்ட பெண்டாட்டியின் அவஸ்தையோடு வாழும் சிறுபான்மை இனங்கள் பரிதாபத்துக்கு உரியனவே" எனவும் அவன் எண்ணினான்.

இந்த உணர்வுகள், அப்துல்காதர் உயிருடன் இருக்கவே அவனது புறத்தோலை மூர்க்கமாக உரிப்பதான வேதனை தந்தன. சிறுபான்மை இனத்தின்மேல் சந்தேகம் காட்டேறியாகத் தலைவிரித்தாடிய நாடு. ஒருவித மௌனத்திலும்... அதன் மயக்கத்திலும்... எரிமலைகள் உறங்குவதுபோலத் தற்போது நிசப்தமாய்க் கிடக்கிறது. இந்த நாட்டில் பிராயச்சித்தங்கள் இல்லாத பாவங்கள் மட்டுமே நடந்தேறும்; நடந்தேறின. பின்பு அவை மறக்கப்படும்; மறக்கப்பட்டன. அந்த அக்கிரமத்தால் வடுக்களைப் பெற்றவர்கள் மனது மாத்திரம் சாந்தி அடையாது பல சகாப்தங்களாய் அணையாத் தீபங்களாய் எரியும்; எரிகிறது. தப்பிற்குத் தண்டனை கொடுக்கப்படாத நாடு என்னும் அசிங்கத்தை சுமப்பதுபற்றிப் பெரும்பான்மை மக்களுக்கு மனச்சாட்சி உறுத்துவதாய்த் தெரியவில்லையென எண்ணினான்.

சிறுபான்மை என்கின்ற, கைகால் வழங்காத முடங்களின்மேல் இரக்கத்திற்குப் பதிலாய், பெரும்பான்மை என்கின்ற வல்லோன் ஈவிரக்கமற்று வன்மம்தீர்த்த வரலாறுகள் வேப்பெண்ணையாக இன்றும் பலரது வாயிற் கசப்பதான அருவருப்பு தொடர்கதையாகிவிட்டது. சிறுபான்மையின் உரிமை என்பதைப் பகைமையாக எண்ணும் பெரும்பான்மையின் கோரப்பிடிகளுக்குள் அகப்பட்டு நலிந்து போன அந்த இனங்கள் மௌனத்தால், தங்கள் இருப்பை மாத்திரம் தக்கவைத்து கொண்டனவாக, ஆத்மாக்களை இழந்த பிரேதங்களாக...

ஓர் அவல வாழ்வை வரித்துக் கொண்டன. அதுதான் இந்த நாட்டின் பௌத்த பெரும்பான்மையினரின் அழகாகத் தொடர்கிறது.

இந்த நாட்டில் உள்நாட்டுச் சண்டையொன்று நடைபெற்றது. அதில் இரத்தம் ஆறாக ஓடியது. மனித உயிர்கள் செல்லாக்காசாய் வேட்டுக்களால் காவுகொள்ளப்பட்டனர். சித்திரவதைகள், கொலைகள் என்பன எங்கும் மலிந்து கிடந்தன. மனிதப் பிணங்கள் உரிமைகோராது தெருக்களில் புழுத்துப்போயின. எந்தவிடத்திலும், எப்போதும் எவருயிரும் பறிக்கப்படலாம் என்கின்ற நிச்சயமற்றநிலை நெடுநாளாக ஆட்சிசெய்தது. அது மனிதத்தை உயிரோடு எரியூட்டியது. ஓடிய இரத்தத்தின் சுவடுகளைக்கூடப் பேரினவாதம் மறைத்து, சிறுபான்மை இனத்தின் இருப்பைத் திட்டமிட்டுச் சீரழித்தது. மனிதம் என்றும் வெட்கிக்குனியும் அவமானத்தைப் புத்தரின் மைந்தர்கள் வெற்றிக் கிரீடங்களாக அணிந்துகொண்டனர்.

ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினரின் மனதில் தாங்கள் இரண்டாந்தரம் என்னும் வடுக்கள் நிரந்தரமாகின. ஒருதாய்க்குப் பிறந்த மூன்று பிள்ளைகளை விதம் விதமாய் நடத்திய உணர்வு பலருக்கும் இலங்கையின் சுதந்திரத்தின்பின் உண்டாகிற்று. பெரும்பான்மை இனத்தின் அரசியல் பிரதிநிதிகள் இனவெறியை அரசியல் ஆயுதமாகக் கூச்சமின்றிப் பயன்படுத்தினர். அது சிங்கள அரசியலுக்குரிய தனிப்பண்பாகிற்று. அடக்கிவைத்து ஐக்கியம் காணும் அரசபயங்கரவாதம் தொடரலாயிற்று.

அப்துல் காதருக்குச் சிறுபான்மை இனத்தின் போராட்டம் நெஞ்சில் இரணமான வேதனையைப் பிரசவித்தது. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டு ஐப்பசி மாதத்திற்கு முன்பு தானும் ஒரு தமிழன் என்கின்ற தமிழ்த்தேசியவாதத்தில் ஊறி, அதன் போதையில் மயங்கிக் கிடந்தான். சாவகச்சேரி, கிளிநொச்சி, மன்னார் போன்ற இடங்களில் இருந்து முஸ்லீம் மக்கள் புலிகளால் விரட்டப்படுகிறார்கள் என்பதை அவனால் அப்போது இம்மியளவும் நம்பமுடியவில்லை. தமிழரின் இனவிடுதலையைச் சீரழிக்கும் நோக்கோடு, கொச்சையாகப் பரப்பப்பட்ட வதந்தியாக அதை எண்ணிப் புறந்தள்ளிவிட்டான்.

ஐப்பசிமாதம் முப்பதாம்திகதி புலிகளின் ஒலிபரப்பிகள் யாழ்ப்பாணத்திற் திடீரென மூலை முடுக்கெல்லாம் உயிர் பெற்றுக்கொண்டன. அவை உதிர்த்த சொற்களின் அர்த்தங்களை இன்றும் அவனால் நம்பமுடியவில்லை. ஒஸ்மானியக் கல்லூரியில்

அவர்கள் மேலும் எறிந்த சொல்லணுகுண்டுகள் தமிழ் முஸ்லீம் இனங்களை நிரந்தரமாகத் துண்டாடின.

ஒளிவுமறைவாக யாழ்ப்பாணத்திற் தமிழருக்கும், தமிழ்பேசும் முஸ்லீம்களுக்கும் இருந்த உரசலை புலிகள் இனவாதமாக அறிமுகம் செய்துவைத்தார்கள். தேசியவாதத்தின் துணையோடு மண்ணையும், உரிமையையும் மீட்போம் என்றவர்கள்... தோழமையினத்தின்... சொந்தவினத்தின்... உரிமைகளைப் பறித்து தக்கவைக்க முடியாத மண்ணை மட்டும் மீட்டார்கள். இந்த நிகழ்வினால் காதருக்கு தமிழ்த்தேசியம் என்கின்ற போதை காலாற் கரைந்து போயிற்று. மீதமாய் மிஞ்சியது முஸ்லீம் என்கின்ற மதத்தால் ஆட்கொள்ளப்பட்ட கலாசார அடையாளம் மட்டுமே. தமிழ்த் தேசியவாதத்திற்கும்... தமிழ்பேசும் முஸ்லீம்களுக்கும் இருந்த பிணைப்புகள் அன்றோடு அறுந்தன… அவை ஒட்டமுடியா உடைந்த ஓடுகளாயின. அவை தொடர்ந்தும் இணையமுடியாத தண்டவாளங்களாக... இரு சிறுபான்மை இனங்களாக... இலங்கையில் நலிவுறும் வேகம் அந்நாளில் இருந்து உச்சத்தை அடைந்தது.

புலிகளியக்கத்தின் இந்தச் செயல் இரண்டாம் உலகமகாயுத்தத்தில் போலந்து நாட்டுக்காரரைச் சொந்த வீட்டால் வெளியேற்றி… அங்கு ஜேர்மனியர்களைக் குடியேற்றிய நாஜிக்களைவிட மோசமானதாய் அமைந்தது. இந்த வரலாற்று உண்மையை இன்றும் பலராற் புரிந்துகொள்ள முடியவில்லை. சகோதர இனத்திற்கு எதிராக நடந்த இந்த நிகழ்வு யாழில் மனிதத்தைக் குழிதோண்டிப் புதைத்திற்று. கரவுகொண்ட இனங்கள் பகைகொண்ட இனங்களாகின. ஈழத்தமிழினம் தன்னலத்தோடு மௌனம் காத்தது. தனியனானது.

ஐம்பது ரூபாயுடன் அபலைகளாக முஸ்லீம்களை வெளியேற்றி… அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்த இயக்கமொன்றை விடுதலை வீரர்களென ஓர் இனம் குருட்டுத்தனமாக நம்பியது. பாவத்தின் பயன்களைப் பார்த்தாகிற்று. எங்களின் கழுத்தை நாங்களே அறுத்துக்கொண்ட சங்கதி இன்று புரியலாயிற்று.

ஐம்பது ரூபாயோடு புறப்பட்ட அப்துல்காதரின் பயணம் முதலில் புத்தளத்திற் கரைதட்டியது. பின்பு அங்கு நிலைகொள்ள முடியாமல், காத்தான்குடியிற் பல இன்னல்கள் மத்தியில் நிரந்தரம் கண்டது. அங்குதான் அப்துல்காதர் தங்கள் இனத்தைக் காப்பாற்றப் பெரும்பான்மை இனத்தோடு சேர்ந்து ஆயுதம்தூக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டான்.

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டு ஆவணிமாதம் மூன்றாம் திகதி நூற்றி நாற்பத்தி ஏழு சகோதரர்களின் உயிரைப் பலிகொண்ட அராஜகத்தைப் புலிகள் காத்தான்குடியில் அரங்கேற்றினர். அது அவர்கள் போராளிகள் அல்லா் பயங்கரவாதிகள் என்கின்ற கூற்றை மீண்டும் உறுதி செய்தது. பயங்கரவாதிகள் என்னும் முத்திரையைத் தங்கள்மேல் குத்திக் கொண்டு, தமிழர்களின் உண்மையான போராட்டத்தை நலிவுறப் பண்ணினார்கள் என்பது காதரின் எண்ணம். அதை இன்றும் ஈழத்தமிழர்கள் புரிந்துகொள்ளதது அந்த இனத்தின் சாபமாகும். அதுவே தொடர்ந்தும் உலகம் அவர்களின் உரிமையின் நியாயத்தைப் புறக்கணிக்கச் செய்கிறது. இந்த உண்மைகளைச் சொல்பவர்களுக்கு இன்றும் துரோகிகள் பட்டம் தரப்படுகிறது.

அப்துல்காதருக்கு அந்த ஆயுதம் பொது எதிரியோடு சேர்ந்து, சகோதர இனத்திடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தூக்கப்பட்ட ஆயுதமென நியாயம் கூறப்பட்டது. ஐம்பது ரூபாய் அனுபவத்தின் பின்பு, அப்துல்காதருக்கும் அதில் அசைக்க முடியாத நியாயம் இருப்பதாய்த் தென்பட்டது.

அப்துல்காதருக்குச் சிறுகச் சிறுக மனம் மரத்துக்கொண்டு வரும்போதுதான் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தின் மேலான தாக்குதல் பதினொராந்திகதி ஐப்பசிமாதம் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு நடந்தது. அதை அவன் சரியென்று முதலில் ஏற்றுக்கொண்டவன் அல்லன். அதற்கான தண்டனையாக முஸ்லீம் மக்கள் எங்கும் ஒடுக்கப்படுவதையும், அவமானப்படுத்தப்படுவதையும் அவனாற் தாங்க முடியவில்லை. அது அவனுக்குக் கொதி உலையில் இருக்கும் ஈயத்தைக் கொண்டுவந்து இதயத்திற்குள் வார்ப்பதான வேதனை தந்தது. அதுவே இந்த அடக்குமுறைக்கு எதிராகப் போராடவேண்டும் என்கின்ற வெறியை உண்டுபண்ணியது. அவனால் இயன்ற உதவியாக ஒரு துரும்பாவது எடுத்துக் கொடுக்கவேண்டும் என்கின்ற பரபரப்பு அவன் மனதில் தொற்றியது. அதன் பயனாகப் பாவம் புண்ணியம் என்கின்ற அலசல் தனக்கு இங்கு வேலை இல்லையென்று அவனைவிட்டுப் போயிற்று. பேரினவாதச் சிங்களவரும், பேரினவாதத் தமிழர்களும் அழிந்து போவது அவன் மனதில் இனிச் சஞ்சலத்தை உற்பத்தி செய்யாது. அந்த நிலைக்கு அவன் தன்னைத் திடமாக மாற்றிக்கொண்டான். காலம் மென்மையான உணர்வுகளை அறுத்து அவன்மீது வன்மத்தைச் சவாரி செய்யவிட்டது.

கணணியுகம் தகவல் தொடர்பிற்கான தூரத்தைத் தொலைத்து, தூரதேசம் இருப்பவனையும் சடுதியாக அருகிற் கொண்டுவந்து நிறுத்துகிறது. காத்தான் குடிக்கும் கராச்சிக்குமான தகவற் பரிமாற்றத்திற்கான நேரம் மில்லிசெக்கனாய்ச் சுருங்கிப் போயிற்று. ஒருகரையில் உட்புகுத்தப்படும் செய்தி அடுத்தகணமே மறுகரையில் வெளியே துள்ளி வருகிறது.

தொடர்ந்தும் விமானநிலையத்திற்கு வெளியேநின்று சிந்தனையில் அல்லாட அவனுக்குப் பிடிக்கவில்லை. அனுமதிச்சீட்டை வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்துவிட்டால் என்னவென அவன் ஒருகணம் எண்ணினான். உள்ளே சென்றால் அந்திச்சூரியன் சாய்ந்தபின்பும் அனல் தடவிவரும் காற்றின் வேண்டா உரசலில் இருந்தும், வாகனங்களின் கதறலிடம் இருந்தும், மனிதர்களின் அவசரத்தில் விழும் இடியில் இருந்தும் விடுதலை பெறலாம் என்பதாக அவனுக்குத் தோன்றியது. அதைத் தடுப்பதாக விமான நிலையத்தின் ஒவ்வொரு மூலையிலும் தொங்கும் இயந்திரக் கண்கள் தன்னைக் கோணம் கோணமாகப் படம்பிடிப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவன் தனது அந்த எண்ணத்திற்கு அத்தோடு முற்றுப்புள்ளி வைத்தான்.

விமான நிலையத்திற்கு முன்பு நின்று அதிகமாக மினக்கெடுவது தன்னைத்தானே காட்டிக்கொடுப்பது போன்றதான காரியம் என்பதை அப்துல்காதர் மிகவும் திண்ணமாக நம்பினான். அதற்காகவே, அவன் நேர அட்டவணை பார்த்து உறுதிப் படுத்தியபின்புதான் விமான நிலையத்திற்குப் புறப்பட்டு வந்தான். என்றாலும் ஏதோ பிரச்சனையாக இருக்க வேண்டும். நேரஅட்டவணைப்படி எதுவும் நடக்கவில்லை. திரும்பிச்சென்று ஹனிபாவோடு வானில் இருந்து கதைக்கலாமென எண்ணினான். பின்பு சிலவேளைகளில் அதுவும் யாராவது உளவுப்பொலீஸாரின் கண்ணில் பட்டுவிடுமோ என்கின்ற எண்ணத்தில் அதைத் தற்காலிகமாகத் தவிர்த்தான்.

காதர் அவர்களது படத்தை ஒருமுறை எடுத்துப் பார்த்தான். இலங்கை விமான நிலையத்தில் இறங்கியதும் அவன் காதரின் தற்காலிகக் கைத்தொலைபேசிக்கு போன் செய்வதாக "கிறிப்ரிங்" செய்யப்பட்ட மின்னஞ்சலில் எழுதியிருந்தான். சாஹில் காதரோடு மட்டும்தான் தொடர்பு வைத்திருந்தான். அவன்தான் இதற்குத் தலைமை தாங்கும் விமானியாகச் செயற்படுவான் என்பது காதரின் ஊகம். காதர் முஸ்லீம் என்கின்ற வகையில் ஒரு சிறு உதவியே செய்ய முன்வந்திருந்தான். மிகுதியை அவர்களது அரச உளவு நிறுவனமோ, அல்லது வேறு ஏதாவது பலம்வாய்ந்த அமைப்போ

செய்ய வேண்டுமென எண்ணிக்கொண்டான். அவ்வளவு அதிசத்திவாய்ந்த தொழில் நுட்பம் தனிமனிதரிடம் இருக்கமுடியாது என்பது அவன் எண்ணமாகியது. இந்த நிகழ்வின் பின்பு, உலக அரசியலிலே தலைகீழாக மாறுமெனக் காதர் எண்ணிக்கொண்டான். “கராச்சியில் இருந்து வரும் அவன் இன்னும் போன் பண்ணவில்லை. போன்பண்ணிக் காரணத்தைக் கூறினாலாவது அமைதியாக இருக்கலாம்” எனக் காதர எண்ணினான். அவன் அதைச் செய்யாது விட்டது, தீமிதிக்கும்போது கால் தடக்கியதான அந்தரத்தை அப்துல்காதருக்குக் கொடுத்தது.

கராச்சியில் இருந்து அந்தக் குறிப்பிட்ட விமானம் வருகிறது என்பதும், அது குறித்த நேரத்தில் பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கும் என்பதும் அவனுக்கு நன்கு தெரியும். அப்படி அந்த விமானம் குறித்த நேரத்தில் வந்திருப்பதை அப்துல் காதர் அறிந்து கொண்டான். அப்படியென்றால் அட்டவணை பிழைக்கவில்லை என்பது இப்போது புரிந்தது. விமானம் வந்துவிட்டாலும் ஏன் சாஹிலும் அவனது கூட்டாளியும் இன்னும் வெளியே வரவில்லை என்பது மட்டும் அவனுக்குப் புரியவில்லை. போனமுறை நால்வரைக் கூட்டவந்தபோது இவ்வளவு நேரம் தாமதமாகவில்லை. அவர்கள் சிறிது நேரத்தில் வெளியே வந்துவிட்டார்கள். ஆசைகள் அறுத்து அர்ப்பணிப்போடு செய்யப்படும் புனிதப்பணி இது. அல்லா விரும்பினால் மட்டும் அவனுக்காகச் செய்யும் பணி. அவன் பணியில் மனிதனின் முழுக்கவனமும் கடமையில் மட்டுமே குவிந்திருக்க வேண்டும். அப்படியான மனிதர்களுக்கு விமான நிலையத்தில் காலத்தை வீண்விரயம் செய்ய அலுவல் ஏதும் இருக்கின்றதா என்பதாகக் காதர் எண்ணினான்.

முதல் முறை வந்து இறங்கியவர்களை அவதானமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்த பெருமை அப்துல்காதரைச் சாரும். புத்தளத்திற்கு அனுப்பப் பட்டவர்களும் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்வதாக வரும்போது ஹனிபா சொல்லி அறிந்துகொண்டான். அது முதற்கட்டம். இது இரண்டாவதும் கடைசியுமான கட்டம். இதுவும் அல்லாவின் புண்ணியத்தால் நல்லபடியாக நடக்கவேண்டுமென காதர் அல்லாவிடம் இறைஞ்சினான்.

நடுக்கடலில் இருந்து விமான உதிரிப் பாகங்களைக் கடத்திவந்து, ஒரு பகுதியைப் புத்தளம் அனுப்பி வைத்திருந்தார்கள். அதற்கான ஏற்பாட்டைக் காதர் செய்ய வேண்டியிருந்தது. காத்தான்குடியில் நின்றவர்கள் அந்தச் சிறிய விமானத்தைச் சிலநாட்களில் உருவாக்கி விட்டார்கள். அது இரவிரவாய் நடைபெற்ற திகிலூட்டும்

சம்பவங்களாய்த் தொடர்ந்தது. யாருக்கும் இம்மியளவு தகவலும் கசிந்து விடக்கூடாது என்பது பெரும் சோதனையாகிற்று. ஆறிப்போன யுத்தத்தால் பாதுகாப்புப் படையின் அவதானம் குறைந்து போனது. என்றாலும், சிங்கள இராணுவத்தின் பிரசன்னம் முற்றாக ஒழிந்து போகாது பயமுறுத்துகிறது. அதற்குள் வெட்டியோடுவது திகிலைத் தருகிறது.

காதருக்கு அவர்களின் கடத்தல் வேலை புரிந்தது. இந்த முறைகளை இவர்கள் ஒன்றும் முதன்முறையாகவோ அல்லது புதிதாகவோ இங்கு செய்யவில்லை. இலங்கை வரலாற்றில் ஏற்கெனவே பாரிய அளவில் ஒருகாலத்தில் இது நடைபெற்றது. அது ஒரு நாட்டிற்குச் சமனாக ஆயுதபலம் கொடுக்கும் அளவிற்கு விஸ்தீரணமாயிருந்தது. அதைப் பிரதியெடுத்தே இவர்கள் இப்போது இதைச் செய்கிறார்கள். இவர்கள் புலிகள் மனதில்கூடச் செய்ய நினைக்காத ஒரு காரியத்தைச் செய்யப்போகிறார்கள். உலகவரலாற்றில் நிரந்தரமாகப் பதியப்படப் போகின்ற ஒரு நிகழ்வாய் இது இருக்கப்போகின்றது. அந்த நினைவு அப்துல்காதருக்குப் போதையான ஒருவித நடுக்கத்தைத் தந்தது. அவர்கள் முழுமையாகத் தாங்கள் என்ன செய்யப்போகிறார்கள் எனக் கூறாவிட்டாலும் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைக் காதரால் ஊகிக்க முடிந்தது. அவர்களிடம் அதற்கான தொழில்நுட்பவசதி இருந்தது.

மனிதனுக்குக் கிடைக்கும் மகத்துவமான அமைதி எதுவென்றால் உரிய நேரத்தில் கிடைக்கும் தகவல். காதர் இதை எங்கும் அடித்துக் கூறுவான். அது எதிர்வினையாகும் போது அவனைப் பைத்தியம் பிடித்துக்கொள்ளும். அது நிம்மதியைப் பிடுங்கிவிட்டு குழப்பத்திற்குள் ஓடென விரட்டிக் கலைக்கும். காதர் அந்தக் கொடுமையை இப்போது அனுபவித்தான். அவன் பைத்தியமாகும் நிலையில் இருக்கும்போதுதான் கைத்தொலைபேசி சிணுங்கியது.

சாஹில் புகைப்பிடிப்பான் என்பது தெரியும். அதற்காக ஆபத்தான இடத்தில் நின்று அதை வாங்க எண்ணியதைக் காதராற் புரிந்துகொள்ள முடியவில்லை. காதருக்கு அது அவன்மேல் சற்றுக் கடுப்பைச் தந்தது. சிறிய தவறுகள்கூடப் பெரிய வரலாறுகளை மாற்றி எழுதிவிடும் என்பதைப் புரியாத மடையனாக இருக்கிறானே என்பதாக மனதிற் சினம் கொண்டான்.

சாஹிலும், சலீமும் வருவது உறுதியாகியவுடன் காதர் ஹனிபாவைக் கைத்தொலைபேசியில் அழைத்தான். சாஹிலும், சலீமும் விமான நிலையத்தை விட்டு வெளியே வரவும் அந்த இரண்டு வாகனங்களும் விமானநிலையத்தின் வாசலில் வந்து நிற்கவும் சரியாகிற்று.

“அஸ்ஸலாமு அழைக்கும்” என்றான் காதர். பின்பு சாஹில் பதில் கூறுவதற்குக் காத்திராது வாகனத்தின் பின்கதவைத் திறந்து அவனைத் தள்ளாக்குறையாக ஆசனத்தில் இருத்தினான். விரைவாகச் சென்று அவன் சாரதியின் பக்கத்தில் இருந்த ஆசனத்திலேறி அமர்ந்தான். வாகனம் புறப்பட்டது. அது விமானநிலையத்தைத் பின்தள்ளித் தனது இலக்கை நோக்கி அர்ச்சுனன் விட்ட அம்பாகப் பாய்ந்தது.

ஹனிபாவும் தாமதியாது சலீமைத் தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். இதன்பின்பு இனி மீண்டும் விமான நிலையத்திற்கு வரும்போதுதான் காதருடன் கதைக்க முடியும் என்பது ஹனிபாவுக்குப் புரிந்தது. மீண்டும் சந்திப்பதற்கான கால இடைவெளியில் என்னவெல்லாம் நடக்கும் என்கின்ற கவலை அவனை அரிக்கத் தொடங்கியது.

சாஹில் நல்ல நிறமாகவும் உயரமாகவும் தோன்றினான். அவன் வட இந்தியர்களின் தோற்றத்தில் அலட்சியம் காட்டினான். அவனில் எந்தவிதப் பயமோ, கவலையோ, நடுக்கமோ இருக்கவில்லை. பதிலாக மென்முறுவல் ஒன்று எப்போதும் அவன் இதழ்களில் இடைவிடாது தவழ்ந்தது. பெண்கள் இவன் கண்களைக் கண்டாலே போதுமெனக் காதர் எண்ணிக்கொண்டான். அல்லாவுக்காக அவன் செய்யப்போகும் அர்ப்பணிப்பை எண்ணிக் காதர் அவனது அசண்டையீனத்தைப் புறக்கணித்தான்.

சாஹில் வெளியே சிரித்தாலும் உள்ளே புழுங்கினான். அதைக் காதராற் புரிந்துகொள்ள முடியவில்லை. சாஹில் தன்னிடமுள்ள ஒரு கவலையை யாருடனும் பகிர்ந்துகொள்ள முடியாது தவித்தான். அந்தத் தகவல் பாகிஸ்தானிய உளவுப்படை அதிகாரி ஒருவரால் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த அதிகாரி ஒரு கடும் முஸ்லீம் தீவிரவாதியாக இருந்தார். அந்தத் தகவல் மாத்திரம் பிழையாக இருந்தால் இந்தத் திட்டத்தாற் பலர் சிறைவாசம் மட்டுமே அனுபவிக்க வேண்டி வரும் என்பதும் அவனுக்குத் தெரியும். அந்த தகவலின்படி அணுமின்நிலையங்களில் இருந்த விமானஎதிர்ப்பு ஆயுதங்கள் கட்டுப்பாட்டு அறைக்கான தொடர்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் அப்புறப்படுத்தப்பட்டு விட்டதாகவும்,

புதிய ஆயுதங்கள் வருவதில் சில எதிர்பாராத தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல் வந்திருந்தது. இப்போது அந்த அணுமின்நிலையங்கள் வெறுங்கையோடு, வில்லை இழந்த இராவணனாய், பாதுகாப்பற்று நிற்பதாய்த் தகவல் கிடைத்தது. அத்தோடு தாக்குதல் நடத்துவது என்றால் இதுவே ஒரு சந்தர்ப்பம் என்பதும் அவனுக்குப் புரிந்தது. அவன் அதை யாரிடமும் கூறவில்லை. விமான எதிர்ப்புப் பற்றிக் கேள்வியெழுந்த போது அதை நான் பார்த்துக்கொள்கிறேன் என்பதாக அந்த அதிகாரியை நம்பிப் பதிலளித்துவந்தான். அவன் உதடுகள் சிரித்தாலும் மனதிற்குள் அந்தக் கவலையின் பளுவில் அவன் புழுங்கினான். விமான எதிர்ப்பு அயுதங்கள் பழுதாவது சிறிய விடயம். அதை உடனடியாக மாற்றி இருக்கலாம். இந்திய அதிகாரிகளின் அசண்டையீனம் அதைத் தள்ளிப்போட்டது. அது சாஹிலுக்கு இனித்தது. “இன்ஷா அல்லா” என அவன் எண்ணிக்கொண்டான்.

## 1.3 காத்தான்குடி

மீன்பாடும் நகரையும் ஆரையம்பதியையும் இடையறுத்துத் தனித்துவமாக நின்றது காத்தான்குடி. அங்கே தென்னஞ்சோலைக்குள் ஒளிந்து கிடக்கும் வீடொன்றில் சாஹில் பாதி இரவும் பாதி நாளுமான நேரத்தை நிம்மதியாகத் தூங்கிக் கழித்தான். மதியம் பதினொரு மணி அளவில் சாஹிலைக் கடற்கரை ஓரத்தில் இருந்த வாடி விட்டிற்குக் காதர் அழைத்துச் சென்றான். அங்கே அவனுக்காக றாகீன், றாமீஸ் ஆகிய இருவரும் காத்திருந்தனர். அவர்கள் மீண்டும் மீண்டும் அந்த விமானத்தைச் சரிபார்த்துச் செப்பனிட்டார்கள். அவர்கள் உருது மொழியில் நிறைய வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டதில் காதருக்கு அரை குறையாகவே சிலது விளங்கியது.

இது ஒரே ஒரு முறை மட்டும் பரீட்சித்துப் பார்க்கக்கூடிய காரியம். அந்த ஒரு முறையோடு வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டுவிடும். வரலாறு எழுதப்படுமா இல்லையா என்பது ஒருசில மணித்தியாலங்களில் பகிரங்கமாகிவிடும். இந்த விமானத்தை ஏற்றிச் செல்வதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட படகு தயாராக நிற்கிறது. இரவோடு இரவாக விமானத்தை அந்தப் படகிலேற்றிக் கடல்மார்க்கமாகப் பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்படியான ஏற்பாடு புத்தளத்திற்குக் கொண்டு சென்ற விமானத்திற்கும் நடைபெறும் என்பதைக் காதர் அறிந்துகொண்டான். தாக்குதல் சொல்லி வைத்தது போன்று ஓரேநேரத்திற்கு நடக்க வேண்டும். சிலகணங்கள் பிந்தினாற்கூட மெத்தமும் பாழாகிப்போய்விடும். அப்படித் தவறு நேராது தடுப்பதற்கான

தொழில்நுட்பம், நவீன கருவிகள், திட்டங்கள் போன்றவை பல இடங்களில் இருந்தும் சேகரிக்கப்பட்டுத் தற்போது தயார் நிலையில் இருக்கின்றன. இந்திய விமானப்படை பற்றிய நடுக்கம் மாத்திரம் உள்ளூர அவர்களைக் குதறி எடுத்தது. அதற்குத் தன்னிடமிருக்கும் விடைபற்றி, சாஹில் அதிகமாக விபரிக்கவில்லை.

ராடாரில் விமானத்தைக் காட்டாது பறப்பதற்குப் பல யுத்திகளைக் கையாண்டாலும் அது நூறுவீதம் பாதுகாப்பு அளிக்காது என்பது அவர்களுக்குப் புரிந்தது. அதனால் காத்தான்குடியில் அல்லது புத்தளத்தில் இருந்து இலக்கை நோக்கிப் பறப்பது என்கின்ற திட்டத்தை அவர்கள் கைவிட்டனர். அப்படிப் பறந்திருந்தாற் பல விடயங்கள் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல இலகுவாக இருந்திருக்கும். அந்த உத்தியில் தாராளமாக ஆபத்து இருப்பதைப் புரிந்து கொண்டனர். அதற்குப் பதிலாக விமானத்தை இலக்கிற்கு அருகே கடல் மூலம் எடுத்துச்சென்று, அங்கிருந்து பறந்து செல்வதாகத் திட்டமிடப்பட்டது. இந்த முறையிலும் போக்குவரத்தின்போது நிறைய ஆபத்துக்கள் வரும் என்பது அவர்களுக்குத் தெரியும். எனினும் அதைவிட வேறுதேர்வு அவர்களிடம் கைவசம் இருக்கவில்லை. இந்திய விமானப்படை தயாராகுவதற்கு முதலே தாக்குதலை நடத்திவிடும் அவகாசம் இதில் கிடைக்கும்.

இவை எல்லாமே கணிப்பீட்டின் அடிப்படையிலான திட்டங்களே. நடைமுறை ஒருபோதும் கணிப்பீட்டின்படி இருப்பதில்லை. அது எதிர்பாராத சிக்கல்களை எதிர்பாராத நேரத்திற் கொண்டுவரும். அப்படியான சந்தர்ப்பங்களில் என்ன செய்யவேண்டும் என்பதையும் திட்டமிட்டார்கள்.

அநீதிக்குமேல் அநீதி இழைக்கப்படும்போது அழிவுகள், கொலைகள் நியாயமாக்கப்படுகின்றன. மனச்சாட்சி மரத்துப்போகின்றது. மரத்த மனச்சாட்சியை மிதித்தவண்ணம் பழிக்குப்பழி என்கின்ற கோரப்பாய்ச்சல் முன்னுக்குவருகிறது.

மரத்த மனச்சாட்சி அவன் செய்யப்போகும் காரியத்தில் இருக்கும் அநீதிபற்றிய கவலைகளைத் துடைத்தது. அழிவுகளும், அநீதிகளும் மட்டும்தான் நியாயத்தைக் கேட்பதற்கான செவிகளைத் திறக்கும் என்றால் அதைப் பாவிப்பதில் எந்தத் தவறும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. இந்த நியாயங்கள் அநியாயங்களாக வருங்காலச் சந்ததியாற் சபிக்கப்படுமா அல்லது புகழப்படுமா என்பது பற்றித் தர்க்கிக்க அவன் இப்போது விரும்பவில்லை. அது பாத்திரத்தில் விடப்படும் நீரைப்போன்றது. இந்திய உபகண்டத்தில் இஸ்லாத்தின் மிகப்பெரிய எதிரிநாடு அழிவதுபற்றி அவன்

கவலைகொள்ளவில்லை. முகலாயர்கள் முழுமையாகத் தங்கள் வேலையை முடித்திருந்தால், இன்று இந்தியா முஸ்லீம்நாடாகத் திகழ்ந்திருக்கும். தங்களைப் போன்றவர்களுக்கு இந்த நிலை வந்திருக்காது என்று அவனுக்குத் தோன்றியது.

வங்காளவிரிகுடா அலைகளை இழந்து அமைதியில் மூழ்கும்போது அவளின் தயவில் பயணம் தொடங்கவேண்டிய நிர்ப்பந்தம். பாக்குநீரிணை பொதுவாக அமைதி காப்பதுண்டு. பெரும் அலைகளை அது பிரசவித்துக் கொந்தளிப்பது குறைவு.

வங்காளவிரிகுடா கடக்கும் பயணம் பலநாட்களைத் தின்னும் பயணம். அது நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டது. அதற்கேற்ப உபகரணம், உணவு போன்றவை முறைப்படி பொதிசெய்யப்பட்டுப் படகில் எற்றப்பட்டது. விமானத்தை ஏற்றியபின்பு அது வெளியே தெரியாதவண்ணம் மறைத்துக் கட்டப்பட்டது. காற்று எந்தச் சந்தர்ப்பத்திலும் அதை நிர்வாணம் ஆக்கிவிடாது மீண்டும் மீண்டும் கவனமாகப் பரிசோதிக்கபட்டது. இளகிய கட்டுகள் மீண்டும் இறுக்கப்பட்டன.

இரண்டு நாட்கள் கழித்து வங்கம் அமைதியாகத் தூங்கியபோது அவர்கள் பயணம் தொடங்கியது. காதரும் ஹனிபாவும் தமது புதிய வேலையைத் தொடங்குவதற்காக மத்தியகிழக்கு நாடு ஒன்றிற்குச் செல்லக் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை நோக்கி இருபதாந் திகதி புறப்பட்டார்கள். மத்திய கிழக்கில் சிறிது காலம் வேலை செய்துவிட்டு எப்படி என்றாலும் ஒரு ஐரோப்பிய நாட்டிற்குச் சென்றுவிடுவது அவர்கள் திட்டமாகியது.

## 1.4 தாக்குதல்

மூன்று நாட்கள் திகிலோடு இடைவிடாது உறவாடும் பயணம். நல்லதுக்கும் கெட்டதுக்கும் நடக்கும் எலியும் பூனையும் விளையாட்டில் திகிலிற்குக் கொண்டாட்டம். அதுவே சாஹிலுக்குப் பெரும் திண்டாட்டம். யாரிடமும் சந்தேகம் என்னும் பேயை எழுப்பாது இருபத்திமூன்றாம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு, இலக்கிற்கு அருகே உள்ள மசூதியை அண்டிய கடற்கரைக்குப் படகு வந்திற்று. “இன்ஷா அல்லா” அந்த நிகழ்வு எல்லோரையும் ஆனந்தக்கூத்தாட வைத்தது. ஆண்டவனுக்கு நன்றி கூறிக்கொண்டவர்கள் மேற்கொண்டு தமது அலுவலைப் பார்க்கத் தொடங்கினார்கள். ஒரு நாள்

தாமதித்துப் புத்தளத்தில் இருந்து புறப்பட்டவர்களும், தமது இலக்கைத் தடையின்றி அடைந்தார்கள்.

ஏற்கெனவே தொடர்பு கொண்டதற்கு அமைய இன்னும் இருவர் விமானத்தைப் படகிலிருந்து இறக்கிக் கடலில் மிதக்கவிட, அண்டிய கரையில் இருந்து படகை நோக்கி வந்தார்கள். விமானத்தை இறக்கிய பின்பு சாஹிலைத் தவிர மற்றவர்கள் அவசர அவசரமாய்ச் சென்று விடுவார்கள் என்பதே அவர்கள் திட்டமாகும். அவர்கள் சென்னை விமான நிலையத்தின் ஊடாக மத்தியகிழக்கு நாடு ஒன்றிற்குப் பயணமாகும் ஏற்பாடுகள் மிகவும் அவதானமாகச் செய்யப்பட்டிருந்தன. அதேபோலத் திருவனந்தபுரத்தால் மற்றவர்கள் செல்வதற்கும் ஒழுங்காகிற்று. திட்டமிட்டபடி இந்தக் கடல்விமானம் காலை ஐந்தரைக்குத் தாக்குலை நடத்தும். அதில் எந்தத்தவறும் ஏற்படக்கூடாது என்பதும், இரண்டும் விமானங்களும் ஓரேநேரத்தில் தாக்குதல் நடத்தவேண்டும் என்பதும் மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டிருந்தன.

படகில் இருந்த விமானம் வந்தவர்கள் துணையோடு அதிக சிரமம் இன்றிக் கடலில் இறக்கிவிடப்பட்டது. அதற்கான வசதிகளும், கருவிகளும் அவர்களிடம் இருந்தன. பின்பு இயந்திரங்கள் வேலைசெய்கிறதாவென ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. அதன்பின் சாஹிலிற்கு விமானம் பறப்பதற்கு முதல் செய்ய வேண்டியவை பற்றி மிகவும் ஆறுதலாக றாகீனும், றாமீசும் விளங்கப் படுத்தினார்கள். இறுதியில் சாஹிலிடம் விடைபெற்றுக்கொண்டு அவர்கள் வந்தவர்களோடு புறப்பட்டு மசூதியை நோக்கிச் சென்றார்கள். ஒளிகள் இன்றிய அந்தக் கடல்விமானத்தில் நேரம் வரும்வரையும் சாஹில் காத்திருந்தான். சிறுவயதில் படித்த அவனது மதப்பள்ளி ஞாபகம் வந்தது. சுவர்க்கத்தில் இடம்கொடுக்க அல்லா காத்திருப்பான் என்று அவன் நம்பினான். சுவாத் பள்ளத்தாக்கும் அதன் நினைவுகளும் அவனை வருடிச்சென்றன. அதைவிட அழகான சொர்க்கத்தின் கதவுகளை அல்லா திறந்துவைத்திருப்பதாக அவன் எண்ணிக்கொண்டான். “இன்ஷா அல்லா” என மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டான்.

கணங்கள் யுகங்களாகக் காலங்கள் நகரமறுப்பதான பிரமையில் சாஹில் அவஸ்தைப்பட்டான். எல்லாம் குறித்த நேரத்தில் நடைபெறவேண்டுமென அவன் கடவுளைப் பிரார்த்தித்தான். இருவர் மாத்திரமே இந்தப் புனிதப் போரில் உயிரிழக்கவேண்டி வரும் என்பதை அவன் வலுவாக நம்பினான். மற்றையவர்கள் விமானத்திலேறி இந்த நாட்டை விட்டுப் புறப்பட்டு விடுவார்கள். பின்பு இந்திய அரசால் அவர்களை இலகுவில் தண்டித்துவிட முடியாதென

அவன் எண்ணினான். பின்பு அப்படித் தப்பித்தவர்கள் சிலகாலத்தில் எப்படியோ தமது தாய்நாட்டைச் சென்றடைந்து விடுவார்கள். புனிதப் போரின் வெற்றியை அப்போது அங்கே அவர்கள் கொண்டாடுவார்களென அவன் புளகாங்கிதம் அடைந்தான். அவன் உதடுகள் ஒரு ஹிந்திப்பாட்டை மெல்ல முணுமுணுத்தது. புனிதப்போரும் ஆண்டவனின் சுவர்க்கமும் அவனது மூளையை நிறைத்தன. அவன் அல்லாவின் அழைப்பிற்காய்க் காத்திருந்தான்.

அழைப்பு நேரம் வந்தது. சரியாக ஐந்து முப்பதுக்குச் சாஹில் விமானத்தை இயக்கினான். சென்னை விமானநிலையக் கண்காணிப்புக்கோபுரத்தில் இருந்து அந்தக் "கொல்வ்எயார்" விமானத்திற்குப் பறக்கும் அனுமதி கிடைத்தது. அது ஓடுதளத்தைப் பின்தள்ளி ஆகாயத்தை நோக்கி உந்திப் பாய்ந்தது "நான் தப்பினேன்" என்ற வண்ணம் இராட்சதப் பறவையாக வானில் பேரிரைச்சலோடு பாலைவனத்தை நோக்கிப் பறந்து சென்றது.

சாஹிலின் விமானம் மகூதிக்குச் சமாந்தரமாகக் கடலிலோடி வேகமெடுத்தது. அது மொஸ்க் வீதியைத் தாண்ட வானில் தாவிப் பறக்கத் தொடங்கியது. சாஹில் அவதானமாக அதைக் கடல் நீரோடு தொட்டும் தொடாமலும் பறக்குமளவு உயரத்தில் வைத்துக்கொண்டான். சாஹில் விமானத்தை தொடர்ந்தும் கருமாரி அம்மன் கோவில், கால்பாக்கம் டீஏஈ "DAE" மருத்துவமனை என்பவற்றிற்குச் சமாந்தரமாகப் பறப்பில் ஈடுபடுத்தினான். சாஹிலுக்கு வாழ்வின் இறுதி முடிவைத் தான் வலுக்கட்டாயமாக வரவழைத்திருப்பது தெரியும். அவன் அதைப் பெரும்புனிதமாக எண்ணிக் கவலைகளைப் புறம்தள்ளினான். தொடர்ந்தும் அமைதியாக இலக்கை நோக்கி விமானத்தைச் செலுத்தினான். இந்த வாழ்வின் முடிவில் சுவர்க்க வாழ்வின் கதவு திறந்து இருக்கிறது என்பதில் அவனுக்கு இமாலய நம்பிக்கை. சாஹிலின் விமானம் காமாட்சி அம்மன் கோவிலைத் தாண்டிப் பறந்தது. சாஹில் விமானம் எங்கு இருக்கிறது என்பதை விமானத்தில் பொருத்தப்பட்டு இருந்த நவீனமுறையில் கடைசியாகத் தயாரிக்கப்பட்ட ஜிபிஎஸ் "GPS"

இன் துணையுடன் கணித்தான். யாராவது அவதானித்து சந்தேகக்கண்ணோடு நோக்க முதல், விமானம் உரிய இடத்தை அடைந்துவிடவேண்டும் என்பது சாஹிலின் ஒரே குறிக்கோளாகியது.

சென்னை விமானக்கண்காணிப்புக் கோபுரத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இரு சந்தேகப் புள்ளிகளால் அங்கே ஒரே அமளி உண்டாகியது. திருவனந்த புரத்திலும் சிறு குழப்பம் உண்டாகியது. அது என்ன என்பதை உறுதிப்படுத்த முடியாத அல்லாட்டத்தில் அவர்கள்

தொலைபேசியில் பொன்னான நேரத்துளிகளை மண்ணாக்கினார்கள். அந்த மர்மப்புள்ளிகள் பற்றி இந்திய விமானப்படையும் ஆராய்ந்தது. அதேவேளை யுத்தவிமானங்கள் இலக்கை நோக்கிப் புறப்படுவதற்குத் தயார் செய்யப்பட்டன.

நாராயணன் ஆலயத்தை அண்டியதும் சாஹில் விமானத்தை ஆலயத்திற்கு எதிராகக் கடலை நோக்கிச் செலுத்தினான். பின்பு அதைத் திருப்பி நேராக அணுமின் நிலையத்தை நோக்கி அதிவேகத்தோடு செலுத்தத் தொடங்கினான்.

சாஹிலுக்கு அவனது நண்பர்கள் இந்தத் திட்டத்தை முதன்முதற் கூறியபோது அவனாற் சற்றும் அதை நம்பமுடியவில்லை. அணுவுலையின் மொத்தச் சுவர் பற்றிய அறிவு அவனுக்குத் ஓரளவிற்கு இருந்தது. விஎன்எஸ் 41 'VNS-41 Aircraft" விமானத்தையும் அந்தப் புதியரகக்குண்டையும் வைத்து ஒரு பிரளயமே நடத்தலாம் என்பதை அவர்கள் பரிசோதித்துக் காட்டியபோது அவன் வாயடைத்துப் போய்விட்டான். சில வல்லரசுகளின் உளவுஸ்தாபனங்களிடமே இல்லாத அறிவு தனிமனிதர்கள் கைக்கு எப்படி வந்தது என்பது அவனுக்கு முதலில் வியப்பைத் தந்தது. பின்பு அது தமது நாட்டின் உளவுஸ்தாபனத்தில் இருப்பவர்களின் இரகசிய ஆசீர்வாதத்தோடுதான் கிடைத்திருக்கிறது என்பதை அறிந்துகொண்டான்.

இப்படியான வெடிதிறன் கொண்ட வெடிபொருட்கள் தனிமனிதர் கைக்கும் கிட்டும் என்கின்ற உண்மை அன்று அவனைப் பெருவியப்பில் ஆழ்த்தியது. உளவுஸ்தாபனங்களில் இருக்கும் எல்லோரையும் நம்பமுடியாது என்பது அவனுக்கு அதிர்ச்சியான உண்மையாகிற்று. இன்று இந்தியாவுக்கு எதிராக நாங்கள் செய்வதை நாளை பாகிஸ்தானுக்கு எதிராகவும் யாராவது செய்யலாம் என்பதும் அவனுக்குப் புரிந்தது. தான் செய்யப்போகும் காரியத்தின் பரபரப்பில் அந்தத் தொழில்நுட்பத்தின் பிறப்பிடம்பற்றி அவன் மேற்கொண்டு அதிகம் கவலைப்படவில்லை. இந்த தொழில்நுட்பத்தைப் புனிதப் போருக்காய்ப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி அவன் அளவற்ற புளகாங்கிதம் அடைந்தான். சில அழிவுகளால் மட்டும்தான் சிலர் கண்களைத் திறக்க முடியும் என்றால் அவை தவிர்க்கமுடியாதவையென அவன் முடிவு செய்துகொண்டான். அல்லா உலக முஸ்லீம்களை இப்படியான அழிவில் இருந்து காக்க வேண்டுமென இறைஞ்சினான்.

சாஹில் விமானத்தின் வேகத்தை உச்சத்திற்குக் கொண்டுசென்றான். அவனது இலக்கு அணுவுலையின் கருவறையை நோக்கியபடி நிலைகுத்திற்று. அவன் அல்லாவை மீண்டும் மீண்டும் வேண்டிக்கொண்டான். அவன் வாய் 'அல்லாஹு அக்பர்'ரென இடைவிடாது மனனம் செய்தது.

சென்னை விமான நிலையமும், வேறு ஒரு இராணுவ விமானக் கண்காணிப்புநிலையமும், பறக்கும் மர்மப்புள்ளி ஒரு விமானம் என்கின்ற முடிவுக்கு வந்திருந்தன. அதையடுத்து உடனடியாக இந்திய விமானப்படைக்கு அவை தகவல் அனுப்பின. இந்தியாவின் நவீன யுத்த விமானங்கள் அடுத்த கணமே இலக்கை நோக்கிச் சீறிப்பாய்ந்தன. அவை ஒளியின் வேகத்தில் செல்லும் தொழில் நுட்பத்தை கொண்டிராமை விமானக் கண்காணிப்பறையில் இருப்பவர்களுக்குக் கணங்களை யுகங்களாக்கின.

சாஹிலும் சலீமும் 'அல்லாஹு அக்பர்' எனக் கத்தியவண்ணம் தங்கள் விமானங்களைக் குறித்த இலக்குகள் மேல் மோதினர். அவர்களின் சுவர்க்கம் சில வினாடிகளில் இருண்டு போயிற்று. கட்டுப்பாட்டு அறையின் திரைகளில் இருந்த மர்மப்புள்ளிகள் நிரந்தரமாக மறைந்து போயின. அதைப் பார்த்தவர்கள் திகைத்தனர்.

சில கணங்களின் பின்பு தாக்குதலுக்குச் சென்ற விமானங்கள் மனித குலத்திற்குச் சொல்லக்கூடாத செய்தி ஒன்றைத் தமது வானொலி மூலம் சொல்லின.

## 1.5 அணுவாயுத யுத்தம்

அணுவுலைகள் மேலான தாக்குதலை அடுத்து இந்திய மத்திய அரசு மின்னல் வேகத்திற் கூடியது. உணர்ச்சி அரசியல் நடத்தும் அந்த இந்து அதிதீவிரவாதத் தேசியக்கட்சியால் தொலைநோக்குச் சிந்தனைகள் புறக்கணிக்கப்பட்டன. கண்ணிற்குக் கண், பல்லுக்குப் பல் என்பதான கொள்கையை நடைமுறைப் படுத்தவேண்டுமென அதன் பல அங்கத்தவர்கள் கொதிநிலை அடைந்த அணுவுலைபோல் கொதித்தனர். அந்தக் கட்சி அப்படித்தான் செய்யும் என்கின்ற பயமே உலகத்தை உயிர்வாயு எடுக்கவிடாது உறைய வைத்தது. எது உலகத்தில் நடக்கக்கூடாதெனப் பயந்து கோர்ப்பசோவும் றேகனும் ஒப்பந்தம் செய்தார்களோ அதுவே நடக்கும் காலம் வந்ததாய் வல்லரசுகள் திகைத்தன.

இந்திய உளவுஸ்தாபனங்களான சீபிஐக்கும் றோவிற்கும் சில தகவல்கள் கிடைத்தன. அதையிட்டு அவர்கள் தங்களது தலைமையலுவலகத்தில் அவசரமாய்க்கூடி வாதித்தனர். அவர்களுக்குக் கிடைத்த தகவலின்படி முதலில் இத்தாக்குதல் இலங்கையில் இருந்து தயாராகிப் புறப்பட்டது என்பது தெளிவாகிற்று. அத்தோடு இத்தாக்குதலைத் தயார் செய்து நடத்தியவர்கள் பாகிஸ்தானியர் என்றும், அதற்கு இலங்கையிலும் இந்தியாவிலும் சில அதிதீவிரவாத முஸ்லீம்கள் உதவி செய்திருக்கிறார்கள் என்பதும் தெளிவாகிற்று. மேலும் எங்கிருந்து எப்படித் தாக்குதல் நடந்தது என்பது பற்றியும் அதில் விளக்கப்பட்டிருந்தது. மேற்கொண்டும் தகவல் சேகரிப்பதிலும், விசாரணை செய்வதிலும் அவர்கள் முழுமையாக ஈடுபட்டனர். அவர்கள் இந்தத் தகவல் அடங்கிய தமது முதலாவது கூட்டறிக்கையை மத்திய அரசிற்கு அவசரமாக அனுப்பி வைத்தனர்.

தமிழ்நாட்டில் நடந்த அணுவுலைத் தாக்குதலை அடுத்து நாடெங்கும் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே காட்டுத்தீயெனக் கலவரம் மூண்டது. முஸ்லீம்களுக்கான அடையாளத்தை எந்த மனிதனிலோ அல்லது சொத்துக்களிலோ இந்து அதிதீவிரவாதக் கலகக்காரர்கள் கண்டால், அவற்றைத் தாக்கி அழித்தனர். சில இடங்களில் மனிதர்கள் மீது சந்தேகம் வந்தபோது ஆண்களை அரைக்குக்கீழ் நிர்வாணமாக்கி, யாரென அடையாளம் அறிந்தனர். பின்பு அவர்கள் முஸ்லீம்களாக இருந்தால் அவர்களைத் தாக்கினர்; கொன்றனர். எரித்தனர். ஊழித்தாண்டவத்தில் சுடலைப்பொடி பூசுபவனுக்கு சுடலைகளை விஸ்தரித்துக் கொடுத்தனர். அது அவர்களுக்குக் கைலாச விலாசம் தரும் என்று நம்பினர்.

கலவரத்தைத் தடுக்க விரும்பியோ விரும்பாமலோ மத்திய அரசு நாடுதழுவிய ஊரடங்குச் சட்டத்தை அறிவித்தது. அந்த ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போதுகூடப் பல முஸ்லீம்கள் கொல்லப்பட்டு, அவர்களது சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. எந்தெந்த வீட்டில் முஸ்லீம்கள் குடியிருக்கிறார்கள் என்கின்ற பட்டியல்கள் இந்துக் குண்டர்கள் கையில் இருந்தன. அதற்குக் கணனி போன்ற செல்போன்கள் உதவி செய்தன. சில இந்து அதிகாரிகள் அந்தக் கைங்கரியத்திற்கு உதவினர். பட்டியல்கள் பட்டியல்களாக முஸ்லீம்களின் விபரங்களை அனுப்பி வைத்தனர். அதை வைத்துக்கொண்டு இந்துக் குண்டர்கள் முஸ்லீம்கள்மீது குறிதவறாது ஆக்ரோசமாய்த் தாக்குதல் நடத்தினர். சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களே சில இடங்களிற் தாக்குதலை நடக்கவிட்டுத் தங்களது இந்துத்துவ வெறியைத் தீர்த்துக்

கொண்டனர். அனுமன் வைத்ததீ ஆழியைத்தாண்டி வந்து இந்தியாவில் பற்றியதாக நாடு எரிந்தது.

மத்திய அரசு இரவுபகலாய்த் தொடர்ந்தும் நாட்டின் நிலைமை பற்றி ஆராய்ந்தது. இரசியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் தமது விசேட உதவிப்படையினரைக் கதிரியக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர். இரசியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து விசேட அரசியல் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு வந்தார்கள். அதேவேளை அந்நாட்டுப் பிரதமர்கள், ஜனாதிபதிகள் இந்தியப் பிரதமரோடு நேரடி வீடியோ தொலை பேசியில் எந்தவித வீபரீதமுடிவுக்கும் வரவேண்டாமென மன்றாடிக் கேட்டுக்கொண்டார்கள். இந்தியா இப்போது யுத்தத்தில் குதித்தால் உலகமே யுத்தத்தில் குதிப்பதாகிவிடும். கதிர்வீச்சு உலகம் எங்கும் காவிச் செல்லப்படுவதற்குக் காற்றிற்கு யாரும் தடைபோட முடியாது. மனிதன் தனக்குத் தானே தடைபோட்டாலும் காற்று படைக்கப்பட்ட சுதந்திரத்துடனேயே இன்றும், என்றும் எனும் இயற்கை விதியைத் தடுக்க முடியாது.

இந்தியாவின் பொருளாதாரச் சக்கரம் நகரமறுத்தால் உலகப் பொருளாதாரமே ஸ்தம்பித்துவிடும் என்கின்ற பயம் எல்லோரையும் தொற்றிக்கொண்டது. உலகமயமாக்கலின் பின்பு எங்கே எந்தச் சக்கரம் நின்றாலும் உலகம் முழுமையும் அதன் அசைவு பாதிக்கிறது. ஒரு பங்குச் சந்தை தழும்பினால் அதன் தாக்கம் தொடரலையாக எங்கும் பரந்து செல்கிறது. றேகனுக்கும் தட்சருக்கும் இப்படிச் சொந்தப் பொருளாதாரச் சக்கரங்கள் சறுக்கும் என்று புரிந்திருந்தால் பேசாது விருந்து சாப்பிடுவதோடு அலுவலை முடித்திருப்பார்கள். இப்போது இந்தியச் சக்கரத்தை எண்ணி ஐரோப்பாவும் அமெரிக்காவும் நடுங்க வேண்டியதாகிற்று.

தனது நெற்றியை இரண்டாகப் பிளந்தது போல், இந்தியப் பிரதமர் குங்குமப்பொட்டை நடுநெற்றியில் இழுத்திருந்தார். வெண்ணிற ஆடையில் அவர் பளிச்சென்று தோன்றினார். அவரது வழுக்கற் தலை எண்ணை சுரந்து ஒளிபட மினுங்கியது. அவர் நாடிக்குக் கைகளை முட்டுக்கொடுத்து மூளையின் கனதிக்கு கைகளின் பலம் சேர்த்துக்கொண்டார். நெற்றியிற் சுருக்கம் அதிகமாகக் குடியேறச் சிந்தனையில் அசைவற்றிருந்தார். இந்தியப் பிரதமருக்குத் தாங்கள் எடுக்கப்போகும் ஒவ்வொரு முடிவக்குமான பலாபலன் என்னவாக இருக்கும் என்பது தெரியும். தமது அரசியல் வாழ்வு பாதுகாக்கப்படுவதோடு, நாடு ஒட்டு மொத்தமாய் அழிவதையும் தடுக்கவேண்டும் என்பது அவருடைய பிரச்சனையாயிற்று. கட்சியின்

பல உறுப்பினர்கள், பாகிஸ்தானை உலக வரைபடத்தில் இனி இல்லாது ஒழிக்கவேண்டுமெனக் கறுவினார்கள். அப்படியான தலைவெடிக்கும் தீவிரவாதத்தோடு இருப்பவர்களின் தொகையே அந்த இந்துத் தேசியவாதக் கட்சியில் அதிகம். அவர்களைத் திருப்தி செய்யமுடியாதவிடத்து அக்கட்சியின் இருப்பும் கேள்வியே. அத்தால் பிரதமர் ஆசனமும் காலியே. அவர்களைச் சமாளித்து... நாட்டையும், தமது அரசியல் வாழ்வையும் எப்படிக் காப்பாற்றிக்கொள்வது என்கின்ற தலையிடியில் அவர் குழம்பிப்போனார்.

பின்பு, பிரதமர் மந்திரிகளோடு பல மணித்தியால விவாதம் நடத்தினார். அந்த விவாதத்தில் இலங்கையும், மாலைதீவும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக வரும் சக்திகளை அடையாளம் காணமுடியாமல் இருக்கின்றன என்கின்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். அந்த இந்துத் தேசியவாதக் கட்சியின் அரசாங்கம் அயல் நாடுகளின்மேல் ஏற்கெனவே வெறுப்புற்றிருந்தது. பௌத்தமும் இஸ்லாமும் கால்களை வாருவன என்கின்ற கவலையிற் துவண்டது. அதுவும் இலங்கையின் விலாங்குக் குணம் அவர்களை இன்னும் கொதிகொள்ள வைத்தது. இதற்கு இந்திய அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்கின்ற கேள்வி எழுந்தது. இலங்கையை ஆக்கிரமித்தால், அந்த நாட்டைத் தக்க வைத்துக்கொள்வதற்கு அதிக படையும் வளங்களும் தேவைப்படும் என்கின்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அத்தோடு உலகத்தின் கடுமையான எதிர்ப்பையும் தாங்கள் சம்பாதிக்க வேண்டிவரும் என்பதும் எடுத்துக் கூறப்பட்டது. அத்தால் இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்யும் திட்டம் கைவிடப்பட்டது. பின்பு இலங்கையின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது என்கின்ற திட்டத்தின்கீழ் இரண்டு லட்சம் துருப்புகளையும், அதற்குத் தேவையான ஆயுதங்களையும் அங்கு அனுப்புவதாய் இந்திய அரசு முடிவெடுத்தது. இந்த முடிவுக்கும் பலநாடுகள் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் என்பது புரிந்தாலும், தமது நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேறுவழி இல்லை என்பதாக அவர்கள் முடிவு செய்தார்கள். சீனா என்ன சொல்லப்போகிறது என்பது பற்றிய கவலை அவர்களை அரித்தது என்றாலும், தமது திட்டத்திலிருந்து அவர்கள் சிறிதும் பின்வாங்க விரும்பவில்லை. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஒரு யுத்தம் ஏற்படுவதையோ, அதனால் ஏற்படும் கதிரியக்கத்தால் நாடுமுழுவதும் பாதிக்கப்படுவதையோ சீனா விரும்பாதென இந்தியா கணித்தது.

இலங்கை அரசிற்கு இந்த முடிவை இந்தியா அறிவித்தபோது அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். இது இந்தியா எதிர்பார்த்த ஒன்றே. இலங்கையரசு தங்கள் தன்னாட்சியில் யாரும் கைவைக்க முடியாதென வாதாடியது. தங்களிடம் மிகவும் திறமையான யுத்தத்தில் வெற்றிகளைப் பெற்ற இராணுவம் இருப்பதாகவும், அவர்கள் இந்தப் பிரச்சனையை முறையாகக் கையாள்வார்கள்

என்றும் வாதிட்டனர். தங்களது இராணுவம் தங்கள் நாட்டின் பாதுகாப்பை உறுதியாகப் பார்த்துக்கொள்ளும் என்றார்கள். அந்த வாதங்கள் இந்தியாவிடம் பயனளிக்காத அடுத்த கணமே அவர்கள் சீனாவை நாடி ஓடினார்கள். சீனா தன்னையும் தன் வளங்களையும் முதலில் பாதுகாத்துக்கொள்ள எண்ணியது. இந்தியா தற்போது இருக்கும் ஸ்திரமற்ற நிலையில் அதனோடு முரண்பட விரும்பவில்லை. இறால் பிடிப்பதற்காகச் சுறாக்களைப் பலியிடுவது இல்லை என்பதை அது நன்கு அறிந்து வைத்திருந்தது. இலங்கைக்கு உதவி செய்யப்போய்த் தானும் ஓர் அணுவாயுத யுத்தத்தில் மாட்டிக்கொள்ள அது விரும்பவில்லை. தற்போதைய இந்தியாவின் இராணுவப் பிரசன்னத்தை ஏற்குமாறு சீனா இலங்கைக்கு அறிவுரை வழங்கியது. பிரச்சனை சிறிது தணியும் போது இந்தியாவோடும் ஐக்கியநாடுகள் சபையிலும் தாங்கள் அதைப்பற்றிப் பேசி ஒரு சாதகமான முடிவை வாங்கித் தருவதாய் வாக்களித்தது.

இலங்கையரசு, இந்தியப்படைகளை மூன்றாவது தடவையாகத் தனது நாட்டிற்குள்ளே நுழையவிட்டது. இந்தியா இலங்கையின் தன்னாட்சியைமீறி இரண்டாவது முறையாக இலங்கைக்குள் பிரவேசித்தது. இலங்கை அரசு தன் இயலாமையில் இரு அரசுகளுக்கும் இடையே இருந்த தொடர்புகளைச் சிலகாலம் ஸ்தம்பிதம் அடையச்செய்தது. தனது தன்னாட்சியை இந்தியா மீறிவிட்டதாக இலங்கை ஐநாவிடம் முறைப்பாடு செய்தது. ஐநாவில் எல்லா வல்லரசுகளும் வழக்கத்துக்கு மாறாக அமைதிகாத்தனர். யானையின் பாதையில் எறும்புகள் பலியிடப்படுவதை யாரும் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. அடுத்து உலகில் என்ன நடக்கும் என்கின்ற திகிலில் பல நாடுகள் உறைந்து போயின. இலங்கையின் பிரச்சனை ஒரு பொருட்டாக அவர்களுக்குத் தோன்றவில்லை.

பல மக்களால் வெறுக்கப்படும் பயங்கரவாதிகள் ஒரு யுத்தத்தைத் தொடங்கிவிட்டார்கள். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தீவிரவாதிகள் அதை ஊதிப் பெருப்பிப்பதற்குத் தயாரானார்கள். இந்திய அறிவியலாளர்கள் அணுவாயுத யுத்தத்திற்கு ஒருபோதும் அனுமதி அளிக்கப்போவதில்லை. அதிகாரம் அவர்கள் கைகளில் இல்லாதவரைக்கும் அவர்கள் கருத்துகள் செவிடன்காதில் ஊதப்பட்ட சங்காகின.

அணுவுலைகளைத் தகர்த்ததிற்குப் பதிலடி கொடுக்காமல் விடுவது கோழைத்தனம் ஆவதோடு பயங்கரவாதிகளுக்கும், அதை ஆதரிக்கும் நாடுகளுக்கும் கிடைத்த வெற்றியும் ஆகுமென இந்திய

எதிர்க்கட்சிகள் கோசமிட்டன. இப்படித்தான் அக்கட்சியின் பிரச்சாரம் இருக்குமென இந்திய அரசு கணித்திருந்தது. இந்த அரசியல் பெரும் சூதாட்டத்தில் தனக்கு என்ன நன்மை கிடைக்கும் என்பதை இந்துத் தேசியக்கட்சி ஆராய்ந்தது. ஒன்றும் செய்யாது இருந்தால் தமது கட்சியின் எதிர்காலம் பாழாகிவிடும் என்கின்ற நிதர்சனம் இமயமாகப் பிரதமர் முன் எழுந்துநின்றது. அணுவாயுத யுத்தத்தைத் தொடங்கினால் அது கட்டுப்பாடில்லாது போய்விடலாம். அப்போது தென்கிழக்கு ஆசிய நாடுகள் முற்றுமாய் அழிந்து போய்விடுகின்ற ஆபத்தும் உள்ளது. இந்த உண்மை அந்த இமயத்தையும் தாண்டிப் பிரதமரைப் பயமுறுத்தியது. அது பிரதமரின் நிம்மதியைத் தின்று தொலைத்தது. அணுவாயுத யுத்தம் கட்டுப்பாட்டை இழந்தால் அந்தப்பழி பின்பு தங்களைவிட்டு அகலாது நிலைத்துவிடும் என்பதும் பிரதமருக்கு நன்கு புரிந்தது. ஓர் அணுகுண்டு வெடித்தாலே உலகத்தின் தூற்றலுக்கும் வீண்பழிக்கும் காலகாலமாக முகம் கொடுக்கவேண்டி வரும். அது ஒன்றுடன் நின்றுவிடாது தொடர் கதையாகும்போது எப்படி இருக்கும் என்பதை அவருக்குக் கற்பனை செய்யவே பிடிக்கவில்லை.

தற்போது இரண்டு கதிர்வீச்சுக் கசிவுகளுக்கு உள்ளாகியிருக்கும் இந்தியநாடு, யுத்தத்தால் இன்னும் அதிக தாக்கத்திற்கு உள்ளாகும். பல நகரங்களில் மக்கள் வாழமுடியாது போகும். பல மில்லியன் மக்கள் சில கணங்களில் அழிந்து போவார்கள். இந்தியப் பொருளாதாரம் படுகிடையாகும். பல மில்லியன் மக்களைக் கதிர்வீச்சும், அதனாற் பீடிக்கும் நோய்களும் பாதிக்கும். அது அதிக காலத்திற்குத் தனது பிடியைவிடாது அழுத்தும். இப்படிப்பட்ட பல உண்மைகள் பிரதமரை ஓயவிடாது அந்தரத்திற் பந்தாடின.

அணுகுண்டுகள் உலகத்தில் பாவிக்கப்பட்டதின் பேரவலங்களை இன்றும் நாகசாகி, ஹிரோசிமா விளம்புகின்றன. அதைவிடச் சுனாமி புக்குசிமாவை அறிமுகம் செய்து வைத்திருக்கிறது. இது என்றும் மனிதசமுதாயத்தின் ஞாபகத்தில் துருத்தும் செய்தி. அதன் தாக்கம் மனிதனின் பாரம்பரிய அலகுகள் ஊடாக கடத்தப்படுகிறது. அந்த வரலாற்றைக் காந்தி பூமியான இந்தியாவில் மீண்டும் நடத்துவதற்கு அவரது மனது சங்கடப்பட்டது.

பதில் தாக்குதல் நடத்தாவிட்டால் பயங்கரவாதிகளும், அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் நாடுகளும் மேலும் மேலும் இந்தியாமீது தாக்குதல் நடத்துவார்கள். பயங்கரவாதத்தைக்கண்டு இந்தியா அஞ்சுவதாக அது வரலாறு எழுதும். அதற்கு எமதுநாடு ஒருபோதும் இடம்கொடுக்க முடியாது. எந்தப் பயங்கரவாதிகளுக்கும் அடிபணிந்ததாக இந்திய வரலாறு இருக்கக்கூடாது. மக்கள் இருக்கும்

மனநிலையில் பதிலடி கொடுக்காதுவிட்டால் அரசைக்கூட இரவோடு இரவாகக் கவிழ்த்து விடுவார்கள் என்பதாக மீண்டும் மீண்டும் எண்ணிய இந்தியப் பிரதமர் ஒரு முடிவுக்கு வந்தார்.

அவர் முதலில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளித்துவரும் பாகிஸ்தானைத் தண்டிப்பதென முடிவு எடுத்தார். அதை எப்படித் தண்டிப்பது என்பதிற் குழப்பம் நிலவியது. பொருளாதாரத் தடையென்கின்ற பேச்சு உடனடியாகவே மறுதலிக்கப் பட்டது. அதன் தாக்கம் இந்தப் பெரிய தாக்குதலுக்கு ஈடாகாது என்பதோடு, அதைச் சீனா முறியடித்துவிடும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்குத் தகுந்த தண்டனை இராணுவரீதியான தாக்குதல்தான் என்றாலும், அது அணுவாயுதப் பாவிப்பாக இருக்கக்கூடாது என்கின்ற அபிப்பிராயம் நிலவியது. அதுவும் இந்தியா முதலில் அணுவாயுதத்தைப் பாவித்தது என்கின்ற அவப்பெயர் வருவதாக அது அமையக்கூடாது என்பதில் இந்தியப்பிரதமர் மிகவும் அக்கறை காட்டினார். மதத்தைச் சாட்டி, இனத்தைச் சாட்டி, மனிதப் பயத்தைக் காட்டிப் பதவிக்கு வருவது சுலபம். அப்படிப் பதவிக்கு வந்தபின்பு பதவியென்னும் அடங்காக் குதிரையில் இருந்தவண்ணம் மனிதத்தை மீறுகிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டு எழாது சவாரிசெய்வது மிகவும் அவஸ்தையான விடயம் என்பது அவருக்குப் புரிந்தது.

கடைசியாக மந்திரி சபையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி, இருபத்தி நான்கு மணித்தியாலத்திற்குள் இந்திய உளவு நிறுவனம் கொடுக்கும் பெயர்ப் பட்டியலில் உள்ள அனைவரையும் பாகிஸ்தான் கைதுசெய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும். அது தவறும் பட்சத்தில் பாகிஸ்தான் மீது மரபு ரீதியான தாக்குதல் நடத்திப் பயங்கரவாத மையங்களை அழிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடுமென அறிவிக்கப்பட்டது. இதனால் வரும் எந்த விளைவுக்கும் பாகிஸ்தானே பொறுப்பு எனவும் அதில் திட்டவட்டமாய்ச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பாகிஸ்தான் கடந்தகாலத்தில் இழுத்தடிப்புச் செய்ததுபோல் இம்முறையும் சுத்துமாத்துச் செய்தால் இரத்தம் சிந்துவதை அதனால் தடுக்கமுடியாது என்பதையும் இந்தியா வலியுறுத்தியது.

இந்த அறிவிப்பைப் பாகிஸ்தானுக்கு அனுப்பிய இந்தியப் பிரதமர் தமது இராணுவத்தை எல்லை நோக்கி நகர்த்துமாறு தளபதிகளுக்குக் கட்டளையிட்டார். அத்தோடு அணுவாயுதம் உட்பட எல்லா ஆயுதங்கள், அதற்கான படைகள் என்பனவற்றை அதியுச்சத் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் அவர் பணித்தார்.

பாகிஸ்தான் அரசு இந்தியாவின் இந்த அறிக்கையைப் பார்த்து அதிர்ந்து போயிற்று. இந்தியாவில் நடக்கும் ஏதாவது ஒரு பயங்கரவாதச் செயலுக்குத் தங்களைப் பொறுப்பேற்கச் சொல்வது அநீதியென அது கொதித்தெழுந்தது. அவர்களது உள்நாட்டுப் பாதுகாப்பிற்குத் தங்களை உத்தரவாதம் தருமாறு வெருட்டுவதை எந்தப் பயங்கரவாதத்தில் உள்ளடக்குவது என்பது தெரியாது அது திகைத்தது. சொந்த நாட்டிலேயே உள்நாட்டுப் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியாது பாகிஸ்தான் தவிக்கும்போது, மேலும் பளுவேற்றுவது அவ்வரசிற்கு இந்தியாமீது சினத்தை உண்டுபண்ணியது.

பொருளாதார வளர்ச்சியின்பின் இந்தியாவின் வாலைப் பிடித்துக்கொண்டு ஓடும் நாடுகளின் தொகை அதிகரித்துவிட்டது. இன்னும் சிலகாலத்தில் சீனாகூடத் தனது அரசியலை மாற்றிக்கொள்ளலாம். தத்துவங்கள் எல்லாம் அழகாகப் பேசப்படுவதற்கு மாத்திரமே. கூட்டிக் கழிப்பதில் மிச்சம் வருமென்றால் உக்கிப்போன சிவப்புச்சட்டைகளைக் கிடப்பில் போடுவதற்கு யாரும் தயக்கம் காட்டுவதில்லை. நிர்வாக வசதிக்காய் அழகான சர்வாதிகாரத்தையும், பொருளாதார முன்னேற்றத்திற்காய் முதலாளித்துவத்தையும் வைத்திருக்கும் ஒரு நாட்டை நம்புவதும் இரண்டு தோணியில் கால் வைத்தது போன்றதுதான் என்கின்ற அபிப்பிராய மாற்றம் பாகிஸ்தானிடம் தற்போது ஏற்பட்டது.

இந்தியாவின் அறிவிப்பு வந்தவுடனேயே பல பாகிஸ்தானிய அரசியற் கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்யத்தொடங்கிவிட்டன. அப்படி இருந்தும் கிடைத்த பட்டியலை வைத்துப் பாகிஸ்தானரசு அந்தப் பயங்கரவாதிகளைக் கைது செய்ய முயற்சித்தது. அப்படிக் கைதுசெய்து இந்தியாவிடம் கொடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து மேலும் பாரிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடத் தொடங்கின. அந்த ஆர்ப்பாட்டங்கள் உள்ளூர்க் கலவரமாய் மாறின. பொலீசும், இராணுவமும் அவர்களை அடக்குவதில் முழுக்கவனத்தையும் செலுத்தத் தொடங்கினார்கள். அந்த அமளியில் பாகிஸ்தான் அரசுக்குக் கைதுசெய்யக் கொடுக்கப்பட்டிருந்த காலம் சடுதியாக முடிவடைந்தது. அந்தப் பட்டியலில் இருந்த இருவர் மாத்திரமே அப்போது கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்தார்கள். அவர்கள் அந்த விபரத்தை இந்திய அரசுக்கு அறிவித்தார்கள்.

இந்தியப் பிரதமர் சினத்தில் துடித்தார். ஒவ்வொரு முறையும் பாகிஸ்தானின் இந்த ஏமாற்றுவித்தை தொடர்ந்துகொண்டே வந்தமை வரலாறு எனக் கர்ச்சித்தார். “அவர்கள் திருந்தப்போவதில்லை. பெரும்

நாசத்தை உண்டுபண்ணி இந்தியாவின் ஒரு பகுதியை அழிக்கும் பயங்கரம் நடந்தபோதுகூட இந்தியா பொறுமை காத்திருக்கிறது. பாகிஸ்தானியரால் பொறுப்பை உணரமுடியவில்லை" எனக் கத்திவிட்டு வெறுப்பிற் கைகளை ஓங்கி மேசையில் குத்தினார். அங்கு இருந்தவர்கள் அவரைப் பரிதாபமாய்ப் பார்த்தார்கள். வியர்வையால் அவர் குங்குமம் கரைந்து இரத்தமாய் மேசையில் ஒழுகியது.

இந்தியப் பிரதமர் முப்படைத் தளபதிகளையும் அழைத்துத் தாக்குதலுக்கான ஒப்புதலை வழங்கினார். இந்தியா தாக்குதலுக்கு ஒப்புதல் அளித்த செய்தி சில கணத்தில் பாகிஸ்தான் உளவு நிறுவனத்தைச் சென்றடைந்தது. பாகிஸ்தான் அரசு அதை அறிந்து சற்றுத் தடுமாற்றம் அடைந்தது. பின்பு பாகிஸ்தான் மீது இந்தியா ஒரு யுத்தம் தொடுக்குமென்றால், அது ஒரு புனிதப்போராகவே இருக்கும் எனவும், அதற்காகத் தாங்கள் எந்த ஆயுதத்தையும் பாவிக்க முடியுமெனவும் அது முடிவு செய்தது. முப்படைகளையும் அணுவாயுதங்களையும் தயார் செய்யுமாறு பாகிஸ்தான் பிரதமர் தனது இராணுவத் தளபதிக்குக் கட்டளையிட்டார்.

இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு தை மாதம் இருபத்தியாறாம் திகதி அதிகாலை இந்திய யுத்தவிமானங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்தன. அதை எதிர்கொண்டு பாகிஸ்தானிய விமானங்கள் சண்டையிட்டன. இந்திய ஏவுகணைகளும் பாகிஸ்தான் இலக்குகளைத் தாக்கின. இந்திய மரபுவழி ஏவுகணை ஒன்றை அணுவாயுதம் தாங்கிவரும் ஏவுகணையெனத் தப்பாகக் கணித்த பாகிஸ்தான் தனது அணுவாயுதம் தாங்கிச்செல்லும் ஏவுகணைகளை அதன் தலைகளோடு இந்தியாவை நோக்கிச் செலுத்தியது. இந்தியா அதைப்பார்த்து முதலில் அதிர்ந்து போனாலும் உடனடியாகச் சமாளித்துக்கொண்டு, தானும் தனது அணுவாயுத ஏவுகணைகளைப் பெரும் பொதிகளோடு பாகிஸ்தானை நோக்கிச் செலுத்தியது. உலகம் சமாதானம் செய்துவைக்க எண்ணமுதல் நடந்துவிட்ட இந்த நிகழ்வினால் மூச்சிழந்து போயிற்று. இருநாட்டிலும் ஏற்படும் அனர்த்தத்திற்கு அது மௌனசாட்சியாகியது. மனிதம் மீண்டும் ஒருமுறை அற்ப மனிதர்களால் அழிவதை யாரும் தடுக்கமுடியவில்லை. உலகக் காவலன் என்கின்ற அமெரிக்கா அதிர்ச்சியில் உறைந்து போயிற்று. அவர்கள் தங்கள் கருத்தைச் சொல்லுவதற்குக்கூட இங்கே சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. அன்று உலகின் பாரத்தைக் குறைக்கப் பஞ்சபாண்டவர் தோன்றினார்கள் என்றது பாரதம். இன்று பிரிந்த பஞ்சபாண்டவர்பூமி அணுவாயுதத்தோடு போரிட்டு உலகப் பளுவைக் குறைத்தது. பஞ்சபாண்டவருக்குப் பதிலாக அவர்கள்

பூமியிற் தயாரிக்கப்பட்ட அணுவாயுதம் இன்று பரந்தாமனுக்குச் சேவை செய்தது.

## 1.6 பொருளாதாரவீழ்ச்சி

யுத்தத்திலீடுபட்ட இந்தியா, பாகிஸ்தான், அதைச் சுற்றியிருந்த அயல்நாடுகள் பாரிய கதிர்வீச்சிற்கு உட்பட்டன. அத்தால் அந்த நாடுகளில் வாழ்ந்த குடிகள் பலவிதமான உபாதைகளுக்கு இலக்காகினர். கதிர்வீச்சாற் பாதிக்கப்பட்டுப் பெருவாரியான மனிதர்கள் மட்டும் அல்ல விலங்குகள், தாவரங்கள் என்பனவும் இறந்து போயின. மீதமாய் இருந்தவர்கள் நோய்வாய்ப்பட்டனர். மீதமாய் இருந்தவையும் நோய்வாய்ப்பட்டன. நோய்வாய்ப்பட்டதால் வேலை செய்யக்கூடிய மனிதர்களின் தொகை குறைந்தது. கதிர்வீச்சாற் பாதிக்கப்பட்ட இடங்கள் விவசாயம் செய்ய உகந்தில்லையென அரசாங்கத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டன. அத்தால் விவசாயம் செய்யும் நிலம் முன்பைவிட மிகவும் சுருங்கிற்று. எஞ்சிய மனிதர்கள் பஞ்சத்தில் அல்லாடினர். மனிதரை மனிதர் உண்ணும் பஞ்சம் தலைவிரித்தாடியது. நரமாமிசமா வாழ்வை முடித்துக்கொள்வதா என்கின்ற தெரிவுகள் உயிர்வாழ்ந்த மனிதர்கள் முன்னே கொண்டுவரப்பட்டன.

இந்திய பாகிஸ்தான் யுத்தத்தைத் தொடர்ந்து, உலகைப் பெரும் பொருளாதாரவீழ்ச்சி விழுங்கத் தொடங்கியது. அது மில்லியன் மில்லியனான மக்களின் வேலை வாய்ப்புகளைப் பறித்தது. உலகம் எங்கும் வேலையில்லாப் பிரச்சனையும், பட்டினியும் தலைவிரித்து ஆடியது. அதன் தாக்கம் வறியநாடுகளை அதிகம் வாட்டிற்று. அதேவேளை ஐரோப்பிய நாடுகளையும் அந்தப் பிரச்சனைகள் விட்டு வைக்கவில்லை. இந்தியா, பாகிஸ்தானோடு அதைச் சுற்றி இருந்த நாடுகளில் வசித்தவர்கள் சகமனிதரை உண்ணவிரும்பாது ஐரோப்பாவை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினார்கள். அங்கு தமக்கு நல்ல வாழ்க்கை கிடைக்குமென அவர்கள் நம்பினார்கள்.

அதீத வசதிகளோடு ஆடம்பரமாய் இருந்தவர்களுக்குத் தங்கள் வசதி குறைவதையோ, அல்லது வேலையில்லாமல் போவதையோ பொறுக்க முடியவில்லை. ஏற்கெனவே மொத்தப் பிரச்சனைக்கும் நிறமான வந்தேறுகுடிகள்தான் காரணம் என்கின்ற வெறுப்பில் இருந்த ஐரோப்பியர்களுக்கு மேலும் அதிகமான நிறமான வந்தேறுகுடிகள் ஆசியாவில் இருந்து வருவது பிடிக்கவில்லை. அதுவும் சில முஸ்லீம்நாடுகளில் இருந்து அகதிகளாய் மக்கள் வந்து இறங்குவது

அவர்களை மிகவும் வெறுப்படையச் செய்தது. அப்படி வரும் முஸ்லீம்கள் தமது மதத்தைத் தூக்கிப்பிடித்து வன்முறைகளில் ஈடுபடுவதோடு, அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்று, தங்கள் இனத்தைப் பெருக்கிச், சுதேசிகளைச் சிறுபான்மை ஆக்குகிறார்கள் எனப் பல சுதேசிகள் நம்பினார்கள். முஸ்லீம்களின் இரண்டாவது பரம்பரையின் ஒரு சிலர் மனித வெடிகுண்டுகளாய், பயங்கரவாதிகளாய்... ஆபிரிக்கா, ஆசிய, அமெரிக்கா போன்ற இடங்களிலும் ஐரோப்பாவிலும் வெடித்த வரலாறு அவர்களை மேலும் பயமுறுத்தியது. அதை நன்கு அறிந்த அதிதீவிரவலதுசாரிகள் தங்கள் பயங்கரவாதங்களை மறைத்து முஸ்லிம்கள்மேலான பயத்தை ஊதிப் பெருப்பித்து ஒவ்வொரு நாடாக ஐரோப்பாவில் ஆட்சிகளைப் பிடிக்கத் தொடங்கினார்கள்.

எல்லாத் துன்பத்திற்கும் இந்த நிறமான வந்தேறுகுடிகளே காரணமென்று அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். இந்த நிறமனிதர்களைத் தங்கள் வளமான நாடுகளில் இருந்து வெளியேற்றுவதே இதற்குத் தகுந்த தீர்வைத் தரும் எனவும் அதிதீவிர வலதுசாரிகள் சுட்டிக்காட்டினார்கள். பொருளாதார வீழ்ச்சியை அனுபவித்த மக்களும் அதை இலகுவாக நம்பத் தொடங்கினார்கள்.

இந்த நிறமான வந்தேறுகுடிகளை ஐரோப்பாவை விட்டு வெளியேற்றுவதற்கு அதிதீவிர வலதுசாரிகளைவிடச் சிறந்த அரசியல்வாதிகள் இருப்பதாய் அம்மக்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் ஆதரவு அந்த அதிதீவிர வலதுசாரிகளை நோக்கித் திரும்பத் தொடங்கியது. மனிதத்துக்கு எதிரான செயல்களை வைத்து, மக்களின் உணர்ச்சியைத் தூண்டி, அரசியலைப் பிடிக்கிறோம் என்பதை அந்த அதிதீவிர வலதுசாரிகள் அறிவார்கள். அறிந்தாலும் பதவிக்கும் அதிகாரத்திற்கும் முன்னே மனிதம் என்பதற்கு அதிகம் முன்னுரிமை கொடுக்கத் தேவையில்லையென அவர்கள் எண்ணிக்கொண்டார்கள். மனிதம் என்கின்ற பெயரில் ஒட்டுண்ணிகள் தங்கள் நாட்டைப் பாழ்படுத்துவதாயும் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். மனிதப் பிணங்களின்மேல் சாம்ராச்சியம் கட்டப்படுகிறது என்கின்ற உண்மையைத் தங்களுக்கே உரியதாக்கிக் கொண்டார்கள்.

மனிதவுரிமைகளை மீறிய தலைவர்கள் பல ஆண்டுகளாக அந்த நாட்டு மக்களின் ஆதரவோடு ஆண்ட வரலாற்று உண்மைகள் உலகம் முழுமையும் நிறைந்து கிடந்தன. மனிதம் மதிக்கப் படுகிறதா இல்லையா என்பதைவிட மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை நிறைவேற்றவேண்டியது அரசியல் வாதிகளின் கடமை

என்பது அதிதீவிர வலதுசாரிகளின் வாதமாகியது. அப்படியான அரசியல்வாதிகளையே மக்கள் பதவியில் வைத்திருக்கிறார்கள். அதிலும் சூரர்களாய் இருப்பவர்கள், தாங்கள் பெரும்பான்மை அரசாங்கமாய் வரும்போது, தங்களுக்குச் சாதகமாய்ச் சட்டங்களை மாற்றி, எதிர்க்கட்சிகளை நீர்மூலம் செய்து, அடக்குமுறையை மாற்றுக் கருத்தாளர்கள்மீது கட்டவிழ்த்துவிட்டு, நிரந்தர மன்னர்களாய் முடிசூடிக்கொள்கிறார்கள். அதற்கு இந்த நிறமனிதர்களின் நாடுகளே நல்ல முன்னுதாரணமாக இருந்திருக்கின்றன. ஹிட்லரின் கிரீடத்தை மிஞ்சும் கனவுகளோடு அதிதீவிர வலதுசாரிகள் வலம் வந்தனர். அந்த உண்மையை வெளிப்படையாகச் சொல்லித் தங்கள் இருப்பை ஆரம்பத்திலேயே ஆட்டம்காணச் செய்துவிடாது, மிகவும் கவனமாக அவர்கள் பொறுமை காத்தனர். அதேவேளை மக்களிடம் நிறமனிதர்களைப் பற்றிய அவதூறான பிரச்சாரத்தின் மூலம் அதிகமாக வெறுப்பேற்றினார்கள். அவர்களின் வாக்குகளைப் பொறுப்பேற்றார்கள்.

இந்திய இந்து அதிதீவிரவாத அரசியல்வாதிகளும், பாகிஸ்தான் அரசியல்வாதிகளும் சொந்த மக்களின் அழிவுக்கும் சொந்தநாட்டின் வீழ்ச்சிக்கும் ஏதுவானார்கள். மீதம் இருந்தவர்களில் ஒருபகுதி ஐரோப்பாவில் அடைக்கலம் கேட்க, நிறமான மனிதர்களென அங்கு அவர்களுக்கு அதிதீவிர வெள்ளை அரசியல்வாதிகள் முடிவுகட்டத் திட்டமிட்டனர். இந்த அனர்த்தத்தைப் பார்த்து இந்தியாவும் பாகிஸ்தானும் அதிர்ந்து போயின. ஹிட்லரின் பார்வை ஆரியத்தின் பிறப்பிடத்திலேயே வீழ்ந்ததாக அவர்கள் முகம் சுருக்கம் கண்டது. தாங்களும் பதவிமோகத்திலும் மதவெறியிலும் ஹிட்லரின் ரூபம் எடுத்துவிட்டது காலம் கடந்து புரிந்தது. அந்தக் கொடுமை அவர்கள் மக்களை ஐரோப்பா நோக்கிக் கலைத்தது. அங்கு அவர்களுக்கு வேண்டப்படாத மனிதர்களுக்கு உணவுகூடத் தேவையில்லை என்கின்ற பழைய தத்துவம் தூசிதட்டப்பட்டது. அது புரிந்தபோது இந்தியாவும் அதைச் சுற்றிய நாடுகளும் அஞ்சி நடுங்கின.

அயல்நாட்டு அரசியலில் காலம்காலமாக விளையாடியவர்களுக்கு ஒருநாள் தாங்கள் அந்த விளையாட்டிற்குப் பலியாவோம் என்பது புரியாமலிருந்தது. அது திடீரென நிதர்சனமான போது, காந்தி தேசத்திற்கு மீண்டும் காந்தியின் போதனை ஞாபகத்திற்கு வந்தது. காலத்தின் படிப்பினையாக அழிவு சுனாமியாக அடித்துக்கொண்டு போனபின்பு எந்தப் போதனையும் அவர்களுக்குக் கைகொடுக்கவில்லை.

# 2

## 2.1 நோர்வே

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சித்திரை மாதம் எட்டாம் திகதி புதன்கிழமை பதினைந்து மணிபோல் நோர்வேயின் ஒஸ்லோ நகரத்தின் மத்தியில் அமைந்திருந்த “ஒஸ்லோ சிற்றி” எனப்படும் வர்த்தக மையத்திற்குள் மூன்று வெள்ளைக் கார்கள் தொடராக நுழைந்தன. அதில் ஒன்றைச் செம்படையான சுருள் முடியுள்ள ஆபிரிக்கன் ஓட்டிச்சென்றான். அவன் முஸ்லிம்கள் அணியும் உடை தரித்திருந்தான். அவன் ஒட்டகத்தின் உயரத்தோடு போட்டியிடுபவனாய், அவனது தலை காரின் முகட்டைச் செல்லமாக முட்டி மோதியது. அவன் சோமாலிய நாட்டைச் சார்ந்தவன். மற்றைய காரைத் தடித்த அரேபிய நாட்டுக்காரன் ஓட்டிச் சென்றான். அவனது முகத்தின் அடையாளத்தை அழிக்கும் ஆக்ரோசத்தோடு ரோமத்தின் ஆக்கிரமிப்பு. வெள்ளையாக நீட்டு அங்கி அணிந்து குளிருக்காக அதன்மீது ஜக்கெற் தரித்திருந்தான். அவன் முகத்தில் இரக்கமே இல்லாத முரட்டுத்தனத்தின் இறுக்கமான தழுவல். இந்த உலகம் அழிந்துவிடவேண்டும் அல்லது இஸ்லாம் வசப்படவேண்டும் என்கின்ற வெறி அவனில். இறுதிக் காரை ஓர் ஒல்லியான அப்கான் நாட்டைச் சார்ந்தவன் ஓட்டிச்சென்றான். நல்ல உயரமாக இருந்த அவனது முகம் மழிக்கப்பட்டுப் பளிச்சிட்டாலும் ஆறாச்சோகம் அதில் ஆறாகப் பாய்ந்தது. அல்லாவின் ஒற்றையாட்சி இல்லாத இவ்வுலகைக் கருவறுப்பேன் என்பதாக அவன் விழிகள் பிரண்டன. அவன் ஐரோப்பியர் போல உடையணிந்திருந்தான்.

ஒஸ்லோ சிற்றிக்குள் எள்ளு எறிந்தாலே நிலத்தில் விழாத அளவிற்கு மக்கள் நிறைந்து வழிந்தனர். நாளை பெரியவெள்ளிக்கான விடுமுறை தொடங்குகிறது என்கின்ற அவசரத்தில் ஓடிவந்து கடைசிநேரக் கொள்முதல் செய்யும் அலையலையான மக்களின் கூட்டம் அதற்குள். அது நகர இடமில்லாது அலைமோதியது. குமுறும் கோளத்தின் மேல் நின்று கூத்தாடும் மனிதர்கள் போலச், சமுகக் குமுறல்கள் மறைந்துகொண்ட சலனமில்லா இயக்கத்தில் அம்மக்கள் சுறுசுறுப்பாக இயங்கினர். ஏட்டிக்குப் போட்டியான வன்முறை எங்கும் தலைவிரித்து ஆடும் காலமிது. மனித இனத்தின் சாபம் பதவிமோகம் கொண்ட, மதத்திடம் கண்ணை இழந்து, கற்கால வாழ்வை இன்றும் மெச்சும், சகமனிதர்களையும் அவர்களது உயிர்மையை, உரிமையைப் புரிந்துகொள்ளாத தலைவர்களும் அவர்களின் ஆட்சியும். பதவிக்காக, மதத்திற்காக, தப்பான வேதங்கள் ஓதப்பட்டு வெறியெனும் சாத்தான்களுக்குப் பூசை செய்யப்படுகிறது. ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக் கொடு என்பது பழைய

வேதமாகிவிட்டது. கொல்! கொன்றால் உனக்காகச் சொர்க்கவாசல் திறந்து இருக்கும் என்பது புதிய வேதமாகிவிட்டது. அதை நம்பிப் பல மனிதர்கள் விளக்கிற்குப் பலியாகும் விட்டிற் பூச்சிகள்போற் தாங்களும் அழிவதோடு மற்றவர்களையும் அதற்குள் இழுத்துச் சென்று விடுகிறார்கள்.

ஆசியாவில் ஏற்பட்ட கதிர்வீச்சின் கோரத்திற் சிதைந்த மானிடத்திற் குடிபுகுந்த வருத்தங்கள், திரிபுகள் அவர்களை எங்கும் துரத்திச் சென்றன. அது மானிட அவலங்களை மலிவுப் பொருளாக்கிற்று.

ஐரோப்பாவில் பல பத்து ஆண்டுகளாகவே குடியேற்றம் என்பது சுதேசிகளால் நஞ்சாக வெறுக்கப்பட்டு வருகிறது. சுதேசிகள் வெறுத்தாலும் நடைமுறை வாழ்வில் அதை முழுமையாகக் கட்டுப்படுத்திவிட முடியவில்லை. அதற்கு முட்டுக்கட்டையாக உலக வியாபாரம், ஐநாவின் சட்டங்கள், பரோபகாரிகள் என்கின்ற பழைய பெயர், பத்துக் கட்டளைகள், எஞ்சியிருக்கும் மனிதநேயம் ஆகியவை குறுக்கே நிற்கின்றன. அந்த மனிதநேய விட்டுக்கொடுப்பை இப்பொழுது கிரேக்கம், இத்தாலி போன்ற நாடுகள் மறந்து போயின. அதற்குப் பதிலாக அகதிகளைக் கொடுமைப்படுத்தியும், காவல் அரண்கள் அமைத்தும், தடுக்க முயற்சிக்கின்றன. அப்படி முயன்றும் அது பெரும் பயன் அளிக்கவில்லை. அதையும் மீறிவரும் அகதிகளை எவ்வித அடிப்படி வசதிகளும் இன்றி நடுத்தெருவில் விட்டார்கள். ஒருநாள்… ஒருநேரம்… தேவாலயம் கொடுக்கும் உணவு அவர்களுக்குக் கிட்டும். மறுநாள்… மறுநேரம்… அது கைக்கெட்டாத கனவாகும். வருத்தம் ஒருபக்கம், வதைக்கும் பசி மறுபக்கம் சொறி நாய்கள் போலத் தெருவில் அவர்கள் வாழ்க்கை நடத்துவதோடு வன்முறையாளரிடமும் வதைபட்டனர்.

ஐரோப்பிய வாழ்வு பற்றி அதீத கனவுகளோடு வந்தவர்களைப் பிச்சையெடுக்க விட்டபோது அவர்கள் துவண்டு போயினர். இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்க எண்ணிய கதையாக, வீடுமனைகளோடு இருந்தவர்கள் ஆதிவாசிகள் போன்று வெட்டவெளியிற் குடும்பம் நடத்த வேண்டியதாகிற்று. வரலாற்றைப் பின்நோக்கிப் பார்க்கும் அசௌகரியத்தைத் தடுப்பதாக ஐரோப்பாவின் சிலநகரங்களில் அது இன்னாளில் மீண்டும் உயிர்ப்புப் பெற்றது. வேலை செய்து சுதந்திரம் எய்து என்கின்ற பழைய வசனத்திற்குப் பதிலாக, உதவியின்றி சுதந்திரம் எய்து என்கின்ற புதிய வசனம் எழுதப்படாத நடைமுறையாயிற்று. பூங்காக்களில் மலர்வாசம் விடைபெற்றுப் போக, பிணநாற்றம் மெல்லக் குடிபுகுந்தது. இந்த அவலம் செல்வம் கொழிக்கும் மேற்கு ஐரோப்பாவில் பல அகதிகளுக்கு யதார்த்த

வாழ்வானது. கட்டப்படாத சமாதிகளும் கல்லறையில்லாத அடக்கங்களும் பெருகலாகின.

அகதிகளின் வரவு கிரேக்கத்தோடு நின்று விடவில்லை; அது முழு ஐரோப்பாவையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது. மனிதன் ஒரு சமுக மிருகமென்றாலும் தனது குடும்பத்திற்காய் வளங்களைச் சேர்ப்பது அவன் முதற்தாகம். அந்தச் சுயநலம் பாதிக்கப்படும்போது அவன் வனவிலங்கு. அதற்கான எல்லைகள் எப்போதும் நகரக்கூடியவை. வளங்களிற் பங்கீடு என்று வரும்போது மனிதம் நத்தையாக ஓட்டிற்குள் இழுத்துக்கொள்ள, மிருகத்திற்கான குணங்கள் மூர்ப்பெய்தி நிற்கும். அப்போது டார்வினின் கோட்பாடு மட்டுமே உயிர்பெற்றுக்கொள்ளும். அது தான் எப்போதும் உண்மையென்று மார்பு தட்டும்.

ஐரோப்பிய மற்றும் உலகவளங்களும் அவர்கள் வைத்திருக்கும் தொழில்நுட்பமும் பங்கிடப் போதுமாய் இருந்தாலும், அதைப் பங்கிடுவதன் மூலம் தங்கள் இருப்பில் தளர்ச்சியோ அல்லது வீழ்ச்சியோ ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. மீண்டும் பலசாலிகள் வாழும் தத்துவத்தை அகதிகள்மேற் பாயவிட ஐரோப்பா தயாராகியது. எல்லைகளை விஸ்தரித்து... ஐரோப்பிய ஒன்றியம் என்கின்ற இராட்சதனாய் வளர்ந்துவிட்ட அமைப்பில் மிதவாதிகள் ஓரங்கட்டப்பட, அதிதீவிர வலதுசாரித் தேசியவாதிகளின் கைப்பொம்மையாகியது. இந்தப் பயங்கரம் சிந்திப்போரை வெகுவாகத் திணற வைத்தது. இதன் மாற்றம் உலகத்திற்கு என்னவிதமான புதிய பாடத்தைப் புகட்டப்போகிறது என்கின்ற நினைப்பும், யதார்த்தமும் அவர்களை அதிரவைத்தன. மனச்சாட்சியுள்ள மனிதர்கள் நிம்மதியற்று அலைந்தனர். வரவிருக்கும் உலகவரலாற்றை எண்ணி வேதனைப்பட்டனர்.

வரலாறு புரிந்தவர்கள் காலத்தோடு வாழும் இடங்களை மாற்றுகிறார்கள். நிலைமையை அறிந்த அந்த நாடுகளும் தமது குடியேற்றச்சட்டத்தை இரும்பாக்கி ஓட்டைகளை நுட்பமாக அடைப்பதில் மும்மரம்காட்டத் தொடங்கின. விரிந்த எல்லைகளைக் கட்டுப்படுத்துவதுபற்றி விலாவாரியாக ஐரோப்பிய அரசுகள் பேசத்தொடங்கின.

ஏற்கெனவே நீண்டகாலமாய் ஐரோப்பாவில் வாழ்ந்துவிட்ட வந்தேறு குடிகளுக்கும் தற்போது இங்கு நடக்கும் கொடுமை தாங்கொணா இரணத்தை உண்டுபண்ணியது. அவர்கள் தங்களால் இயலுமானவரை உணவு, உடை, கூடாரங்கள் என்பனவற்றைச் சேகரித்துத் தற்போது

ஐரோப்பாவிற்கு வருகின்ற அகதிகளுக்கு வழங்கும் பணியில் ஈடுபட்டார்கள். அதையும் பல அரசாங்கங்கள் அவர்களது நிர்வாக அலகைக்கொண்டு இழுத்தடிப்புச் செய்தன... தடுத்தன. உதவிகள் அகதிகள் வரவை ஊக்குவிக்கும் என்பதாக மனிதம் மறுத்தன.

இரண்டாவது பரம்பரையாக வாழ்ந்த வெளிநாட்டவரிற் சிலர் கடும் தீவிரவாதிகளாய் மாறினர். அவர்கள் இந்தக் கொடுமையைக் கண்டு துடித்தனர். அந்தத் துடிப்பை அறிந்த சில மதபோதகர்கள் அவர்களைப் பல நாடுகளில் அணுகினர். ஆத்திரத்தில் கொதிக்கும் அவர்களின் மூளையைச் சலவை செய்தனர். மதபோதை ஏற்றினர். இஸ்லாமின் அழகிய போதனைகளைத் திரித்து வன்முறை நியாயமெனப் போதித்தனர். பொதுமக்களின்மேற் தாக்குதல் செய்வதற்கு அவர்களை ஏவினர். இந்த விதமான மூளைச் சலவைகளை எல்லோரும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சிலர் அதற்குப் பலியானார்கள். அது ஏற்கெனவே இருந்த மனித வெடிகுண்டுகளின் தொகையை அதிகரித்தது. இஸ்லாமியத் தீவிரவாதமும் பிறமதத் தீவிரவாதங்களும் வலதுசாரிகளின் தீவிரவாதமும் குருட்டுத்தனமாக மனிதம் கொல்லப் பேய்க் கூத்தாடின.

வந்துகுடியேறியவர்களில் முதற்பரம்பரையினருக்குத் தாங்கள் வாழும் நாட்டின் சந்து பொந்துகள் புகுந்து வெளியேறும் தகைமை மட்டமாக இருந்தது. தமக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுவரும் ஆற்றலும் அவர்களிடம் குன்றியிருந்தது. அதிலும் சிலர் புறநடையாக இருந்திருக்கிறார்கள். இரண்டாவது பரம்பரையான வந்தேறுகுடிகளின் வாரிசுகளுக்கு இப்படியான விடயம் ஒரு சவாலாக இருப்பதில்லை. அந்த நாட்டிற்கு அல்லது அந்த நாட்டின் மக்களுக்கு எதிராக ஒருவிடயம் செய்யவேண்டுமென்றால், அதை அவர்கள் இலகுவாக நடத்தி முடிப்பார்கள். அப்படித் தாக்குதல் நடத்துவதற்குப் பெரிய பாதுகாப்பான இலக்குகளைத் தேடிப்போய்த் தவண்டையடிப்பதிலும், மக்கள் அதிகம் கூடும் எளிதான இடங்களே அவர்களுக்குத் தேவைப்பட்டன. அதற்கு “ஒஸ்லோ சிற்றி” எனப்படும் வர்த்தக மையம் மிகவும் பொருத்தமாகிற்று. தீவிரவாதம் என்பது கண்ணில்லாத வெறிபிடித்த மிருகம். அது எங்கே பாயும்... யார்மீது பாயும்... எதற்குப் பாயும்... எப்போது பாயும்... எதுவும் புரியாத குழப்பம். அதன் பாய்ச்சல் கொடூரமான அழிவைத் தரும் என்பது மட்டும் நிச்சயம். அது சொந்த உறவுகள் மாள்வது பற்றிக்கூடக் கருணைகாட்டாது, கரிசனைப்படாது, கவலைகொள்ளாது. இந்தக் கூட்டத்தில் எத்தனை அப்பாவி முஸ்லீம் குழந்தைகள் வருங்காலக் கனவுகளில் மிதக்கிறார்கள் என்பதுபற்றிக்கூட அவர்கள் இரக்கம் காட்டமாட்டார்கள்.

வாகனத்தை உள்ளே ஓட்டிச் சென்றவர்கள் அவற்றை முதலாவது தளத்தில் உள்ள தரிப்பில் அருகருகாக நிறுத்தி வைத்தார்கள். பின்பு ஏதோ சில அலுவல்கள் செய்தார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது கமராவில் பதிந்துவிடாது அவதானமாய்த் தங்களை மறைத்துக்கொண்டார்கள். பின்பு அவசரமாக மேற்தளத்திற்குச் சென்று அந்தக் கட்டிடத்தைவிட்டு வெளியேறினார்கள்.

வெளியே வந்தவர்களுக்கு அல்லாவின் சுவர்க்கத்தை அடைந்த சந்தோசமாயிற்று. அவர்களுக்காக அங்கே காத்திருந்த காரொன்றிலேறி அவர்கள் சுவீடன் நாட்டை நோக்கிப் பயணித்தனர்.

அவர்கள் புறப்பட்டு இரண்டு மணித்தியாலங்கள் சென்றபின்புதான் அந்த அதிர்வு ஒஸ்லோவின் மையத்தை உலுக்கியது. நிலநடுக்கமாக இருக்கவேண்டுமெனப் பலரும் முதலில் ஊகித்தாலும், ஏற்பட்ட பேரொலி அதற்கு மறுப்புத் தெரிவித்தது. நகரமே அந்த அதிர்வால் மூச்சிழந்து போயிற்று. தொழிற்கட்சி அரசுக்கு எதிராக நோர்வேயின் ஜனநாயகத்தை ஆட்டம் காணவைக்க, இரெண்டாயிரத்துப் பதினொராம் ஆண்டு யூலை மாதம் இருபத்தி இரண்டாம் திகதி அதிதீவிர வலதுசாரியால் வைக்கப்பட்ட குண்டை இது மீறிற்று. அந்த ஞாபகம் மக்கள் மனதில் உடனே எழுந்திற்று. அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அவர்களைத் தாக்கியது. மீண்டும் மீண்டும் தங்கள் நாடு பயங்கரவாதிகளால் தாக்கப்படுவது அவர்களுக்கு நடுக்கத்தை, பயத்தை, வெறுப்பை, கோபத்தைத் தந்தது.

இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின்பு அமைதியை ஏகபோகமாய் அனுபவித்த நாடு என்கின்ற பெருமை நோர்வேக்கு உண்டு. காயங்கள், இரத்தங்கள், உத்தரிப்புகள், சாவுகள் போன்ற அவலங்கள் பெருந்தொகையாக நடக்காது காப்பாற்றப்பட்ட சுவர்க்கபூமியாக அது வடதுருவத்தில் நீண்டு கிடந்தது. அதன் அமைதிக்கு வித்தாக, வளத்தின் பெருக்கத்தால் மக்களின் சுபாவத்தில் விளைவித்த சாந்தமும், ஜனநாயகத்தில் இருந்த நம்பிக்கையும், சட்டத்தை மதிக்கும் தன்மையும், மனிதாபிமானத்தின் விசுவாசமும், பேச்சுவார்த்தை மூலம் எதற்கும் விடைகாணலாம் என்கின்ற தைரியமும் பக்கபலமாகின. இதன் காரணமாக யுத்தம் என்பது நோர்வேக்குத் தொலைதூரமாகியது. இங்கு ஒரு சில முறைகள் பயங்கரவாதத்தாக்குதல் திட்டமிடும் கட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டிருக்கிறது. இரத்தம் தோயாத இந்தப் பூமியின் அமைதி அதிதீவிர வலதுசாரியால் இரெண்டாயிரத்துப் பதினொராம் ஆண்டு யூலை மாதம் இருபத்தி இரண்டாம் திகதி அன்று கொல்லப்பட்டது. அது நோர்வேக்கு ஏற்பட்ட பேரதிர்ச்சி.

இஸ்லாமியர் தாக்குவார்கள் என்கின்ற பயத்தோடு இருந்தபோது உள்வீட்டான் தாக்கியதை நம்பமுடியாத தவிப்பு. உண்மை என்கின்றபோது ஏற்பட்ட கொந்தளிப்பு, கவலை, ஒற்றுமை. வன்முறையை ஒட்டுமொத்தமாக எதிர்த்த பிணைப்பு. என்றும் மனதையுருக்கும் அந்தக் காட்சிகள். றோஜாக்களின் குவியல்கள். ஒரு பயங்கரவாதியிடம் இவ்வளவு வெறுப்பு இருக்கும் என்றால் எங்களிடம் ஒட்டுமொத்தமாக எவ்வளவு அன்பு இருக்கும் என்கின்ற உலகே வியந்த வசனம். காலம் மாறிவிட்டது. அதன் முகம் மாறிவிட்டது. புலிவருகிறது புலிவருகிறது என்று புலியே வந்துவிட்டது.

அதன்பின்பும் தொடர்ந்த இஸ்லாமிய அதிதீவிரவாதிகளின் வேட்டை வடதுருவத்தை அண்டிய நோர்வேயையும் விட்டுவைக்கவில்லை. அது புதிய வரலாறு ஆகிற்று. சமாதானத்திற்குத் தூதுபோய்ச் சில சச்சரவுகளை நோர்வே கொள்முதல் செய்தது. தனிப்பட்ட எந்த நாட்டின் மீதோ, இனத்தின் மீதோ யுத்தம் நடத்தாவிட்டாலும், நேற்றோவின் பின்னும், அமெரிக்காவின் பின்னும் அலைந்து தேவையில்லா வம்புகளை விரும்பியோ விரும்பாமலோ நோர்வே சம்பாதித்தது. முகமதுவின் கேலிச்சித்திரத்தைச் சில பத்திரிக்கைகள் பிரசுரித்தபோது, இங்கு வாழ்ந்த முஸ்லீம்கள் கொதித்தனர். உலக முஸ்லீம்கள் கொதித்தனர். ஐரோப்பியப் பத்திரிக்கை சுதந்திரம்பற்றி ஆத்திரமுற்றனர். வன்முறையாற் பதில்சொல்லச் சிலர் விருப்புற்றனர். வேட்டை தொடங்கினர்.

நோர்வே மீது பொதுவாக எதிர்ப்பு வருவதில்லை. வந்தாலும் அது அதிக காலம் நீடித்து நின்றதும் இல்லை. பொருளாதாரச் சார்பு நிலைகள் அதிகம் சமாதானத்தைக் கொண்டுவந்துவிடுகின்றன. நோர்வேயின் எண்ணெய் வளத்திற்கும் தொழில்நுட்பத்திற்குமாய்ப் பல நாடுகள் அதன் நட்பை நாடி நின்றன. கடலுணவின் அட்சய பாத்திரமாய் எல்லையற்று நோர்வேக் கடல் விரிந்து கிடப்பதும் மற்றுமொரு உண்மை. அந்த உண்மை புரிந்த நாடுகள் பல.

ஒஸ்லோவின் மத்தியபகுதி மீண்டும் யுத்தகளமாகிற்று. அந்த நகரத்தின் ஒவ்வொரு மூலையிலும் அபாய ஓசைகள் ஒலித்தன. விசேட பாதுகாப்புப் படை, பொலீஸ், தீயணைப்புப் படையெனப் பலர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். எங்கும் மின்னுகின்ற வாகனங்களும் அவற்றின் சத்தமுமான அலங்கோலம். பச்சை ஹெலிக்கப்டர்கள் வசதி கிடைத்த இடத்தில் இருப்பதும் எழுவதுமாய்க் காயப்பட்டவர்களை உள்வாங்கின. அதிர்ச்சியோடு கட்டடங்களை விட்டு வெளியேறிய மக்களும், புதினம் பார்க்கும் மக்களும், செய்தி சேகரிப்பவர்களுமாகத் தெருவெங்கும் கூட்டம் கூடியது. பொலீஸ்

அவர்களை இடிபாடுகளுக்கு அருகே நெருங்கவிடாது தடைகள்பரப்பித் தடுத்தனர். மீட்புபப்ணிக்காக மோப்பம் பிடிக்கும் நாய்கள், பாரிய கிரேன்கள், லொறிகள் என்பனவற்றோடு மீட்புப் பணியாளர்களும் கொண்டுவரப்பட்டனர். இரவு செல்லச் செல்ல குளிரின் கோரம் தோலுரித்து அசிங்கம்காட்டும். அதற்கு முன்பே அலுவல்கள் மும்முரமாக நடைபெற்றன. உயிருடன் மனிதர்களை மீட்பதென்றால் சம்பவம் நடந்து சில மணித்தியாலங்களில் மீட்க வேண்டும். நேரம் கரையக் கரைய நம்பிக்கையும் கரையும். சிக்குப்பட்ட மனிதவுயிர்களின் ஆயுள் கேள்வியாகும்.

காயப்பட்டவர்களில் பெரும்பகுதியினரை அம்புலன்ஸ்களில் ஏற்றி “உல்லவோல்” மருத்துவமனை, “றிக்ஸ்கொஸ்பிற்றல்” போன்றவற்றிற்கும் ஒஸ்லோவிற்கு வெளியே இருக்கும் வேறு சில மருத்துவமனைகளுக்கும் அனுப்பி வைத்தார்கள். மற்றவர்களை அவசர சிகிச்சைக்காக ஹெலியில் ஏற்றிச் சென்றார்கள். உயிர் இழந்த உடலங்கள் அடையாளம் காணப்பட ஒரு கூடாரத்திற்குள் வைக்கப்பட்டன. நோர்வே மக்கள் இந்த அனர்த்தத்தை நம்ப மறுத்தனர். ஒஸ்லோவில் மீண்டும் இப்படி நடந்தது பழைய வடுக்களை அவர்களுக்கு நினைவுபடுத்தியது. அதிர்ச்சியின் தாக்கத்தில் மக்கள் கூட்டம் அங்குமிங்குமாக அலைமோதியது. சோகங்கள் கருமேகங்களாக அவர்கள் வதனங்களில் இறங்கிய கோலம். சிலர் பித்துப்பிடித்தவர்கள் போல அங்குமிங்கும் ஓடினர். பலர் அனர்த்தத்தைப் பதிவுசெய்வதில் மும்முரம்காட்டினர்.

தொலைக்காட்சி நிறுவனங்கள் இந்த அவலத்தை ஒட்டி இருபத்தி நான்கு மணிநேர நேரடிச் சேவை செய்தன. நோர்வேயில் நடந்த இரண்டாவது மிகப்பெரிய பயங்கரவாதத் தாக்குதலாக அது வர்ணிக்கப்பட்டது. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம்போல, மும்பாயின் தாஜ்ஹொட்டேல் போல, நோர்வேயின் முக்கிய அடையாளச் சின்னமான வானளவாவ உயர்ந்த அரசகட்டடம் ஏற்கெனவே தாக்கப்பட்டது. அந்தப் பயங்கரவாதி அத்தோடு நிற்காது “உத்தொய்யா” என்னும் தீவிற்குப் பொலீஸ் வேடத்தில் சென்று தொழிற்கட்சி இளைஞர்களைச் சுட்டுக்கொன்றான். இம்முறை “ஒஸ்லோசிற்றி” பயங்கரவாதத்திற்கு இலக்காகிவிட்டது. பயங்கரவாதிகள் திட்டமிட்டு வெடிகுண்டு வைத்துத் தகர்த்துள்ளார்கள் என்பது பெரும் அதிர்ச்சியையும், சினத்தையும் மக்களுக்கு உண்டுபண்ணியது. அந்தத் தாக்குதலை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துத் தடுக்கமுடியாதது பற்றிய விசனக் கேள்விகள் தலைகாட்டத் தொடங்கின. பயங்கரவாதத்திற்கு நிறமென்ன, இனமென்ன, மதமென்ன என்பது சிலருக்காவது புரிந்தது.

தொலைக்காட்சி நிறுவனத்தின் விமர்சகர்களின் கணிப்பீட்டின்படி கிட்டத்தட்ட ஆயிரம் பேராவது இறந்திருக்கலாமெனக் கூறப்பட்டது. அன்றையதினத்தின் விசேடத்தை ஒட்டி அதிக மக்கள் அங்கு குவிந்து இருந்ததொன்றும் வியப்பில்லை. அதுவே பெரும் அழிவைக் கொண்டுவந்துவிட்டது. அதிக அளவு உயிர்ச்சேதம் வரவேண்டும் என்பதே பயங்கரவாதிகளின் நோக்கமாக எப்போதும் இருக்கிறது. அதற்கு ஏற்பத் திட்டமிட்டு அந்தக் குண்டை அந்த நேரத்தில் வெடிக்க வைத்திருக்கிறார்கள். அதில் வெற்றியும் பெற்றுவிட்டார்கள். அழிவின் அதிர்வலை எங்கும் அலையலையாக அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இரவிரவாகப் பலமணி நேரத் தேடுதலில் நூற்றுக் கணக்கான பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. அதீவிர வலதுசாரிக் கட்சியொன்று ஐரோப்பாவின் மாற்றத்திற்கு ஏற்ப நோர்வேயிலும் ஆட்சிசெய்தது. நீண்டகாலமாக இடதுசாரிகளாலும் வலதுசாரிகளாலும் புறக்கணிக்கப்பட்டு வந்த அக்கட்சி ஒஸ்லோவில் வெளிநாட்டவர் ஆட்சியைப் பிடித்துவிட்டார்கள், முஸ்லீம்கள் பெருகி நோர்வே மக்களைச் சிறுபான்மையாக்கப் போகிறார்கள், இஸ்லாம் எங்கள் மதத்தைக், கலாசாரத்தை, அழிக்கப் போகின்றது என்கின்ற பயத்தைக் காட்டி நோர்வேயின் ஆட்சியைப் பிடித்தார்கள். இனங்களுக்கு, மதங்களுக்கு இடையேயான வெறுப்பும், அதனால் உண்டாகும் பயங்கரவாதமும் உலகை என்றும் காணாதவாறு இப்போது அச்சுறுத்தியது. அது நோர்வே நாட்டையும் வலுவாகப் பீடித்தது.

அந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடனேயே வெளிநாட்டவரை அகதிகளாக நாட்டிற்குள்ளே வரவிடாது தடுப்பதற்கான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இங்கு உள்ளவர்கள் வெளிநாடு சென்று திருமணம் செய்து மணமகனை, அல்லது மணமகளைக் கூட்டிவருவதை அந்த அரசு முற்றாகத் தடைசெய்தது. தயவு தாட்சண்யம் இன்றி ஏதாவது ஒரு காரணம் கிடைத்தாலும் வெளிநாட்டுக்காரரைப் பிடித்து அவர்களது சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பியது. கைதிகளாய் இருந்த வெளிநாட்டுக்காரரை உடனடியாக நாடு கடத்தியது. மொழிப்புலமை இல்லாத வெளிநாட்டவரின் குடியுரிமையைப் பறிப்பதற்கான திட்டம் தீட்டியது. சுதேசிகளின் வெறுப்பால் வேலை வாய்ப்புக்களில் வெளிநாட்டவருக்கு இன்னும் அதிக பிரச்சனைகள் உருவாகின. அரச நிறுவனங்களே நேர்முகப் பரீட்சைக்கென அவர்களைக் கடன்வழிக்குக் கூப்பிட்டுப் பின்பு திருப்பியனுப்பின. தனியார் நிறுவனங்கள் வெளிநாட்டவரின் பெயரைப் பார்த்துவிட்டே அவர்களது விண்ணப்பங்களைக் குப்பைக்குள் வீசின. பலர் வேலையிழந்து தவிக்கலாயினர்.

அதைவைத்தே வெளிநாட்டுக்காரர் சும்மா இருந்து சாப்பிடுகிறார்களென அந்த கட்சி பிரச்சாரம் செய்தது. அது மேலும் சுதேசிகளிடம் நிறமான மனிதர்களுக்கு எதிரான வெறுப்பை வலுப்படுத்தியது. வெறுப்பிற்கு வெறுப்பு வெளிநாட்டவரிடமும் விளைந்தது.

பிழையான கைகளில் அரசியல் அதிகாரம் போனால்... அது எந்த அரசியல் முறையானாலும்... அரசுக்கு எதிரானவர்கள் மீது அது கடுமையாகப் பாய்கிறது. அப்படி அரச எதிரிகளாகச் சித்தரிக்கப்படுபவர்களை யாரும் காப்பாற்ற முடியாது போய்விடுகிறது. இதுவே சரித்திரமும், தற்போதைய நடைமுறையுமாகியது. வலதுசாரிகளும், இடதுசாரிகளும் தங்கள் மக்களையும் அவர்களின் முடிவுகளையும் பார்த்து ஊமைகளாகக் கண்ணீர் வடித்தனர். இரண்டாம் உலகமகா யுத்தம் நோர்வேக்குத் தந்த பாடங்கள் இவ்வளவு இலகுவாக மறக்கப்பட்டுப் போயிற்று என்பது அவர்கள் நெஞ்சைப் பிழிந்தது. தாங்கள் பதவியில் இருக்கும்வரை அதற்கான விழிப்புணர்வைப் போதுமான அளவு செய்யவில்லையோ என்கின்ற குற்ற உணர்வு அவர்களை வாட்டலாயிற்று. ஹிட்லர் பதவிக்கு வருவதற்கு அந்நாட்டு மக்கள்தான் விரும்பி வாக்களித்தார்கள். ஜனநாயகத்தின் மூலம்தான் அவன் ஆட்சியைப் பிடித்தான். பதவிக்கு வந்தவுடன் அவன் சட்டங்களை மாற்றினான். பின்பு எல்லோரையும் அடக்கிச் சர்வாதிகாரியாக உருவெடுத்தான். வரலாற்றிலும் நிகழ்காலத்திலும் பல சர்வாதிகாரிகளை மக்கள்தான் தெரிவு செய்கிறார்கள். சிலகாலத்திற்குச் சர்வாதிகாரம் வாழலாம். ஜனநாயகம் அப்போது அராஜகத்தின் முன்பு சரணாகதி அடையலாம். பாரதப் போர்போல இறுதியில் நியாயம் வெல்லும். ஜனநாயகத்திடம் அது இருந்தால் ஜனநாயகம் வெல்லும். சர்வாதிகாரங்கள் தோற்றுப் போகும். நோர்வே மக்களும் அப்படி மாறுவார்களென இடதுசாரிகளும், வலதுசாரிகளும் சமாதானம் அடைந்துகொண்டார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டம் ஒன்றிற்குச் சென்ற நோர்வேப் பிரதமர் அவசர அவசரமாக நாடு திரும்பினார். அந்தப் பெண் பிரதமர் தங்களது கடும்போக்கே நாட்டிற்கு நன்மை பயக்கும் என்பதில் மிகவும் நம்பிக்கை கொண்டவர். அதனால் தனது நாட்டிற்கு வருகின்ற கெட்ட பெயர்களைப் பற்றி அவர் அலட்டிக்கொள்ளவில்லை. அவர் செய்தி அறிந்தது தொடக்கம் நிலைகொள்ள முடியாது கொதித்தார். கோபத்திற் துடித்தார்.

இவரைப் போன்ற தீவிர வலதுசாரி அரசியல்வாதிகள் நேர்மையான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான தங்கள்

அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை முறையாக மக்கள் முன்பு வைப்பதில்லை. அப்படியாக நேர்மையான முறையில் அரசியலில் வெற்றிக்கனிகளைப் பெற்றுவிடும் நம்பிக்கை அவர்களிடம் இருந்ததில்லை. அதற்கு மாறாக அவர்கள் பிழையாகப் போகின்ற அரசியலுக்கு யார்மீது பழிபோடலாம் என்பதைக் கண்டுபிடிப்பார்கள். அதன்மூலம் சுதேசிகளை வெறுப்பேற்றுவார்கள். அந்த வெறுப்பில் மக்களின் சிந்திக்கும் திறமையை மழுங்கடிப்பார்கள். பின்பு அவர்களில் ஏறிச் சவாரி செய்வார்கள். அவர்களுக்குத் துணையாக நிறைய உதாரணங்களை வரலாறு தந்துவிட்டுச் சென்றிருக்கிறது. இந்தத் தீவிர வலதுசாரிகளுக்குச் சமுகத்தில் நொய்ந்து போனவர்களை எதிர்ப்பதும், திறந்த மதுக்கொள்கையை நேசிப்பதும், பணக்காரர்களுக்கு வரிச்சலுகை அளிப்பதும், வரவில்லாது செலவுசெய்வோம் என்பதாகப் பொய்யாகப் புளுகு வாக்குக் கொடுப்பதும் முக்கிய பணியாகும்.

நோர்வேநாட்டுப் பிரதமர் அடுத்தநாட் காலை பயங்கரவாதிகளாற் தாக்கப்பட்ட இடத்தை வந்து பார்வையிட்டார். தாக்குதலும் அதைத் தொடர்ந்த அழிவுகளும் எல்லோரையும் நிலைகுலைய வைத்தன. அது மீண்டும் பழைய ஞாபகங்களைக் கொண்டுவந்து அவர்களை உணர்ச்சியின் உச்சத்திற் ததும்பவிட்டது. ஏற்கெனவே அதிதீவிர இஸ்லாமியரிற் கோபமுற்றிருந்த பிரதமருக்குக் கண்கள் இலந்தைப் பழமாய்ச் சிவந்தன. கன்னம் றோஜா நிறத்திற்கு மாறிற்று. அவர் உதடுகள் துடித்தன. கைகள் நடுங்கின. கால்களைக் கோபத்தில் உதைந்து உதைந்து நடந்ததில் சவாரிக்குதிரை வரும் சத்தம் உண்டாகிற்று. கோபத்தில் அவர் அங்கும் இங்கும் பார்த்தார். அவர் வதனம் விகாரமாகியது. அவர் பல்லை நெருமிக் கொண்டார். கட்டளையிட்டதும் தலையைத் துண்டிக்கும் மன்னர் ஆட்சிக்காலம் இல்லை என்கின்ற உண்மை அவரைக் கட்டுப்படுத்தியது. பதில் சொல்லவேண்டிய ஜனநாயகம் இந்த நாட்டின் பாரம்பரியம் என்பதை அவர் மறக்கவில்லை.

அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் பேச்சிழந்த அம்மையாருக்குத் தொடர்ந்தும் கைகால்கள் நடுங்கின. பின்பு தன்னைச் சமாளித்தவண்ணம் இறுகிய முகத்துடன் அழிவுகளைச் சுற்றிப் பார்த்தார். அதன்பின்பு நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அதில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கடுமையான தண்டனை கொடுக்கப்படுமென உறுதியளித்தார். பின்பு நாடுதழுவிய துக்கதினமாக அடுத்துவரும் மூன்று நாட்களும் கொண்டாடப்படும் என்பதையும் தவறாது அறிவித்தார். அதேவேகத்திற் கோபம் தணியாத முகத்தோடு பாராளுமன்றத்தை நோக்கிப் புறப்பட்டார். அவருக்கு நிறமான வந்தேறுகுடிகள்மீது வெறுப்பாகியது.

இஸ்லாமியர்மீது அதைவிட வெறுப்பாகியது. தன்னுடைய கட்சியில் இருக்கும் விசுவாச நாய்க்குட்டிகளான நிறமான வந்தேறுகுடிகள் மீதே வெறுப்பு வந்தது. வெள்ளை இனத்தைத் தவிர்ந்த மற்றையவர்கள் துஷ்டர்களாகத் தோன்றினர்.

நோர்வேயில் நடந்த தாக்குதலையடுத்துக் கூட்டப்பட்ட அந்த நாட்டின் பாராளுமன்றத்திற் கடும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. எப்படித்தான் சத்தமிட்டாலும் சாட்சிகள் இல்லாத வழக்கும் தொலைந்து போகும் நீதியும் ஒன்றாகும். ஜனநாயகம் என்பதில் பெரும்பான்மைதான் வெற்றியின் நாயகன். தீவிரவலதுசாரிகளிடம் பெரும்பான்மை இருந்தபடியால் அவர்கள் தங்கள் விருப்பிற்கேற்பச் சட்டங்களை மாற்றினர். இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின்பு ஐரோப்பாவில் வாழும் மக்கள் ஒரு நல்ல விடயத்தைக் கடைப்பிடித்தார்கள். எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடையாது செய்து அராஜகம் தலைதூக்காது பார்த்துக் கொண்டார்கள். அது சர்வாதிகாரத்தை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சவக்குழியிற் புதைத்து வைத்தது. அந்த நிலைமை தற்போது மாறிற்று. பெரும்பான்மை பெற்றுவிட்ட தீவிர வலதுசாரிகளுக்கு, இந்த நாட்டின் ஜனநாயகத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டுச் சர்வாதிகார ஆட்சி நடத்தலாம், அல்லது பொம்மை ஜனநாயக ஆட்சி ஒன்றை வைத்துக்கொண்டு, தாங்கள் நினைத்தவற்றைச் செய்து முடிக்கலாம் என்கின்ற துணிவு வந்தது. அதற்கான வாக்குப் பலம் அவர்களுக்குப் பாராளுமன்றத்திற் கிட்டியது. இன்னும் அவர்கள் அந்த அளவிற்கு நோர்வேயின் ஜனநாயகத்தின் தரத்தைக் குறைக்கவில்லை. அதன் எல்லையில் மதில்மேற் பூனையானார்கள். எந்தப்பக்கம் சாய்வார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருந்ததில்லை. காற்று அடிக்கும் திசையும் பலமும் அறிந்தவர்கள் கதிகலங்கினர். காற்று அடிக்கத்தொடங்கியது. அது பலமாக அடித்தது. அதற்கான வலுவான காரணம் கிடைத்தது. இனி நடந்த தாக்குதலைப் பொதுமைப்படுத்துவதும் தனிமைப்படுத்துவதும் அவரவர் விருப்பிற்கேற்ப நடக்கும்.

பாராளுமன்றத்திற் கொண்டுவரப்பட்ட சில சட்டங்கள் ஐரோப்பிய ஒன்றியச் சட்டங்களுக்கு ஏற்பாகவராது என்பது தெரிந்தும் நிறைவேற்றப்பட்டன. அது நோர்வே மக்கள் அநேகரை ஒருமுறை தங்களின் கடந்த தேர்தல் முடிவுகள் பற்றிச் சிந்திக்கவைத்தது. அந்தச் சட்டத்தின்படி எல்லோருக்கும் புது அடையாள அட்டை வழங்கப்படுவதாயிற்று. அந்த அடையாள அட்டையில் அவர்கள் பிறந்த நாடு, மதம் என்பன மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டது. அத்தோடு அந்த அடையாள அட்டையிற் கண்ணை வைத்து மனிதரை அடையாளப்படுத்தும் வசதியும் சேர்க்கப்பட்டது. அந்த அடையாள

அட்டை இல்லாதவர்களை எங்குவைத்தும் கைதுசெய்யும் அதிகாரம் பொலீஸக்குக் கொடுக்கப்பட்டது. அப்படியான கடும்போக்கே குற்றங்களையும், பயங்கரவாதத்தையும் குறைத்துப் பயங்கரவாதிகளை இலகுவாக கைதுசெய்ய உதவுமென்றும் பரவலாக விளக்கம் கொடுக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் பலமிழந்த எதிர்க் கட்சிகள் தெருவுக்கு இறங்கினார்கள். இது அப்பட்டமான இனவாதச் செயல் என்று ஆர்ப்பரித்தனர். அதிகாரமற்றவர்களின் ஆர்ப்பாட்டம் அபலைகளின் கூக்குரல் போலாகிற்று. ஆர்ப்பாட்டங்களிலும் காவலர்கள் முன்பைவிட அதிக ஆக்ரோசமாக வன்முறையைப் பாவிக்கத் தொடங்கினார்கள். அது பலருக்கும் ஜனநாயகத்தின் முகம் கோரமாகிக்கொண்டு போகும் நடுக்கத்தைக் கொடுத்தது. பலரது நினைவை அது மீண்டும் தூசிதட்டியது. ஐரோப்பாவின் ஈனவரலாறு பல அறிவுஜீவிகளை நடுங்கவைத்தது.

## 2.2 ஐரோப்பா

இஸ்லாமியத் தீவிரவாதமும், வெளிநாட்டவரின் வருகையும் ஐரோப்பாவின் பழைய வரலாற்றை மீண்டும் அக்கறைக்குக் கொண்டுவந்தன. அப்போதுதான் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்குட் பலப்பரீட்சை பார்த்துக்கொண்டன. முடிவு, தமது முகத்தைத் தாங்களே கோரமாக்கிக்கொண்டது மட்டுமல்லாது மில்லியன் மில்லியனான மக்களை அகதிகளாக ஐரோப்பாவை நோக்கி ஏற்றுமதி செய்தனர். யுத்தத்தின்பின் மக்களை நடுத்தெருவில் விட்டுவிட்ட அந்த நாடுகள் அவர்களின் அவலத்தைத் தீர்த்து வைக்காது வேறுதிசையிற் கவனம் செலுத்தின.

தொடர்ந்தும் நிறமான வந்தேறுகுடிகளால் ஐரோப்பா நிறைந்து வழிவது பல சுதேசிகளுக்கு வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதாய் அமைந்தது. அப்படித் தென்கிழக்கு ஆசியாவில் இருந்து வரும் அகதிகளுக்குக் கதிர்வீச்சால் உண்டான நோய்களைக் குணப்படுத்த அல்லது அவர்களைப் பராமரிக்கச் சாதாரண அகதிகளுக்குச் செலவழிப்பதைவிட அதிகமாகச் செலவழிக்க வேண்டியதாயிற்று. இது ஐரோப்பிய அரசுகளுக்கு இன்னும் அதிக பாரத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தியது. அகதி முகாங்கள் மட்டுமல்லாமல் பல புதிய மருத்துவமனைகளையும், அதற்கான வசதிகளையும் செய்யவேண்டிய கட்டாயம் அவர்கள் கழுத்தைப் பிடித்தது. இந்த மேலதிகப் பளுவை எண்ணி ஐரோப்பிய நாடுகள் திகைத்துப்போயின.

அவர்கள் அகதிகளின் வரவைக் கட்டுப்படுத்திச் சொந்த நாட்டிலேயே வைத்து அவர்களைப் பராமரிக்கவேண்டும் என்கின்ற வேலைத் திட்டத்தை முன்னெடுத்தாலும் அகதிகளின் வரவைத் தொடர்ந்தும் கட்டுப்படுத்துவது மிகவும் பெரிய சவாலாகியது. இந்தியா, பாகிஸ்தானோடு அதைச் சுற்றிய நாடுகளில் அகதிகளைத் தங்கவைத்துப் பராமரிப்பதை அவ்விடங்களில் இருக்கும் கதிர்வீச்சின் தாக்கம் தடுத்தது. அத்தோடு பரம்பரை பரம்பரையாக பரம்பரையலகில் ஏறிவிட்ட ஆசியரின் ஊழற் கலாசாரம் ஐரோப்பியரை வெறுப்படையச் செய்தது. பணம் கொடுத்தாலும் அகதிகளின் வரவை நிறுத்த முடியாது என்பது அவர்களுக்குப் புரிந்துபோயிற்று.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருந்த நாடுகளிலும், மற்றைய பல்வேறு இடங்களிலும் இஸ்லாமிய அதிதீவிரவாதிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன. தூரதேசத்தில் நடந்தவை இன்று ஐரோப்பியரின் வீட்டு முற்றத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அந்த வன்முறை கண்ணற்றுத் திசையற்றுப் பலர்மீதும் பாய்ந்தது. சிறிது கண்ணை மூடினாலே அங்கங்கே வெடித்துச் சிதறியது. பயங்கரவாதத்தின்கீழ் வாழ்வதென்பது எப்படியான மனநோயை உண்டுபண்ணும் என்பதைப் பல ஐரோப்பியர்கள் அனுபவிக்கத் தொடங்கினர். பயங்கரவாதத்திற்கு எதிரான அரச பயங்கரவாதங்களும் அதே மனநோயைச் சிலருக்குத் தந்தது. ஆபிரிக்கா, ஆசியா, மத்தியகிழக்கு என்பதின் தொடரில் ஐரோப்பாவும் கடைசியாகச் சேர்ந்திற்று.

ஒரு தாக்குதலை இலகுவாகச் செய்துவிட முடியும் என்பதும் அதற்கு எதிராகப் பாதுகாப்புச் செய்வது கடினம் என்பதும் பொதுவான இராணுவ விதியாகும். அந்த விதிக்கு ஐரோப்பாவும் தப்ப முடியாது போயிற்று. இப்படி அதிதீவிர முஸ்லீம்களின் பயங்கரவாதத் தாக்குதல் தொடரும்போதும் ஐரோப்பாவை நோக்கிய அகதிகளின் வருகையும் நிற்கவில்லை. ஹிட்லருக்கு வாய்த்த கொமினிசமும் யூதர்களும் போல அதிதீவிர வலதுசாரிகளுக்கு முஸ்லீம் தீவிரவாதமும் வந்தேறுகுடிகளும் வாய்த்தார்கள். அவர்கள் வாய்ப்பைப் பயன்படுத்தத் தயாரானார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பதவிகள் மெல்ல மெல்ல ஐரோப்பாவின் அதிதீவிர வலதுசாரிகளின் கையிற் சிக்கிக்கொண்டன. அந்த வசதியானது பரந்த அளவில் ஒரு திட்டத்தை அமைத்து அங்கத்துவ நாடுகளிலும் அதை நிறைவேற்றுவதற்கு இலகுவாகிற்று.

நோர்வேயில் நடந்தது போன்ற தாக்குதல்கள் பல ஐரோப்பிய நாடுகளிலும் நடந்து வந்தன. அதன் காரணமாக நோர்வேயும் வேறு சிலநாடுகளும் ஐரோப்பிய ஒன்றியம் முழுவதிற்கும் கடுமையான சட்டங்களைக் கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்தின. அதன்படி ஐரோப்பிய ஒன்றியம் நோர்வே போன்ற அடையாள அட்டையை அறிமுகப்படுத்தி அதை மத்திய தகவல் மையம் ஒன்றுடன் இணைத்து வைத்திருக்க வேண்டுமென அபிப்பிராயப்பட்டன. முதலில் அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பின்பு அது வடிந்தாலும் நம்பிக்கையீனம் பலரைத் திண்டாடப் பண்ணியது. லண்டன் மாநகரையே வெளிநாட்டவருக்கான ‘கெத்தோ’வாய் விட்டுக்கொடுத்த இங்கிலாந்து இதை முதலிற் கடுமையான சந்தேகத்தோடு நோக்கலாயிற்று. ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய அடையாள அட்டை நோர்வேயிற் பாவிக்கப்படுவதின் நகல் போலவே அமைந்திற்று. அத்தோடு அதில் உள்ள தகவல் அனைத்தும் ஒன்றுதிரட்டப்பட்டு ஐரோப்பிய நாடுகளுக்குப் பொதுவான தகவல் மையத்தில் சேமிக்கப்பட்டன. அத்தகவலை எல்லா ஐரோப்பிய நாடுகளும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகிற்று. கொஞ்சம் அறிவுள்ள கணினி நாசகாரராலும் அதைப் பெறலாம் என்பதும் மறு உண்மையாகிற்று. அத்தகவல்கள் பயங்கரவாத நாசகார வேலைகளைத் தடுக்கவும், குற்றவாளிகளைக் கைது செய்யவும் உதவுமென வெளிப்படையாக நம்பப்பட்டது. அதிதீவிரவலதுசாரி அரசுகள் அதைவிடப் பல உள்நோக்கங்களை அந்த அட்டைக்குள் பொதிந்தனர் என்பது மறைக்கப்பட்டது.

முதலில் இதற்குச் சிலநாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தாலும், பயங்கரவாதத்தால் உண்டாகும் அச்சுறுத்தலை எண்ணி அனேக நாடுகள் பின்பு ஒத்துக்கொண்டன. அதன்படி ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் எந்த ஒரு மூலையில் ஒருவனைப் பிடித்து அவனது எண்ணைக் கணணியில் புகுத்தினாலோ, அல்லது அவனது கண்ணை அடையாளப் படுத்தினாலோ, அவனது வாழ்க்கை வரலாற்றை அவர்கள் அறிந்துகொள்ளும் வசதி கிடைக்கப்பெற்றது. இது ஒருவகையிற் குற்றவாளிகளைக் கண்டறியவும், அதனால் குற்றத்தைக் கட்டுப்படுத்தவும் உதவும் என்றாலும் இனரீதியான ஒடுக்குமுறைக்கும் வழிகோலலாமெனச் சிறுபான்மையினரால் அஞ்சப்பட்டது. அந்தக் கருத்தை ஆளும் வர்க்கம் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் திட்டமே அதுவென்பதை வரலாறு சொல்லக் காத்திருந்தது.

# 3

## 3.1 ஒஸ்லோ

ஒப்சால் ஒஸ்லோவின் புறநகர்ப்பகுதி. ஒப்சால் என்பது உயரமான இடம் என்பதைக் குறிக்கும். ஒஸ்லோவின் மையப்பகுதி கடலின் பக்கமென்றால் புறநகர்ப்பகுதியான ஒப்சால் மையத்தைவிட்டு விலகி உயரமான பிரதேசத்திற் குன்றுகளையும் காட்டுப் பகுதியையும் அண்டியிருந்தது. ஒப்சால் சிறிய நகரம். அது ஒரு தனியுலகம். ஒரு நகரத்தின் சிறுபிரதியாக அதன் மொத்தவடிவம்.

ஒப்சாலில் தொடர்வீடுகள் உள்ள பகுதிகள் பல. அதிலொரு பகுதியில் விக்னேஸ் குடியேறினான். அவன் குடிவரும்போது அங்கு வேற்று நாட்டவரையே காணமுடியவில்லை. அவன் அப்போது தனித்த வெளிநாட்டுக்காரனாய் வலம்வந்தான். விக்னேசின் மனைவி சிலகாலத்திற்கு முன்பு புற்றுநோயாற் திடீரென இறந்துவிட்டாள். விதி. அவன் இடிந்து போனான். அவனுக்குக் கிடைத்த வரம், வாழ்வின் பேறு ஒரே ஒரு அருமையான, அழகான மகள். அழகு என்பதைப்பற்றி ஆராயலாம். அதன் விதி ஆளுக்காள் மாறுபடும். காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்கின்றபடி அவள் அவனுக்கு அழகு. அவன் வாழ்வின் உயிர்நாடியாக... இவ்வுலகின் இருப்பிற்கு அர்த்தமாக... அவளை ஆரம்பப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்லும்போதும்… திரும்பி வரும்போதும்... அயலவர்கள் கண்டால்... இடைமறித்து அவளோடு கதைபேசுவர். அவளைப் பார்த்து இன்பம் கொள்வார்கள். சிரித்து மகிழ்வார்கள். அவனுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டாற் செய்துகொடுப்பார்கள். அதைப் போலவே விக்னேசும் அவர்களுக்கு உதவி ஏதும் தேவைப்படும்போது செய்துகொடுப்பான். அந்த உறவுகள் அத்தோடு ஏனோ எல்லை கண்டுவிட்டன. ஊரைப் போல வீட்டிற்கு வந்து... ஆறுதலாக முற்றத்தில் இருந்து... ஆயிரம் கதைபேசி... தேனீர் அருந்தி... பின்பு அந்த உறவு சிறிது சிறிதாகப் பலமாகி... பாசப் பிணைப்பாக உருமாறும் நிலை இங்கு இல்லை. எங்களோடு அப்படி வளரமுடியாத நட்பு, சிலவேளை அவர்கள் இனத்துக்குள் வளர்வதை அவனால் அவதானிக்க முடிந்தது. விக்னேசும் தமிழ் நண்பர்களோடு வளர்த்துக்கொண்ட நெருக்கத்தை அவர்களோடு வளர்க்க முடியாது திண்டாடினான். இனம் இனத்தைச் சாரும் என்கின்ற நச்சு வார்த்தையில்கூட உண்மை உள்ளதாவென விக்னேஸ் அடிக்கடி சிந்திப்பான்.

நோர்வேக்கு வரும் வெளிநாட்டவர்களிற் பெரும்பான்மையோர் ஒஸ்லோவுக்குள் அடைந்து விடுவார்கள். அவர்கள் சமுக அமைப்பு

அதை ஊக்குவிப்பதாகிற்று. அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்கின்ற பிணைப்புகளை அறுத்துத் தனியே வாழ்வது அவர்களுக்கு இங்கும் அன்னியமாகிறது. கலாசார விட்டுக்கொடுப்பு இன்மையாற் பெருகிய வெளிநாட்டவரின் செறிவு ஒஸ்லோவில் பார்க்கும் இடம் எல்லாம் நிறமனிதர்களின் நடமாட்டமாகத் தோன்றியது. அது வேண்டாப் பெண்டாட்டியாக அதிதீவிர வலதுசாரிகளுக்கு அருவருப்பைத் தந்தது. அவர்கள் நிறமான வந்தேறுகுடிகள் மீது குறைகளும், குற்றங்களும் கண்டுபிடித்தார்கள்.

தங்கள் கையில் ஆட்சி இருக்கும் துணிவில் அவர்கள் பல அடக்குமுறைகளைச் சட்டத்தின்மூலம் நிறைவேற்றினார்கள். அதை ஒவ்வொரு வெளிநாட்டவரும், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் மெல்ல மெல்லக் கட்டளையாக, கட்டுப்பாடாக, வன்முறையாக உணர்ந்தனர். இடதுசாரிகள் தீப்பந்தங்களோடு அதற்கு எதிராக ஊர்வலம் போனார்கள். துண்டுப் பிரசுரங்கள் அடித்து வெளியிட்டார்கள். அவர்கள் குரல்கள் கிணற்றிற்குட் போடப்பட்ட கல்லாக, சமுதாயத்தைப் பாதிக்க மறுத்தது. மனங்கள் மரத்துப்போன மக்கள். அந்த மக்களால் உருவான சமுதாயம். அது இந்த அநீதியைப் பாராது கண்ணை மூடிக்கொண்டது. தேசியவாதம், இனவெறி என்பன கதைக்கப்படும்போது சிந்தனை மழுங்கி உணர்ச்சி மேலிடுகிறது. சிலவேளைகளில் தமது இருப்புக்கு அச்சுறுத்தல் என்கின்றபொழுது சமுதாய நீதி, அநீதி பற்றிக் கவலைப்படாமற் கண்ணை இறுக மூடிக்கொள்ளும் தனிமனிதர்களுக்குப் பஞ்சமில்லை. நோர்வேயின் மனிதம் நிறைந்த சமுதாயம் தன் பண்பை மெதுமெதுவாக இழந்தது. காலப்போக்கில் அது வேறு முகம் எடுத்திற்று. விகாரமாய்த் தோன்றிற்று.

விக்னேஸ் குடியிருந்த தொடர்வீட்டுப் பகுதியில் சிறிது காலத்தில் சோமாலிய நாட்டவன் ஒருவனும் அவனது குடும்பமும் வந்து குடியேறினார்கள். அதன்பின்பு அங்கே ஒரு குர்டிஸ்தான் குடும்பமும் வாழ வந்தது. பின்னான நாட்களில், அடிக்கடி வீடு விற்பதற்கான வழிகாட்டிப் பலகை பின்னேரங்களில் சந்தியிற் குந்தியிருக்கும். இதற்கு என்ன அர்த்தம் என்பது விக்னேசிற்குப் புரியத்தொடங்கியது. அதைப்பார்த்து மலைப்பு உண்டாகவில்லையென்றாலும் மகிழ்ச்சி காணாமற் போயிற்று. ஏன் இந்த மாற்றம் என்கின்ற நெருடலின் வலி நெஞ்சிற்குள். எங்கு வெளிநாட்டுக்காரர் அதிகம் வந்து குடியேறுகிறார்களோ அப்பகுதியில் இருந்து சுதேசிகள் சொல்லாமற் கொள்ளாமல் கழன்று விடுவதே வழக்கமாகிவிட்டது. இலங்கையிலும் தாழ்த்தப்பட்டவர்கள் உயர்குடிகள் இருக்குமிடத்தில் வந்து குடியேறுவதை யாரும் வரவேற்பதில்லை. அதையும்மீறி வந்து குடியேறிவிட்டால் பின்பு புறுபுறுத்துப் புறுபுறுத்து அவர்களோடு குடியிருப்பார்கள். அதற்காகத் தங்கள் இருப்பிடத்தை விட்டு ஓடியதை

அவன் பார்த்தது இல்லை. வளர்ச்சி அடைந்த ஐரோப்பிய நாடுகளோ அதற்கு எதிர்மாறாயின.

சுதேசிகளின் வெளியேற்றம் நவீன ‘கெத்தோ’க்களை அங்கங்கே உருவாக்கியது. மக்களைக் கட்டாயப்படுத்த முடியாதென வலதுசாரிகள் நழுவிக்கொள்ள, எந்த அதிகாரமும் இல்லாத இடதுசாரிகள் தாங்கள் செய்த பிழைக்கு இப்போது பிராயச்சித்தம் கிடையாது அவதிப்பட்டார்கள். ‘கெத்தோ’க்கள் மாத்திரம் குஸ்டரோகிகளின் குடியிருப்புப் போல அதிவேகத்திற் பல நாடுகளில் வளர்ந்துகொண்டே வந்தன. வெறுப்பில் உருவாகும் குடியிருப்புகள் ஆதிகாலம்தொட்டு இன்றுவரை தொடர்கதையாகிறது.

*

அன்று விக்னேசின் மகள் திரி அழுதவண்ணம் வீட்டிற்கு வந்தாள். வேலையால் வந்த விக்னேசிற்கு என்ன நடந்தது என்பது புரியவில்லை. திரி சாதாரணமாய் எதற்கும் அழமாட்டாள். தபால்களை இப்போது அவன் எடுப்பது வழக்கமில்லை. அதைத் திரிதான் எடுப்பாள். எதனால் இந்த அழுகை என்பதோ, அதற்கான காரணம் என்னவென்பதோ விக்னேசிற்குப் புரியவில்லை. பாடசாலையில் ஏதும் நடந்திருக்க வேண்டும் அல்லது தபாலில் ஏதாவது செய்தி வந்திருக்க வேண்டுமென அவன் எண்ணிக்கொண்டான். என்னவாக இருக்கும் என்பதைச் சரியாக அவனால் ஊகிக்க முடியவில்லை. திரி தொடர்ந்தும் அழுதாள்.

காரணம் சொல்லாமல் அழுவது, கட்டிப்பிடித்து ஒப்பாரி வைப்பது என்பன எங்கள் நாட்டில் இருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒரு சரக்காக இருக்கவேண்டும் என்பது அவன் எண்ணம். அதை இங்கு வளரும் பிள்ளைகளும் தத்தெடுத்துக் கொண்டமை இரக்கத்தைத் தின்று கோபத்தையே விக்னேசிற்கு உண்டுபண்ணியது. பிரச்சனையைச் சொல்லாமல் அழுவது புரிந்துணர்வை உண்டுபண்ணுவதில்லை. சிலருக்கு அதைப் பார்க்கப் பரிதாபம் உண்டாகும். விக்கினேசிற்குப் பச்சாத் தாபம் எழவில்லை. அதற்குப் பதிலாக மூக்கு நுனிவரை கோபம் வந்தது.

விக்னேஸ் கோபம் தணியாதவனாய் “உந்த அழுகைய விட்டிட்டு என்ன நடந்ததெண்டு சொல்லுபாப்பம். ஊர் பெண்டுகளாட்டம் விசயத்தைச் சொல்லாமல் அழுதுகொண்டு நிக்கிறாய். எங்க பழகினாய் உதை?” என்று கோபத்தில் கத்தினான். அப்பாவின்

கோபம் திரிக்கு இன்னும் அதிக கவலையைத் தந்தது. தனக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியைப் புரிந்துகொள்ளாது அப்பா கோபப்படுகிறாரே என்பது இன்னும் அதிக வெப்பியாரத்தை அவளுக்குள் தோற்றுவித்தது. "நீங்களும் இப்பிடிக் கோவப்படுகிறியளே அப்பா? அநியாயம் செய்யிறாங்கள் அப்பா. இனி நாங்கள் இங்க மரியாதையா வாழேலாது" எனக் கூறியவள் காகிதத் துவாய் எடுத்து மூக்கைத் துடைத்துக் குப்பை வாளியில் அதைப் போட்டாள். என்ன கோபம் இருந்தாலும் குப்பை வாளியிற் காகிதத்தைப் போடுவதை ஒழுங்காகச் செய்வாள் திரி. "என்ன நடந்தது எண்டதை விபரமாச் சொல்லு திரி" என்றான் விக்னேஸ் தணிந்த குரலில். "எனக்கு, அந்த சோமாலிக்காறிக்கு, குர்டிஸ்தான்காறிக்குப் பக்கத்தில இருக்கிற கூடாத ஸ்கூல்ல இடம் கிடைச்சிருக்குது. ஆனா நீனா உட்பட மற்றைய எல்லா நொஸ்குகளுக்கும் வேற வேற இடத்தில நல்ல ஸ்கூல்ல இடம் கிடைச்சிருக்கு. திட்டமிட்டுச் செய்யிறாங்கள் அப்பா. எங்களுக்கு பல நூர்மனைவிட (சுதேசிகளை அப்படித்தான் அழைப்பது) நல்ல மாக்ஸ் கிடைச்சும் பிரயோசனம் இல்ல. முடிவு செய்யிறவங்கள் நாங்கள் நூர்மனா இல்லையா எண்டுதான் மட்டும் பாக்கினம் அப்பா. எங்கட பெயரே நாங்கள் யார் எண்டதை எப்பவும் காட்டிக்கொடுக்குது." என்று கூறித் திரி தொடர்ந்தும் அழுதாள்.

விக்னேசுக்கு இப்போது எப்படி ஆறுதல் கூறுவது என்று புரியவில்லை. திரிக்குச் சுதேசிகளின் பெயரில் ஒன்றை வைத்திருக்கலாம். அப்படி வைத்திருந்தாலும் தமிழ் அடையாளம் விட்டுப் போகாத தனது பெயர் துருத்திக்கொண்டு பின்னால் நிற்பது அவனுக்குப் புரிந்தது.

அவர்கள் இப்போது சிலவற்றைச் சட்டமாக இயற்றிச் செய்கிறார்கள். பலவற்றை இயற்றாத சட்டமாய் நடைமுறை வாழ்வில் நிறைவேற்றுகிறார்கள். விக்னேஸ் வேறு வேலை செய்திருந்தால் இப்போது வேலை இல்லாது திண்டாடியிருக்க வேண்டும். அவன் மருத்துவம் சம்பந்தப்பட்ட வேலை செய்வதால் அதைத் தொடர்ந்தும் காப்பாற்றி வருகிறான். இது ஒரு புதிய வரலாற்றுக் காலம். இதில் எப்படி உயிர்வாழ்வது என்பது விடைகாண முடியாத வினாவாகலாம். வரலாறுகள் வசதிக்கு ஏற்ப மறக்கப்படுவது மனிதகுலத்தின் மரபாகப் போய்விட்டது. எது நடந்தாலும் ஊருக்கு அஞ்சி இனியும் பரதேசம் போவதற்குத் தான் தயாராக இல்லையென விக்னேஸ் முடிவு செய்தான்.

திரி மீண்டும் ஒரு காகிதத் துவாய் எடுத்து மூக்கைத் துடைத்துக் குப்பை வாளிக்குள் எறிந்தாள். "என்ன செய்யிறது திரி? எந்தக்

கூப்பாடும் இனி இங்க சரிவராது. நாங்கள் கிடைக்கிறத வைச்சு திறமையா முன்னுக்கு வாறத்துக்கு வழியைப் பார்க்க வேண்டியதுதான்" என்றான். "நாங்கள் எப்பிடி அப்பா திறமையா வரமுடியும்? படிப்பிக்க வாத்திமாரே இல்லாத ஸ்கூல்ல நாங்கள் படிச்சு எப்பிடி முன்னுக்கு வரமுடியும்? முழுக்க முழுக்க நாங்கள் இனிச் சுயமாத்தான் படிக்கவேணும். சரி நாங்கள் படிச்சாலும் மாக்ஸ் அவங்கள்தானே போடோணும் அப்பா? இங்க இனித் தொடர்ந்து இருந்தா எங்கட வாழ்க்கை வீணாகிறது நிச்சயம்" என்றாள் அவள். சிறிது நேரம் யோசனையோடு நின்ற விக்னேஸ் வெறுப்போடு "எங்க இனி ஓடுவம்? எத்தினைதரம் ஓடுவம்? எல்லாமே வெறுத்துப்போச்சுது" என்றான்.

"உங்களுக்கு வெறுத்துப் போச்சுதப்பா. எங்களுக்கு இப்பதான் வாழ்க்கையே ஆரம்பமாகுது. நாங்கள் அமெரிக்காவுக்கு போயிட்டா என்ன?" என்றாள் திரி ஆதங்கத்தோடு. "கொஞ்சம் சமாளிப்பம் அம்மா. அங்கயும் எப்பிடி அரசியல் மாறுமெண்டு தெரியாது. அதையும் பொறுத்திருந்துதானே பாக்கோணும்?" என்றான் விக்னேஸ். "எப்பிடியெண்டாலும் அங்க பிரச்சனை வராதுதானே அப்பா?" என்று கேட்டாள் திரி. "அதுக்கு ஒரு உத்தரவாதம் இல்லையம்மா. அங்கையும் ஐரோப்பிய வாரிசுகள்தானே இருக்கினம். அதைவிட யாரிட்ட ஆயுதமும் அதிகாரமும் இருக்குது எண்டதைப் பொறுத்துத்தான் நீதி அநீதி நிச்சயமாகும் எண்டது விளங்குதே? வெள்ளையள்தானே அமெரிக்காவிலும் ஆளுறவை. கறுப்பர் ஆட்சிக்கு வந்தது அதிசயம். அது தொடர்ந்து நடக்கும் எண்டதுக்கு ஒரு உத்தரவாதமும் கிடையாது. சட்டத்தை நடைமுறைப்படுத்திறது வெள்ளைப் பொலீஸ்தானே?" என்றான் விக்னேஸ். "நீங்கள் ஏனப்பா என்னை நிறையப் பயப்படுத்துறியள்?" என்றாள் திரி.

"உன்னைப் பயப்படுத்துறதில்லை என்ர நோக்கம். நடந்த வரலாற்றைத்தான் சொன்னனான். தனக்கெண்டு வந்தா மனிசனுக்கு எந்தப் பொதுநீதியும் முக்கியமா இருக்காது. மனிதன் சிந்திக்கத் தெரிஞ்ச மிருகம். யார் கையில் அதிகாரமும், பதவியும், நவீன ஆயுதமும் இருக்குதோ அவைதான் மற்றவையின்ர தலைவிதியை நிர்ணயிப்பினம். அதில எங்களுக்கு நல்ல அனுபவம். அந்த மனிசருக்குச் சரியாக இருக்கிறது, உலகப் பொது நியதியாகவோ, பாவ புண்ணியத்திற்கு ஏற்றதாகவோ இருக்கோணும் எண்டில்ல" என்றான் விக்னேஸ். "அப்பிடியெல்லாம் வரக்கூடாது அப்பா. இந்த நாட்டவர் பிழையைக் கெதியா உணர்ந்து திருந்திக்கொள்ள வேணும். அதுக்கு எல்லாருமாப் போராடவேணும். ஒரு உன்னதமான நாட்டிலும் இப்படி நடந்தது என்கின்ற அவமானம் ஒருபோதும் நோர்வேக்கு வரவே கூடாதப்பா" என்றாள் திரி. "எல்லாருடைய விருப்பமும் அதுதான். இனிப் பதவியையும், அதிகாரத்தையும் வைச்சிருக்கிற

மனிசர்கள் என்ன செய்யினம் எண்டுறதைப் பொறுத்திருந்துதான் பார்க்கோணும்” என்றான் விக்னேஸ்.

## 3.2 எரிப்பு

வெறுப்பு என்பது ஒரு சிறு புள்ளியாகப் பிறக்கிறது. அது பின்பு பனிப்பந்துபோல வழியில் கிடைப்பதைத் தின்று கொழுத்துப் பூதாகரமாகிவிடுகிறது. வலதுசாரிக் கடும்போக்காளரிடம் இருந்த வெறுப்பு என்னும் நஞ்சு மக்கள் என்னும் ஆற்றிற் கலந்து வேகமாகப் பரவத் தொடங்கியது. அதிதீவிரவாத வலதுசாரிகள் திரும்பத் திரும்பக் கூறிய பெரிய பெரிய பொய்களைச் சாதாரண மக்கள் பலமுறை கேட்டுக் கேட்டு உண்மையென நம்பத் தொடங்கினார்கள். அப்படி நம்பத் தொடங்கிய மக்கள் வெளிநாட்டவரை எப்படி நடத்த வேண்டுமென அதிதீவிர வலதுசாரிகள் கூறுகிறார்களோ அதையும் நியாயமென ஏற்கத்தொடங்கினார்கள். பல அநியாயங்கள் நியாயமாகச் சித்தரிக்கப்பட்டன. அதை எதிர்த்தவர்கள் எதிரிகளாக, காட்டிக்கொடுப்பவர்களாக அடையாளம் காணப்பட்டனர். சில சுதேசிகள் அநியாயத்திற்கு எதிராகப் போராட நினைத்தாலும், தாங்கள் அடையாளப்படுத்தப்பட்டு முத்திரை குத்தப்படுவதால் தமக்கு மாத்திரமன்றித் தமது பிள்ளைகள், உறவினர் என்போருக்கும் துன்பம் ஏற்படும் என்பதை நினைத்து மௌனமானார்கள். அப்படி இருந்தும் எதையும் பொருட்படுத்தாமற் சிலர் போராட முன்வந்த அந்தச் சம்பவம் விரைவில் நடந்தது.

அரசின் மனநிலைக்கு ஏற்பத்தான் மக்களும் சட்டத்தின்மேல் வைத்திருக்கும் மதிப்பை நிர்ணயித்துக் கொள்கிறார்கள். அரசு மற்றைய இனங்களை இரண்டாந்தரமாகப் பார்த்தபோது மக்களில் ஒரு பகுதி அவர்கள் மீது வன்முறையைப் பாவிப்பதில் நியாயம் உண்டு என்கின்ற முடிவுக்கு வருகிறார்கள். ஐரோப்பா முழுவதிலும் அந்த மாற்றம், மக்களின் மனதைக் கறையான் அரிப்பதுபோல அரிக்கத் தொடங்கியது. அவ்வப்போது அங்கும் இங்குமாக நிறமனிதர்கள் மீது தாக்குதல் நடைபெறத் தொடங்கின. கிழக்கு ஐரோப்பாவில் முதலில் அவ்வகையான தாக்குதல்கள் நடக்கத் தொடங்கின. நிறமாய் இருந்தால் அவர்கள் எந்த மதம் அல்லது இனம் என்கின்ற வேறுபாடு இல்லாது தாக்கப்பட்டார்கள். இஸ்லாமியரின் அடையாளம் அவர்களைக் காணும் இடமெல்லாம் தாக்குதலுக்கோ அல்லது அவமானத்திற்கோ உள்ளாகும் வகையில் கிழக்கு ஐரோப்பாவில் நிலைமை விரைவாக மாறியது. சில முஸ்லீம் இளைஞர்கள் தங்கள் அடையாளத்தை வேண்டாம் என்று தூரத்தே எறிந்தபோதும், தோலின் நிறம் அவர்களைக் காட்டிக்கொடுத்தது.

கிழக்கு ஐரோப்பாவில் நடந்து வந்த நிகழ்வுகள் மேற்கு ஐரோப்பாவில் வாழ்ந்த, நிறமான வந்தேறுகுடிகளுக்கு அதிகக் கவலையையும், பயத்தையும் தந்தது. தமது வாழ்க்கை வருங்காலத்தில் எப்படி அமையப் போகின்றது என்கின்ற கேள்வி அவர்களை உலுப்பியது. வேர்கள் அறுத்து வேறுதேசம் வந்த கூட்டத்தை வெறுப்புப் பலி கேட்டபோது அவர்கள் துடித்துப் போய்விட்டார்கள். வாழ்வதற்கு வேறு வழி தெரியாது திகைத்தனர்.

*

அன்று வெள்ளிக்கிழமை. இரவு பத்து மணி இருக்கும். பதினான்கு வயது மதிக்கத்தக்க சிறுவன் முகத்தை முழுமையாக மறைத்தவண்ணம் மூன்று பிளாஸ்ரிக் பைகளிற் சிவப்புநிறப் பெயின்ரோடு அந்தக் குறிப்பிட்ட ஒழுங்கைக்குட் சென்றான். அது தனித்தனி வீடுகள் கொண்ட ஒஸ்லோவின் ஒரு குடியிருப்புப் பகுதி. அவனுக்கு எந்தெந்த வீடுகளில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்பது நன்கு தெரியும். அவன் பகலில் செய்தித்தாள்கள் வினியோகிக்கும் வேலை செய்பவன். அதன் வசதியிற் பெற்ற அனுபவம் அவனுக்கு வீடுகளை அடையாளம் காண்பதில் உதவிசெய்தது. அவன் அடையாளம் கண்ட வீடுகளுக்கு முன்பாக அந்த பெயின்ற் பொதிகளைப் போட்டு உடைத்தான். பின்பு எதுவும் நடவாதது போல அவ்விடத்தை விட்டு வேகமாக நகர்ந்து சென்றான். பலர் அந்த அடையாளப்படுத்தலைக் காணவில்லை. கண்டவர்கள் பெரிதாக ஒன்றும் அலட்டிக்கொள்ளவில்லை. தெருவிற் கிடக்கும் அடையாளம் பற்றி வீட்டில் இருந்து ஆராய்ச்சி பண்ணுவது சிலவேளைகளிற் பைத்தியக்காரத்தனமாய் இருக்கலாம். அடையாளங்கள் பல தற்செயலானவை அல்ல என்பதைச் சிலர் நிச்சயம் புரிந்துகொள்வார்கள்.

இரவு நான்கு மணி இருக்கும். அந்த “யூ” வடிவ ஒழுங்கையில் இருந்த வீடுகள் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தன. அதன் ஒரு முகப்பில் அந்த கறுப்புநிற “பென்ஸ்” வான் வந்து நின்றது. அதில் இருந்து மூவர் மெதுவாக இறங்கி வந்தார்கள். தங்களை அடையாளம் கண்டுவிடாதவாறு அவர்கள் முகத்தை மறைக்கும் தொப்பி அணிந்திருந்தார்கள். மூன்று பெரிய கொள்கலன்களில் எதையோ தூக்க முடியாது தூக்கிக்கொண்டு அவர்கள் வந்தார்கள். பின்பு அந்த “யூ” வடிவ ஒழுங்கையில் இறங்கித் தெருவை அவதானமாய்ப் பார்த்தவண்ணம் நடந்து சென்றார்கள்.

முதலாவது சிவப்புமை அடையாளம் கண்டதும் அவர்களில் ஒருவனின் நடை தடைப்பட்டது. அவன் தனது கையில் இருந்த ஒரு

கொள்கலனை வைத்திருக்க மீதிக்கலன்களோடு மற்றவர்கள் மேற்கொண்டு அந்த ஒழுங்கையில் நடந்தனர்.

முதலாவது வீட்டில் நின்றவன் சிறிது நேரம் அந்த வீட்டில் ஏதாவது அசுமாத்தம் உள்ளதாவென உற்று நோக்கினான். அப்பிடி எதுவும் தென்படவில்லை என்பதை உறுதி செய்துவிட்டு அந்த வீட்டை அண்மித்தான். பின்பு மெதுவாக அந்தக் கொள்கலனைத் திறந்து ஏதோ ஒரு திரவத்தை அவ்வீட்டைச் சுற்றி அதன் சுவர்கள் நனையுமாறு ஊற்றியவண்ணம் வந்தான். பின்பு அவன் 'லைற்றர்' ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு, தனது மணிக்கட்டைப் பார்த்தவண்ணம், நெருப்பில் நிற்கும் அவஸ்தையோடு அங்கு நின்றான். சிறிது நேரத்தில் திருப்திப்பட்டவனாய் லைற்றரைத் தட்டி ஒரு கடதாசியில் கொளுத்தி அதைச் சுவரோரம் எறிந்தான். பின்பு ஓட்டமும் நடையுமாக அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

அவன் ஓட்டமும் நடையுமாகத் தமது வாகனத்தை நோக்கிப் போனான். அப்படிப் போகும்போது இன்னும் இருவீடுகளில் இருந்து தீச்சுவாலைகளினால் உண்டான வெளிச்சத்தை அவனால் அவதானிக்க முடிந்தது. அவன் தமது திட்டம் நிறைவேறிய திருப்தியோடு வாகனத்தை நோக்கி விரைவாக நடந்தான். தன்னோடு கூடவந்தவர்கள் மறுகரையால் அங்கே வருவார்கள் என்பது அவனுக்கு நன்கு தெரியும். அவன் வாகனத்தை அடைந்தபோது மற்றவர்களும் மறுபாதையால் அங்கு வந்துவிட்டார்கள். வாகனத்தில் எல்லோரும் ஏறியவுடன் அது வெகுவிரைவாக அவ்விடத்தை விட்டுப் பாய்ந்து சென்றது.

ஊசி நுழையத் திண்டாடும் தோலின் துவாரத்திலும் வாய்வைத்து வெப்பத்தை உறிஞ்சும் நுளம்பான குளிர். இந்த இயற்கையின் கோரத்தாண்டவத்தை முறியடித்து வாழ்வதற்கு வெப்பம் சுவர்கள் ஊடாக வெளியே போகாத அடைப்பான வீடுகள். அதை இவர்கள் வீடு கட்டும்போது நன்கு கவனித்துக்கொள்வார்கள். காலம் காலமாகக் கடத்தப்பட்ட அறிவு. இங்கு எப்போதும் குளிரைத் தாங்கவேண்டும் என்கின்ற நோக்கோடு வீடு கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் தேர்ந்தெடுக்கப்படும். அப்போது நெருப்பு இலகுவில் தின்னும் பொருட்கள் அதில் அதிகமாக வந்து சேர்ந்துவிடும். இந்த வீடுகளில் குளிருக்கு இருக்கும் பாதுகாப்பு, தீயேற்பட்டால் அதற்கு மாறான படுகுழியாகும். இந்த வீடுகள் மிகவிரைவில் தீப்பற்றிக் கொள்வதோடு நச்சு வாயுக்கள் நிறைந்த

ஒரு பொறியாகவே உருவாகிவிடும். அதற்குள் அகப்படும் கணங்கள் புரியமுதல் ஆள் மயங்கிவிடும் நிலைவரும்.

இந்த வீடுகளில் தீப்பற்றும்போது சில நிமிடங்களே வாழ்விற்கும் சாவிற்குமான சந்தர்ப்பத்தைத் தரும் நேரமாகிறது. பலவேளைகளிற் தீயணைப்புப்படை வரமுதலே வீடு பெருமளவிற் தீப்பற்றிவிடும். பின்பு தீயணைப்புப்படை தீயை அணைத்து முடிக்கும். இறுதியில் வெறும் கரியே மிஞ்சி இருக்கும். இன்று மூன்று வீட்டில் தீப்பற்றிக்கொண்டது. அந்த மூன்று வீடுகளும் வெளிநாட்டவருக்குச் சொந்தமானவை. அதற்கான அடையாளத்தையே மாலையில் அந்தச் சிறுவன் இட்டுச்சென்றான். அது ஒரு திட்டமிட்ட அடையாளமிடும் வேலை என்பது இப்போது புலனாயிற்று.

வீடுகள் தீப்பற்றிக்கொண்ட தகவல் தீயணைப்புப் படைக்குக் கிடைத்துவிட்டது. அவர்கள் பெரும் சத்தத்துடன் வருவது கேட்டது. அதற்கிடையில் அந்த மூன்று வீடுகளும் பாரிய அளவில் தீப்பற்றிவிட்டன. ஒரு வீட்டில் குடியிருந்த சோமாலிய நாட்டுக்காரர்கள் வெளியே வந்துவிட்டார்கள். மூன்று பிள்ளைகளும் தாய் தந்தையுமாக மொத்தம் அவர்கள் ஐந்து உருப்படி. அவர்கள் தங்களது காருக்குள் ஏறி இருந்துகொண்டார்கள். எரியும் வீட்டிற்கு எதுவும் செய்ய முடியாதவர்களாய் அவர்கள் நடப்பதை வேடிக்கை பார்த்தார்கள்.

அடுத்த வீட்டிற் குடியிருந்த தமிழ்க் குடும்பமும் தமது இரண்டு பிள்ளைகளோடு வெளியே வந்துவிட்டார்கள். தமிழர்கள் இரண்டு பிள்ளைகளுக்கு மேல் இங்கு பெற்றுக்கொள்வது மிக அரிதாகிவிட்டது. அவர்களும் சுதேசிகளைப் போல இரண்டு பிள்ளைகளுக்கு மேல் தங்களால் சமாளிக்க முடியாது என்கின்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இங்கு தாய் தகப்பன் மட்டுமே பிள்ளைக்கு எல்லாம் என்றாகிவிடுகிறது. மற்றைய உறவுகள் புகைப்படத்திலும், வீடியோக்களிலும் மாத்திரமே பதியப்பட்டு இருக்கின்றனர். மிஞ்சிப்போனால் அவர்கள் குரல்களைக் கேட்கலாம். சிலவீடுகளில் வீடியோ தொலையேசியிற் பார்க்கலாம். பக்கத்தில் இருந்து உதவிசெய்ய முடியாத தூரம் அந்த உறவுகளைப் பிரித்து நின்றது. தனித்து இரண்டு பிள்ளைகளைச் சமாளிப்பதே பெரிய பொறுப்பாகிவிடுகிறது. ஆணும் பெண்ணும் வேலைசெய்ய வேண்டிய கட்டாயம் மேற்குலகெங்கும். நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் இப்படிக் குடும்பத்தைச் சுருக்கினார்கள். ஈழத்தில் தமிழர் யுத்தத்தில் அழிந்தனர். இன்னும் அகதிகளாய் வெளியேறுகிறார்கள். யுத்தம் நடந்தபோதுதான் இலங்கையில் அதீத இனப்பெருக்கம் ஏற்பட்டது. தமிழர்கள் மிகச்சிறிய சிறுபான்மையாவது சட்டென இலங்கையில்

நடந்தேறிவிட்டது. வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் சுயநலம்பிடித்த கிணற்றுத் தவளைகள். சொந்த நாட்டில் தமது இனத்தின் இருப்பை நலியவிட்டு, வந்த நாட்டைச் சொந்தம் கொண்டாடுகிறார்கள். நோர்வேத் தமிழர், கனடாத் தமிழர், பிரஞ்சுத் தமிழர் என்கின்ற பறங்கிப் பெருமையிற் பூரிக்கின்றனர். இப்போது தமிழர்கள் பரவலாகத் தங்கள் கலாசாரத்தைக் கட்டிக்கொண்டு அழுவதிலும்பார்க்க இசைவாக்கம் அடைவதே உன்னதம் என்பதை அறிந்து செயற்பட்டாலும், அவர்களின் தோலும் பெயரும் எப்போதும் காட்டிக்கொடுக்கிறது. அவர்களின் பிள்ளைகள் தமிழை மறந்த மொறீசியஸ் மக்களாகத் தமிழ்ப் பெயருடைய கறுப்புப் பறங்கியரானார்கள் என்பது விக்னேசின் எண்ணம்.

அந்தத் தமிழ்க் குடும்பமும் குளிருக்கு அஞ்சித் தமது காரில் ஏறினார்கள். பின்பு அவர்கள் அந்தக் காரைத் தமது எரியும் வீட்டில் இருந்து சற்றுத் தூரம் தள்ளி நிறுத்தினார்கள். அவர்கள் காருக்குள் இருந்து திகைப்புடனே எரியும் வீட்டைப் பார்த்தார்கள். தீயணைப்புப்படை விரைவாக வரவில்லையே என்பது அவர்கள் ஆதங்கமாகிற்று. வீடு எரிந்த போது எல்லா விதிமுறைகளையும் மீறி அவர்கள் தங்கள் போட்டோ அல்பங்கள், நகைகள் போன்ற சில பொருட்களை எடுத்து வந்துவிட்டார்கள். எரிந்தால் மீளப்பெறமுடியாத பொக்கிசங்கள் அவை என்பது உண்மையே. வீடு எரியும்போது எப்படி நடக்க வேண்டும் என்கின்ற முறைக்கு அது எதிரானதும் மெய்யே.

மூன்றாவது வீட்டில் இருந்து எவரும் வெளியே வராதது எல்லோருக்கும் வியப்பைத் தந்தது. ஆட்கள் நெருங்க முடியாத அளவிற்கு நெருப்பு அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டதில் எவரும் உள்ளே போய்ப் பார்ப்பதற்கும் முயற்சிக்கவில்லை. அந்த வீட்டில் வடஇந்தியாவைச் சார்ந்த ஒரு குடும்பம் குடியிருந்தது. அவர்களின் தாய் தந்தையரும் அங்கு வசித்து வந்தார்கள். அவர்கள் அடிக்கடி இந்தியாவிற்குப் போவதும் திரும்பி வருவதுமாய் இருப்பதில், வீட்டில் சிலவேளை ஆட்கள் இருப்பதில்லை. இன்று சிலவேளை ஆட்கள் இல்லையா என்கின்ற எண்ணம் பலருக்கும் எழுந்தது.

பக்கத்து வீட்டிற் குடியிருந்த "வீடார்" என்பவன் நித்திரைக் கலக்கத்தோடு அங்கு வந்து நின்றான். அவனுக்குப் பக்கத்து வீட்டிற் குடியிருக்கும் லார்சும் வந்து நின்று வேடிக்கை பார்த்தான். பின்பு வீடாரைப் பார்த்த அவன் "இந்த வீட்டில ஆட்கள் இல்லையா வீடார்?" என்று கேட்டான். "தெரியல்ல. வீட்டில் ஆட்கள் இல்லாவிட்டால் தபால் எடுக்கச்சொல்லி இருப்பார்கள். அப்பிடி ஒன்றும் எனக்கு சொல்லவில்லையே? கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியே சென்று வரும்போது தாத்தாக்காரனைக் கண்டேன். பின்பு

வேறு எங்கேயாவது போய்விட்டார்களோ தெரியவில்லை. நாங்கள் இப்பொழுது வீட்டிற்குக் கிட்டே நெருங்கமுடியாது. இனித் தீயணைப்புப் படை வந்துதான் பார்த்துச் சொல்லவேண்டும்" என்றான்.

அவர்கள் அப்படிக் கதைத்தவண்ணம் நிற்கும்போதே தீயணைப்புப் படையினர் அவசர அவசரமாக அலறியவண்ணம் வந்தார்கள். அந்த வாகனங்கள் அதே அவசரத்தோடு ஒழுங்கைக்குட் புகுந்தன. பின்பு ஒவ்வொரு எரியும் வீட்டிற்கும் ஒவ்வொரு வாகனம் முதலிற் சென்றது. அவர்கள் தமது வாகனத்தில் இருந்தும், தெருக்குழாயில் இருந்தும் நீரை எரியும் வீட்டைச் சுற்றி முதலில் பீச்சியடித்து அவற்றை நனைத்தனர். பின்பு எரியும் வீடுகளை நோக்கி அடிக்கத் தொடங்கினார்கள்.

தீயணைப்புப் படைக்குப் பின்னால் பொலீசும் அம்புலன்சும் தமது ஒலங்களுடன் வந்தன. சனங்கள் விடுப்புப் பார்ப்பதற்காய் ஓடு சுமக்கும் நத்தைகளைப் போன்று ஜக்கெற்றுக்குள்ளால் தலைகளை நீட்டிய வண்ணம் அங்கு கூடிவிட்டார்கள். தீயணைப் புப்படை தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததையடுத்து, அந்த வடஇந்தியரின் வீட்டைச் சோதனை செய்தார்கள். சிறிது நேரத்தில் இரு பிணங்கள் காத்திருந்த அம்புலன்சில் ஏற்றப்பட்டன.

மூன்று வீடுகள் ஒரே நேரத்தில் சொல்லி வைத்தது போல் எரிந்தது அங்கிருந்த மக்களுக்கு இயற்கையாகவே சந்தேகத்தை உண்டுபண்ணியது. பொலீஸாருக்கும் அது பார்த்தவுடனேயே புரிந்திற்று. தீயணைப்புப் படை முழுமையாகத் தமது வேலையை முடித்தும் அந்த வீடுகளைச் சுற்றிப் பொலீஸார் தடுப்பு நாடாக்களை இழுக்கத் தொடங்கினார்கள். அதன் பின்பும் நெருப்பின் சூடு ஆறும்வரை பொலீஸார் காத்திருக்க வேண்டும். சூடாறிய பின்புதான் அவர்கள் தங்களது பிரிசோதனைகளை நடத்தி, இந்தத் தீவிபத்து எப்படி ஏற்பட்டது என்கின்ற காரணத்தைக் கண்டுபிடிப்பார்கள். இங்கு மின்சாரக் கோளாறினால் அல்லது வேறு சில காரணங்களாற் தவறுதலாக வீடுகளில் தீபற்றிக்கொள்வதுண்டு. அதைவிடத் திட்டமிட்டு விட்டிற்குத் தீவைத்து, காப்புறுதிப் பணம் பெறுபவர்களும் உண்டு. மற்றவரின் சொத்துக்களைத் தீயிட்டு அழிக்கும் சில விசமிகளாலும் பல வீடுகள், தேவாலயங்கள் போன்றவை தீபற்றிக்கொள்வதும் உண்டு. ஒரு காலத்தில் சாத்தானுக்கு ஆதரவானவர்கள் தேவாலயத்திற்குத் தீவைத்து மகிழ்ந்தனர். இந்தத் தீ எதனால் எற்பட்டது என்பதைக் கண்டுபிடிப்பதே தற்போது பொலீஸாரின் முக்கிய வேலையாகும். அவர்கள் அதன்படி ஒழுகுவார்களா என்கின்ற சந்தேகம் சிலருக்கு இருந்தது.

## 3.3 ஆர்ப்பாட்டம்

சில வாரங்கள் கழித்தே பொலீஸ் அந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டியது. அவர்கள் இதை ஏதோ காரணங்களுக்காகக் கடத்த முயல்கிறார்கள் என்பதாய்ச் சில பத்திரிகையாளர்கள் நோண்டத் தொடங்கிய பின்பே அந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டை வேண்டாவெறுப்பாக ஒஸ்லோவிற் கூட்டினார்கள். பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு வழக்கத்தைவிட அதிகமாக நிருபர்கள் வந்து காத்திருந்தனர். எல்லோருக்கும் மூன்று வெளிநாட்டவரின் வீடுகள் ஒரே நேரத்தில் எப்படி ஒரு குறிப்பிட்ட ஒழுங்கையில் தீப்பற்றும் என்கின்ற வினாவிற்கு விடை வேண்டும் என்பதான ஆர்வம். அத்தோடு இது வெளிநாட்டவருக்கு எதிராகத் திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட வன்முறை என்பதைப் பொலீஸார் ஒத்துக் கொள்கிறார்களா? இதற்கு விலையாக இரண்டு உயிர்கள் பலியெடுக்கப்பட்டு இருக்கிறதே, அதற்கு என்ன பதில் கிடைக்கிறது என்கின்ற மனிதம் தேடுவதில் அவர்கள் ஈடுபட்டார்கள்.

பொலீஸார் தங்களின் விசாரணைப்படி அந்த மூன்று வீடுகளும் திட்டமிட்டே தீக்கிரையாக்கப்பட்டு இருப்பதாயும், அது ஒரு பாரிய சமுகக் குற்றம் என்றும், அதற்கான குற்றவாளிகளைத் தாங்கள் தேடுவதாயும் வழமைபோலக் கூறினார்கள்.

பாதிக்கப்பட்ட அனைவரும் வெளிநாட்டுக்காரர்களே என்கின்ற கேள்வி வந்தபோது, இது இனரீதியான எண்ணத்துடன் செய்யப்பட்ட தாக்குதல்தான் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது என்றும், அதற்கான விடையை விசாரணையின் முடிவில்தான் கூறமுடியும் என்றும் சமாதானம் சொன்னார்கள். சிலர் இந்தப் பதில்களைக் கேட்டுப் பொலீஸார் மழுப்புகிறார்களோ என்று எண்ணினார்கள்.

தாங்கள் இன்னும் தீவிர வலதுசாரிகளிடம் சோரம் போகவில்லை என்பதை நிருபிப்பதுபோல அடுத்தநாட் பத்திரிகைகள், அந்தச் சம்பவத்திற்கு இனரீதியான வெறுப்பே காரணம் என்பதாயும், இனியாவது இப்படியான தாக்குதல்கள் இடம்பெறாது நாட்டையும், அதன் பெயரையும் அரசாங்கம் காப்பாற்றவேண்டும் என்றும் எழுதியிருந்ததோடு, இப்படியான மாற்றத்திற்கு அதிதீவிர வலதுசாரிகளின் அரசியலும் ஒரு தூண்டுகோல் ஆகும் எனக் குற்றம் சாட்டினார்கள். இந்தக் குற்றச்சாட்டு அதிதீவிரவலதுசாரி அரசாங்கத்திற்கு அறவே பிடிக்கவில்லை. இப்போது ஐரோப்பா இருக்கும் நிலையில், பத்திரிகைகளும், மற்றைய ஊடகங்களும் பொறுப்பான முறையிற் கருத்துகளை வெளியிடவேண்டும் என்றும்,

அதைவிடுத்து இப்படிப் பொறுப்பற்ற முறையிற் கருத்துகளை வெளியிட்டால், தாங்கள் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய சட்டங்களை இனிவரும் காலங்களில் இறுக்கவேண்டி வரும் எனவும் அது எச்சரித்தது.

அந்த எச்சரிக்கையைப் பல ஊடகங்கள் ஆபத்தென்று தெரிந்தும் தங்களுக்கு விடப்பட்ட சவாலாக எடுத்துக்கொண்டன. இந்த ஊடகங்களே சிலவேளைகளில் வெளிநாட்டவர்களால் ஏற்படும் சிறிய பிரச்சனையைப் பூதாகாரப்படுத்திப் பணம் சம்பாதித்த காலம் உண்டு. இன்று தாங்களே அந்த மருந்தைச் சுவைக்கவேண்டி வந்தபோது, அவர்களால் அதைத் தாங்க முடியவில்லை. பத்திரிகையாளரின் இந்த எதிர்ப்பு ஒருவகையில் நன்மை பயக்கும் என்பது பொதுவான கருத்தாயிற்று. ஒரு நாட்டின் ஜனநாயகம் செயற்படுவதற்குப் பலமான எதிர்க்கட்சி வேண்டும். எதிர்க்கட்சி நலிந்து போய்க்கிடக்கும் ஒரு நாட்டில் ஆகக்குறைந்தது பலமான, நேர்மையான ஊடகங்களாவது இருக்கவேண்டும். இரண்டும் இல்லாத ஒரு நாடு ஜனநாயகத்தைப் பெயருக்கு வைத்திருந்தாலும் நடைமுறையிற் சர்வாதிகாரத்திலேயே மிதக்கும். அப்படிப் பலநாடுகள் மிதந்திருக்கின்றன. இந்த நாடும் அப்படியான ஒரு அவலநிலைக்குட் சென்றுவிடாதிருக்க இனியாவது ஊடகங்கள் விழிப்பாக இருக்கும் என்பதாய்ப் பலருக்கும் அன்று ஒரு சிறு நம்பிக்கை பிறந்தது.

பொலீஸ் அதை ஒரு இனவாதத் தாக்குதலென ஒப்புக்கொண்டதும், ஊடகங்களும் அதை ஆமோதித்துச் செய்தி பரப்பியதும், ஓஸ்லோவிற் பெருங் கொந்தளிப்பை உண்டுபண்ணியது.

அந்தக் கொந்தளிப்பை வெளிப்படுத்தும் விதமாக வெளிநாட்டவர்கள், இடதுசாரிகள், முற்போக்கு வலதுசாரிகள், சுதேசிகளெனப் பலரும் ஒரு மாபெரும் ஊர்வலத்திற்கு ஒழுங்கு செய்தார்கள். அப்படி ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தை இடதுசாரிக் கட்சியில் இருப்பவர் தலைமைதாங்கிச் செல்வதாகிற்று. அவர் ஒரு வெளிநாட்டுப் பாரம்பரியத்தில் வந்த இரண்டாவது பரம்பரையைச் சார்ந்தவர். கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்களோடு அதிகமான மாற்றுக் கட்சியினரும், அதன் வெளிநாட்டுப் பாரம்பரியத்தில் வந்தவர்களும், சில சுதேசிகளும் கலந்து கொள்ள வருவதாய்த் தகவல் வந்திற்று. அந்த ஊர்வலம் மத்திய புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட ஆயுத்தங்கள் செய்யப்பட்டன. இனவாதத்திற்கு எதிரான இடதுசாரி இளைஞர்கள் தாங்களும் அந்தக் கூட்டத்தில் பங்குபெறவேண்டும் என்று வாதாடினார்கள். அப்படி அவர்கள் வந்தால் இந்தக் கூட்டத்தை நவநாஜிக்கள் எப்படியாவது குழப்புவார்கள் என்பதை கூறிக் கூட்டத்தை ஒழுங்கு செய்பவர்கள் அவர்களைச் சமாதானப்படுத்த

வேண்டியதாகிற்று. இனவாதத்திற்கு எதிரான இடதுசாரி இளைஞர்கள் தங்களை “ப்ளிற்ஸ் (Blitz)” என்று அழைப்பார்கள். இவர்களது அனேக கூட்டங்களும், ஊர்வலங்களும், வன்முறையில் முடிந்த வரலாறுகள் உண்டு. அவர்களும் இந்த ஊர்வலத்தில் வரவேண்டும் என்பதை யாராலும் ஒத்துக்கொள்ள முடியவில்லை. நல்ல எண்ணம் அவர்களிடம் இருந்தாலும் அவர்கள்மேற் பூசப்பட்ட சாயம் அதற்குத் தடையாகக் குறுக்கே நின்றது. நல்ல எண்ணங்களையும் வன்முறை கெடுத்துவிடும் என்பதற்கு அவர்கள் நல்ல உதாரணமாகினர்.

வரவேண்டாம் என்பதையும் மீறித் தன்னிச்சையாக “ப்ளிற்ஸ்” இல் இருப்பவர்கள் வந்துவிடலாம். அப்படிச் செய்யமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. அப்படி வரும்போது அவர்களை நவநாஜிகள் பார்த்துவிட்டால், கைகலப்பு எற்படலாம் என்கின்ற கவலை அந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்த பலரையும் தொற்றிக்கொண்டது.

அன்று வழக்கத்துக்கு மாறாக அதிகமான பொலீஸாரின் நடமாட்டம். வழமையாக இப்படியான ஊர்வலங்களுக்கு இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளோ பொலீஸின் நடமாட்டமோ இருப்பது கிடையாது. அன்று அதன் தார்ப்பரியம் வெகுவாக மாறிப் போயிற்று. நவநாஜிகள் இந்த ஊர்வலத்திற்கு எதிராக அணிதிரளலாம் என்கின்ற ஐயம் ஊர்வலத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு உண்டு. அதை முறியடிப்பதற்காகவே இத்தகைய பாதுகாப்பு எற்பாடு நடைபெறுகிறது என்கின்ற சமாதானம் எல்லாரையும் நிம்மதிப் பெருமூச்சு விடவைத்தது. அது ஒருவிதப் பாதுகாப்பு உணர்வையும் தந்தது.

ஊர்வலம் பிற்பகல் ஐந்து மணிக்கு மத்திய புகையிரத நிலையத்தில் தொடங்கி “கால்யோகன்ஸ்காத்தா”வால் (ஒஸ்லோவில் அரசமாளிகைக்கு செல்லும் பிரதான பாதை) செல்வதாக கூறப்படிருந்தது. பின்பு பாராளுமன்றத்தடியில் கூட்டம் நடைபெற்று அங்கு மகஜர் கையளிக்கப்படும் என்பதாகவும் தகவல் வந்தது.

எதிர்பார்த்ததைவிட அதிகமாகக் கூட்டம் அன்று கூடியது. எல்லோரும் தீப்பந்தங்களோடு தயாராக நின்றனர். நவநாஜிகளோ அல்லது வேறு அதிதீவிர தேசியவாதிகளோ இடையில் வேண்டுமென்று ஊர்வலத்தைக் குழப்பலாம். அது பின்பு கலகமாக உருக்கொள்ளலாம். இந்தப் பயம் எருமைமாடுபோல் வழியை அடைத்தவண்ணம் நிற்பதான உணர்விற் கூட்டத்தை ஒழுங்கமைத்தோர் பலர் அவஸ்தைப் பட்டார்கள்.

மத்திய புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும், கிழக்குப் புகையிரத நிலையத்திற்கு முன்பாக இருந்த வெளியில் மக்கள் வந்து குவியத் தொடங்கினார்கள். நேரம் நான்கு ஐம்பத்தி ஐந்தை அடையவும் பலரும் தங்கள் பந்தங்களைக் கொழுத்தினர். எதற்காக இந்த ஊர்வலம் நடத்தப்படுகிறது;

அதில் அமைதியைக் கடைப்பிடிப்பது எவ்வளவு முக்கியமானது என்பதுபற்றி ஒரு சிறிய உரைக்குப் பின்பு ஊர்வலம் நகரத்தொடங்கியது. மக்கள் பயப்பட்டது போல ஆரம்பத்தில் எதுவும் நடவாதது அவர்களுக்கு நிம்மதியைத் தந்தது.

ஊர்வலம் நகர்ந்து பாராளுமன்றத்தை அடைவதற்குச் சற்றுத் தொலைவு இருக்கும்போதுதான் பொலீஸாரின் அந்த அணிவகுப்பு பலருக்குத் தெரிந்தது. அவர்களுக்குச் சுனாமி மலையேறி வந்ததான திகைப்பு. அந்த வியூகம் பாராளுமன்றச் சுரங்கநிலையத்தைத் தாண்டப் பரிபூரணமாகத் தெரிந்தது. ஏன் எதற்கு இந்த வியூகம் என்பது புரியாது பலர் விழித்தனர். அது அவர்களுக்குப் பயம்கலந்த திகைப்பை உண்டுபண்ணியது. ஒரு அமைதியான ஊர்வலத்தின் வழியை மறித்தவண்ணம் எதற்காக இவ்வளவு பொலீஸார் நிற்கிறார்கள் என்பது பலரையும் பயமுறுத்தியது. நடக்கக்கூடாதது நடந்துவிடுமோ என்கின்ற கலக்கம் பலரிடம் தோன்றியது. அமைதியான நாட்டின் மறுமுகம் என்னவென்பது எவருக்கும் தெரியாது. அந்தத் தெரியாத இருட்டுக் குகைக்குள் நுழையப்போவதான அந்தரத்தில் அவர்களுக்கு மூச்சுமுட்டியது.

பொலீஸார் மிகவும் பலமான ஒரு தடையை அவர்கள் போகவேண்டிய வழியை மறித்து உருவாக்கி வைத்திருந்தனர். பொலீஸாரின் அப்படியான வியூகம் அன்று பலரையும் அதிசயப்பட வைத்தது. முதலிற் கிட்டத்தட்ட ஐம்பது பொலீஸார் இறுக்கமான நிரையாக தங்களை ஒருவரும் தாண்டிப் போகாதவாறு பாதையை மறித்தவண்ணம் நின்றார்கள். அடுத்ததாக அவர்களின் பின்னால் இன்னும் ஒரு முப்பது பொலீஸார் இரண்டாவது வேலியாக அங்கே நின்றார்கள். அதைவிட இன்னும் இருபத்திநான்கு பொலீஸார் மூன்றாவது வேலியாக அதற்குப் பின்பு நின்றார்கள். அதைவிட இன்னும் இருபது பொலீஸார் முன்றாவது வேலிக்குப் பின்பு நான்காவது வேலியும் அமைத்து நிரையாகி நின்றனர். அத்தோடும் அவர்கள் வியூகம் முடியவில்லை. அதன்பின்னே பத்துக் குதிரைகள்மீது பொலீஸார் அசைக்கமுடியா, அஞ்சத்தக்க மிருக மதில் கட்டினர். அதன்பின்பும் எட்டுப் பொலீஸ் வான்கள் அங்கே ஒரு சீனச்சுவரை உருவாக்கின. அதைவிட அங்குமிங்குமாகப் பல பொலீஸார் கடமையில் ஈடுபட்டனர். சில பொலீஸார் சிவிலில்

பணியாற்றினர். என்றுமே கண்டிராத மாபெரும் பாதுகாப்பு அரண்கள் அங்கு அமைக்கப்பட்டு, ஊர்வலத்தின் வழி மறிக்கப்பட்டது. அது ஓடிவரும் ஆற்றை மறித்துக் குறுக்கே கட்டிய பேரணையாக மக்கள் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தத் தயாரானது.

பத்துப் பொலீஸார் இடக்கைப் பக்கமாக இருந்த ஒழுங்கைக்குட் கிட்டத்தட்ட இருபது நவநாஜிக்களை மறித்து வைத்திருந்தனர். இந்த இருபது நாஜிகளுக்காகவா இப்படிப்பட்ட பிரமாண்டமான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பது ஊர்வலத்தில் வந்தவர்களுக்குப் புரியவில்லை. இதன் உள்நோக்கம் என்னவென்பது பலருக்கும் திகிலை உண்டுபண்ணியது.

சரித்திரகாலம்தொட்டுச் சுயமாக இயங்கிவந்த பொலீஸ் இப்போது தீவிரவலதுசாரிகளின் கட்டளைப்படி இயங்குகிறது. அதன் எண்ணத்தில் என்ன இருக்கிறது என்பது எவருக்கும் தெரியாது. அந்தத் தெளிவற்ற நிலை அங்கு திகிலாக அடர்ந்து அவர்களை அழுத்தியது. அது கரியமிலவாயுவை மட்டும் சுவாசிக்கும் அந்தரத்தை ஊர்வலத்தில் வந்த மக்களுக்குத் தந்தது.

ஊடகவியலாளருக்கும் இந்தப் பாதுகாப்பு வியூகம் ஐமிச்சமான, அதிசயமான கரிசனை தந்தது. அவர்கள் அந்த வியூகத்தை ஆவணப்படுத்துவதில் மிகவும் அக்கறை கொண்டனர். கூட்டம் பொலீஸின் முதல் வேலியை அடைந்து தனது வேகத்தை முற்றுமாய் இழந்து அணையை மீறமுடியாத வெள்ளமாய் ஸ்தம்பித்து நின்றது. இன்னும் நூறுமீற்றர் சென்றிருந்தால் அது தனது இலக்கை அடைந்திருக்கும். அங்கு அரசியற் கூட்டம் முடிய, இந்த மக்கள் தானாகக் கலைந்து, பெருநகருட் கரைந்துபோய் இருப்பார்கள். நகரம் மீண்டும் தனக்கே உரித்தான அமைதியில் ஆழ்ந்திருக்கும். அந்தச் சுமுகமான நிகழ்வு ஏதோ காரணத்தாற் தடுக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டது.

கூட்டம் ஸ்தம்பித்தவுடன் ஒரு பொலீஸ்காரார் ஒலிபெருக்கியோடு வியூகத்திற்கு முன்னே வந்தார். அப்படி வந்த அதிகாரி “நவநாஜிகளும் இன்று ஊர்வலம் வந்ததால் இங்கே இரு பகுதியையும் ஊர்வலமாகச் செல்ல நாங்கள் அனுமதிதர முடியாமைக்கு வருந்துகிறோம். எனவே இருபகுதியையும் அமைதியாக இங்கிருந்து கலைந்து போகும்படி வேண்டிக் கொள்கிறோம். எந்த வன்முறையிலோ அல்லது பொலீஸ்

அதிகாரிகளை எதிர்ப்பதிலோ தயவு செய்து ஈடுபடவேண்டாமென கேட்டுக்கொள்கிறோம்.” என அறிவித்தார்.

இது அதிதீவிரவலதுசாரி அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பெயரில் பொலீஸால் செய்யப்படும் திட்டமிட்ட செயல் என்பது மெதுவாக பலருக்குப் புலனாகத்தொடங்கியது. இருபது நவநாஜிக்கள் எங்கே? அநியாயாமாகப் பறிக்கப்பட்ட உயிர்களுக்கு நியாயம் கேட்டுப் புறப்பட்ட ஆயிரமாயிரம் மக்கள் எங்கே?

பொலீஸார் இரண்டு தரப்பையும் ஒரே தராசில் போட்டு நிறுத்தார்கள். நீதியற்ற பொய்த்தராசில் இனவாதமும், நிறவாதமும் பளுவாக ஏறிற்று. இப்படியான பொலீஸின் ஈனச்செயல் மக்களுக்கு வேதனை தந்தது. பொலீஸ் மீண்டும் மீண்டும் கலைந்து செல்லுமாறு கூட்டத்திற்கு உத்தரவிட்டது. அந்த இடதுசாரி அரசியல்வாதிகள் பொலீஸாரிடம் நிறைய வாதிட்டுப் பார்த்தார்கள். அதற்கு அவர்கள் இணங்க மறுத்ததுமின்றி உடனடியாகக் கலைந்து செல்லுமாறும் அடிக்கடி கட்டளை பரப்பத் தொடங்கினார்கள். அதையடுத்துச் சில ஊடகவியலாளரும் பொலீஸாரோடு தர்க்கத்தில் ஈடுபட்டார்கள். பொலீஸார் அவர்கள் சொல்வதையும் கேளாது அவர்களையும் அவ்விடத்தைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார்கள். பொலீஸிற்கும் அவர்களை எதிர்த்துக் கதைத்தவர்களுக்குமான சொற்பிரயோகம் வரவரக் கடுமையாகி வந்தது.

இப்படியே இழுபறி தொடர, மக்கள் அசைய மறுத்து அந்தந்த இடத்தில் தெருவில் அமர்ந்தார்கள். அது பொலீஸாருக்கு மிகவும் கோபமூட்டியது. அவர்கள் மீண்டும் மீண்டும் கலைந்து போகுமாறு உத்தரவிட்டார்கள். மக்கள் அதைக் காதிற் போட்டுக்கொள்ளாது தொடர்ந்தும் போகமறுத்து அங்கேயே உட்கார்ந்தனர். இதைப் பார்த்த பொலீஸார் “சிறிது நேரத்திற் கலைந்து போகாவிட்டால் நாங்கள் பலத்தைப் பிரயோகித்து உங்களைக் கலைக்கவும், கைது செய்யவும் நேரிடும்” என எச்சரித்தனர். மக்கள் அதற்கும் பயந்து விடவில்லை. அவர்கள் அப்படியே அசையாது இருந்தார்கள்.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

என்னும் பாரதியின் கவிதையை நினைவுபடுத்தும் வீரத்தோடும் மனவுறுதியோடும் அம்மக்கள் வீதியிற் தொடர்ந்தும் வீற்றிருந்தனர்.

பொலீஸார் பொறுமையை இழந்துனர். அரசு கொடுத்த அதிகாரத்திற் திமிர்த்தனர். நெஞ்சை நிமிர்த்தி நிராயுதபாணிகளோடு யுத்தத்திற்குற் தயாராகினர். எங்கும் அமைதி… பிரளயத்திற்கு முன்பான அமைதி… வன்முறை என்னும் ஆழிப்பெருக்கு விழுங்கப் போகும் பலிகளுக்கான அமைதி. அவலங்களுக்கு முன்னான அந்த அரக்க அமைதி இரக்கமின்றிக் கனத்து நின்றது.

பொலீஸார் திடீரெனச் சில கண்ணீர்ப் புகைக்குண்டுகளை மக்களுக்குள் வீசி எறிந்தார்கள். அதையடுத்துக் குழந்தைகள், பெண்கள், ஆண்கள், வயோதிபரெனப் பலரும் பயத்தில் ஓடத்தொடங்கினார்கள். அதில் பெண்களும், குழந்தைகளும் குரலெடுத்து அழுதவண்ணம் எழுந்து ஓடினார்கள். ஆண்கள் கத்தியவண்ணம் ஓடினார்கள். இந்த அமளியில் சில சிறுபிள்ளைகள், வயோதிபர்கள், ஓடமுடியாதவர்கள் தவறுப்பட்டு மற்றவர்களின் கால்களுக்குள் மிதிபட்டனர்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பொலீஸார் பலரைத் தாக்கினார்கள். குதிரையோடு நின்ற பொலீஸாரும் அந்தத் தாக்குதலில் ஈடுபட்டார்கள். அது இன்னும் கலவரத்தை உண்டுபண்ண, மக்கள் எதையும் பொருட்படுத்தாது சிதறி நாலாபக்கமும் ஓடினார்கள். அந்த அமளியிற் சில குழந்தைகள் பலியாகப் போகும் ஆபத்துப்பற்றி எவராலும் சிந்திக்க முடியவில்லை.

‘ப்ளிற்’சைச் சாரந்தவர்கள் பொலீஸாரைத் திடீரெனக் கற்களாற் தாக்கினர். அதையடுத்துப் பொலீஸார் அதிகமாகக் கண்ணீர்புகைக்குண்டு எறிந்தவிட்டு றப்பர் ரவைகளால் மக்களை நோக்கிச் சுட்டனர். குதிரையில் இருந்த பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள். சில பொலீஸார் கோபத்தில் தமது கைத்துப்பாக்கியாற் சுட்டனர். எங்கும் குழப்பம். இரணம். அவலமான ஓலம். பாலும் தேனும் பாயும் ஒஸ்லோவில் இரத்தவெள்ளம் ஓடும் யதார்த்தம். ‘முங்கி’ன் ஸ்கிறீக் (அலறல்) நாலு திசைகளிலும் ஓயாது ஒலித்த நிஜம்.

அதையடுத்துப் பொலீஸார் சிலரைக் கைதுசெய்தனர். அவர்களிற் சிலருக்குக் காயங்களால் இரத்தம் வழிய வழியத் தெருவிலே படுக்க

வைத்தார்கள். பிளாஸ்ரிக் விலங்கிட்டார்கள். கைதுசெய்த சிலரைப் பொலீஸ் வான்களில் ஏற்றினார்கள். எங்கோ அனுப்பி வைத்தார்கள்.

பாராளுமன்றத்தைச் சுற்றிய பகுதி யுத்தகளமாய் மாறியது. அந்த நவநாஜிக்களை மட்டும் பொலீஸார் எதுவும் செய்யவில்லை. அவர்களைத் தாக்குதல் மும்மரமாக நடக்கும்போது, பாதுகாப்பாக அழைத்துச் சென்று, தூர இடத்திற் பொலீஸார் விட்டுவிட்டார்கள். அரச ஆசிர்வாதமும் அதை நிறைவேற்றும் காவலர்களுமாகிய காலம். அந்த நிகழ்வை அவர்கள் அறியாவண்ணம் சில ஊடகங்கள் கவனமாக ஆவணப்படுத்திக்கொண்டன.

வெளியே நடக்கும் இந்த அமளியைப் பொருட்படுத்தாது, காதிலே வாங்கிக்கொள்ளாது பாராளுமன்றத்தில் அன்று ஊடக அராஜகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தின்மேல் விவாதம் நடந்தது. நோர்வேயின் ஜனநாயகத்தின் அடிக்கற்களில் ஒன்று மக்கள் விழித்திருக்கும்போதே பெயர்த்துச் சூறையாடப்பட்டது. பாராளுமன்றத்திற் பலமற்ற எதிர்க்கட்சிகளின் சொற்கள், வீசப்படும் குப்பைகளாக நிலத்திற் கிடந்து நெளிந்தன. அதை அதிகாரத்தில் இருப்பவர்கள் காலால் மிதித்துச்சென்றனர்.

அன்றிரவே ஊடகங்களில் ஒஸ்லோவில் நடந்த அனர்த்தம் பற்றியும், அதில் நான்கு சிறுவர்களும் ஒரு பெண்ணும் நசிபட்டு மரணம் அடைந்தது பற்றியும், ஐந்துபேர் சுட்டுக்கொல்ப்பட்டதைப் பற்றியும், பலபேர் கைது செய்யப்பட்டதைப் பற்றியும் தகவல்கள் வெளிவந்தன. பொலீஸ், தங்களின் கட்டளையை மீறியதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது எனச் சாதித்தது. இந்தக் கூட்டத்தில் நவநாஜிக்கள் எப்படித் திடீரென வந்து குதித்தார்கள்? அவர்கள் எப்படி, யார் துணையோடு திடீரென மறைந்தார்கள்? அமைதியாக இருந்த மக்கள் மேல் ஏன் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசிக் கலவரத்தைப் பொலீஸார் உண்டு பண்ணினார்கள் என்கின்ற கேள்விகளுக்கு அவர்கள் மழுப்பலாகப் பதில் அளித்தாலும், ஊடகங்கள் இது திட்டமிட்ட அதிகார வெறிச் செயலெனக் குற்றம்சாட்டத் தொடங்கின. அதன் வாயை அடைப்பதுதான் தனது முக்கியமான பணி என்பதைப் புரிந்துகொண்ட அந்தத் தீவிர வலதுசாரி அரசாங்கம் தனது புதிய சட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்தத் தொடங்கியது.

*

அந்தத் தீவிர வலதுசாரி அரசாங்கம் எதிரியின் குரல்வளையை அறுத்துவிட்டாற் கூக்குரல்கள் வெளியேவராது என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தது. ஐரோப்பாவில் மட்டுமல்ல, உலகமெங்கும் பலநாடுகள் ஜனநாயகக் குரல்வளைகளைக் கடித்துக் குதறுவதிற் குறியாகவிருந்தன. ஈசல்களாக வந்து குவியும் வந்தேறுகுடிகளின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு அந்த அரசுகளுக்கு அதீத அமைதி தேவைப்பட்டது. அந்த அமைதி... பயம் கலந்த அமைதியாக, மூச்சுவிடுவதுகூட மற்றைய மனிதனுக்குக் கேட்டுவிடுமோ என்கின்ற அச்சத்தில் நடுங்கும் அமைதியாக, யாரிடம் இருந்தும் எந்தக் கேள்விகளும் எழாத நிலையாக, நினைத்ததைத் தாங்கள் செய்யும் வசதியாக இருக்க வேண்டுமென அவர்கள் எண்ணிச் செயற்பட்டனர்.

ஜனநாயகம் என்கின்ற பெரும்பான்மை அறிந்து செயற்படும் சடங்கை அவர்கள் வெறுத்தார்கள். அந்தச் சடங்கு எதையும் ஒழுங்காகச் செய்யவிடாது, கேள்விகள் கேட்பதில் செயற்பாட்டின் வேரை அறுத்து, பலாபலன்களைச் சிதறடிக்கும் ஒன்றாக இருந்து வருகிறது என்பது அவர்கள் கருத்தாகிற்று. பெரும்பான்மை கிடைத்துவிட்டால், பிறகெதற்குப் பாராளுமன்ற விவாதம் என்பது அவர்கள் எண்ணம். தங்களின் செயற்பாட்டிற்கு ஜனநாயகம் முட்டுக்கட்டை என்கின்றபோது அதைப் பிடுங்கி எறிவதே சரியான வழி என்பதில் அவர்கள் முழு நம்பிக்கை கொண்டார்கள். ஜனநாயகம் என்கின்ற விருட்சத்தின் ஒவ்வொரு வேரையும் வெட்டி, கடைசியாக ஆணிவேரையும் வெட்டி, செத்த மரமாக்கி அதைப் பிடுங்கி எறிவது அவர்கள் திட்டமாகியது.

ஒஸ்லோவில் நடந்து முடிந்த பிரச்சனைக்குப் பின்பு சுதேசிகளுக்கும் வந்தேறு குடிகளுக்குமான இடைவெளி மெல்ல மெல்ல அதிகரிக்கலாயிற்று. அதுவும் முஸ்லீம் மக்கள்மீது சுதேசிகளுக்கு இருந்த வெறுப்புப் பல மடங்காயிற்று. நோர்வே இஸ்லாமிய மயமாக்கப்படுகிறதெனத் தீவிர வலதுசாரிகள் ஏற்கெனவே வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருந்தனர். தாங்கள் பதவிக்கு வந்தால் இஸ்லாமிய மயமாக்கப்படுவதை நிறுத்துவதாகச் சவால் விட்டார்கள். பதவிக்கு வந்ததும் அப்படியான சட்டங்களை அவர்கள் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். முதலில் தாய்நாட்டில் இருந்து மணமகன் அல்லது மணமகளை எடுப்பதற்கு வந்தேறு குடிகளுக்குத் தடைவிதித்தார்கள். பின்பு அந்தச் சட்டத்தைச் சுதேசிகளின் மேலும் பாயவிட்டார்கள். சுதேசிகள் எதிர்த்ததிற்குச் சட்டம் எல்லோருக்கும் பொதுவென நியாயம் கற்பித்தார்கள். அதன்மூலம் ஒரு பகுதி நோர்வே மக்களின் வெறுப்பை வந்தேறுகுடிகள் மீது கூர்மையாக்குவதில்

வெற்றிகண்டார்கள். தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப்படும் பெண்களால் ஏற்படும் இனக்கலப்பால், தங்கள் இனத்தின் சுயம் அழிந்து போவதாய் மறைமுகமாக அதிதீவிர வலதுசாரிகள் பிரச்சாரம் செய்தார்கள். அந்தப் பெண்கள் தனியாகப் போகும்போது சிலர் அவர்களை இழிவாகப் பேசினர். சிலவேளைகளில் வன்முறை பாவித்தனர்.

முன்பு வந்தேறு குடிகளைக் கண்டால் முகமன்கூறிப் புன்னகை புரிந்துசென்ற பெரும்பான்மைச் சுதேசிகள் இப்போது அவர்களைக் காணும்போது நரகத்தைப் பார்ப்பது போல வெறுப்போடு அவதியுற்றனர். சிலர் முகத்தை மறுபக்கம் திருப்பிச் சென்றார்கள். வந்தேறு குடிகளின் முதலாவது பரம்பரையால் இந்தச் செயலைச் சகிக்க முடிந்தாலும், இரண்டாவது பரம்பரையால் அதைச் சகிக்க முடியவில்லை. அவர்களுக்கு இது வியப்பாகவும் கவலையாகவும் இருந்ததோடு ஆத்திரத்தையும் ஊட்டியது. அவர்கள் பிறந்து... வளர்ந்து... ஓடித்திரிந்த பூமியிது. அவர்களால் தாய்நாடென உரிமை கொண்டாடப்பட்ட நாடு இது. இதுவே அவர்களுக்குத் தெரிந்த உலகம். அது இரவோடு இரவாகப் பறிக்கப்பட்டுவிட்டதான கோபத்தில் அவர்கள் துடித்தார்கள். அந்த நிறமான நோர்வேஜியப் பிரஜைகளைச் சுதேசிகள் திடீரென நீங்கள் இனி இந்த நாட்டிற்குத் தேவை இல்லை என்பதுபோல நடத்தத் தொடங்கினார்கள். அது நிறமானவர்களின் ஆத்மாவைக் கொன்றது. அணுப்பிரிவதாக அவர்களிடம் கோபத்தை உண்டுபண்ணியது.

வரலாறு விசித்திரமானது. அது சுழற்சி முறையில் மானிடத்தைத் தரிசிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். யூதர்களை ஐரோப்பாவில் நாஜிகள் வதைத்தார்கள். மௌனமாக அந்த மாபெரும் படுகொலை நடந்து முடிந்தது. அந்தப் பிரமாண்டமான தொழில் மயமாக்கப்பட்ட கொலைத் தொழிற்சாலைகளை இனி வரலாறு காணாமற் போகவேண்டுமென எல்லோரும் ஆசைப்பட்டார்கள். மனிதத்தைக் காக்கும் ஆசைகள் வரலாற்றிற் பலதடவை நிராசை ஆகிற்று. எந்த ஜனநாயகம் உரிமை தருகிறதோ அதே ஜனநாயத்தைப் பெரும்பான்மையுடன் கையில் எடுத்துக்கொண்ட சிலர் மற்றைய மனிதர்களின் அல்லது இனங்களின் குரல்வளையை நசிக்கிறார்கள். நசித்திருக்கிறார்கள். மனிதத்தை, மனிதனை வேட்டையாடியிருக்கிறார்கள். மனிதம் தின்று பதவி காத்திருக்கிறார்கள். இரத்தம் தோய்ந்த கைகளால் இரட்சனை செய்கிறார்கள்.

ஆபிரிக்காவில் இலட்சக் கணக்கில் உயிர்கள் பலியானபோது, ஆசியாவில் ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியானபோது,

காந்திதேசமே அப்பாவிப் பெண்களின் கற்பையும், உயிரையும் சூறையாடியபோது, இந்திய அகிம்சாவாதிகள் வங்கத்தில் பாடம் புகட்டியபோது, பின்பு முள்ளிவாய்க்காலில் அப்பாவிகளின் இரத்தத்தை ஆறாக்கிப் பதிவிரதத்தை நிறைவேற்றியபோது, காஷ்மீரியரைத் தொடர்ந்தும் துவசம் செய்யும் போது, ஐரோப்பாவின் பின்வளவில் ஆயிரம் ஆயிரமாய் உயிர்கள் பறிக்கப்பட்டபோது, கொசவோவைத் தவிர்த்த மற்றவர்களின் குரல்கள் பொருளாதாரக் கூட்டல் கழித்தலில் புறந்தள்ளப்படலாயிற்று. பல இனங்கள் வேண்டாப் பெண்டாட்டியாக... மற்றைய இனங்களோடு சேர்நது வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறது. அந்த இனங்கள் எதிரியுடன் நிர்வாணமாகப் படுக்கையைப் பகிர்வதான அவஸ்தையில் நெளிகின்றன. தாங்கொணாச் சித்திரவதைப்படுகின்றன. அங்கே மனிதம் தூக்கிலிடப்பட்டு, ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினருக்கு அடிமையாகச் சேவகம் செய்துவருகிறது.

ஒரு காலத்தில் நாஜிக்களால் வதைபட்ட யூதர்கள் இன்று முஸ்லீம்களைப் பலஸ்தீனத்தில் வதைக்கிறார்கள். அதே முஸ்லீம்கள் மத்தியகிழக்கில் வேலைக்குச் செல்லும் ஆசியரை வதைக்கிறார்கள். வெள்ளையரிடம் இந்தியா ஒருகாலத்தில் கையேந்தி நின்றது. அதே இந்தியா பின்பு தன்னைச் சுற்றியிருந்த அயல்நாடுகளில், தனது நாட்டிற்குள் எனப் பரவலாக ஈவிரக்கமின்றி மகாத்மாவை மறந்து மனிதத்தை வேட்டையாடுகிறது. அகிம்சையில் பிறந்தநாடு பின்பு பாவப்பட்டவர்களின் இரத்தத்தில் கொழுக்கிறது. அகிம்சை தின்கிறது. அதர்மம் பேசுகிறது.

சுழற்சிமுறையில் மனிதத்தை மறக்கும் மனிதர்களால் மனிதம் தொடர்ந்து இன்னற்ப்பட்டுத் துடிக்கிறது. ஒருகாலத்தில் மனிதம் பறிபோவதாய் ஒப்பாரிவைத்தவர்கள் அவர்கள் முறைவந்தபோது மற்றவர்களை எட்டிமிதிக்கிறார்கள். மனிதத்தைச் சூறையாடினர். மொழி பேசும் மிருகங்களிடம் மனிதத்தை எதிர்பார்ப்பதா என்பதில் மனிதம் நிரந்தரமாய்த் தலைகுனிந்து வெட்கிற்று.

மனிதனாய்ப் பூமியில் அவதரித்த அனைத்து மனிதமிருகங்களும் மனிதத்திற்காய் வாழ்ந்ததாய் வரலாறு கிடையாது. தமது நலனுக்காய் அதை நசிக்க யாரும் பின்னின்றதும் இல்லை. அந்த வரலாறு எப்போதும் முற்றுப்புள்ளி காணாது, தொடர்கிறது. அது காந்தியின் நாடாக இருந்தால் என்ன, கௌதமபுத்தரின் நாடாக இருந்தால் என்ன, பிதாசுதன் பிறந்த இடமாய் இருந்தால் என்ன, அல்லா அவதரித்த பூமியானால் என்ன அதற்கு விதி விலக்கு இருப்பதில்லை. அந்த மகான்கள் அகிம்சையை எவ்வளவு போதித்தார்களோ அதற்கு நேரெதிராய் அவர்களது வாரிசுகள்

நடைபயிலுகின்றனர். எந்தக் குற்ற உணர்வும் இல்லாது தொடர்ந்தும் அது நடைபெறுகிறது. நியாயப்படுத்தப் படுகிறது.

ஐரோப்பாவில் வேலை பெற்றுக்கொள்வதற்கான போட்டியில் முதலில் வெளிநாட்டுப் பெயருடையவருக்கான கதவுகள் மூடப்பட்டிருந்தன. முதலாவது பரம்பரையைச் சார்ந்தவர்கள் அந்தக் கொடுமையை நீண்டகாலம் அனுபவித்து வந்தார்கள். பின்பு அது மெதுமெதுவாக இரண்டாவது பரம்பரைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. தங்களை இந்நாட்டு மன்னர்களென எண்ணி வாழ்ந்தவர்களுக்கு அது உச்சந்தலை அடியாகியது.

வெறுப்பின், இனவெறியின் கோரப்பிடி அத்தோடு நின்றுவிடவில்லை. சமுதாய நிகழ்ச்சிகளிற் பாகுபாடு காட்டப்பட்டது. பல இடங்களுக்குப் போக, எழுதாத தடை விதிக்கப்பட்டது. தோலின் நிறம் மறைக்கமுடியாத அடையாளமானதாய்ப் பலர் அவஸ்தைப்பட்டார்கள். உயிரியலின் இசைவாக்கத்தை ஊனக்கண்ணாற் பார்ப்பதில் அறிவிலிகளுக்கு ஆயிரம் தடுமாற்றங்கள். தங்களின் ஆதாயத்திற்காய்ப் பாவப்பட்டவர்களைக் கண்டுபிடித்து, அதன்மூலம் ஆதாயம் தேடும் குரூரங்கள் தொடர்ந்தன. எதையும் ஆழச் சிந்திக்காமல் இந்தப் பிரச்சாரத்தை நம்பும் பெரும்பான்மை அப்பாவிகள் பரிதாபத்திற்கு உரிய வன்முறையாளராகினர். அவர்கள் மூளையை நச்சு எண்ணங்கள் மேயத் தொடங்கின. இவையனைத்தின் மொத்த வடிவமாகத் தற்போது ஐரோப்பா உருமாறிற்று. அங்கு ஜனநாயகம் திருட்டுப்போவது தெரியாது குருட்டுத்தனமாய்த் தோலையும், முக்காட்டையும் பார்த்தார்கள். முக்காடு அணிபவர்களிற் சிலரும் விட்டுக்கொடுப்பை மறந்தனர்.

# 4

## 4.1 ஏதென்ஸ் பலியெடுப்பு

திரி கிரேக்கத்தைப் பற்றிப் பாடசாலையில் படித்ததில், அந்த நாட்டைப்பற்றி நிறைய விடயங்கள் அறிந்து வைத்திருந்தாள். நோர்வே மக்களின் விடுமுறைக்கான சொர்க்கங்களில் முதன்மையான நாடுகளில் அதுவும் ஒன்றாகும். அந்த வருடம் விடுப்பிற்கு ஏதென்சில்

தற்போது நடப்பது உண்மைதானா என்பதைப் பார்த்து வரவேண்டுமென அவள் விக்னேசை அரித்தாள். எங்கள் இருப்பே கேள்விக்குறியான நேரம், மற்றவர் இருப்புப் பற்றிக் கதைக்கும் பலம் எமக்கு இல்லையென விக்னேஸ் வாதாடினாலும் திரி விடுவதாய் இல்லை. அவள் அந்த வருடம் விடுமுறைக்கு அங்கு செல்ல வேண்டுமென அடம்பிடித்தாள். விக்னேஸ் வேறு வழியின்றி அவளுடன் புறப்பட்டான்.

திரியின் கனவில் இருந்த புராதன ஏதென்ஸ் எப்போதோ சிதைக்கப்பட்டு முகமிழந்து அகோரமாய்ப் போயிற்று. சரித்திர காலத்தில் இருந்து கிறிஸ்தவ கலாசாரத்தின், ஜனநாயகத்தின், நவீன அறிவியலின் பிறப்பிடமாய்ப் பெருமை கொண்டிருந்த நகரத்தின் புகழை மெல்ல வன்முறை, இனவெறி, வெறுப்பு ஆகியன எரிகுழம்பாகத் தின்னத் தொடங்கின. அந்த நகரத்தின் பவளங்களாக வர்ணிக்கப்பட்ட பூங்காவனங்கள் அசிங்கத்தை அரங்கேற்றும் இடங்களாக மாறின.

காலம் அண்டத்தில் அசைவுகளுக்கு கட்டுப்பட்டதாயினும் பூமியில் மாற்றத்திற்கு வாழ்க்கைப்பட்டது. ஆசியாவிலிருந்து வருகின்ற வந்தேறு குடிகளின் படையெடுப்பு ஐரோப்பாவைக் கதிகலங்க வைத்தது. தனக்குத் தனக்கு என்னும் போது சுளகு படக்கு படக்கு என்குமாம் என்பது சரியாகிற்று. ஐரோப்பாவின் வளங்களிற் பிச்சைக்கார நாட்டான் எல்லாம் பங்கு போடுவதா என்கின்ற கோபம் ஒருசாரார் மனதில் ஆவேசமாய் உருப்பெற்றது. அதிதீவிர வலதுசாரிகளும், அதற்கும் அப்பாற்பட்டவர்களும் இதற்குத் தாங்கள்தான் விடைகாண வேண்டும் என்பதாய் வன்முறையைக் கையில் எடுத்துக்கொண்டார்கள்.

அகதிகளின் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள்ளான படையெடுப்பின் வாயிலாகக் கிரேக்கம் விளங்கியது. அது கிரேக்க நாட்டினருக்கு அந்த நிறமான வந்தேறுகுடிகள்மேல் அதிக வெறுப்பை உண்டுபண்ணியது. வந்தேறுகுடிகளை நாட்டிற்குள் வராது தடுப்பதே அவர்களின் பெரும் போராட்டமாகியது. எவ்வாறு போராடியும் அவர்கள் நாட்டிற்குள் வருவதைத் தடுக்கமுடியவில்லை. அவர்கள்மேல் உண்டாகும் பெறுப்பையும் தணிக்க முடியவில்லை.

தங்கள் உயிரைப் பணயம் வைத்து நோர்வேக்குள் வரும் வந்தேறுகுடிகளை வந்த கையோடு அதே கிரேக்கத்துக்கு நோர்வே திருப்பி அனுப்பியது. அதுவும் அதிதீவிர வலதுசாரிகள் பதவிக்கு வந்தபின்பு எந்தவித கூச்சமும் இல்லாது அதைச் செய்தார்கள்.

அதற்குப் பக்கபலமாக அவர்களுக்குச் சட்டம் துணையாக நின்றது. வருபவர்களின் கைரேகை இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குட் பரிசோதிக்கப்பட்டு, அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்தந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள். 'டப்ளின் ஒப்பந்தம்' அசைக்க முடியாத பலத்தை அதற்குக் கொடுத்தது. அதன்படி எந்த நாட்டில் ஒருவர் வந்து முதலில் இறங்குகிறாரோ, அதே நாட்டில் அவர் அகதி அந்தஸ்துக் கோர வேண்டும். நோர்வே அகதிகளை ஒருபக்கத்தாற் திருப்பிக் கிரேக்கத்திற்கு அனுப்பிவிட்டு, மறுபக்கத்தால், தனது பொலீசை அனுப்பி எப்படி அகதிகள் வரவைக் கட்டுப்படுத்தலாம் என்பதுபற்றிக் கிரேக்கத்திற்கு அறிவுரை வழங்கியது. அகதிகள் பிரச்சனையை ஐரோப்பா ஒன்றிணைந்து பங்கீடு செய்வதன் மூலமாகத் தீர்த்து வைக்க வேண்டும். அதைச் சில எல்லை நாடுகளிடம் ஒப்படைத்துவிட்டுப் பணக்கார மேற்கு ஐரோப்பிய நாடுகள் வசதியாகக் கண்ணை மூடிக்கொண்டன. அந்தச் செயல் பணக்கார நாடுகள் தப்பித்துக்கொள்வதான தந்திரமாய் அமைந்தது. எல்லை நாடுகள் குமுறின. ஒன்றியத்தை விட்டு விலகமுடியாத ஏழ்மை அவர்களை வலைப்படுத்தியது. தங்கள் சுகத்திற் கைவையாதே என்கின்ற சுயநலமே எப்போதும் பணக்கார நாடுகளின் தாரக மந்திரமாயிற்று. அதைக் காக்கும் அவர்களின் அதியுன்னத இராஜதந்திரத்திற் தோல்வி வந்ததில்லை.

லஞ்சம், ஊழல் அதிகம் நிறைந்த ஐரோப்பிய நாடான கிரேக்கத்தில், பணம் எங்கே போகிறது என்கின்ற பாதை புரியவில்லை. இளவயதில் ஓய்வூதியம் அளித்தல், அதீதமாக உதவிநிதி கொடுத்தல் என்பன அதன் பொருளாதாரத்தை எப்போதும் நலிவுறப்பண்ணின.

இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின்பு, தடுப்புமுகாங்கள் அமைத்து, நாசிகளின் திட்டத்தின்படி அடைத்துவைத்தது போல, அகதிகளாய் வந்தவர்களை அடைத்து வைத்த சம்பவங்கள் புதிய ஐரோப்பாவில் யதார்த்தமாயிற்று. ஐரோப்பிய நாடு ஒன்றில் மனிதர்கள் வாழத் தகுதியற்ற பெரிய கைவிடப்பட்ட களஞ்சியங்களில் மக்களை மந்தைகள் போன்று அடைத்து வைத்தனர். அவர்களுக்கு மலிவாகத் தயாரிக்கப்பட்ட புறோட்டின் பிஸ்கற்களை மட்டும் உணவாகக் கொடுத்தார்கள். மறுபகுதி அகதிகளுக்கு, எந்த உதவியும் கொடுக்காது தெருவில் விட்டார்கள். அதை முதலிற் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட நாடு கிரேக்கமாகும். அதன் பின்பே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அணுவாயுத யுத்தம் தொடங்கியது. அது கோடிக் கணக்கில் இந்திய உபகண்ட மக்களை ஐரோப்பா நோக்கிப் படையெடுக்க வைத்தது.

**அங்கொன்றும் இங்கொன்றுமாய் வரும்போதே அகதிகள் என்று சலித்தவர்கள் அணுவாயுத அனர்த்தத்தால் ஐரோப்பாவை நோக்கி அலையலையாக மக்கள் வந்தால் எப்படி மாறுவர்?**

இந்தக் கொடுமை போதாது என்பதாகப் பூங்காவனங்களிற் தங்கியிருந்த அகதிகளை ஏதென்ஸ்வாசிகள் இரவு வேளைகளிற் தாக்கி, அங்கே தூங்காத வண்ணம் கலைத்ததோடு, சிலரை அவ்வப்போது கொலையும் செய்து வந்தார்கள். அதிகார வர்க்கமும் அதற்கு நன்கு துணைபோயிற்று. பொலீஸ் ஏதென்வாசிகள் முறைப்பாடு செய்தவுடன் அகதிகளை மட்டும் கைதுசெய்தார்கள். அகதிகளான சிறுவர்களைக்கூட மனிதாபிமானம் இல்லாது கைதுசெய்து சென்றார்கள். அப்படி நடந்த கைதுகளின் போது தாய் தந்தையரிடம் இருந்து சிறார்கள் கேட்டுக் கேள்வி இல்லாது மனிதநேயத்திற்கு எதிராகப் பிரிக்கப் பட்டார்கள். சில இடங்களில் அகதிகள் சேரிகள் போன்ற இடங்களில் கடதாசி மட்டைகளாற் செய்யப்பட்ட வீடுகளில் வசித்து வந்தார்கள். அதையும் அரச இயந்திரம் அழித்தொழித்து அந்த அகதிகளை இருப்பிடம் இல்லாது அலைய விட்டது. பின்பு பூங்காவனங்களிற் தங்கியவர்களை மீண்டும் மீண்டும் அடித்துக் கலைத்தார்கள்.

குழந்தைகளோடு கிரேக்கத்துக்கு வந்தவர்கள் மடியில் நெருப்பைக் கட்டியதான அவஸ்தைக்கு உள்ளானார்கள். அவர்கள் சிலவேளைகளிற் பூங்காக்களிலும், திறந்த வெளிகளிலும் தமது இரவைக் கழிக்கவேண்டி வந்தது. அப்படியான நேரங்களில் அவர்களது பிள்ளைகளைச் சிலர் கடத்தித் துஷ்பிரயோகம் செய்வதற்கு முயற்சி செய்தனர். எங்கும் அதைப்பற்றி முறையிடமுடியாத, எந்த உரிமையுமற்ற நவீன ஐரோப்பாவின் அடிமைகளாக அவர்கள் போக்கிடம் இல்லாது அலைந்து திரிந்தனர்.

ஆயிரமாயிரமாக மக்கள் அகதிவிண்ணப்பங்களோடு காவல் நிலையங்களுக்கு முன்பு காத்திருந்தனர். அவர்கள் காத்திருப்பிற்குக் கிடைத்த கரிசனை மிகவும் அற்பமானது. இருபது அகதிகளின் விண்ணப்பங்கள் மட்டுமே ஒருநாளிற் பரிசிலிக்க ஏற்றுக்கொள்ளப்படுவதான எழுதாத சட்டம் நடைமுறையாகிற்று. வதைப்பதன் மூலம் அகதிகளைக் கட்டுப்படுத்தும் தந்திரமாக இது கிரேக்கத்திற் கையாளப்பட்டு வந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்குள்ளேயே நாற்றம் எடுக்கத் தொடங்கிய அகதி அரசியலை அதிகாரவர்க்கம் கம்பளத்தின் கீழ் கூட்டித்தள்ளி மறைத்தது. மீண்டும் மீண்டும் வரலாற்றின் துர்நாற்றங்கள் ஐரோப்பாவில் வீசுவதை அவர்களாற் தடுக்கமுடியவில்லை.

துருக்கியையும், கிரேக்கத்தையும் “எவ்ரோஸ்” நதி சண்டைபோட்டுக் கொள்ளாதீர்கள் என்பதாகப் பிரித்து நின்றது. ஆசியா, ஆபிரிக்கா, மத்தியகிழக்குப் போன்ற இடங்களிலிருந்து துருக்கி வழியாக வரும் அகதிகள் இந்த நதியைக் கடந்தால்தான் கிரேக்கத்திற் காலடியெடுத்து வைக்கலாம். அப்படி அவர்கள் அந்த நதியைக் கடந்துவிட்டால் அது ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் வலதுகால் வைத்ததாக அமையும். வேட்டையாடப்படும் மிருகங்களைப்போல அகதிகளைக் கிரேக்கமும், துருக்கியும் விரட்டின. அந்த அவசரத்தில் “எவ்ரோஸ்” நதியைக் கடக்க முயன்று, அந்த நதிக்குத் தங்கள் உயிரைப் பலியாக்குபவர் தொகை பெருகியது. ஆயிரம் கனவுகளோடு வந்து அப்படிப் பலியாகும் அப்பாவிகளைப் பெரிய கிடங்குகள் வெட்டி அதற்குள் கூட்டாகப் புதைத்தார்கள். அனாதை அகதிகளுக்கு இறுதிவணக்கம்கூட எதற்கு என்கின்ற நிலை அந்த நாடுகளில் உண்டாகியது. அனாதைப் பிணங்களின் பாரிய புதைகுழி “எவ்ரோஸ்” நதியின் கரையோரம் பெருகுவது புதியதொரு வரலாறாகியது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த அணுவாயுத யுத்தத்தின் பின்பு அலையலையாகத் திடீரென அகதிகள் கிரேக்கத்திற்கு வந்தார்கள். அந்தத் திடீர் வரவால் கிரேக்கத்தின் முகம் முற்றுமாய் விகாரம் எய்திற்று. அவர்கள் பிரம்மாண்டமான அளவில் தடுப்பு முகாங்களை அமைத்து, அதற்குள் அகதிகளாய் வருபவர்களை அடைக்கத் தொடங்கினார்கள். அதிற் பல அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டன. நாஜிகள் போல மக்களை மிகவும் நெருக்கமாக அடைத்து வைத்ததால் அவர்களுக்குத் தொற்று வியாதிகள் பரவத் தொடங்கின. சில குறிப்பிட்ட செயற்கையாகச் செய்யப்பட்ட உணவுவகைகள் மாத்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அதிற் சுவையோ வாசனையோ இருக்க வேண்டும் என்பது பற்றி யாரும் கவலைப்படவில்லை. கலோரிகளின் கணிப்பு மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டது. அது மனிதர்கள் நிறை குறைந்து, எலும்பும் தோலும் ஆகாதவகையிற் பாதுகாத்துக்கொள்ளும். அதைச் சாப்பிடுபவர்கள் மனிதர்கள் என்கின்ற கரிசனை சிறிதும் காட்டப்படவில்லை. ஏற்கெனவே பரிசோதித்தவை இப்போது கிரேக்கத்திற்குக் கைகொடுத்தன.

கதிர்வீச்சிற்கு ஆளாகியதால் நிரந்தரப் புண்களோடு அகதிகள் வந்தார்கள். அவர்களை நெருக்கமான அந்த முகாங்களில் அடைத்து வைத்ததால் உண்டான துர்நாற்றத்தைத் சகிக்க முடியவில்லை. சுகாதாரச் சீர்கேட்டினால் நோய்கள் அவர்களை இலகுவாகத் தாக்கின. கதிர்வீச்சாற் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித மருத்துவ உதவிகளும் செய்யப்படாது போக அவர்கள் விரைவில் தங்களது

மூச்சை விட்டார்கள். அந்தத் தடுப்பு முகாங்கள் விரைவில் பிணங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆகின. அது மனிதம் கொலை செய்யப்படுகின்ற கோரமுகத்தை மனிதகுலம் தொடர்ந்தும் மறவாது, மாறாது, கொடூர விலங்கென்பதைக் கோலத்தால் மட்டும் மறைத்து வந்திருக்கிறது என்பதை உறுதி செய்தது. எத்தனைமுறை வரலாறுகளை மனிதன் படித்தாலும், அதை அவ்வப்போது தனது வசதிக்கு ஏற்ப அவன் மறந்து விடுகிறான். மீண்டும் புதிய வரலாறுகள் மூலம் பழைய புண்களைக் கிண்டும் குரூரம் செய்கிறான். அதன் இரணம் அப்பாவி மனிதர்களுக்குப் பரிசாக்கப்படுகிறது.

*

ஏதென்சுக்குப் போவது தங்களுக்குத் தற்போது பாதுகாப்பு இல்லையென விக்னேஸ் இழுத்தடித்தாலும், திரி விடாப்பிடியாக அவனையும் அழைத்துக்கொண்டு அங்கு சென்றாள். பணத்தைக் கொடுத்தால் விலைக்கு வாங்கப்படும் வசதிகளைக் கொள்முதல் செய்வதில் அவர்களுக்கு எந்தவிதப் பிரச்சனையும் தற்போதும் இருக்கவில்லை. வருமானம் வருகின்ற தொழில்களில் கிரேக்கர்கள் எந்தவிதப் பாகுபாடும் காட்ட விரும்பவில்லை. வெளியே நடக்கும் அவலங்கள் நட்சத்திர விடுதிகளுக்கு உள்ளே தெரியவருவதும் இல்லை. அது தனி அண்டங்களாகக் கவலையின்றிப் பூமிப்பந்தில் சஞ்சரிக்கும். அங்கே கூத்தும்... ஆட்டமும்... பஞ்சமில்லாச் சிரிப்பும்... அறுசுவை உணவும், மதுவுமாக களியாட்டம் நீண்டு செல்லும் இரவுகளை உற்பத்திசெய்யும்.

ஏதென்ஸ் தனது பெருமைகளைத் துறந்து, மனிதம் மறந்து, மானிடம் மன்னிக்கமுடியாத கொடுமைகளிடம், மண்டியிட்டுக் கிடந்தது. கிரேக்கத்தை மட்டும் தனியாக அகதிகளைக் கையாளவிட்ட செயல் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நாவில் இருந்துவரும் சொற்களுக்கும் அவை போடும் வேடத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை நிருபித்தது.

பொறுப்பில்லாது ஓர் அணுவாயுத யுத்தத்தைத் தொடங்கமுதல் இதன் விளைவுபற்றி ஆழமாக இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் சிந்திக்கவில்லை. காந்திதேசத்தின் புதிய அரசியல்வாதிகள் காந்தியின் அகிம்சை, போற்றப்பட வேண்டிய மனிதம் என்பன பற்றிச் சிந்திப்பதை வெறுத்தனர். உலகம் ஓடுகின்ற ஓட்டத்தில்

அவையெல்லாம் இற்றுப் போன தத்துவங்கள் என்பதே அவர்கள் முடிவாகிவிட்டது. பதவியும் அத்தால் விளையும் பணமும் உலகத்தின் சொர்க்கவாசல்களைத் திறந்து வைக்கின்றன. அதை அவர்கள் முழுமையாக நம்பினார்கள். அதற்காக எதுவும் செய்வதற்கு அவர்கள் துணிந்தார்கள்.

கிரேக்கத்திற்குத் தற்போது வருபவர்கள் தடுப்பு முகாங்களுக்கு நேரடியாக அனுப்பப் பட்டாலும், ஒரு குறிப்பிட்ட தொகையினர் இன்னும் ஆங்காங்கே சில பூங்காக்களிலும், சேரிகள் போன்ற இடங்களிலும் வசித்து வந்தார்கள். இந்த நாட்களிலும் தொடர்ந்தும் அகதிகளுக்கான விண்ணப்பம் கொடுக்க முயற்சிப்பவர்களும் தங்களது முயற்சியிற் சளைக்காமல் அதைத் தொடர்ந்தார்கள். இந்தவிதமான காட்சிகளைக் கிரேக்கத்தின் அதிதீவிர வலதுசாரிகள் முற்றுமாய் வெறுத்தார்கள். தங்கள் நகரங்களை நாறடிக்கும் இந்த அகதிக்கூட்டங்களுக்கு முறையான பாடம் ஒன்று படிப்பிக்கவேண்டும் என்பதாக அவர்கள் திட்டமிட்டார்கள்.

திரி மிகவும் பிரயத்தனப்பட்டுப் “பெத்றோ றலி” பொலீஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள விடுதியொன்றில் தங்குவதற்கு இடம் பிடித்தாள். விமானத்தால் இறங்கி விடுதிக்குச் சென்றபோது அந்த மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. விடுதியின் பல்கணியில் நின்று பார்க்கப் “பெத்றோ றலி” பொலீஸ் நிலையம் முழுமையாகத் தெரிந்தமை அவளைப் புளகாங்கிதம் அடைய வைத்தது. ஏதென்சுக்கு வந்து “ஆக்கிறோபொலீஸ்” போய்ப்பார்த்த காலம் இப்போது மலையேறிவிட்டது. இந்நாளில் இங்கே இப்படியும் நடக்கிறதா என்கின்ற ஆராய்ச்சியில் இளம் தலைமுறை ஈடுபடத்தொடங்கியது.

உறக்கத்தை இறுகத்தழுவிய அதிகாலை நேரம் அது. அதன் சுகத்தையும் அமைதியையும் துவம்சம் செய்வதாக அலாம் அடித்தது. அது அப்பா மகள் இருவரையும் உறக்கத்தில் இருந்து எழுப்பியது. விடுமுறைக்கு வந்த இடத்தில் திரி செய்யும் கூத்து விக்னேசுக்குச் சலிப்பைத் தந்தது. இருந்தும், அவள் மனம் கோணக்கூடாது என்பதற்காய்ப் பேசாது சமாளித்தான். திரி விக்னேசை எழுப்பித் தன்னோடு பல்கணிக்கு வருமாறு அழைத்தாள். விக்னேசுக்கு இது சற்றும் பிடிக்காவிட்டாலும் மகளின் ஆக்கினைக்காகப் புறப்பட்டு வெளியே சென்றான். ஐரோப்பாவின் அதிகாலைக்குளிர் மேனியைச் சில்லிடப் பண்ணியது.

நோர்வேயில் இருந்து ஏதென்ஸ் வரும்போது ஒரு வீடியோக் கமராவையும், ஒரு தொலை நோக்கியையும் திரி கவனமாக எடுத்து

வந்தாள். அவளிடம் துப்பறியும் ஆவலும் பரபரப்பும் மிதமிஞ்சி வழிந்தன. அந்த ஆவலும் பரபரப்பும் சிக்கலில் மாட்டிவிடுமோ என்கின்ற தவிப்பில் விக்னேஸ் தவித்தான். கிரேக்கர்கள் இப்போது பழைய கிரேக்கர்களாக இல்லை. அவர்கள் சட்டத்திற்குக் கொடுத்த மதிப்பும் மிகவும் தாழ்ந்து போயிற்று. தங்களைப்பற்றித் தப்பாக ஆதாரப்படுத்தப் போகிறார்கள் என்றால் என்ன விலைகொடுத்தும் அதை அழிப்பதற்கு அவர்கள் துணிவார்கள். அதற்குக் கிரேக்கர்கள் ஒன்றும் சளைத்தவர்களாய் இருக்கமாட்டார்கள் என்பது விக்னேசின் கணிப்பு. வருங்கால, நிகழ்கால ஆபத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வது மனிதனின் அடிப்படைக் குணம். கிரேக்கர்களுக்கும் அது பொருந்துமென அவன் எண்ணினான்.

திரி தனது தொலைநோக்கியால் “பெத்றோ றலி” பொலீஸ் நிலையத்திற்கு முன்பு எவ்வளவு மக்கள் கூடியிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும் பார்த்தாள். நிறைய ஆண்கள், பெண்கள், குழந்தைகளென நீட்டிற்கு அவர்கள் வரிசை நெளிந்து நெளிந்து முடிவில்லாது தொடர்ந்தது. அப்படித் தொடர்ந்த வரிசை வாசுகி வாலாக இருட்டிற் கண்ணிற்குப் புலப்படாது மறைந்தது. பொலீஸ் நிலையம் திறப்பதற்கு இன்னும் அதிக நேரம் இருந்தது. இருளும் குளிரும் தொடர்ந்தும் தமது பிடியை விடாது அடம்பிடித்தன. உடல் இழக்கும் வெப்பத்தை உற்பத்தி செய்யக் கிடுகிடுத்தது. சூரியனின் தென்துருவப் பயணம் இன்னும் முடியாத அவஸ்தை தொடர்ந்தது.

கிரேக்கத்தில் அகதிகளைக் கையாளும் முறை மிகவும் கவலைக்கு உரியதாகிற்று. பொலீஸாரின் கைகளில் அகதிகளுக்கான முடிவை எடுக்கும் எல்லா அதிகாரத்தையும் அந்தநாடு வழங்கிவிட்டது. அது தனிமனிதர்களின் கையிற் பலரது வாழ்வை ஒப்படைத்ததோடு, அகதிகளின் மனித உரிமைகளை மறுப்பதற்கான திறவுகோலாய் அமைந்திற்று. நடைமுறையில் கிரேக்கத்தில் இருந்த அகதிகள் எந்தவித உரிமையும் இல்லாது, மிருகங்களைவிடக் கேவலமான நிலையில் வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தெருவில் நடத்தப்படும் அந்த வாழ்க்கைக்குக்கூடத் தண்டனை தரப்படும் காலமாக மாறிப்போயிற்று. இந்தக் கொடுமைகள் சிறிது சிறிதாக வெளியே கசியத் தொடங்கியது. அது இப்போது அப்பட்டமாய் நிரூபணமாகியது. அதன் தாக்கம் கிரேக்கத்தின்பால் அனுதாபத்தை வரவழைப்பதற்குப் பதிலாய், கதிர்வீச்சுப் போன்ற கோபத்தை ஐரோப்பாவில் வாழும் வந்தேறு குடிகளுக்கும், மனச்சாட்சி உள்ள ஒருபகுதி சுதேசிகளுக்கும், அக்கறையுள்ள இடதுசாரிகளுக்கும், காருண்யமுள்ள மதவாதிகளுக்கும் உண்டு

பண்ணியது. அவர்கள் நினைவுகள் என்றும் புதைக்க முடியாத வரலாறுகளை அடிக்கடி வேதனையுடன் தடவிப் பார்த்துக்கொண்டன.

திரி தொலைக்காட்டியை வைத்த கையோடு தனது வீடியோக்கமராவை எடுத்துக் காவல் நிலையத்திற்கு முன்பு நின்ற மக்களைப் படம்பிடித்தாள். விக்னேசுக்குத் தெருவில் போகும் ஓணானை எடுத்து மடியில் வைத்துக்கொண்டதான அவஸ்தையாகியது. மக்களின் நிலையும் பரபரப்பும் அவனுக்கு மிகவும் அச்சத்தைத் தந்தன. நிறமான வந்தேறுகுடிகள் இரண்டாம்தரப் பிரசைகளாக மிகவும் வேறுபடுத்தி நடத்தப்படும் நிலைக்கு உலக மாற்றம் நோர்வேயைச் சட்டென இட்டுச் சென்றது. கிரேக்கம் ஐரோப்பிய நாடாக இருந்தாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளோடு ஒப்பிடும் போது வறியதொரு நாடாகும். அதற்குச் சுமைகூடும் போது அது கற்காலத்தின் தீர்வுகளை முன்நிறுத்துகிறது. நாங்கள் அதற்கு என்ன செய்ய முடியுமென எண்ணிய விக்னேசிற்குக் குளிரில் அங்கு தொடர்ந்து நிற்க அலுப்படித்தது. அவன் மீண்டும் சூட்டை நாடி அறைக்குட் சென்றுவிட்டான்.

திரி அவர்களைச் சிறிது நேரம் வீடியோப் பிடித்தாள். பின்பு இது போதுமென எண்ணிய போது வாகனம் ஒன்று மிகவும் வேகமாக அந்தப் பக்கத்தை நோக்கி வந்தது. திரிக்கு ஏனோ அந்த வாகனத்தைப் பார்க்கத் தன்னை அறியாமல் ஒருவித ஐயம் எழுந்தது. அந்த வாகனம் ஏனோ சீற்றத்தோடு அதிவேகமாகச் சீறிப்பாய்ந்து வந்தது.

திரி வாகனத்தையும் அதில் இருந்தவர்களையும் கிட்டவாக "ஃபோகஸ்" பண்ணி வீடியோப் பிடிக்கத் தொடங்கினாள். ஒரு கணம் அவளால் அதை நம்ப முடியவில்லை. மீண்டும் அவசர அவசரமாக அவள் அதை "ஃபோகஸ்" பண்ணிப் பார்த்தாள். சந்தேகமே இல்லை. அவை இயந்திரத் துப்பாக்கிகளே என்பதை அவள் முடிவு செய்துகொண்டாள்.

திரியால் அதிக நேரம் சிந்திக்க முடியவில்லை. மெதுவாக முட்டுக் காலில் இருந்து தொடர்ந்தும் அந்த வாகனத்தைப் படம்பிடித்தாள். அவள் எதிர்பார்த்த அவலம் அங்கு நடந்தது. வாகனத்தில் வந்தவர்கள் அங்கு நின்றவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். நான்கு இயந்திரத் துப்பாக்கிகளாற் தங்களது படுகொலையை அவர்கள் அரங்கேற்றினார்கள். திரி மிகவும் தாழ்வாகத் தன் தலையைப் பதித்துக்கொண்டாள்.

துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவர்கள் குருவிகள் போல் நிலத்தில் விழுந்தார்கள்; அட்டையாகச் சுருண்டு வேதனையோடு துடித்து உயிரைவிட்டார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோருமே குறிவைக்கப்பட்டார்கள். அவர்கள் எந்தப் பெறுமதியும் அற்ற விலங்குகள் போலச் சுட்டு விழுத்தப்பட்டார்கள். அவர்களின் அவல ஓலம் பிரபஞ்சத்தின் மூலைகள் தேடிச்சென்றது. இரத்தம் தெருவை நனைத்தது. மனிதம் ஏதென்ஸ் தெருக்களில் அவலமாக மீண்டும் மீண்டும் மரித்துப்போனது. அதைத் திரியால் சில கணங்கள் நம்பமுடியாவில்லை. அவளுக்கு வயிற்றைப் புரட்டிச் சத்தி வரும்போலத் தோன்றியது. கைகள் குளிராக வியர்த்தன. அவள் திறந்த சோடாவாகத் தொடர்ந்து கொட்டாவி கொட்டாவியாக விட்டாள். அந்த வாகனம் அகதிகளைச் சுட்டுத்தள்ளிய பின்பு வேகமாக மறைந்து போய்விட்டது.

சூட்டுச் சத்தம் கேட்டுப் பரபரப்பாக விக்னேஸ் வெளியே ஓடிவந்தான். அவனுக்குச் சட்டென நிலைமை புரிந்தது. அவன் அவசரமாகப் பாய்ந்து திரியை உள்ளே இழுத்துச் சென்றான். யாராவது திரி படம் எடுத்ததைப் பார்த்துவிட்டாற் தங்கள் உயிருக்கு நிச்சயம் ஆபத்து வரும் என்பது அவனுக்குப் புரியலாயிற்று. “என்ன மடத்தனம் செய்துகொண்டு நிக்கிறாய்? எங்களுக்கு எதிரா நாங்களே ஆபத்தை விலை கொடுத்து வேண்டுறதே?” என மகளைப் பார்த்துக் கடிந்துகொண்டான். அவள் அவன் பேசியதற்குப் பெரிதும் கவலைப்பட்டவளாகத் தெரியவில்லை. தான் பார்த்ததை நினைத்துத் தேம்பித் தேம்பி அழுதாள். விக்னேசால் அதன்பின்பு அவளைத் திட்ட முடியவில்லை. சிறிது நேரத்தின் பின்பு தன்னைச் சமாளித்தவண்ணம் திரி கதைக்கத் தொடங்கினாள்.

“ஏனப்பா தேவையில்லாமல் பயப்பிடுறியள்? நாங்களே அப்பாவியள கொலை செய்யிறம்? கொலை செய்தவங்களைப் பிடிக்கிறதுக்கு எங்களிட்ட நல்ல ஆதாரம் இருக்குது. அதை நாங்கள் பொலீஸிட்ட கொடுக்கோணும். வாங்கப்பா பொலீஸக்குப் போட்டுவருவம்” என்றாள். விக்னேசுக்கு அழுவதா சிரிப்பதா என்று முதலிற் புரியவில்லை. பின்பு சற்றுக் கோபமாக “உனக்கு என்னடி விசரே? இங்க பொலீஸ், நவநாஜிகள் எல்லாரும் சேர்ந்துதான் உந்தக் கூத்தைச் செய்திருப்பாங்கள். நாங்கள் எங்களிட்ட ஆதாரம் இருக்கெண்டு பொலீஸக்குப் போனா எங்களத்தான் தூக்கி முதல்ல உள்ள போடுவாங்கள். இப்ப இருக்கிற நிலைமையில நோர்வேல உதைக்கொண்டேக் குடுத்தாலே அதுதான் அங்கையும் நடக்கும். உனக்கு உதை எடுத்த அளவுக்கு உதால வரப்போற ஆபத்தைப் பற்றிச் சிந்திக்கத் தெரியேல்ல. இது ஒண்டும் இப்ப விளையாட்டில்ல. தேவையில்லாமல் நாங்கள் மாட்டக்கூடாது. நீ முதல்ல உடுப்புகளை

எல்லாம் எடுத்துக்கொண்டு வெளிக்கிடு பாப்பம்” என்றான். “ஏனப்பா இப்பிடிப் பயப்படுறியள். அது ஒண்டும் நடக்காது. அந்தரப்படாதேங்கோ அப்பா. சரி நான் இப்ப பொலீசுக்கு போகேல்ல. வீடியோ எடுத்ததை யாரும் இருட்டில பாத்திருக்கமாட்டினம். அமைதியா இருங்க அப்பா.” என்றாள் திரி. “நீ அவங்கள வீடியோ எடுத்தமாதிரி உன்ன யார் எடுத்தாங்களோ தெரியாது. கதைய விட்டிட்டு உடுப்பை எடுத்துக்கொண்டு வெளிக்கிடு” என்று கூறிய விக்னேஸ் புறப்பட்டான். அப்பாவை மனதிற்குட் திட்டியவண்ணம் அதற்குமேல் வாதம்புரிய விரும்பாதவளாய்த் திரியும் புறப்பட்டாள்.

கீழே வரவேற்பறைக்குச் சென்ற விக்னேஸ், அங்கிருந்த பெண்ணிடம் அறையைக் காலி செய்வதாகக் கூறினான். அவள் சற்றும் நம்ப மடியாதவளாய் இவர்களைப் பார்த்தாள். அவள் அதை எதிர்பார்க்கவில்லை என்பதாக அந்தப் பார்வை சில கணங்கள் இவர்களை நோண்டியது. பின்பு அவள் தனக்கு இது சம்பந்தம் இல்லாத விடயம் என்பதுபோலக் கணக்கைப் பார்த்துப் பற்றுச்சீட்டை கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்ட விக்னேஸ் அவளிடமே ஒரு வாடகைக்காரை அழைக்குமாறு கேட்டுக்கொண்டான்.

வெளியே அந்த விடுதி தொடக்கம் “பெற்றோ றலி” காவல் நிலையம் தாண்டிச் செல்லுமளவிற்குப் புதிதாக உருவாக்கப்பட்ட தடுப்புகள் நீண்டு சென்றன. பொலீஸாரும் அம்புலன்ஸ் சேவை செய்பவர்களும் அவசர அவசரமாகப் பிணங்களையும், காயப்பட்டவர்களையும் அகற்றினார்கள். திரிக்குத் தனது கமரா மறுக்க முடியாத ஆயிரம் உண்மைகளை வெளியே சொல்லும் என்பது புரிந்தது. எத்தனைபேர் இறந்து போனார்கள் என்பது அவளுக்குச் சரியாத் தெரியவில்லை. ஆகக் குறைந்தது ஐம்பது பேராவது இறந்து போயிருக்க வேண்டுமென எண்ணினாள். ஆதாரத்தைக் கொடுக்காது தப்பி ஓடுகிறோமோ என்கின்ற குற்றவுணர்வு அவளை வாட்டியது. அப்பாவின் நடுக்கத்தை எண்ணிப் பேசாது நின்றாள்.

வாடகைக் கார் வந்ததும் அவசர அவசரமாக அதில் இருவரும் ஏறினார்கள். வாகனம் விமான நிலையத்தை நோக்கிப் புறப்படும் போது இரண்டு பொலீஸார் விடுதிக்குள் நுழைவதை விக்னேஸ் அவதானித்தான். ஒவ்வொரு கைத்தொலைபேசியிலும் மனிதர்கள் கமராக்களோடு அலையும் காலமிது. அதைவிட உல்லாசப் பயணிகள் நிறைந்த நகரமிது. யாராவது அதிகாலை நடந்த நிகழ்வைப் படம் எடுத்திருக்கலாம் என்பது பொலீஸின் சந்தேகமாக இருக்கும். ஏற்கெனவே பல விடயங்களை மறைத்துள்ள பொலீஸ், இந்த விடயத்தையும் வெளியே கசியவிட விரும்பாது. தங்களிடம் ஆதாரம் இருப்பது தெரிந்தால் கடவுச் சீட்டுகளையும், கமராவையும்

பிடுங்கி வைத்துவிட்டு, தடுப்பு முகாங்களில் தன்னையும் மகளையும் அடைத்து விடுவார்களோவென விக்னேஸ் பயந்தான். முதலாவது கொலை செய்யும் வரைதான் மனிதனுக்குக் குற்ற உணர்வோடு சேர்ந்த நடுக்கமிருக்கும். முதற் கொலை செய்துவிட்டால், பின்பு அது பலருக்கு கத்தரிக்காய் வாழைக்காய் வெட்டும் கதையாகத்தான் இருக்கும். கிரேக்கம் எப்போதோ முதலாவது கொலை செய்தாகிவிட்டது. இனி இங்கு கத்தரிக்காய் வாழைக்காய் வெட்டும் கதைதான் என்பது விக்னேசிற்குப் புரிந்தது.

விக்னேஸ் அதீதமாய் வியர்த்துப் போனான். அவன் வியர்த்துப் போனதைப் பார்த்த திரிக்குப் பரிதாபமாகியது. அப்பாவின் பயத்திற்கும், அவதிக்கும் அவளால் முழுமையான அர்த்தம் காண முடியவில்லை. “நான் எடுத்ததை ஒருவருமே பார்த்திருக்க முடியாது. அப்படி இருக்கச் சந்தேகத்தின் பெயரில் எவ்வளவு பேரை அவர்கள் கைது செய்ய முடியும்? அதுவே அவர்களுக்கு எதிரான பிரச்சாரமாகாதா? அப்பாதான் தேவையில்லாது அவதிப்படுகிறார்” என்பதாக அவள் எண்ணினாள். அப்பாவிடம் அதைச் சொன்னாற் துள்ளிக்குதிப்பாரோ என்கின்ற பயத்திற் பேசாது இருந்தாள். சாரதி ஒருமுறை இவர்களைப் பார்த்தான். பின்பு எதுவும் பேசாது வண்டியை விமான நிலையத்திற்கு ஓட்டிச்சென்றான்.

ஏதென்ஸ் சர்வதேச விமான நிலையத்தை வாடகைக்கார் சென்றடைந்த போது, விக்னேசுக்குச் சிறிது தைரியம் வந்தது. அவன் விறுவிறென்று வாடகைக் காருக்குப் பணம் கொடுத்துவிட்டுப் பெட்டியை இழுத்தவண்ணம் விமான நிலையத்திற்குள் ஓட்டமும் நடையுமாகச் சென்றான். திரிக்கு அன்று அப்பாவைப் பார்க்க வியப்பாக இருந்தாலும், அந்த நிலைமையில் அமைதியைப் பேணப் பேசாது அவர் பின்னே நடந்தாள்.

விமான நிலையத்தினுள் விக்னேஸ் விசர் பிடித்தவன் போலத் திரியையும் விட்டுவிட்டு ஓடினான். அவள் அவனைப் பார்த்துத் தலையை ஆட்டியவண்ணம் அப்பா போகும் திசையில் ஆறுதலாகச் சென்றாள். முதலில் “நோர்வேஜியன்” என்கின்ற நோர்வே விமானநிறுவன அலுவலகத்தை அணுகி ஒஸ்லோவுக்கு அடுத்த விமானத்தில் செல்லப் பயணச்சீட்டிற்கு முயற்சி செய்தான். அது பலனளிக்கவில்லை. அவன் சளைக்காது “எஸ்ஏஎஸ்” என்கின்ற ஸ்கண்டிநேவியன் விமான நிறுவனத்தின் அலுவலகத்தை அணுகினான். அதில் இருவருக்கும் இடம் கிடைத்தது. விலை பற்றி விக்னேஸ் அப்போது கவலைப்படவில்லை. அப்பாவின் குணம் திரிக்குத் தெரியும். அவர் வரப்போகும் ஆபத்தில் இருந்து தப்பினாற் போதும் என்பதில் மட்டுமே குறியாக இருக்கிறார் என்பதும்

அவளுக்குப் புரிந்தது. அப்போது பணம் ஒரு பொருட்டாக அவருக்குத் தெரியாது எனத் திரி எண்ணினாள். அப்பாவின் பயத்தில் நியாயம் இருக்கலாமோ என்கின்ற எண்ணமும் இடைக்கிடையே எட்டிப் பார்த்தது. அதன்பின்பு நடப்பது நடக்கட்டுமென அப்பாவைத் தொடரலானாள்.

## 4.2 விக்னேஸ்வீடு

ஒஸ்லோ விமான நிலையத்தில் இருந்து விக்னேசும் திரியும் அப்போதுதான் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அப்பாவின் அதிதீவிர உணர்ச்சிவசத்தால் சற்றுத் திகைப்பும், சலிப்பும் அடைந்திருந்தாள் திரி. விடுமுறை பாதியிற் குழம்பிய கவலை வேறு. சிறிது நேரத்திற் குளித்துவிட்டு வந்தவள் தனது கமராவை எடுத்தாள். அதைப் புரட்டிப் பார்த்தாள். இதைப் பார்த்த விக்னேஸ் துடித்துப்பதைத்து அதை அவளிடம் இருந்து பிடுங்கினான். அதை எதிர்பாராத திரி "ஏனப்பா இங்கயும் அதைப் பிடுங்கிறியள்?" என்று சினத்தோடு சிணுங்கினாள். விக்னேஸ் சிறிது தன்னை ஆசுவாசப்படுத்திய பின்பு "இங்கபார் திரி... ஐரோப்பா இப்ப நல்லாய் மாறிப்போய் இருக்குது. இதை நீ இப்ப எங்கயாவது குடுக்க, அதை வைச்சே நாங்கள் அதிதீவிர வலதுசாரிகளின்ர எதிரியள் எண்டு முத்திரையக் குத்திப்போடுவாங்கள். பிறகு ஏதாவது ஒருசந்தர்ப்பத்தில எங்களையும் பிடிச்சு எங்கையும் அனுப்பிப் போடுவாங்கள். இதெல்லாம் இந்த ஐரோப்பாவிலேயே நடந்த விசயங்கள். அப்பிடிச் செய்யிறதுக்கு இப்ப இருக்கிற நிலமேல ஒரு பொய்வழக்க அவங்களால உருவாக்கமுடியும். தயவு செய்து நீ இப்பிடியான சிக்கலில மாட்டக்கூடாது. பலவருசத்துக்கு முதலே வந்தேறு குடிகளுக்கான சட்டங்களை கிரேக்கம் கிடப்பில போட்டிட்டுது. அப்ப ஈரானைச் சேர்ந்தவங்கள் வாயைத்தைச்சுச் சாப்பாடு சாப்பிடாமல் போராட்டம் நடத்தினவங்கள். வசதியாகச் சொந்த நாட்டில் இருந்தவர்கள் ஏதென்ஸ் தெருக்களில சேரிகள் அமைச்சு வாழ்ந்தாங்கள். ஈரானியர்களைப்போல அப்கான் நாட்டவங்களும் போராடினாங்கள். அதால ஏதாவது பிரயோசனம் இருந்ததா?. இல்லை. பிறகு வந்த காலத்தில மனிதத்திற்கு மதிப்புக் கொடுக்காமல் அகதிகளை மோசமா விலங்குகளைப் போல நடத்தினாங்கள். இப்ப நிலமை இன்னும் மோசமாய்ப் போயிட்டுது. அந்த நிலைமை சிலகாலங்களில இங்கையும் வரும். அது அகதிகளுக்கு மட்டும் இல்லாமல் மொத்த வெளிநாட்டவரையும் பாதிக்கும். அதுவும் நிறமான தோலுடையவர்கள் எண்டுற எங்களைக் கெதியாப் பாதிக்கும். நாங்கள் முந்திரிக்கொட்டை போல முதலிலேயே பலியாகிறது புத்தி இல்லை...

விளங்குதா திரி" என்றான் விக்னேஸ். அவன் பயத்திலும் கவலையிலும் குழம்பிப் போனதாகத் தோன்றியது.

"எனக்கு விளங்குதப்பா. அதை நாங்கள் பாடசாலையில, வேலையில, தெருவில எண்டு எல்லா இடத்திலும் அனுபவிக்கத் தொடங்கீட்டம். ஆனா அதை நாங்களும் மறைக்கிறதால ஐரோப்பாவில இப்பிடி ஒரு கொடுமை நடக்குது எண்டது உலகத்துக்கு தெரியாமல் போயிடுமெல்லோ? நாங்கள் இயலுமானவரை உலகத்திற்கு என்ன நடக்குதெண்டு எடுத்துச் சொல்ல வேணும். நாங்கள் இப்ப நேரடிச் சாட்சியா இருக்கிறம். ஆனா இண்டைக்கு ரீவியில வெளிநாட்டவருக்கு இடையிலான சண்டையில் ஏதெனில் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று கிரேக்கப் பொலீஸ் பச்சப்பொய் சொல்லும் அப்பா. எங்களிட்ட அதற்கு நேர் எதிரான ஆதாரம் இருந்தும் அதை இந்த உலகத்துக்கு தெரியாமல் மறைக்கிறது நாங்கள் எங்களப் போன்றவர்களுக்குச் செய்யிற துரோகம் இல்லையா அப்பா? எப்படியாவது இந்த ஆதாரம் வெளி உலகத்திற்கு தெரியோணும். கிரேக்கம் மறைக்கிறதில ஒருதுளியாவது வெளி உலகத்திற்குக் கசியவேணும். நல்ல மாமாக்களாய் நடிச்சுக்கொண்டு, அத்தனை துரோகத்திற்கும் பின்னிற்கிறவங்களை அடையாளம் காட்டவேணும். நான் சொல்லுறது சரியா அப்பா? எங்கட உயிர்கள் பெறுமதியானவைதான். அதுக்காக அநியாயத்துக்கு எதிராகக் கிடைச்ச ஆதாரத்தை இருட்டடிப்புச் செய்யிறதில என்ன நியாயம் இருக்கு அப்பா? சொல்லுங்க" என்றாள்.

"நீ சொல்லுறது உனக்கு இப்ப சரியாக இருக்கலாம். உன்னுடைய வயதும் அதின்ர வேகமும் அப்பிடி. இப்பிடித்தான் நாங்களும் சின்னவயசில திசைமாறிப் போயிருக்கிறம். அதைவிடு. அதுக்காக நாங்கள் அந்தக் கொலைகளுக்குச் சாட்சி எண்டு இதைக் கொண்டுபோய் மீடியாவுக்குக் கொடுக்கவோ, அல்லது பொலீஸிட்டப் போகவோ உன்னை விட முடியாது. அதுகின்ர விளைவுகள் தொடர்கதையாகும்" என்றான் விக்னேஸ். "அப்படியென்டா நீங்கள் என்னதான் செய்யலாம் எண்டுறியள் அப்பா?" என்றாள் திரி.

விக்னேஸ் சிறிது நேரம் சிந்தித்தான். "ஒருவகையில் இந்த ஆதாரம் வெளியே வருவது இனி நடக்கப்போகும் மாபெரும் அவலங்களைக் குறைக்கலாம். அதற்காக என்றாலும் இதை வெளிப்டுத்துவது நல்லதே. அப்படி வெளிப்படுத்துவதாய் இருந்தாலும் எங்களது பெயர் எவ்வகையிலும் வெளியே தெரியாது பாதுகாத்துக் கொள்ளவேண்டும்" என்பதாக மனதிற்குள் ஓர் முடிவுபண்ணினான்.

அதை எப்படிச் செய்வது என்பது அவனுக்குப் புரியவில்லை. பின்பு போலியாக மின்னஞ்சல் ஒன்றை உருவாக்கி... அந்த முகவரியில் இருந்து இந்த வீடியோவை அனுப்பிவிடுவது எனத் தீர்மானித்தான். அதுவும் வீட்டில் இருந்து அனுப்புவது பாதுகாப்பாய் இருக்காது என்பதை அறிந்தவன், மத்திய புகையிரத நிலையத்திற்குச் சென்று, அங்கு உள்ள 'நெற்கபே'யில் இருந்து அதை அனுப்ப முடிவு செய்தான். பின்பு திரியைப் பார்த்து "சரி நான் இதை ஏதாவது மீடியாவுக்கு அனுப்பீட்டு வாறன். ஒரு 'பென்றைவ் ' எடுத்தா" என்றான். திரி கொண்டுவந்து கொடுத்த 'பென்றைவ்'வில் அந்த வீடியோவை 'எம்பிதிறி' '∴பைலா'க்கிப் பதிந்தான். பின்பு திரியைக் கவனமாக வீட்டில் இருக்குமாறு பணித்துவிட்டு மத்திய புகையிரத நிலையத்தை நோக்கிச் சென்றான்.

'∴பைல் 'கள் பகிர்ந்து கொள்ளும் ஓர் இணையத்தளத்திற்குத் தனது வீடியோவை முதல் தரவேற்றம் செய்தான். பின்பு அதன் முழு முகவரியை மின்னஞ்சல் மூலமாகப் பல பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்தான். அவன் பணி அத்தோடு முடிந்தது. அதன் வினை அதன் பின்பு தொடங்கியது.

பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிறுவனங்களும் அந்த வீடியோ உண்மையானதா என்பதை நிரூபித்த பின்பே வெளியிட்டார்கள். அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தினாலும், அதிதீவிர வலதுசாரிகளின் பிரச்சாரத்தில் மூளைச்சலவை செய்யப்பட்ட பலரும், அதைப் பெரிதுபடுத்தாது புறம்தள்ளினார்கள். நம்ப மறுத்தனர். சிலர் இப்படியான பிரச்சனைகளுக்கு இதுதான் தீர்வாக இருக்கமுடியுமென வன்மமாக எண்ணினார்கள். சிலர் மாத்திரமே அநியாயத்திற்கு எதிராகப் பொங்கி எழுந்தார்கள்.

அந்த வீடியோ வெளிவந்ததைத் தொடர்ந்து பல நகரங்களிலும் கிரேக்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பன நடந்தன. அதில் நிறமனிதர்களே பெருவாரியாகப் பங்குகொண்டார்கள். சுதேசிகள் பலர் பயத்தில் அதில் இருந்து ஒதுங்கிவிட்டார்கள். அதிதீவிர இடதுசாரிகளும் அதிகம் துணிந்த சில இடதுசாரிகளும், கருணையுள்ள மதவாதிகளும், மனிதத்தை மதிக்கும் சிலரும் மட்டும் இந்த நிறமனிதர்களோடு ஊர்வலங்கள் போவதற்குத் துணிந்து வந்தார்கள். அதிகமான அரசாங்கங்கள் அந்த ஊர்வலங்களை ஊடகங்களில் இடம்பிடிக்காதவாறு பார்த்துக்கொள்ள ஊடகங்களுக்குக் கடுமையான அழுத்தம் கொடுத்தன. அந்த

அழுத்தங்களையும் மீறிச் சில ஊடகங்கள் கேள்விகளை எழுப்பின. அந்த விவகராம் ஓரளவிற்கு உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

கிரேக்க அரசாங்கம் சில அரசுகளிடம் இருந்து கிடைத்த அழுத்தங்களை அடுத்து அந்தச் சம்பவம் பற்றி விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்தது. அந்த அறிவிப்பு திரிக்கு ஓரளவு நிம்மதி தந்தாலும் விக்னேஸ் இது ஒரு கண் துடைப்பு மட்டுமே என்பதாய்க் கருதினான். அவன் தங்கள் நாட்டின் சரித்திரத்தில் இப்படி எத்தனை கண்துடைப்புகள் நடந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்த்தான். அந்தச் செய்தியும், அதன் இழப்பும் தொடர்ந்து வந்த செய்திகளில் மூழ்கிச் சிலகாலத்திற் காணாமற் தொலைந்து போயிற்று. உலகத்தின் நடப்பே அப்படித்தான். முழித்திருக்க மறந்துபோகும் வேகத்தில் அது இயங்குகிறது என்பது அவன் புரிதல். அவன் கணிப்புப் பிழைக்கவில்லை. உலகசரித்திரம் பிழைக்கப்போவது அவனை மிகவும் வருத்தியது.

## 4.3 இயந்திரக் கண்கள்.

விக்னேஸ் அன்று வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்பி வந்தான். தெருவில் வாகனத்தை நிறுத்தாது தனது கராஜில் அதை நிறுத்துவதுதான் அவன் வழக்கம். இன்றும் விக்னேஸ் தனது வாகனத்தைக் கராஜில் நிறுத்தப்போனான். அப்போது இதற்கு முன்பு பார்த்திராத கறுப்பு வாகனமும், அதனுட் சிலரும் தரிப்பிடத்தின் வாசலில் தமது வாகனத்தை நிறுத்திவிட்டு... அதற்குள் இருந்தார்கள். பார்ப்பதற்கு அவர்கள் சற்று வித்தியாசமாகத் தோன்றினார்கள். அவர்கள் முகங்கள் நன்றாகத் தெரியவில்லை. இவர்கள் ஏன் இங்கு தரித்து நிற்கிறார்கள் என்பதாக எண்ணிய விக்னேசுக்கு ஒன்றும் புரியவில்லை. தனது வாகனத்தை அவசரமாக கராஜில் நிறுத்திவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு விரைவாக நடக்கலானான்.

தனது வாகனத்தை நிறுத்திவிட்டு வந்த விக்னேஸ் பயத்துடனே அவர்களைப் பார்க்காது தனது வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போனான். அவனுக்கு ஓடிவிடவேண்டும் என்கின்ற உந்தல். உதறல். வெட்கமும் தன்மானமும் அதற்கு இடம் கொடுக்காது இழுத்துப் பிடித்தன. அவன் அதையும் மீறி வேகமாக நடந்தான். என்றும் இல்லாத பயம் இன்று அவனைக் கிலிகொள்ள வைத்தது. அவர்கள் உருவம் அதற்குக் காரணமானது. இந்த இடத்தில் நிற்பது அதைவிடப் பிரமிப்பானது. காலம்

கெட்டுப்போய்விட்டது. எதுவும் நடக்கலாம். எங்கும் நடக்கலாமென எண்ணியவண்ணம் விரைவாக அடியெடுத்து வைத்தான்.

திடீரென அந்த வாகனத்தில் இருந்து இறங்கிய ஆட்கள் அவனை நோக்கி ஓடிவருவதைக் கண்டான். அதைப் பார்த்தபோது அவனுக்கு அதிர்ச்சியாகியது. மயக்கமே வந்துவிடும்போற் தலைசுற்றியது. அவர்கள் இப்போது முகமூடி அணிந்திருந்தார்கள். கண் இமைக்கும் பொழுதிற்குள் அவனைக் கறுப்பு முகமூடியால் மூடினார்கள். பின்பு தூக்கிச் சென்று வாகனத்திற்குட் போட்டார்கள். கையையும் காலையும் 'ரேப்'பால் இறுக்கிப் பிணைத்தார்கள்.

விக்னேசிற்குத் தனது வாழ்க்கை இன்றோடு முடிந்துவிடுமோ என்கின்ற பயம் மூர்க்கமாக இதயத்தை அழுத்தியது. அது நரம்புகளூடாக மின்சாரமாய் மூளையில் ஏற, மூளை அதை மொழிபெயர்த்து, பயமாக அவனை உறைய வைத்தது. முருகா என்னை இவர்கள் ஒன்றும் செய்யாது விடவேண்டுமென அவனைக் கேளாது அவன் நா தன்பாட்டில் முணுமுணுத்தது. அவன் இயலாமையில் தனது வாழ்வின் முடிவைக் கடவுள் கையில் கொடுத்தான்.

அவர்கள் விக்னேசை வாகனத்தின் இருக்கைக்குக் கீழே போட்டுக் காலால் மிதித்தனர். மீண்டும் மீண்டும் சப்பாத்துக் கால்களால் உதைந்தார்கள். உடம்பின் அனைத்துப் பாகங்களிலும் பாகுபாடு இன்றிச் சரமாரியாகச் சப்பாத்துக் கால்களாற் குத்தினார்கள். விக்னேஸ் வலியிற் துடித்தான். மூக்கால் இரத்தம் வருவதை வெப்பக் கோடுகளாய் உணர்ந்தான். அது வாயிற்பட்டுக் கரித்தது. வாழ்க்கையே முடிந்து போகும் உண்மையும் நெஞ்சிற் கரித்தது. சில கணங்கள் முருகனை மறக்க வேண்டியதாயிற்று. "என்னை அடிக்காதேங்க என்னை அடிக்காதேங்க" என அவன் அவர்களிடம் நொஸ்கில் (நோர்வே மொழி) மன்றாடினான். அவன் வேண்டுதலும் மன்றாட்டமும் அவர்கள் காதில் விழவில்லை. அவர்கள் அவனைத் தொடர்ந்தும் தாக்கினார்கள். விக்னேசுக்குத் தான் இப்படியே செத்துவிடுவேன் என்கின்ற எண்ணம் எழுந்தபோது மயக்கம் வந்தது. அதன்பின்பு அவர்கள் அடிப்பதை நிறுத்தினார்கள். அந்த வாகனம் ஒரு மலையில் இருந்த சிறிய வீடொன்றை நோக்கிச் சென்றது.

*

கண்விழித்தபோது மரத்தாலான சிறிய வீட்டிற்குள் அவன் கட்டி வைக்கப்பட்டிருந்தான். அந்த வீடு ஒரு மலையில் இருப்பதை அவனால் அவதானிக்க முடிந்தது. அந்த வீடு ஒரே ஒரு அறையை மட்டுமே கொண்டது. விக்னேசுக்கு எதிரே ஒருவன் முகமூடி அணிந்தவண்ணம் நின்றான். முகமூடியில் இருந்த ஓட்டையால் அந்த மனிதனது கண்கள் கூர்மையான ஒளிக்கீற்றாய் மின்னின. அவன் கண்களின் சிவப்பு நிறம் விக்னேசைக் கதிகலங்க வைத்தது. அந்த மனிதன் கைளிற் பெரிய பெரிய வண்ணங்களிற் பச்சை குத்தப்பட்டிருந்தது. வினாயகர் கையில் இருக்கும் சுவாஸ்திகா பல வண்ணங்களில், வடிவங்களில் அவன் மேனியில். அந்த சுவாஸ்திகாவைப் பார்க்க விக்னேசிற்கு நடுக்கமெடுத்தது. அந்த அடையாளம் பிள்ளையார் கையில் எதற்காக இருந்தது என்பது விக்னேசுக்குத் தெரியாது. உலக வரலாற்றில் அது எந்த இடத்தைப் பிடித்தது என்பது விக்னேசுக்குத் தெரியும். அது கிட்டத்தட்ட எழுபத்தி ஒன்பது மில்லியன் மக்களைப் பலியெடுத்தது என்பது அவனுக்குப் புரியும். அதைப் பச்சைகுத்திக் கொள்ளுமளவிற்கு ஒருவன் வருவானானால் அவனிடம் எவ்வளவு வெறுப்பு இருக்கும் என்பது அவனுக்குப் புரிந்தது. இவனிடம் அன்பைக்கொடுத்து வெறுப்பை அகற்ற முடியாது. அதுவும் நிறமனிதர்களின்மேல் பொங்கும் வெறுப்பை இவர்களிடமிருந்து அகற்றமுடியாது. அந்த உண்மை அவனை அச்சப்படுத்தியது. எருதற்ற இயமன் பாசக்கயிறற்று அவன் முன்னே தோன்றினான். அனல்கொண்ட கண்ணால் அவனை அற்பமாகப் பார்த்தான். இயமனின் அந்தப் பார்வையை நினைக்க விக்னேசிற்குத் தலை கிறுகிறுத்தது. மீண்டும் மயக்கம் வந்துவிடும்போலத் தோன்றியது.

நோர்வேயில் கடந்தகால வரலாற்றில் ஒருசில கொலைகள் நடந்தன. அது "பென்சமீன் ஹர்மென்சன்" என்னும் வளர்ப்புப் பிள்ளையைக் கொலைசெய்தபோது உச்சக்கட்டத்தை அடைந்தது. அப்பொழுது நவநாஜிகளின் பெருக்கமும், ஆளுமையும் நிறமான மனிதர்களைக் கலங்கடித்தன. அந்தக் கொலை ஒரு துன்பகரமான செயல் என்றாலும், அது நோர்வே மக்கள் எவ்வளவு மனிதத்தை நேசித்து நின்றார்கள் என்பதைக் காட்டிற்று. ஒஸ்லோ நகரத்தையே அது உலுக்கியதை இன்றும் விக்னேசால் மறக்க முடியாது. அதற்கு எதிராகத் திரண்ட மக்களின் தீப்பந்த ஊர்வலம் இன்றும் அவன் நினைவில் பசுமையாக ஜொலிக்கிறது. அது நிறவெறிக்கு எதிரான நோர்வே மக்களின் ஒருமித்த கருத்தை அன்று வெளிப்படுத்தியது. மனிதத்தில் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசம் பற்றி நவநாஜிகளுக்கும், உலகத்திற்கும் உரத்துக் கூறியது.

அந்த மக்கள் இப்போது மாறிவிட்டார்கள். "அடிமேல் அடிக்க அம்மியும் நகரும்" என்பதுபோலப் பிரச்சாரத்தின் மேற்

பிரச்சாரம்செய்ய மக்கள் மாறத் தொடங்கினார்கள். வெள்ளை இனத்தின் எதிரியாக இஸ்லாத்தையும், அதன் கட்டுப்பாடுகளையும் காட்டி அதிதீவிர வலதுசாரிகள் கடுமையாகப் பிரச்சாரம் செய்தார்கள். அதற்கு அடுத்ததாக ஒட்டுமொத்த நிறமனிதர்களையும், அவர்களது கலாசாரத்தையும் கூண்டில் ஏற்றினர். குறைகள் கண்டுபிடித்தனர். இறுதியில் இல்லாமற் செய்யப்படவேண்டிய பாவிகளை அடையாளங் காண்பதில் வெற்றிகண்டார்கள்.

சுதேச இளம் பெண்களை ஒழுக்கமில்லாதவர்கள் என்பதாக, குரன்லாண்டில் வைத்துச் சில கடும்போக்கு இஸ்லாமியர் தாக்குதல் நடத்தினர். அப்படியான சிந்தனை உள்ள நிறமான வந்தேறுகுடிகள் சிலர் தாடிகளோடு அலைகிறார்கள் என்பதில் ஐயம் இல்லை. அது தங்களுக்குத் தாங்களே எண்ணையை ஊற்றிப் பற்றவைத்துக் கொள்வதான ஆபத்தை விலைக்கு வாங்குவது. அப்படியான தனிமனிதர்களின் செயல் அனாகரிகமானதே. தங்களது மருந்திற்குத் தாங்களே முதல் நோயாளர்களாக, பலிக்கடாக்களாகப் போகும் நிலை வந்தது. முதலில் இஸ்லாமியரை நோக்கியே நவநாஜிகளினதும், சில சுதேசிகளினதும் வெறுப்பு மூர்க்கம்கொண்டது. பின்பு அது எல்லா நிறமனிதருக்கும் பரந்தது. நிறமான வந்தேறுகுடிகளை அவர்கள் எதிரிகளாக எண்ணினர். அவர்களை ஓழித்துக்கட்ட வேட்கை கொண்டனர். அதற்கான விடை அவர்களிடம் தயாராகிற்று.

அந்த நவநாஜி விக்னேசை நோக்கிக் கோபமாகப் பேசத் தொடங்கினான்.

“கறுத்தப் பண்டியே, பெரிய அறிவாளி என்கின்ற நினைப்பாடா உனக்கு? கிரேக்கத்தில் எடுத்துவந்த வீடியோவை நீ அழித்திருக்க வேண்டும், அல்லது அதை வெளியிடாமல் விட்டிருக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் அதை வெளியிட்டு எவ்வளவு பெரிய பிரச்சனையை உருவாக்கினாய்? அதற்குப் பதில் நீ உன் உயிரை இன்று விடவேண்டும். பார்த்தாயா? எப்படி அது எங்களுக்குத் தெரியும் என்று பார்த்தாயா? எங்களுக்கு விசுவாசமானவர்கள் எத்தனைபேர் பொலீஸில் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா? நீ எல்லா நடவடிக்கைகளையும் கவனமாகச் செய்தாய் என்கின்ற நினைவோடு இருக்கிறாய். ஆனால் ஏதெனில் இருந்து உன்னை நாங்கள் கவனிக்கத் தொடங்கிவிட்டோம். பின்பு நீ “சென்றால்ஸ்தஸ்சூன்” (மத்திய புகையிரதநிலையம்) சென்று, அங்கே உள்ள ‘நெற்கபே’யில் இருந்து அந்த வீடியோவை அனுப்பியதும்

எங்களுக்குத் தெரியும். நீ அதில் உன்னை மறைக்கத் தவறிவிட்டாய். எல்லாவற்றையும் கவனித்த வீடியோ காட்சிகள் இப்போது எங்களிடம் இருக்கின்றன. அது உனக்குத் தெரியுமா? பொலீஸ் நினைத்தால், உன்னைப் பயங்கரவாதியெனக் கைதுசெய்து ஆதாரம் சோடிக்கும். ஆனால் உன்னைப் போன்ற கறுப்பர்களை உயிரோடு வைத்து உணவு போடுவது அல்ல எங்கள் நோக்கம். எங்கள் நோக்கம் களையெடுப்பது. கறுப்பர்களைக் களை எடுத்து வெள்ளை இனத்தைச் செழிக்க வைப்பது" என்றான் அவன். கோபத்திற் கையை ஓங்கிக் குத்த வருவது போல விக்னேசை நோக்கிச் சைகை காட்டினான். விக்னேஸ் எப்படியாவது சமாளித்து, இவனிடம் இருந்து தப்பிக்க வேண்டுமென எண்ணினான். திரியை எப்படியாவது உயிரோடு திரும்பிப்போய்ப் பார்த்து விடவேண்டும் என்கின்ற அடங்காத ஆசை அவன் மனதில் கரையிற் தூக்கி வீசப்பட்ட மீனாகத் துடித்தது. அவன் கெஞ்சியாவது உயிர்ப் பிச்சை கேட்கும் சாதாரண மனித குணத்திற்கு இறங்கினான். கெஞ்சினான். மன்றாடினான்.

"அது தவறுதலாக நடந்துவிட்டது. தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். இனிமேல் அப்படி எல்லாம் நடக்கமாட்டேன். என்னை நம்புங்கள்" என்றான் விக்னேஸ். "வாயை மூடு கறுத்தப்பண்டி. உனக்கு போதிப்பதற்கோ அல்லது மன்னிப்பு வழங்குவதற்கோ இங்கு உன்னைக் கொண்டுவரவில்லை. உன்னைப் போன்ற கறுப்பர்கள் இந்த உலகத்தை அசிங்கப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு விடுதலை தந்து இந்த உலகத்தைச் சுத்தப்படுத்துவதுதான் எங்கள் பணி. அதைத்தான் உனக்கு ஏற்கெனவே கூறியிருந்தேன். எங்கள் பணி உன்னோடு ஒஸ்லோவில் மீண்டும் ஆரம்பமாகப் போகிறது." என்றான் கோபமாக. அதே வேகத்தில், தனது காலைத் தூக்கி நிலத்தில் உதைத்தான். அதைப் பார்த்த விக்னேஸ் ஒருகணம் நடுங்கிப் போய்விட்டான். பின்பு அவன் கோபமாக வெளியே செல்ல மூன்று முகமூடி அணிந்தவர்கள் கையில் 'பேஸ்போல்' கட்டைகளுடன் உள்ளே வந்தார்கள். விக்னேசுக்கு அதைப் பார்க்கவே உயிர் போய்விடும் வேதனை உடலெல்லாம் பரவியது. மயக்கம் வந்தது.

*

விக்னேசுக்கு நினைவு வந்தபோது உலாத்திற்குச் சென்றுவரும் காட்டுப்பகுதியில் அவர்கள் அவனைப் போட்டிருப்பதை உணர்ந்தான். அவனைச் சுற்றிக் கூட்டம் கூடியிருந்தது. உடம்பெல்லாம் இரத்தம் வழிந்து காய்ந்துபோயிருப்பதை அவனால் உணர முடிந்தது. கைகால் முறிந்திருக்க வேண்டும். அவனால் அவற்றை அசைக்க

முடியவில்லை. மீண்டும் மீண்டும் மயக்கம் தரும் வலி அவனை அலையலையாகத் தாக்கியது. தாகத்தில் நாக்கு வரண்டு சொரசொரத்தது. அதைச் சொல்வதற்கோ, கையை அசைத்துக் கேட்பதற்கோ உடலில் சக்தி இருக்கவில்லை. பல மனிதர்கள் பலவிதமாக அவனைப் பார்த்தார்கள். சில மனிதர் வெறுப்பில் எச்சில் உமிழ்வதைப் போன்று தோன்றியது. சிலர் ஐயோ பாவம் என்கின்ற பார்வையால் அனுதாபப்படுவது போன்று இருந்தது. வானம் பல வர்ணமாகத் தோன்றியது. ஆகாயத்தில் பறப்பதாய்... சூரியனை நோக்கிக் கையை நீட்டிக் கொண்டு போவதாய்... அவனை மத்திய புள்ளியாக வைத்து வானம் சுற்றியது. மேலே இருப்பது சூரியனா, அல்லது சூரியனே இல்லாத பிரபஞ்சமா? விக்னேசுக்கு மீண்டும் மயக்கம் வந்தது. அந்த மனிதர்களின் விம்பங்கள் கலங்கிப்போகக் கண்கள் இருண்டுகொண்டன.

சில மணித்தியாலங்கள் கழித்து மீண்டும் விழிப்பு வந்தபோது அவன் மருத்துவ மனையில் இருப்பது புரிந்தது. நல்ல மனிதர்கள் உலகத்தில் இன்னும் இருக்கிறார்கள். திரி கவலையோடு அவனது முகத்தையே வெறித்துப் பார்த்தாள். விக்னேசுக்குத் தனது வாழ்வில் கிடைத்த அதிர்ஷ்டம் பற்றி நம்பமுடியவில்லை. விக்னேஸ் கண்விழித்ததைக் கண்ட திரி அப்பாவின் நெற்றியில் ஆசையாக... அவசரமாகப் பல முத்தமிட்டாள். அவளுக்கு உலகத்தில் இருக்கும் ஒரேயொரு சொந்தம் அவன். அப்பா இல்லாத வாழ்வை அவளால் நினைத்துப் பார்க்க முடியாது.

## 4.4 ஒரு குடும்பத்தின் முடிவு

காலம் வேகமாகக் கழிவதற்கு நித்திய வரம் பெற்றது. அதன் கழிவில் உலகத்தில் வந்துவிடும் சடுதியான மாற்றங்கள். அதன் தற்போதைய வேகத்தைவிட விவேகமே உயிர்வாழ்வதற்கான உத்தியாக நிறமான வந்தேறுகுடிகளுக்குத் தேவைப்பட்டது. ‘கெத்தோ’ மயமாகிவிட்ட ஒஸ்லோவின் சில பகுதிகளில் நிறமான வந்தேறுகுடிகளே தனியினமாகினர். வேறுசில இடங்களிலும் நிறமான வந்தேறுகுடிகள் முன்பு தனிவீடு வாங்கினார்கள். அப்படித் தனிவீடுகள் வாங்கியவர்களிற் பலர் தங்கள் வீடுகளைப் பயத்தில் சுதேசிகளுக்கு விற்றுவிட்டு, சுதேசிகள் தொடர்ந்தும் குடியிருக்கும் மாடிக்கட்டங்கள் பார்த்து இப்போது வீடுகள் வாங்க முயற்சித்தார்கள். அப்படிப்பட்ட வீடுகளை வாங்குவது நிறமனிதர்களுக்குப் பெரும்பாடாகியது. சுதேசிகள் ஓர் அடுக்குமாடிக் கட்டிடத்தில் அதிகமாய் குடியிருந்தால், நிறமான மனிதர்களுக்கு அங்கு வீட்டை விற்க மறுத்தார்கள்.

நிறமான மனிதர்கள் அதிகவிலை கொடுத்தாலும் அதை அவர்களுக்கு விற்க அவர்கள் விரும்பவில்லை. அதேவேளை சுதேசிகள் குறைவாக இருந்த கட்டடங்களில் நிற மனிதர்கள் இலகுவாய் வீடு வாங்க முடிந்தது. அப்படியான வீடுகள் வரும் காலத்தில் இனவெறியரின் தாக்குதலுக்கு இலக்காகும் என்கின்ற பயம் நிறமான வந்தேறுகுடிகளை அலைக்கழித்தது.

சுதேசிகளும் நிறமான வந்தேறுகுடிகளும் துருவங்களாகி... மெது மெதுவாகப் பிரிந்து செல்வது... அதிதீவிர வலதுசாரிகளுக்கு உள்ளூரப் பெரும்மகிழ்வைக் கொடுத்தது. அவர்கள் இதைத் தடுத்துநிறுத்தாது அது தனிமனித சுதந்திரம் என்கின்ற வகையில் ஊக்கம் கொடுத்து வந்தார்கள். இந்தவிதமான 'கெத்தோ'க்கள் நிறமான வந்தேறுகுடிகளை மட்டும் கொண்டதாக அமைந்ததால் அவர்கள் மேற் தாக்குதல் செய்பவர்களுக்கு அது இலகுவாகியது. அந்தக் குறிப்பிட்ட தெருவில் சென்று தாக்குதல் நடத்தினாற் கொல்லப்படுபவர்கள் எல்லோரும் நிறமான வந்தேறுகுடிகளாய் இருப்பார்கள் என்பது அவர்கள் கணிப்பாகியது. நிறமான வந்தேறுகுடிகளைப் பலவீனமான ஓர் இடத்தில் தள்ளி இருப்பது பற்றி அதிதீவிர வலதுசாரி அரசாங்கம் கரிசனை காட்டவில்லை.

இரவில் நிறமான வந்தேறுகுடிகள் இப்போது எங்கும் போக விரும்புவதில்லை. முன்பும் ஆபிரிக்க நாடுகளைச் சார்ந்தவர்கள்தான் அதிகம் அப்படிச் செல்வார்கள். எதாவது பிரச்சனை வந்தாலும் எதிர்ப்பதற்கு ஏற்ப உடல்வாகு அவர்களிடமுண்டு. ஆசியர்கள் எப்போதும் கொக்கேசியரைவிடச் சிறியவர்களே. அது உடல்ரீதியாக கொக்கேசியரை அல்லது ஆபிரிக்கரை எதிர்கொள்வதிற் சிக்கல்களை ஏற்படுத்தியது.

இப்போது இரவில் 'டிஸ்கோ' போன்ற இடங்களுக்குப் போகின்றவர்கள் சிலவேளை பிணங்களாக ஆற்றிலோ அல்லது கடலிலோ மிதப்பதும் வழமை. அதிதீவிர வலதுசாரி அரசாங்கம் பதவிக்கு வரும்போது அதிக காவலரை நியமிப்பதாகப் பசப்புவார்த்தை கூறியது. பின்பு அதை வழமைபோலக் காற்றிற் பறக்க விட்டது. காவலர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி மிகவும் குறைந்ததில் அவர்களின் சேவை அரைவாசியாகியது. அதுவும் நிறமான வந்தேறுகுடிகள் கொலை செய்யப்படுவதுபற்றி அந்த அதிகாரிகள் அதிகமாக அலட்டிக்கொள்வதில்லை. கடமைக்காகச் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு விசாரணைகளைக் கிடப்பிற் போட்டுவிடுவார்கள்.

பொலீஸின் அக்கறையின்மை நவநாஜிகள், அதிதீவிரவாலதுசாரிகள் போன்றவர்களைச் சுதந்திரமாகச் செயற்படவிட்டது. அவர்கள் தற்போது நிறமான வந்தேறுகுடிகளைக் கொலை செய்வதிற் பயமின்றிச் செயற்படத் தொடங்கினார்கள். நோர்வேக்குள் இந்த மாற்றங்கள் கடைசியாகத்தான் பிரவேசித்தன. அப்படியான மாற்றங்கள் முதலிற் கிழக்கு ஐரோப்பாவையும், பின்பு மேற்கு ஐரோப்பாவின் வறிய நாடுகளையும் பீடித்தன. அதன்பின்பு மேற்கு ஐரோப்பாவின் செல்வந்த நாடுகளையும் அது ஆட்கொண்டது. இறுதியில் ஸ்கண்டிநேவியன் நாடுகளையும் அது பீடித்துவிட்டது.

வறுமையான நாட்டில் மட்டும்தான் நவநாஜிக்கள் முளைவிடுவார்கள் என்பதாக வரலாறு கிடையாது. தொண்ணூறுகளில் நோர்வேயில் அது முளைவிட்டபோது நோர்வே பணக்கார நாடுகளில் ஒன்றாகவும், வசதியான நாடாகவும் இருந்தது. வசதி இருப்பவர்களுக்குத்தான் அதிகமான வெறுப்பும் வருவதாய் அது புதிய வரலாறு காட்டிநின்றது. அப்போதைய அரசாங்கம் அதன்மீதுகாட்டிய கடுமையான அக்கறையில் அது அடங்கிப்போயிற்று.

சில மனிதர்கள் தாழ்வுமனப்பான்மையுடன் மற்றைய மனிதர்களைப் பார்த்து எப்போதும் வெறுப்புக் கொள்கிறார்கள். அப்படி வெறுப்பு ஏற்படும் போது, மற்றைய மனிதர்களைத் தாக்கச் சிறுபிள்ளைத்தனமான காரணங்கள் துணையாகின்றன. வெறுப்பில் இருக்கும் அவர்களைப் போன்றவர்களும் அக்காரணங்களைப் பரிபூரணமாக நம்புகின்றனர். அமெரிக்காவில் நடந்த ஒன்பது பதினொன்றிற்குப் பின்பு இஸ்லாமியர்மீதான வெறுப்பை ஊட்டுவது இப்படியானவர்களுக்கு மிகவும் எளிதாகியது.

தற்போது இந்தியா பாகிஸ்தான் யுத்தத்திற்குப் பின்பு, அனைத்து நிறமான வந்தேறுகுடிகளையும் அழித்தொழிப்பதற்கான காலம் வந்துவிட்டதாய் அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அது மேலும் பல அங்கத்தவரை அப்படியான அமைப்பிற்குள் உள்ளிழுத்துக்கொள்ள வசதியாகியது. அதை நவநாஜிகள் மிகவும் வெற்றிகரமாகச் செயற்படுத்தத் தொடங்கினார்கள். இந்தச் செயற்பாடு தங்களுக்கு ஆபத்தாய் வராதவரைக்கும் கண்டும் காணாமலும் அதிதீவிர வலதுசாரிகளின் அரசு காலம்கடத்தியது. அது பலருக்கும் தாங்கமுடியாத விசனத்தை உண்டுபண்ணியது. எப்படி இவர்களாற் கடந்தகால ஐரோப்பிய வரலாற்றை மறக்க முடிந்தது என்கின்ற கேள்வியே பலர் மனதிலும் எழுந்தது.

*

விக்னேஸ் திடீரென விழித்துக்கொண்டான். அவனுடம்பு வியர்த்து, வியர்வையில் தெப்பமாக நனைந்திருந்தது. தன்னை நான்கு நவநாஜிகள் கலைத்துக் கலைத்துச் சுடுவதாய்க் கனவுகண்ட ஞாபகம் அவன் மூளையைவிட்டு அகலவில்லை. என்ன கனவு இது என்பதாக எண்ணியவண்ணம் திரும்பவும் படுக்க முயன்றபோது, அம்புலன்ஸ் பொலீஸ் ஆகியவற்றின் சத்தம் திடீரெனக் கேட்கத் தொடங்கியது. எங்கேயாவது ஏதாவது பிரச்சனையாக இருக்குமென நினைத்தான். கட்டிலைவிட்டு எழுந்து இருக்க மனம் இல்லாதவனாய்த் தொடர்ந்தும் அப்படியே படுத்தான். அம்புலன்சும் பொலீசும் பிரதான பாதையாற் போகாது தங்களது ஒழுங்கைக்குள் இறங்கிய சத்தம் கேட்டவுடன் விக்னேஸ் படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தான். என்னவாக இருக்கும் என்பதைப் பார்த்துவிட வேண்டும் என்கின்ற ஆவல் அவனை உந்தித் தள்ளியது. அவன் தனது உடுப்புகளை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டான். திரி எழுந்து விட்டாளாவென ஒருமுறை அவளது அறைக் கதவை மெதுவாகத் திறந்து பார்த்தான். அவள் ஆழமான தூக்கத்தில். அவன் அவளை எழுப்பிவிடாது கதவை மூடிவிட்டுப் போகும் போது வெளிக்கதவை மெதுவாகப் பூட்டினான். பின்பு ஓட்டமும் நடையுமாக நீல ஒளிவரும் திசையை நோக்கிச் சென்றான்.

அந்த வீடு விக்னேசின் வீட்டில் இருந்து நானூறு மீற்றர் தொலைவில் இருந்தது. அதில் ஒரு சோமாலியக் குடும்பம் குடியிருந்தது. அவர்கள் வழமையான பாரம்பரியச் சோமாலியக் குடும்பத்தைப் போன்று அல்லாது சுதந்திரமாக, சுயமாகப் பழகும் மனிதர்கள். அந்தச் சோமாலிய மனைவியோ அல்லது அவரின் மகளோ முக்காடு போட்டுக்கொண்டு போனதை விக்னேஸ் ஒருபோதும் கண்டதில்லை. அவர்கள் தங்கள் கலாசாரதத்தை மறக்காவிட்டாலும் நவீனத்தையும் சுதந்திரத்தையும் தத்தெடுத்துக் கொண்டவர்கள்.

அவர்களுக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உள்ளனர். அந்த ஆண்பிள்ளைகள் பதினெட்டு வயதிற்கும் இருபத்திரண்டு வயதிற்கும் இடைப்பட்டவர்களாய் இருந்திருப்பார்கள். எப்போதும் கூட்டாக நண்பர்கள் போலத் திரிவது அவர்கள் வழக்கம். விக்னேஸ் அவர்களை இடைக்கிடை தெருவிற் காண்பான். சிலவேளை அவர்கள் காரில் ஏதோ ஒரு மொழியில் பாட்டுக் கேட்டவண்ணம் கைகாட்டிவிட்டுச் செல்வார்கள். விக்னேசும் பதிலுக்குக் கைகாட்டுவான்.

இந்த வெறுப்பிற்கு மத்தியிலும் சில நோர்வே நாட்டு இளம் பெண்கள் அவர்கள் வீட்டிற்கு வந்து போவதை விக்னேஸ் பார்ப்பான்.

அப்பெண்களை அந்த இளைஞர்கள் தங்கள் கார்களில் ஏற்றிச் சுற்றித் திரிவார்கள். இளம் சமுதாயத்தின் மத்தியிலும் வெறுப்பு விதைக்கப்பட்டது. எனினும் அதைப் புரிந்துகொண்டு துணிவாகச் சில இளைஞர்கள் கலந்து பழகினர். அதைப் பார்க்கும் போது விக்னேசிற்கு நம்பிக்கை உருவாகும். கறுப்பரோடு சேர்ந்து திரிவதற்காய் நவநாஜிகளிடம் அப்படியான சுதேச இளைஞர்கள் அடி வாங்குவதும் உண்டு. அதற்கும் அஞ்சா உள்ளங்களே கலப்பதற்குத் துணியும்.

அங்கே என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும் என்கின்ற ஆவலை விக்னேசாற் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் ஓட்டமும் நடையுமாக அந்த வீட்டை நோக்கிச் சென்றான்.

அவன் அங்கு போகும் போது கிட்டே நெருங்காதவாறு பொலீஸ் தடுப்பு நாடாக்களை இழுத்துவிட்டார்கள். அது விக்னேசை உள்ளே போகவிடாது தடுத்தது.

சிறிது நேரத்தில் அவசர அவசரமாக அந்தச் சகோதர்களின் தாயைக் கொண்டு சென்று அம்புலன்சில் ஏற்றினார்கள். அந்த அம்புலன்சும் மின்னல் வேகத்தில் அவ்விடத்தைவிட்டு அகன்று சென்றது.

மேலும் அதிகமான பொலீஸார் பொலீஸ் கார்களில் வந்து இறங்கினார்கள். புகைப்படங்கள், தடயங்கள் எனப் பல வேலைகளில் அவர்கள் எல்லாரும் மூழ்கிப்போயினர். மற்றைய குடும்ப அங்கத்தினருக்கு என்ன நடந்தது என்பது தெரியாத ஒருவித தவிப்புடன் விக்னேஸ் நின்றான். அது அவனுக்கு அடக்கமுடியாத அவஸ்தையாகத் தலையைக் குடைந்தது.

விக்னேஸ் அங்கு நின்று அலுத்துப்போனவனாய் வீட்டிற்குத் திரும்புவதற்கு எண்ணிய போழுது ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து அம்புலன்சில் ஏற்றினார்கள். விக்னேசால் அதை நம்பமுடியவில்லை. கூடிநின்றவர்கள் அதிர்ந்து போயினர். யாராலும் அதை நம்ப முடியவில்லை என்பதாக அவர்கள் முகங்கள் ஆச்சரியத்தில் விரிந்திற்று. தனது வீட்டிற்கு அருகே இப்படியும் நடக்குமா என்பதை விக்னேசால் கற்பனை செய்ய முடியாவில்லை. ஐந்து பேரையும் வெள்ளைப்பையிற் போட்டு மூடி அவற்றை ஏற்றியபின்பு பொலீஸார் மேற்கொண்டும் தடயங்கள் சேகரிப்பதில் ஈடுபட்டார்கள்.

விக்னேசுக்கு அதற்குமேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. அவன் தனது வீட்டை நோக்கி நடக்கலானான். மனதிற் பெரும் சங்கடமாகியது. கால்கள் தள்ளாடுவது போலத் தடுமாறினான். தொடர்ந்தும் அவனால் இப்படியும் நடக்குமா என்பதை நம்ப முடியவில்லை. அந்த உண்மையை ஜீரணிக்க முடியாமற் தவித்தான். தலை சுற்றுவதாய் அவஸ்தைப் பட்டான்.

அடுத்தநாள், பத்திரிகையாளர் மகாநாட்டில் பொலீஸ் அவர்கள் சுடப்பட்டு இறந்ததாகச் செய்தியை வெளியிட்டது. விக்னேஸ் ஒருகணம் திடுக்குற்றுப் போய்விட்டான். சம்பவம் நடக்கும்போது தான் கனவு கண்டதான உணர்வில் உடல் கூசிற்று. பொலீஸ் தாங்கள் குற்றவாளிகளை மிகவிரைவிற் தேடிப் பிடிப்போமென வழமைபோலச் சம்பிரதாயமாக உறுதியளித்தது.

இந்தக் கொலையை ஓட்டியும் ஒஸ்லோவில் ஊர்வலம் நடந்தது. அதிலும் ஊர்வலத்திற் சென்றவர்களைப் பொலீஸார் கடுமையாகத் தாக்கினார்கள். விக்னேசுக்குத் தோள்மூட்டில் அடி விழுந்தது. கொலைகள், ஊர்வலங்கள் பொலீஸாரின் கண்மூடித்தனமான தடியடி என்பன இப்போது ஒஸ்லோவில் வழமையான ஒன்றாகிவிட்டது. இந்த நிலையில் இனி எப்போதாவது மாற்றம் வருமா என்பது ஒருவருக்கும் புரியவில்லை. அதை எண்ணி விக்னேஸ் குழம்பினான். வேறு நாடுகளுக்கு ஓடுவது இதற்கு விடையாக அவனுக்குத் தெரியவில்லை. இலங்கைக்கு மீண்டும் திரும்பிப்போய் வாழமுடியாத அளவிற்கு அங்கு கதிர்வீச்சின் பாதிப்புத் தொடர்கிறது. மனிதர்களிலும் பெரிய மாற்றங்கள் ஒன்றும் நடந்து விடவில்லை. பல யுகங்களின் பின்பு முதன்முதல் உண்மையான அகதி என்றால் என்ன என்பதை அவன் இப்போது உணர்ந்தான். உடல் கூசியது. மனம் வெந்தது. அவமானம் தின்றது. இனி எங்கு போவது என்பது புரியாது திகைப்பு மேலிட்டது.

## 4.5 வண்ணம்

அன்று விக்னேஸ் கடிதமெடுக்க மறந்து போய்விட்டான். தொலைக்காட்சியிற் செய்திகள் முடிந்ததும் கடிதம் எடுப்பதற்குத் திறப்போடு வெளியே சென்றான். மெதுவாகத் தபாற் பெட்டியைத் திறந்து கடிதத்தை எடுத்தான். பின்பு அதைப் பூட்டிவிட்டுத் திறப்பை எடுத்துக்கொண்டு திரும்பினான். அப்போதுதான் அவன் அதைத் திடீரெனக் கவனித்தான். வீட்டின் முன்பாகச் சிவப்பாகப் பெயின்ற் ஊற்றப்பட்டு இன்னும் ஈரமாக இருந்தது. விக்னேசிற்கு ஒருகணம் உடம்பெல்லாம் ஆடிப்போயிற்று. அதன் அர்த்தம் என்ன என்பது

அவனுக்கு நன்கு புரியும். முதலில் பொலீஸக்குப் ∴போன் பண்ண எண்ணினான். பின்பு அந்த எண்ணத்தைக் கைவிட்டான். “எங்களை நாங்கள்தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்” என்பதாக நினைத்தான். எங்கும் வெறுப்பு நிறைந்து கிடக்கிறது. யாரையும் நம்ப முடியாது. பொலீசும் அப்படியே. பொலீசுக்கு ஆறுதலாக அறிவிப்பதென முடிவெடுத்தான். ஒரு கணம் மேற்கொண்டு என்ன செய்வது என்பது அவனுக்குப் புரியவில்லை. அடுத்த கணமே வீட்டில் இனி இருப்பது ஆபத்து என்பது அவனுக்குப் புரிந்தது. விக்னேஸ் அவசரமாய் உள்ளே ஓடிச் சென்றான். அங்கு என்ன செய்வது என்பது புரியாது அந்தரப்பட்டான். பின்பு திரியின் அறையை நோக்கி ஓடினான்.

பேய்போல வந்த அப்பாவின் செயலைத் திரியாற் சிலகணம் புரிந்துகொள்ள முடியவில்லை. பின்பு கட்டிலால் எழுந்து அப்பாவைப் பார்த்து “என்னப்பா பேய் கலைக்கிற மாதிரி ஓடியாறியள்?” எனக் கேட்டாள். “அவசரம் திரி... வெளிக்கிடு... கெதியா வெளிக்கிடு... வீட்டை எரிக்கப் போறாங்கள். மினக்கெடாமற் கெதியா வெளிக்கிடு” என்றான் விக்னேஸ். திரிக்கு ஒன்றும் விளங்கவில்லை. அப்பாவைப் புரியாது வியப்பாகப் பார்த்தாள். இதைப் பார்த்த விக்னேஸ் “என்ன திரி பேசாமல் மலைச்சுப் போய் நிக்கிறாய்?” என்றான். “பிறகு என்னப்பா வந்தியள்... வெளிக்கிடு வெளிக்கிடு எண்டுறியள்... என்ன விசயமெண்டு ஒழுங்காச் சொல்லுங்கோவன் அப்பா?” என்றாள். “ஐயோ நீயொருத்தியடி. எங்கட கதவுக்கு நேர பெயின்ற் ஊத்தி இருக்கிறாங்கள். இரவைக்கு வீட்டிக்கு நெருப்பு வைக்கப் போறாங்கள்” என்றான். “தெரியும் அப்பா. பெயின்ற ஊத்தினா நெருப்பு வைப்பாங்கள்” என்றாள் திரி. “அப்ப வெளிக்கிடு” என்றான் விக்னேஸ். “அதுக்கு நாங்களேன் அப்பா வீட்ட விட்டு ஓடோணும். பொலீசுக்குச் சொல்லிப்போட்டு என்ன நடக்குதெண்டு இருந்து பாப்பம்” என்றாள் திரி. விக்னேசுக்கு கோபம் வந்து. “அடி அறப்படிச்ச விசரி, இப்ப பொலீஸிலயே ‘ரசிஸ்ற்’ பிடிச்சவனெல்லாம் தன்ர குணத்தை வெளிப்படையாக் காட்டத் தொடங்கீட்டாங்கள். நீ அடிச்சுச் சொன்னாலும் வீடு எரிஞ்சபிறகுதான் இங்க வருவாங்கள். யாரும் கேட்டாத் தங்களுக்குத் தலைக்குமேல வேலை இருந்ததெண்டு சொல்லுவாங்கள். நீ இந்த வீட்டுக்க கிடந்து வெந்து சாகப் போறியே?” என்றான். “சரியப்பா அப்ப நான் வெளிக்கிடுகிறன். எதை எடுக்கிறது எதை விடுகிறது எண்டுதான் எனக்குத் தெரியேல்ல” என்றாள் திரி. “இனி இல்லை எண்டு முக்கியமானதை மட்டும் எடுத்து ஒரு பாக்கில போட்டுக்கொண்டு ஓடிவா” என்றான் விக்னேஸ்.

திரி வெளிக்கிட்டு வெளியே வருவதற்கு நீண்டநேரம் பிடித்தது. பல மணித்தியாலங்கள் செல்வதான இம்சையில் விக்னேஸ் துடித்தான். அவள் கையில் ஒரு பாரமான பை வைத்திருந்தாள். அதைவிட முதுகில் ஒரு பெரும் மூட்டை ஏற்றியிருந்தாள். விக்னேஸ் அவளிடம்

இருந்து அதைப் பிடுங்கிக் காருக்குள் எறிந்தான். பின்பு வெளிக் கதவைப் பூட்டிவிட்டு அவசரமாக வந்து காரில் ஏறி அமர்ந்தான். சிறிது நேரம் யோசித்துவிட்டுப் பாலனின் வீட்டை நோக்கி வாகனத்தை ஓட்டிச்சென்றான்.

பாலன் விக்னேஸ் கூறிய கதையைக் கேட்டு முதலில் அதிர்ந்து போனான். பின்பு அவன் இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்ட பின்பு இன்னும் சிலரையும் கூட்டிக்கொண்டு காரில் விக்னேஸ் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்றான். அங்கு காத்திருந்து யார் நெருப்பு வைக்கிறார்கள் என்பதைப் படம் பிடித்தால் நல்லதென அவன் பிடிவாதம் பிடித்தான்.

விக்னேசுக்கு அந்த எண்ணம் அறவும் பிடிக்கவில்லை. ஏற்கெனவே கிரேக்கத்தில் படம்பிடித்து அவன் பட்ட அனுபவங்கள் நன்கு ஞாபகம் வந்து போயின. "எதுக்குத் தேவையில்லாத விசயம் பாலன்" என மழுப்பினான். "இல்லையண்ண இப்பிடியே விட்டா ஒவ்வொரு வீடா கொழுத்துவாங்கள். அதுக்கு இண்டைக்கு ஒரு முடிவு கட்டோணும்." என்றான் பாலன். "எனக்கும் அது விருப்பம்தான், ஆனா நாங்கள் நினைக்கிறமாதிரி நோர்வே இப்ப இல்லையெண்டு உங்களுக்குத் தெரியும்தானே? தெருவால நடுச்சாமத்தில போனாலே பொலீசே சந்தேகத்தில எங்கள மறிப்பாங்கள். நாங்கள் தங்களப் படமெடுக்கிறம் இல்லாட்டி பின்னால வாறம் எண்டு தெரிஞ்சா நவநாஜிகள் எங்களைக் கொலை செய்வாங்கள். பேசாமல், வீடுதானே எரியுது எரியட்டும் எண்டு விடவேண்டியதுதான். அதுதான் எல்லாருக்கும் நல்லது. நாங்கள் இங்க வரேக்க வீட்டைக் கொண்டே வந்தனாங்கள்? அதேபோல வீட்டைக் கொண்டே போகப்போறம்? வீடு எரிஞ்சா இன்சூரன்ஸ் தரும். உயிர் போனால் ஒருத்தரிட்டையும் வாங்க ஏலாது" என்றான் விக்னேஸ். அவனைக் கவலையும் பயமும் கௌவியது.

"இப்பிடிப் பயந்தாங்கொள்ளியா இருந்தம் எண்டா அவங்கள் கொப்பில ஏறிக் கூத்தாடுவாங்கள் அண்ண. அதுதானே சொல்லுவினம் குட்டக் குட்ட குனியிறவனும் மோடன் குனியக் குனிய குட்டுறவனும் மோடன் எண்டு. உதுக்கெல்லாம் வெட்டு ஒண்டு துண்டு ரெண்டு எண்டு முடிவு காணவேணும். இல்லாட்டி வீணா நெடுக இரத்தம் சிந்தவேண்டி வரும்" என்றான் பாலன் விடாப்பிடியாய்.

"நீர் விளங்காமற் கதைக்கிறீர். எங்கள இனிப் போராட உந்த அரசுகள் விடப்போறேல்ல. எங்கட உயிரையாவது மிச்சமா விடுங்கோ எண்டு கெஞ்ச வைப்பாங்கள். அவங்கட அரசியல் அப்பிடித்தான்

போகுது. ஒரு காலத்தில அவமானமாய்த் தெரிஞ்சதெல்லாம் இப்ப அவங்களுக்கு நியாயமாய்ப் போச்சுது. இனி நரவேட்டைதான் அவங்கட பொழுது போக்கா இருக்கும்” என்றான் விக்னேஸ்.

“அண்ண நீங்கள் தேவையில்லாமற் பயப்பிட வேண்டாம். நாங்கள் ஒண்டும் செய்யத் தேவையில்லை. என்ன செய்யினம் எண்டதைக் காருக்க இருந்து படம் எடுப்பம்” என்றான் பாலன்.

“அவள் திரி ஏதென்ஸில எடுத்த படத்திற்கு என்னை ஒஸ்லோவில கொலைசெய்யப் பார்த்தவங்கள் தம்பி. அது உனக்கும் தெரியும். உது இப்ப தேவையே? அதுவும் உங்க நவநாஜிகளில ‘பாட் போய்ஸ்’ தான் இப்ப மும்முரமாய்த் திரியிறாங்கள் எண்டு ஒரு கேள்வி. அவங்கள் படு மோசமாய் அடிப்பாங்களாம். கொலை செய்வாங்களாம். எதுக்கும் ஆழமறிஞ்சு காலை விடோணும். சும்மா போய் மாட்டிப்போட்டு முழிக்கக் கூடாது. அவங்களுக்கு இப்ப வேட்டையாடுறதுதான் தம்பி வேலை. நாங்கள் ஏன் அவங்கட வழியில போய்நிண்டு இரையாவான்? சொல்லும் பாப்பம்?” என்றான் விக்னேஸ்.

“அண்ணை எங்களுக்குத் தைரியம் ஊட்டவேண்டிய நீங்களே இப்பிடிப் பயப்பிடுத்திறது சரியில்ல. நாங்கள் அங்க போய்க் காருக்க இருந்து என்ன செய்யுறாங்கள் எண்டதை வீடியோ எடுத்து வருவம். போகேக்க மோகனையும் றூபனையும் துணைக்குக் கூட்டிக்கொண்டு போவம். சும்மா பயப்பிடாதேங்க அண்ணை. கைகாவலுக்கு எங்கட தமிழ் ஆயுதத்தைக் கொண்டு போவம். மிஞ்சிப்போனா அதைப் பாவிச்சுப்போட்டுத் தப்பி வரவேண்டியதுதான்” என மீண்டும் மீண்டும் பாலன் தனது திட்டத்தோடு அடம்பிடித்தான்.

“அதை நம்ப முடியுமே? காத்து எந்தப் பக்கம் அடிக்குமோ தெரியாது? அவங்கள் எந்தப் பக்கத்தாலா வருவாங்களோ தெரியாது? சரி இவ்வளவு தூரம் நீ துணிஞ்சு நிக்கிறாய் என்னதான் நடக்குதெண்டு பார்ப்பம்” என்றான் விக்னேஸ்.

விக்னேசுக்கு அந்த நினைவுகள் ஒருமுறை வந்து போயின. அவன் இளமையாக இருந்த காலம் அது. அப்போது ‘டிஸ்கோ’ என்கின்ற களியாட்டு நிலையங்களுக்குத் தமிழ் இளைஞர்களும் செல்வது வழக்கம். அங்கு ஏதாவது பிரச்சனை வந்தால் அனேகமாகத் தமிழர் பின்வாங்க வேண்டியே வரும். சிலவேளை அவர்கள் துரத்தியவண்ணம் வீட்டிற்குள் வந்தால் மிளகாய்ப்பொடிதான்

ஆயுதமாகப் பாவிக்கப்படுவது உண்டு. மிளகாயை வாயில் வைப்பதையே வெறுப்பவர்கள் கண்களில் அது பட்டால் எப்படி இருக்கும்? அவர்கள் கண்ணெரிவோடு கண்தெரியாது கெஞ்சிக் கூத்தாடியது அழியாத நினைவுகளாக இன்றும்.

*

அன்று இரவு ஒரு மணிே பாலப் பாலன், விக்னேஸ், மோகன், றூபன் ஆகிய நால்வரும் பாலனின் காரிற் புறப்பட்டனர். அவர்கள் முதலில் விக்னேஸ் வீட்டிற்குச் சென்றார்கள். அவர்களிடம் இரண்டு வீடியோ கமராக்களும், ஒரு பிளாஸ்ரிக் போத்தலில் தமிழ் ஆயுதமும் ஆயத்தமாக இருந்தன. அவர்கள் விக்னேஸ் வீட்டிற்கு அருகாமையில் வந்தும் அங்கு வாகனத்தை நிறுத்தாது அவன் வீட்டைக் கடந்து தொடர்ந்தும் ஒட்டிச் சென்றார்கள். எந்தவித அசம்பாவிதமும் அங்கு நடக்கவில்லை என்பதை அவர்களால் அப்போது பார்க்கக்கூடியதாக இருந்தது. பின்பு தங்களது காரை ஒரு மறைவான இடத்தில் நிறுத்தினார்கள். கமராக்களைத் தயார் செய்து வைத்துக்கொண்டு, நாஜிகளுக்காகக் காத்திருந்தார்கள். அப்படிக் காத்திருக்கும் போது மோகனும், றூபனும் எந்தக் கவலையும் இல்லாதவர்களாகப் பின் இருக்கையில் சாய்ந்து குறட்டை விட்டார்கள். அது பாலனுக்குச் சற்று எரிச்சலைத் தந்தாலும் அவன் ஒன்றும் பேசவில்லை.

“மனிதன் எப்போது மனிதத்தை இழக்கிறானோ அப்போதில் இருந்தே அவன் மற்றைய மனிதர்களை அல்லது அவர்களின் வளங்களை வேட்டையாடத் தொடங்குகிறான். அப்படிப் பார்க்கும்போது பல மனிதர்கள் மனிதத்தோடு பிறப்பதுமல்ல வாழ்வதுமல்ல என்பது போல தோன்றுகிறது. வரலாறோ நிகழ்காலமோ அவ்வடிப்படைக் குணத்தை அவனில் இருந்து மாற்றவில்லை. மனிதன், தான் ஒரு விலங்கு என்பதை எப்போதும் தப்பாது நிருபித்து வருகிறான். அவனது நாக்கு மாத்திரம், மொழி என்கின்ற மந்திரக்கோலால், இசங்கள் என்னும் மாயப் பொடிகளைத் தூவுகிறது. மற்றைய மனிதர்களை அதன்மூலம் மயக்கப் பார்க்கிறது. அந்த இசங்கள் பலருக்கும் விளங்காத வெற்று வார்த்தைகளாக வீணே காற்றில் அலைந்து செல்கின்றன. மனிதனின் மறுமுகம் கோரமானது. அது அனைவருக்கும் விளங்கும் எளிதான வார்த்தையில், விசங்களைப் புதைக்கிறது. அறுவடையாக மனித உயிர்களைப் பறிக்கிறது. தனக்குத் தனக்கு எனப் பறக்கும் மனிதர்களைத்தான் யதார்த்தம் காட்டுகிறது. அதில் டார்வினின் கோட்பாடும் ஹிட்லரின் செயற்பாடும் எப்பொழுதும் முகம் காட்டுகிறது” என்பதாக விக்னேஸ் எண்ணினான்.

நவநாஜிகளுக்காகக் காத்திருந்தவர்கள் கண்கள் பார்த்துப் பார்த்து சலித்துப் போயின. கவனம் வேறு திசையிற் திரும்பத் தொடங்கிய அந்தக் கணத்தில், ஒரு வாகனம் சடுதியாக வந்து நின்றது. அதில் இருந்து நான்கு பேர் இறங்கினார்கள். அதைப் பார்த்த விக்னேசும் பாலனும் அவர்களை வீடியோ எடுக்கத் தொடங்கினார்கள். வந்தவர்களில் ஒருவன் எதேச்சையாக அதைக் கண்டுவிட்டான். அதையுணர்ந்து விக்னேஸ் கதிகலங்கிச் சித்தப்பிரமை பிடித்தவன் போல ஒருகணம் ஸ்தம்பித்தான். பின்பு சமாளித்த வண்ணம் பின்சீற்றில் இருந்தவர்களை "டே எழும்புங்க... எழும்புங்க" எனக் கத்தி எழுப்ப முயன்றான். அதே வேளை அவன் படம் எடுப்பதையும் தொடர்ந்தான். மோகனும் றூபனும் எழுந்து 'என்ன' என்பது போல விழித்தனர். "மிளகாய்த்தூளை எடுத்து வைச்சிருங்க" என்று விக்னேஸ் கூறிவிட்டு அவர்களைத் தொடர்ந்தும் படமெடுத்தான். பாலனுக்குப் பயம் வந்துவிட்டது. கமராவை வைத்துவிட்டுக் காரை ஸ்ராட் செய்தான்.

இவர்கள் காரை ஸ்ராட் செய்வது தெரிந்தவுடன் 'பேஸ்பால்பற்'றுடன் ஓடிவந்த நாஜிகளில் ஒருத்தன் காரின் பின் கண்ணாடியில் அடித்தான். அதற்குமேற் தாமதியாது பாலன் காரை றேஸ்செய்து எடுத்தான். பின்கண்ணாடி நொருங்கிக் கற்கண்டுத் துகள்களாய் உள்ளே கொட்டியது. அதனால் உண்டான ஓட்டையால் மோகனைப் பிடித்து இருவர் இழுக்க முயன்றனர். றூபன் மிளகாய்த் தூளை அள்ளி அவர்கள் மூஞ்சையில் அந்த ஓட்டை வழியே அடித்தான். அவர்கள் மிளகாய் தூள் எரிவு தாங்கமுடியாது நின்று தெருவில் கூத்து ஆடினார்கள். றூபன் "இனி வந்தா கண்ணெரிச்சல் மட்டும் இல்ல கரைச்சு பருக்கி மற்ற எரிச்சலையும் தருவம்" என்றான்.

முன்னுக்குக் காரை மறித்த வண்ணம் நின்றவனைப் பாலன் மெதுவாக காராற் தள்ளினான். சிறிது சிறிதாய் அதன் வேகத்தை அதிகரிக்க, பயந்துபோன அந்த நாஜி திடிரென விலகினான். சுதந்திரம் கிடைத்ததான உணர்வில் இவர்களின் வாகனம் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது.

இவ்வளவும் நடந்து முடியும்போது அங்கிருந்த வீடுகளில் இருந்து பலர் எட்டிப் பார்ப்பதை நாஜிகள் அவதானித்தனர். அது அவர்களுக்கு வெட்கமாயும் அவமானமாயும் போயிற்று. தங்கள் அலுவலைச் சில கறுத்தப்பண்டிகள் குழப்பி விட்டார்கள் என்னும் ஆத்திரம் பொங்க அவ்விடத்தைவிட்டு நகர்ந்து சென்றார்கள்.

*

அடுத்தநாட் காலை வீட்டிற்கு வந்த விக்னேஸ் மண்ணெண்ணை மற்றும் அதிவீச்சாக நீர்பாய்ச்சியடிக்கும் இயந்திரம் ஆகியவற்றைப் பாவித்து அந்த நிற அடையாளத்தை அழித்தான். அதன்பின்பு தபாற் பெட்டியில், கதவில் இருந்த தங்கள் பெயர்களை அகற்றினான். ஒரு தபாற் பெட்டியெண்ணைத் தபால் அலுவலகத்தில் எடுத்து, அங்கு சென்று கடிதங்களை எடுத்து வந்தாற் பாதுகாப்பாய் இருந்திருக்கும். அந்த வசதியைத் தபாலகம் நிறுத்தியது பெரும் சிக்கலைத் தந்தது.

# 5

## 5.1 ஜிப்சிகள்

“மாக்சிசம், மாவோயிசம், முதலாளித்துவம் என்கின்ற மனிதம் காக்கமுடியாத உக்கிப்போன இசங்களால் உலகு கூறுபட்டுக் கிடக்கிறது. இந்த இசங்களில் பெரும் பிழையில்லாவிட்டாலும் அதைக் கையில் எடுத்தவர்கள் மனிதத்தோடு கையாண்டதாக வரலாறு கிடையாது. இவர்கள் தத்துவங்கள் பேசுவது மற்றைய மனிதர்களை ஏமாற்றி அடக்கி ஆள்வதற்கு என்பதாகிவிட்டது. இந்த இசங்களைவிடத் தேசியவாதம் என்கின்ற போதை பல அரசியல் வாதிகளுக்குத் தேவைப்படுகிறது. தமது வங்குரோத்துக்களை மறைத்து... மக்களை உணர்ச்சியின் உச்சத்திற்கு இழுத்து வந்து... அநீதியை நீதியாக்கி... அதை அதிகமானோர் நம்பும்படி செய்யத் தேசியம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அந்த தேசியம் என்கின்ற நச்சுப் போதனை உலகைப் பலமுறை அழித்திருக்கிறது. மக்களை மந்தைகள் ஆக்குவதற்குத் தேசியத்தைவிடச் சிறந்த இசம் வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தேசியத்திற் கட்டுண்ட மக்கள் கேள்விகேட்காது எதற்கும் தலையாட்டுவார்கள் என்பதை மீண்டும் மீண்டும் வரலாறுகள் நிருபித்துக் காட்டியிருக்கின்றன.

அதிதீவிர வலதுசாரிகளின் மூச்சே கடும்தேசியமாகிற்று. அத்தனை அரசியல் அணிகளையும் பின்தள்ளி, அது மக்களை வெறியோடு ஆக்கிரமித்தது. பதவியென்னும் மகுடம் சூடிக்கொள்ளத் தேசியத்தைப் போல் உற்ற துணை ஏதும் உண்டோவென அது அகங்காரமாய் வினாவி நின்றது. தமது அரசியற் பலவீனங்களை மறைப்பதற்கு, அப்பாவிகளை வெறியேற்றுவது காலம் காலமாக

உலகமெங்கும் பாவிக்கப்படுகிறது. அதை நியாயம் என்று கருதும் சுயநலவாதி மற்றைய மனிதர்களின் துன்பத்தையோ, இழப்பையோ, அழிவையோ எண்ணிக் கவலைப்படப் போவதில்லை. மனிதத்தைத் துறந்து மனோவருத்தத்தில் அழுந்தும் அரசியல்வாதியால்... சுயநலம் மட்டுமே கண்ணாய் இருக்கும் அரசியல்வாதியால்... தேசியம் என்னும் நச்சுத் தீயைக் குற்ற உணர்வில்லாது பரப்பி, அதிற் சூடுகாயமுடியும். இப்போது அப்படியான அரசியல்வாதிகள் உலகெங்கும் பல்கிப் பெருகிவிட்டனர்.

தேசியம் என்னும் நச்சுப் போதையின் மூலம் இனவெறியை எரியவிட்டுக் குளிர்காயும் அரசியல்வாதிகள் இருக்கும் தேசத்திற் பிறப்பதுகூட மனிதத்தை நேசிப்பவனுக்கு ரணமாகும். அந்தத் தேசத்திற் பிளவுகளும், இரத்தக்கறை படிந்த வரலாறும் என்றும் நிலையாகும். அனைத்து மனிதப் பண்பாடுகளையும் மீறி ஆயிரக்கணக்கில் அல்லது மில்லியன் கணக்கில் மக்களின் உயிரை எந்தவித குற்ற உணர்வும் இன்றி அது பறிக்கும். இரத்தம் குடிக்கும் அசுரத்தின் முகமாய்த் தேசியம் உருவேறி நிற்கும். சமுதாய டார்வின்சியம் பற்றி... பலமானவனே உலகத்தில் வாழத் தகுந்தவன் என்பது பற்றி, அந்தத் தேசியவாதிகள் எண்ணுவதோ கதைப்பதோ அவர்களுக்கு அப்போது தப்பாகப் புரிவதில்லை. அதற்கு எதிராக எண்ணுபவர்களை எதிரிகளாக்கி, பின்பு அவர்களை இல்லாது ஒழிப்பார்கள். மனித சமுதாயத்தில் இப்படியான எண்ணங்கள் அழிந்துவிடாது என்றும் நிலைத்திருக்கிறது. அதை நேரம் வாய்க்கும்போது மெல்ல உலவவிட்டுச் சூடுகாணும் பக்குவம் புரிந்தவர்கள், அதன் பாதகம் பற்றிய மனச்சாட்சி இல்லாதவர்களாக இருக்கவேண்டும்.

அதிதீவிர வலதுசாரிகளினதும், கடும் தேசியவாதிகளினதும் ஆட்சியில் தனிமனித வழிபாடு எப்போதும் முன்னிற்கும். அவர்கள் சிலவேளைகளில் வருமான வரிகளை நன்கு குறைத்துச் சிறுபான்மையான முதலாளிகளுக்கும், பணக்காரருக்கும் பணிவிடை செய்வார்கள். பெரும்பான்மையான ஏழைகளும் நலிவுற்றவர்களும் மேலும் மேலும் துன்பத்தில் வீழவேண்டி வரும். அதற்கு ஒரு காரணம் கண்டுபிடித்துத் தங்களைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் அவர்கள் இறங்குவார்கள்.

அவர்கள் அதற்குப் பலியாக மாற்று இனங்களை அல்லது மாற்று அரசியற் கொள்கை உள்ளவர்களை இழுப்பது ஒன்றும் புதினமாக அமையாது. வரலாற்றில் அது தொடர்கதை. என்றும் மக்களது ஞாபகத்தில் அழியாது இருக்க வேண்டியவை. அது மக்கள் மனதில் இருந்து அழிந்ததால் இன்று அவலத்தை வரவேற்கிறது.

சிலவேளைகளில் அதிதீவிரவலதுசாரி அரசியல்வாதிகள் தங்களது மாயப் பேச்சால் மீண்டும் மீண்டும் வரலாற்றைத் திருத்தி எழுதச் செய்கிறார்கள். அந்தத் துன்பியலில் இருந்து மனிதம் தொடர்ந்தும் விடுபடுவதாக இல்லை.

வலதுசாரிகள் தங்கள் சுயநலத்திற்காய் எதுவும் செய்வார்கள் என்பதைச் சற்றுக் காலத்திற்கு முன்பு பிரஞ்சு நாட்டு ஜனாதிபதியாக இருந்த சர்கோசி நிருபித்தார். அவர் ஆவணி ஆறாம் திகதி இரண்டாயிரத்துப் பத்தாம் ஆம் அண்டு றொமேனி மக்களைப் பிரான்சில் இருந்து திருப்பி அனுப்பிவைத்தார். அப்போது உலகம் வாயடைத்துப்போய் நின்றது. சர்க்கோசிக்குத் தேவைப்பட்டது சொந்தநாட்டு வாக்காளரின் பெருவாரியான ஆதரவு. அதற்காக மனிதம் அவஸ்தைப்படுவதை அவர் ஒரு பொருட்டாய் எடுத்துக் கொள்ளவில்லை. இரண்டாவது உலகமகா யுத்தத்தில் ஹிட்லரை ஆதரித்த மக்களுக்கும், இன்று சர்கோசியை ஆதரிக்கும் மக்களுக்கும் எண்ண அடிப்படையில் என்ன வித்தியாசம் கண்டுபிடிக்க முடியும் என்பது பலருக்கு விளங்கவில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தின் அல்லது நாட்டின் சுயநலத்தில் மனிதம் நசிக்கப்படும். அது அவர்களுக்குச் சரியாக அமையும். அதுவே மனித குலத்திற்கோ அல்லது மனச்சாட்சி உள்ள மனிதனுக்கோ சரியாக அமைந்துவிடாது." என்பதாக விக்னேஸ் நீண்டதொரு தத்துவ விளக்கம் பற்றி எண்ணினான்.

"ஐரோப்பாவில் இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டில் இப்படி ஒரு நிகழ்வு நடந்தது என்பதைப் பலரால் நம்பமுடியவில்லை. அப்போது ஐரோப்பிய ஒன்றியம் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. அவர்கள் அதைப் பார்த்து அதிர்ந்தார்கள். அதே ஐரோப்பிய ஒன்றியமே ஒருநாள் அதிதீவிர வலதுசாரிகளின் ஆளுமைக்கு உட்படலாம் என்கின்ற ஐயம் சிலரிடம் முளைவிட்டது. அப்படி நடந்தால், பின்பு என்ன நடக்கும் என்கின்ற கற்பனை பயங்கரமானது. அவர்கள் அதைப் பயத்தோடு மனதிற்குள் ஒளித்து வைத்தார்கள். மாற்றங்கள் கதவைத் தட்டி அனுமதி பெற்று வருபவை அல்ல. எப்போதுவரும் எப்படி வரும் என்கின்ற கேள்வியோடு மனிதன் திகைக்கும்போதே, சுனாமியாக வந்து அவை தாக்கிவிடும். ஐரோப்பாவில் ஒரு சுனாமி, சத்தம் இல்லாமல் வெகுவிரைவில் வரும் என்பது பற்றி எவரும் அப்போது அறிந்து இருக்கவில்லை.

ஐரோப்பாவின் ஒரு நாட்டில் இருந்து வந்த ஆபத்தே பல கண்டங்களை இரண்டாவது உலகமகா யுத்தத்திற் பிடித்து உலுக்கியது. அதில் இந்த உலகம் கடுமையாக இரத்தம்

சொரிந்தது. மில்லியன் மில்லியனாக அப்பாவிகளின் உயிர்கள் பலியாகின. இன்று ஒரு கண்டமே ஒன்று கூடிவிட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் வளர்ச்சியுற்று நிற்கிறது. அது ஒருநாள் உலக அமைதிக்கு ஆபத்தாய்ப் புறப்பட்டால் யாரால் எப்படித் தடுக்கமுடியும்? அதை நிருபிக்க வேண்டிய நாள் வந்ததில் உலகு நடுங்கியது.

இது ஐரோப்பாவில் மட்டும் நடக்கும் ஒரு அநியாயம் இல்லை. உலகில் எந்தப் பாகத்திலும் இது நடைபெறலாம். இலங்கையிற் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களுக்கு அது நடந்தது. சொந்த நாட்டிலேயே அவர்கள் தமிழராய்ப் பிறந்ததால் கொழும்பில் வாழத் தகுதியற்றவர்கள் என்கின்ற அடிப்படையில் இடம் மாற்றப்பட்ட நிகழ்வு ஒரு காலத்தில் நடந்தேறியது. தீவிரவாதிகளையோ பயங்கரவாதிகளையோ பிடிப்பதற்கு ஒரு நாட்டின் பொலீஸ் அல்லது உளவுப் படையின் திறமை மெச்சும்படியாக அமைய வேண்டும். அதை ஓரளவிற்கு மேற்கு நாடுகளால் செய்ய முடிகிறது. அடித்தால் நெத்தியடி என்பது போலப் பிடித்தாற் பயங்கரவாதிகளாய் இருக்கவேண்டும். இலங்கையில், தமிழன் என்றாலே பயங்கரவாதி என்கின்ற தப்பான அபிப்பிராயம் பெரும்பான்மையினரின் இரத்தத்தில் ஊறிப்போய்விட்டது. துட்டகைமுனுவின் காலில் வந்த கரவு ஆயிரம் ஆயிரம் உயிர்களைக் காவுகொண்டது. இன்று தமிழினம் ஈடாடித் தவிக்கின்ற போதும் அது தணியவில்லை. இன்னும் அத்துமீறல்கள்... பழிவாங்கல்கள்...

ஆனி மாதம் ஏழாம் திகதி இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு தமிழர்கள் என்பதற்காக அவர்களைக் கொழும்பில் வைத்துப் பிடித்துப் பேருந்துகளில் ஏற்றி இலங்கை அரசு இடம்மாற்றியது. இலங்கையின் சீழ்வடிந்த கோரமான முகத்தில் மேலுமொரு ஆழமான வரலாற்று வடு மாற்றமுடியாது மறக்கமுடியாது பதிந்தாகிற்று. பதிவுகள் பற்றிப் பௌத்த புத்திரர்கள் கவலை கொள்ளவில்லை. தமிழன் என்பதற்காய்க் கொல்லப்படும் நாடொன்றில் உரிமைகளை எதிர்பார்ப்பது எங்கள் மடமையே. அகிம்சை தோற்று... ஆயுதம் வந்து... ஆயுதம் தோற்று... இனி வருவது என்ன? பௌத்தர்கள் தருவது என்ன? அடக்குமுறை?

யுத்தங்களைச் சாட்டி மனிதத்தை இழந்து நாடுகள் சுவாஸ்திகா நீண்டகாலத்திற்குத் தங்கள் முகங்களை இழந்தவர்களாய் இருக்கவேண்டும். நாஜிகளாற் பறிபோன ஜேர்மனி முகங்களை அவர்கள் திரும்பப் பெற்றுவிட முடியவில்லை. ஜேர்மனியர்கள் கொழுத்தினார்கள், கொன்றார்கள், கற்பழித்தார்கள் என்று இன்றும் அதனாற் பாதிக்கப்பட்ட நாடுகளிற் கூறப்படுகிறது. அவர்கள்

பேய்களுக்குச் சமனாகப் பார்க்கப்படுகிறது. இது மனிதத்தை இழக்கும் அனைத்து நாட்டிற்கும் பொதுவான முத்திரை.

குறுகியகால அரசியல் ஆதாயம் தேடும் சுயநலவாத அரசியல்வாதிகள் அந்த உண்மைகளை அவசர அவசரமாக அடக்கம் செய்து, தமது பிரச்சாரத்தாற் சிலகாலம் அதற்குக் கல்லறை கட்டுகிறார்கள். கல்லறைகளும் ஒருநாள் விழித்துக்கொள்ளும். அப்போது அசிங்கங்கள் அங்கிருந்து மனிதம் தேடிப் புறப்படும்.

பிரான்ஸ் மீண்டும் இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மிகவும் வலுக்கட்டாயமாக ஜிப்சிகளை றுமேனியாவுக்கும் வேறு அவர்களது சொந்த இடங்களுக்கும் திருப்பி அனுப்பியது. இது றுமேனியாவை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைத்த பின்பு ஜிப்சிகளை மட்டும் அதன் பிரசைகள் இல்லை என்பதான செயற்பாடாகிற்று. அந்த உரிமை மறுப்பிற்கு அவர்கள் ஜிப்சிகள் என்கின்ற ஒரினத்திற் பிறந்ததே காரணமாகியது. வரலாற்று ரீதியாக நீண்டகாலமாகத் தண்டிக்கப்பட்ட மக்களைத் தொடர்ந்தும் தண்டிக்கும் செயலாக அது தொடர்ந்தது. அதை பிரான்ஸ் செய்வது ஐரோப்பியர்கள் என்று மார்புதட்டிவந்த பாரம்பரியத்திற்கு மிகவும் கேவலமாக, இழுக்காக அமைந்தது.

இந்த ஜிப்சிகள் என்கின்ற நாடோடிகள் இந்தியாவின் இராஜஸ்தான் பகுதியில் இருந்து கி.மு அறுநூறாம் ஆண்டுகள் தொடக்கம் மத்திய இன்டிஸ் காலத்தில் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளை வந்தடைந்தார்கள். இவர்களைத் தொடக்கூடாத ஹரிசனராக ஐரோப்பியர் பார்த்ததோடு, அடிமைகளாகவும் வைத்திருந்தார்கள். இந்த ஜிப்சிகள் பலவகையான துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்ததோடு, அவர்களுக்குத் திருடர்கள், அழுக்கானவர்கள் என்கின்ற அவப்பெயரும் சூட்டப்பட்டு வந்தன. சிலவேளை கூர்ப்பு என்பதுகூட விசித்திரமாக இருக்கிறது. ஒரே இடத்தில் இருந்து சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புறப்பட்டவர்கள், அதே இடத்தில் இருந்து சில ஆயிரம் ஆண்டுகள் பின்பு வந்தவரை அடிமைகளாக, தீண்டத்தகாதவராய்ப் பார்ப்பது விசித்திரமாகவே தொடர்கிறது. அதுவே வெள்ளைக்கும், கறுப்புக்குமான விவகாரமாய்ப் போயிற்று.

பிரான்ஸ் ஜிப்சிகளைத் திருப்பி அனுப்புவதைப் பார்த்து இத்தாலி, ஸ்பெயின், கிரேக்கம் ஆகியனவும் அவர்களை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பினர். ஜிப்சிகள் ஒரு நாடோடிகள். ஒரு இடத்தையே

சுற்றிச் செக்குமாடாய் வாழ்வது அவர்களுக்குப் பிடிக்காது. நாடோடியாய்த் திரிந்த கால்கள் ஓயாது. ஒரே இடத்தில் நிலைத்திருக்க ஒத்துக்கொள்ளாது.

வலுக்கட்டாயமாகச் சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஜிப்சிகள் மீண்டும் சிலகாலத்திற் திரும்பி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தார்கள். இதனால் பிரான்சின் அதிதீவிரவாத அரசு அதிக கோபம்கொண்டது. அவர்களாற் தொடர்ந்தும் அகதிகளின் வரவை முற்றுமாக நிறுத்த முடியாவில்லை. அத்தோடு ஜிப்சிகளின் மீள்வரவையும் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் ஏற்பட்ட வெறுப்பு அவர்களைச் சீற்றம் கொள்ள வைத்தது.

அந்த அதிதீவிரவாத வலதுசாரி அரசு இரவோடு இரவாக 'திறேபேசன்'(Trabesson) பகுதியைக் கையகப்படுத்தி, அங்கு பெரிய தடுப்பு முகாங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட முகாங்களில் ஜிப்சிகளை அடைத்து வைத்தனர். அதைப் பார்க்க புதிய 'ஹொலகோஸ்ற்' பிரான்சில் வந்துவிட்டதான ஒரு தோற்றத்தை அது உண்டுபண்ணியது. இங்கு சாகும் வரைக்கும் வேலை செய்வதோ, உணவே இல்லாது வாடுவதோ தவிர்க்கப்பட்டது. அது அதில் அடைத்து வைக்கப் பட்டிருந்த பல ஜிப்சிகளுக்கும் நிம்மதியைத் தந்தது. அவர்களின் சுதந்திரம் மட்டுமே தற்போது பலியாகியது. இரண்டாம் உலகமகா யுத்தத்தில் நடந்தது போலச் சுதந்திரமும் உயிரும் மொத்தமாகப் பலியாகவில்லை என்பது அவர்களுக்கு ஒருவித நிம்மதியை அந்த இக்கட்டிலும் தந்தது. அதிக மக்களை ஒரிடத்தில் அடைத்து வைத்ததாற் தொற்று வியாதிகள் பரவின. சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டன. இந்த அசௌகரியங்களை அவர்கள் சகிக்க வேண்டியதாகிற்று. அது சாவின் எண்ணிக்கையை அதிகரித்தது. அதைப்பற்றி மகிழ்வு கொள்ளுமளவிற்கு உலகில் சில மனிதர்கள் விகாரம் கண்டிருந்தனர். இதுவே அவர்களின் மறைமுகத் திட்டமாய் இருக்குமோ என்கின்ற ஐயம் மெல்ல எழுந்தது.

இப்படி முகாங்கள் அமைத்து மனிதர்களை அடைப்பது இப்போது உலகத்தால் ஏற்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. சித்திரை இருபத்தி மூன்றாம் திகதி இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளரின் வருகையால் இலங்கையில் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவர முடியவில்லை. அந்த உதாரணம் இன்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மிகவும் துணிவைத் தந்தது. எந்தப் பொருளாதார முதுகெலும்பும் இல்லாத ஒரு வறிய நாட்டால், இந்தியாவின் அழுக்குச் சட்டையைப் பிடித்துக்கொண்டு உலகத்தை எதிர்த்து நின்று தான் நினைத்ததை

செய்ய முடியும் என்றால், உலகத்தில் காலகாலமாக பணக்கார நாடாக, காலணி ஆதிக்கம் பரப்பிய பெரும் வல்லரசுகளான நாடுகள் எதற்குப் பயப்பட வேண்டும்? என அவர்கள் எண்ணினார்கள். அந்த துணிவு அவர்களைப் பயப்படாது செயலாற்ற வைத்தது. அப்படிச் செயற்படத் தொடங்கிய நாடுகள் அகதிகளின் படையெடுப்பிற்கு எதிராக என்ன செய்வதென முதலில் முழித்தாலும், பின்பு அதை அவர்கள் அடையாளம் கண்டனர்.

இலங்கை போன்ற நாடுகள் எதோ ஒரு காரணத்தைக் காட்டிச் சொந்த மக்களை முகாங்களில் அடைத்து வைக்க முடியும் என்றால், நாங்கள் ஏன் செய்ய முடியாது என்பது அவர்கள் வாதமாக இப்போது முளைத்தது. இலங்கை மக்கள் தாங்கள் தயாரித்த மருந்தைத் தாங்களே சுவைக்க வேண்டிய சந்தர்ப்பம் விரைவாக வந்தது. தமிழ் மக்களின் சாபமே இந்தியா தமக்கு அயல் நாடாக அமைந்தது என்பதாக அவர்களால நோக்கப்படும் காலம் மீண்டும் மீண்டும் அவர்களைத் தேடி வந்தது. அவர்கள் இரண்டாவது முறையாகவும் பலிக்கடாக்களாக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

காலத்தோடும், அரசியல் மாற்றத்தோடும் ஐரோப்பிய நாடுகளின் பார்வையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டதில், அங்கு எதிர்பார்த்த சலசலப்பு இல்லாது போனது. அது பிரான்சிற்கு மிகவும் நிம்மதியைத் தந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள அனேக நாடுகளில் ஒன்றில் அகதிகள் அல்லது ஜிப்சிகள் பிரச்சனையாக இருந்தார்கள். சிலநாடுகளில் அவையிரண்டுமே பெரும் பிரச்சனைகளை உருவாக்கின. அதை எதிர்த்துத் தங்களது சமுகப் பொருளாதார அமைப்புகளைக் காப்பாற்ற வேண்டியது பற்றி அவர்கள் அதிகம் கவலைப்பட்டார்கள். தங்கள் சுகபோகங்களைச் சகமனிதனுக்கு விட்டுக்கொடுக்கும்படி கூறுவது இலாபம் தரும் அரசியல் ஆகாது என்பது அந்த அரசியல்வாதிகளுக்குப் புரிந்தது. இந்தப் போராட்டமான சூழ்நிலை ஒருவகையில், பிரான்சின் திட்டத்தை ஒப்புக் கொண்டதாகவே தோன்றியது. அது பிரான்ஸ் அரசிற்குத் தொடர்ந்தும் பெரும் நிம்மதியையும், மனத்துணிவையும் அளித்தது. இந்த மாற்றத்தை உணர்ந்த இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளும் திரும்பித் தமது நாட்டிற்கு வரும் ஜிப்சிகளைப் பெரிய தடுப்பு முகாங்களில் இரகசியமாக அடைத்து வைத்தனர்.

ஒரு நாட்டின் பத்திரிகைச் சுதந்திரம் என்பது அரசியல்வாதிகளின் கட்டுப்பாடற்ற, மனிதநேயமற்ற, சுயநலமான செயற்பாடுகளுக்குக் கைவிலங்கு இடுவதாய் எப்போதும் இருக்கிறது. ஜிப்சிகளின் துன்பம் பற்றிய கட்டுரைகள் அடிக்கடி பத்திரிகைகளில் வரத்தொடங்கின.

ஆனால் அவர்கள் மேல் ஐயுறவும் வெறுப்பும் கொண்ட பெரும்பான்மை மக்கள், பத்திரிகைகள் கூறுவதை நம்ப மறுத்தனர். அதற்கு முக்கியத்துவம் கொடாது தட்டிக் கழித்தனர். சிலர் அவர்களை இல்லாது செய்ய வேண்டுமென எண்ணினர்.

சமுகச் சீர்கேடுகளை அதிகரித்து, இளைஞர்களைக் கெடுக்கிறது என்பதற்காக முதலில் ஸ்பெயின் நாடு கையடக்க உபகரணங்களிற் கமராக்கள் இருப்பதைத் தடைசெய்தது. அப்படியான உபகரணங்களால் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அடிக்கடி அம்பலமாவது அதற்கு மறைமுகக் காரணமாகிற்று. ஜிப்சிகளின் முகாங்களை அப்படியான கமராக்களால் வீடியோ எடுத்து, அதை 'நெற்'றில் போடுவது, நாட்டின் பாதுகாப்பிற்கே பங்கம் ஏற்படுத்தும் என்கின்ற வகையில் விதண்டாவாதம் முன்வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அப்படியான உபகரணங்களிற் கமரா இருப்பதை அந்த நாடு முதன்முதற் தடை செய்தது. இதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்குப் பதிலாக, முதலில் பேசாமல் இருந்தன. பின்பு ஸ்பெயினைப் பின்பற்றித் தாங்களும் அப்படியான கையடக்க உபகரணங்களிற் கமரா இருப்பதைத் தடைசெய்யத் தொடங்கினர். ஸ்பெயின் அடுத்ததாக, கூகிளின் செய்மதிப் படங்களை எப்படித் தடைசெய்வதென ஆராயத் தொடங்கியது.

இந்த மாற்றங்கள் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளை ஆச்சரியப்படுத்தின. அவர்களுக்கும், சீனாவுக்கும் பொருளாதாரமே முக்கியமாக இருந்ததால் இதிற் தலையிடுவதை விடுத்து, வெட்டியோடும் தந்திரத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தனர்.

ஜிப்சிகளுக்கு இப்படி நடப்பது சிறிது சிறிதாகத் தெரியவர, சில நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அவை அதிதீவிரவாத அரசின் பாதுகாவலரான பொலீஸாராற் கடுமையாக அடக்கப்பட்டன.

## 5.2 ரோமில் ஜிப்சிகள்

இத்தாலியின் தலைநகரான ரோமின் புறநகர்ப் பகுதியில் இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு ஆனிமாதம் பதினாறாம் திகதி கிட்டத்தட்ட நூற்றைம்பது ஜிப்சிகள் கேளிக்கைக்காகக் கூடினர். அது ஒரு கதகதப்பான மாலைப்பொழுது. ஆடவரையும் பெண்களையும் ஆடுங்கள் என்பதாகக் காற்றுத் தாலாட்டியது. அவர்கள் உண்பதற்காய்ப் பல முழுப்பன்றிகள் அங்கு நெருப்பில்

வாட்டப்பட்டன. அதைவிட நிறைய இறைச்சி வகைகள் வேகவைக்கப்பட்டிருந்தன. மதுவருந்துபவர்கள் அதை அருந்திச் சிற்றுண்டிகளைக் கொறித்தனர். மிகவும் நளினமான இசை அங்கு பரந்து பரவசமூட்டியது. அதற்கு ஏற்ப அவர்கள் நடனம் ஆடினர். ஜிப்சிகளின் நடனமும் இசையும் பிரபலமான ஒன்று. அதை அவர்கள் இப்படியான சந்தர்ப்பங்களில் விட்டுவைப்பதில்லை. அவர்களின் கலாசாரத்தில் திருமணம் என்பது விருத்தெரியமுதல் நடப்பதொன்றும் புறநடையல்ல. சமுதாய அமைப்பில் கணவனுக்கு அடங்கிய மனைவியோடு இறுக்கமான குடும்பமாக அவர்கள் வாழ்வார்கள். குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு மனைவியின் முதல் கடமையாகும். அப்பெண்கள் அதிகமான பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது தமது சமுகப்பணியென எடுத்துக் கொள்கிறார்கள்.

மதுவின் போதையிலும் இசையின் கம்பீரத்திலும் நடனம் உச்சத்தை நோக்கி நகர்ந்தது. பலர் மகிழ்ச்சியில் ஆரவாரிக்கத் தொடங்கினர். பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், சிறுமியர், முதியவர்கள் என்பதாக ஒரே குதுாகலமாக அந்தக் கொண்டாட்டம் களைகட்டியது. இன்றிருப்பார் நாளை இல்லை என்கின்ற வாழ்வின் நிலையாமைபற்றிப் புரிந்து, இந்தக் கணம்தான் உண்மையென்கின்ற தவிப்பில், அதை அனுபவித்துவிடும் ஆவேசம் அவர்களிடம் கொந்தளித்தது.

அவர்களின் நடனம் சிறிது நேரத்திற் பசியையும் களைப்பையும் அவர்களுக்கு உண்டுபண்ணியது. பசித்தவர்கள் தமக்குத் தேவையான உணவுகளை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினார்கள். அப்பொழுது அங்கே இரண்டு ஜீப்பில் இத்தாலிய நாட்டைச் சார்ந்தவர்கள் வேகமாக வந்தார்கள். அவர்களின் உடலிற் குத்தப்பட்டிருந்த பெரிய பெரிய பச்சைகள் அவர்கள் யார் என்பதை அடையாளங் காட்டின. இதைப் பார்த்த சிலர் மெதுவாகப் பின்வாங்கத் தொடங்கினார்கள். ஒரு ஜீப்பில் ஆறுபேரும் மற்றைய ஜீப்பில் ஐந்து பேரும் இருந்தார்கள். அவர்களது ஜீப்புகள் வேகமாக வந்தன. கைகளில் என்ன உள்ளது என்பதை ஓரளவு புரிந்தவர்கள், பாய்ந்து தங்களை மறைத்துக் கொள்ள முயற்சித்தார்கள். சிலர் என்ன நடக்கிறது என்பது புரியாது நின்றார்கள். சிலர் அவர்கள் வருவதைக் கவனியாது நடனமாடினார்கள். மது மயக்கத்தில் உலக நடப்பை மறந்தவர்கள் எந்தக் கவலையும் இன்றித் தொடர்ந்தும் குதுாகலமாக ஆடினர். ஒளிபவர்களைப் பார்த்து எள்ளி நகையாடினர்.

யதார்த்தம் திகைப்போடு ரணமாக இறங்கிற்று. சிறிது நேரத்தில் தயவுதாட்சண்யம் இன்றி வேட்டுகள் ஜிப்சிகளை நோக்கிப் பாய்ந்தன. அதையடுத்து முதலில் அந்த நளினமான இசை அறுந்திற்று.

இசைக்கருவி வாசித்தவர்களில் இருவர் பிணமாக நிலத்தில் வீழ்ந்தார்கள். நடனமாடியவர்கள், உணவு எடுத்தவர்கள், ஓடி விளையாடிய பிள்ளைகள், பெண்கள் எனப் பலரும் என்ன உடம்பில் தைக்கிறது என்பதை உணர முதல் வேரறுந்த மரங்களாக நிலத்தில் வீழ்ந்து துடித்தார்கள். அப்படி உயிர்கள் பிரியும் கோரத்தை உடனிருந்து பார்ப்பது என்றும் மறையாத நினைவுகளையும், அது உற்பத்தி செய்கின்ற பயங்கரக் கனவுகளையும் இந்த உலகில் வாழும்வரை தரும். அடங்கப்போகும் துடிப்பு, கை கால்களில் கடைசி உதறல், அதன் உச்ச வேதனை, பீய்ச்சியடிக்கும் குருதி, சோர்ந்து போகும் உடல், சிறிது சிறிதாய் அடங்கும் துடிப்பு, பிராணன் போகும் அவலம், விழியின் அசைவு அறும் நிலைப்பு, பார்க்கக் கூடாததைப் பார்க்கும் மனிதர்களின் அவதியாக அந்த மகிழ்வான கணங்கள் சிலநொடியில் நெஞ்சையறுக்கும் மரண ஓலமாய் மாறிற்று. எங்கும் இரத்த வெடிலும், கறையும் பரவத் தொடங்கியது. அந்த நாஜிகள் சுட்டுவிட்டு உடனடியாகச் சென்று விடாது, ஜிப்சிகளைச் சுற்றிச் சுற்றி ஜீப்பில் வலம்வந்து கேளிக்கைக்காகச் சுடுவதுபோல் சுட்டார்கள். பின்பு எங்கோ பொலீஸ் சத்தம் கேட்கத் தமது வாகனங்களை அவ்விடத்தைவிட்டு மின்னல் வேகத்தில் ஓட்டிச் சென்றார்கள்.

அந்த இடம் இன்பகரமான கொண்டாட்டத்தைத் தொலைத்து, யுத்தகளமாய்க் கூக்குரலிலும், சோகத்திலும் மூழ்கிப்போயிற்று. பிள்ளைகளைச், சகோதரனைச், சகோதரியைக், கணவனை, மனைவியைப், பெற்றோரை என்பதாகப் பறிகொடுத்தவர்கள், பார்த்தவர்கள் இரத்தம் உறையப் பரிதாபமாகக் கதறி அழுதார்கள். ஏன் தங்களுக்கு இப்படி நடக்கிறது என்பதை அவர்களாற் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவர்களின் அவல ஓலி எங்கும் எதிரொலித்தது. சூரியன் அந்த அதர்மத்தைக் கண்டு வெட்கித்தவனாய், சோகத்தோடு... கொடுமையான மனித இனத்தைப் பார்க்கச் சகியாது... முகில்களுக்குள் மறைந்து கொண்டான்.

வேட்டுச் சத்தங்கள் நகர் வரையும் கேட்டிருக்க வேண்டும். யாரோ அதையடுத்துத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். பொலீசும் அம்புலன்சும் அவசரமாக அங்கே வந்தன. நிலைமையை உணாந்த பின்பு மேலும் அதிக அம்புலன்ஸ், பொலீஸ், ஹெலிஅம்புலன்ஸ் என்பன அங்கே வந்துசேர்ந்தன. மேலதிக பொலீஸார் பத்திரிகையாளரைச் சம்பவ இடத்திற்கு அருகே விடாது இரும்புச்சு வராகத் தடுப்புகள் அமைத்தனர்.

அதிதீவிர வலதுசாரியரசைக் காப்பாற்றும் முயற்சியிற் பொலீஸார் அதிக கவனமெடுத்தனர். அவர்களின் ஆட்சியில் இப்படித்தான்

நடக்குமென எதிர்க்கட்சிகள் இதைப் பாரிய பிரச்சாரம் ஆக்கிவிடுவார்கள் என்பது அவர்களது பயமாகியது. அதனாற் பத்திரிகையாளர்கள் அதைப் பெரிதுபடுத்தாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு பொலீசை அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

சில பத்திரிகைகளும், தொலைக்காட்சி நிறுவனங்களும் அதையெல்லாம் மீறி ஹெலிக்கப்டர்கள் பாவித்துப் படம்பிடித்தார்கள். நேரடியாகவே அதை ஒளிபரப்பும் செய்தார்கள். பொலீஸாரால் அதை மேற்கொண்டும் தடைசெய்ய முடியவில்லை.

சம்பவ இடத்திற்குக் கிட்ட நெருங்கவிடாது தடுத்துவைக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் செய்தி பெறுவதற்காய்த் தவித்தனர். தூரத்தே நிறுத்திவைக்கப்பட்ட அந்த நிருபர்களுக்குப் பத்துப்பேர் மட்டுமே கொல்லப்பட்டார்களென உண்மைக்குப் புறம்பாகச் செய்தி கூறப்பட்டது. அவர்கள் அதை நம்ப மறுத்தனர். சம்பவ இடத்திற்கு வந்த அம்புலன்ஸ், சம்பவ இடத்தைவிட்டுச் செல்லும் அம்புலன்ஸ், காயப்பட்டவர்களின் தொகை என்பனவற்றை வைத்து நூற்றுக்கும் அதிகமானவர்கள் இறந்திருக்கலாம் என்பதாகத் தமது செய்தியை அனுப்பினார்கள். அந்த செய்திக்கு ஹெலியில் இருந்து எடுத்த படங்களும் விரைவில் ஆதாரமாகின.

பின்பு வந்த தகவல்களிற் பொலீஸாரின் எண்ணிக்கை உண்மைக்குப் புறம்பானதெனவும், அவர்கள் உண்மையை ஏதோ காரணங்களுக்காக மறைக்கிறார்கள் என்பதுவும் தெரியவந்தது. இப்படிச் செய்வது இதுவரை இருந்துவந்த தகவற் சுதந்திரத்தின் நம்பகத் தன்மையை இல்லாது செய்வதாகவும், இது ஜனநாயகத்திற்கு எதிரான மிகவும் ஆபத்தான வளர்ச்சியெனவும் விமர்சனங்கள் எழுந்தன.

தளத்தில் நின்று வேலை செய்த பொலீஸின் மீதே அதிக விமர்சனம் வைக்கப்பட்டது. இப்படியான செயலுக்குப் பொலீஸார் வலுக்கட்டாயமாகத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்பது பத்திரிகையாளர்களுக்குப் புரிந்தாலும், உண்மையை வெளிக்கொணர்வதற்காய் அவர்கள் மீது மிகக்கடுமையான விமர்சனங்களைப் பத்திரிகையாளர்கள் வைத்தார்கள்.

இறுதியில் அறுபத்திநாலு ஜிப்சிகள் இறந்தார்கள் என்பதையும், முப்பத்தியாறு பேர் காயம் அடைந்தார்கள் என்கின்ற தகவலையும் பொலீஸார் வெளியிட்டதோடு, உறுதிப்படுத்த முடியாத

நிலையிலேயே முன்பு வெளியிட்ட தகவல்களிற் தவறு நேர்ந்ததாகவும் அவர்கள் சமாதானம் கூறினார்கள்.

பத்திரிகையாளர்கள் மருத்துவமனைகளோடு தொடர்பு கொண்டார்கள். அதன்படி பொலீஸார் இறுதியாக வெளியிட்ட தகவலே உண்மை என்பதை ஒப்புக்கொண்டு, நவநாஜிகளைக் கண்டித்தும், தற்போதைய அதிதீவிரவலதுசாரி அரசைக் கண்டித்தும் செய்திகள் வெளியிட்டனர்.

இந்தக் கொலைகளைத் தொடர்ந்து பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்கள் ஐரோப்பாவில் உள்ள அனேகமான நகரங்களில் நடைபெற்றன. நவநாஜிகளைவிட இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் அரசிற்கு மிகவும் ஆபத்தானவர்கள் என்பதாய் அந்த அரசுகள் கணித்திருந்தன. அவை, ஆர்ப்பாட்டத்தை அடக்க அவர்கள் மீது அதிகமாகப் பொலீஸ் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டன. இத்தாலியிற் பல அமைப்புகள் தொடர்ந்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்துவந்தன. அது அந்த நாட்டு அரசாங்கத்திற்குச் சற்றும் பிடிக்கவில்லை. இதை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என்கின்ற முயற்சியில் அது மும்முரமாக ஈடுபட்டது.

அவர்களுக்கு அதீத பத்திரிகைச் சுதந்திரமும், ஆர்ப்பாட்டங்களுக்கான அனுமதியும் கண்ணைக் குத்தியது. அவர்கள் ஆர்ப்பாட்டங்களைத் தடைசெய்து, பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளையும் தணிக்கை செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். அதற்குச் சட்டங்களை முதலில் இறுக்க முடிவு செய்தார்கள்.

இத்தாலியப் பாராளுமன்றத்தில் அந்தச் சட்டங்களை மாற்றுவது பிரச்சனையாக இருக்கவில்லை. அவர்கள் அத்தோடு விட்டுவிடவில்லை. இரு மாதத்திற்கு மேலாக ஒருவரை நீதிமன்றில் நிறுத்தாமற் கைதுசெய்து வைத்திருக்கும் அதிகாரத்தைப் பொலீஸிற்கு கொடுப்பதாகச் சட்டத்தை மாற்றி அமைத்தார்கள். இது பல ஊடகங்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அதேபோல எதிர்க்கட்சிகள், இடதுசாரிகள், முற்போக்கு அமைப்புக்கள் போன்றவற்றிற்கும் அது பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது.

வழமைபோல இம்முறை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது பொலீஸார் மிகவும் கடுமையாக நடந்துகொண்டதோடு, ஊடகங்களையும் கடுமையான தணிக்கைக்கு உட்படுத்தினர். நாட்டின் பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படாது ஒரு ஸ்திரமான அரசு அமைய

வேண்டுமென்றால் இப்படியான கட்டுப்பாடுகள் முக்கியமென அந்த அரசு நம்பியது. அதைத் தனது நாட்டில் மட்டுமில்லாது ஐரோப்பாவில் உள்ள அனைத்து நாடுகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென விவாதித்தது. அதற்கு அவ்வரசு நவநாஜிகளால் ஏற்பட்ட பிரச்சனையை மூடிமறைத்து, இஸ்லாமிய அதிதீவிரவாதிகளால் உலகத்திற்கு இருக்கும் அச்சுறுத்தலையும், அதற்குத் தேவைப்படும் பலத்தையும் வலியுறுத்தியது. அந்தச் சட்டங்களைக் கொண்டுவருவதன் மூலம் அவற்றை அடக்கி, ஐரோப்பாவிலும், உலக நாடுகளிலும் அமைதியைக் கொண்டுவரலாம் என்பதாக அது வாதிட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் முதலில் இப்படியான எண்ணத்திற்குச் சற்று எதிர்ப்பு இருந்தாலும், இஸ்லாமியத் தீவிரவாதிகளை அடக்குவதற்கு உதவும் என்கின்ற போர்வை அவர்களுக்கு நன்கு பிடித்துக்கொண்டது. அத்தோடு தமது நாடுகளிற் தங்களது நிலையை மேலும் இறுக்கிக்கொள்ள அவை உதவும் என்பதையும் அறிந்து, அதற்கு ஒப்புக்கொண்டனர்.

சில காலத்தில் ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் அந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால், அது முழு ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், அதோடு வேறு விதத்தில் கூட்டாகச் சேர்ந்து இயங்கும் மற்றைய நாடுகளுக்கும் செல்லுபடி ஆவதாயிற்று.

அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டவர்கள், அந்தச் சட்டத்தின் சுவை எப்படி இருக்கும் என்பதை முதன் முதல் அறிந்தனர். சட்டமாற்றங்கள்... அதனால் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்கள்... அதற்குச் சென்றவர்கள் திரும்பிவராத மர்மங்கள்... அவர்கள் எங்கே தொலைந்தார்கள் என்கின்ற அவர்களின் உறவினரின் பரிதவிப்பு... என்பவற்றாற் கொல்லப்பட்ட ஜிப்சிகளின் மேலிருந்த அக்கறை மெதுவாக மறக்கப்படலாயிற்று. புறப்பட்டுப் போகிறவர்கள் திரும்பி வீடுவராத யதார்த்தம் இலங்கை, இலத்தினமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து ஐரோப்பாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

ஐரோப்பிய நாடுகளை வேவுபார்த்து வந்த அமெரிக்கா, முதன்முறை இதை ஆட்சேபித்து அறிக்கை விட்டது. அதை ஒரு பொருட்டாகவே ஐரோப்பிய ஒன்றியம் கொள்ளவில்லை. சிலர் இது ஒன்றும் அமெரிக்காவிற்குப் புதிது இல்லையே என்பதாகக் கிண்டல் செய்தார்கள். பின்பு ஆசிய, ஆபிரிக்க, இலத்தினமெரிக்க நாடுகள் அதைக் கண்டித்தன. அவை தமது கண்டனங்களோடு அதை நிறுத்திவிட்டன. யாரும் ஐரோப்பிய ஒன்றியத்தோடான

பொருளாதாரத்தில் உரசிப் பார்ப்பதற்கு விரும்பவில்லை. சமுக நீதிகளை, மனிதத்தைவிடக் கூட்டிக் கழிக்கும் பொருளாதாரத்திற்கே அதிக மதிப்புக் கொடுக்கும் நிலையில் உலகம் பரிதவித்தது. விகாரம் கண்டிருந்தது.

## 5.3 ஜேர்மனில் துருக்கியர்

ஜேர்மனியின் வந்தேறுகுடிகளில் அதிகமானோர் துருக்கியில் இருந்து வந்தவர்கள். அவர்கள் ஒற்றமான் பேரரசுகள் இருந்தபோதே ஜேர்மனிக்கு அதிகாரத்தோடு வந்தார்கள். பேரரசுகளின் வீழ்ச்சிக்குப் பின் தொடர்ந்து அவர்கள் ஜேர்மனியில் வாழாது தாய்நாட்டிற்கு அடிக்கடி போவதும் வருவதுமாக அவர்கள் வாழ்க்கை ஓடியது. இரண்டாம் உலகமகாயுத்தம் நடந்தபோது அவர்கள் முற்றுமாய்த் தாய்நாட்டிற்குத் திரும்பியே சென்றனர். தமது நாட்டில் சுத்தமான காற்று இருக்கும் போது நச்சுவாயு சுவாசிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை அவர்கள் விரும்பவில்லை. இரண்டாம் உலகமகாயுத்தம் சரித்திரமான பின்பு ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டில் வேலைக்காக ஜேர்மனில் வந்து குடியேறினார்கள். கால ஓட்டத்தில் அவர்கள் அந்த நாட்டின் பெரிய சிறுபான்மையினராக மாறினர். அவர்கள் சுதேசிகளைப் போல் இல்லாது நிறம் குன்றியவர்களாகவும், இஸ்லாம் என்கின்ற வேற்று மதத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருந்தமை, அவர்களை ஜேர்மன் நாட்டு மக்களாகப் பல சுதேசிகளால் ஏற்றுக்கொள்ள முடியாது தடுத்தது.

தனிமனித விருப்பு வெறுப்பு வேறு, சட்டமும் அதன் நடைமுறையும் வேறு. சட்டங்கள் கொடுத்த பாதுகாப்பில் இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டில் ஜேர்மனியில் முப்பத்தைந்து லட்சம் துருக்கியப் பரம்பரையினர் குடியிருந்தனர். அதன் பின்பு வந்த காலங்களில் முஸ்லீம் மக்கள் மீதும், வேற்று நிறமனிதர்கள் மேலும் அடிக்கடி வன்முறைத் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்தன. அதனால் வெறுத்துப்போன ஒரு பகுதி துருக்கியர் திரும்பவும் தமது தாய்நாட்டிற்குச் சென்றுவிட்டனர் என்றாலும், பெரும் பகுதியினர் தொடர்ந்தும் ஜேர்மனியில் போராட்டத்தோடு வாழ்ந்து வந்தார்கள்.

‘கிறெயஸ்பெர்க்’( Kreuzberg) என்கின்ற பேர்லினின் புறநகர்ப்பகுதி ஒரு காலத்தில் ‘குட்டி இஸ்தான்புல்’(Little Istanbul) என அழைக்கப்பட்டது. அங்கு குடியிருந்த பல துருக்கியர்கள் வீட்டின் விலையேற்றம் காரணமாக இடம் பெயர்ந்து விட்டாலும், இன்றும் பெருந்தொகையான துருக்கியர்கள் அங்கே வாழ்கிறார்கள்.

அவர்களின் கலாசாரப்படி நடக்கும் திருமண வைபவங்கள் அழகாக, ஆடம்பரமாக, குதுாகலமாக இருக்கும்.

இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு ஆவணி பதினெட்டாந் திகதி காலை, ஆறு துருக்கிய இளைஞர்கள் அந்த மண்டபத்தை அலங்கரிக்கப் போனார்கள். அப்போது பிறவுண் சேட்டும், அதேநிறத்தில் அரைக்காற்சட்டையும் அணிந்த பதின்நான்கு வயது மதிக்கத்தக்க நான்கு இளைஞர்கள் திடுதிடுவென ஓடி வந்து துருக்கிய இளைஞர்கள் முன்பு நின்றார்கள். அவர்கள் தலைமயிரை மிகவும் கட்டையாக வெட்டியிருந்தனர். கிண்டல் செய்யும் விதமாக "ஹயில் ஹிட்லர்" என்றவண்ணம் அந்தத் துருக்கிய இளைஞர்களைப் பார்த்து காலை நிலத்தில் உதைந்து 'ஹிட்லர் சலூட்' அடித்தார்கள். அந்தத் துருக்கிய இளைஞர்கள் இதை எதிர்பார்க்காததால் ஆடிப்போய்விட்டார்கள். அதிர்ச்சியில் உறைந்து அசையாது நின்றனர்.

சலூட் அடித்த இளைஞர்கள் கையை இறக்காது அந்தத் துருக்கிய இளைஞர்களைப் பார்த்தவண்ணம் நின்றனர். துருக்கிய இளைஞர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. திருப்பிச் சலூட்டடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா என்கின்ற கேள்வி அவர்களுக்குள் எழுந்தது. அப்படி அவர்கள் எதிர்பார்ப்பார்களா? அப்படி ஒரு சலூட்டைத் திருப்பிக் கொடுப்போமா? அதைவிட எங்கள் கைகளை நாங்கள் வெட்டி எறிவோமா என்கின்ற எண்ண ஓட்டத்தில் அவர்கள் தத்தளித்தார்கள்.

அதில் ஒரு துருக்கி இளைஞனுக்குத் திடீரெனக் கோபம் வந்துவிட்டது. அவன் அவர்களை நோக்கி அடிக்க ஓடினான். அதைப்பார்த்த மற்றைய இளைஞர்களும் சேர்ந்து அவர்களைத் துரத்தினர். இதைப் பார்த்த நவநாஜி இளைஞர்கள் தப்பி ஓட்டம் பிடித்தார்கள். துரத்திச் சென்ற துருக்கிய இளைஞர்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவர்கள் திரும்பி வந்து மண்டபத்தைத் திறந்து அலங்கரித்தார்கள். அந்தச் சம்பவத்தை ஒரு கோமாளித்தனமான விளையாட்டென அவர்கள் மறந்து போய்விட்டார்கள்.

*

அன்று இரவு ஏழுமணிபோல் அந்தத் துருக்கியத் திருமணம் களைகட்டியது. விருந்தினர் பாட்டும் கூத்துமாய் மகிழ்ச்சியின் ஆழத்திற் புறவுலக அச்சத்தை மறந்து இன்பத்திற் சுகித்தனர். அன்று சனிக்கிழமை. பலருக்கும் ஓய்வான நாள். அழைக்கப்பட்டவர்கள்

எல்லோரும் வைபவத்திற்கு வந்ததான தோற்றம். மண்டபம் விருந்தினர் கூட்டத்தால் நிறைந்து அலைமோதியது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என்பதாகக் கூட்டம் எள்ளுவிழா இறுக்கம் கண்டது. அவர்கள் பேச்சும், சிரிப்பும், தேவதைகள் போன்று வந்திருந்த அலங்காரமும் சுவர்க்கலோகத்தைப் பூமிக்கு இழுத்து வந்ததாகப் பிரமைகாட்டியது.

துருக்கிய முறைப்படி பரிசாகப் பணம் வாங்கும் நிகழ்வு நடைபெறத் தொடங்கியது. மணமகள் ஒருவித நடனம்போலக் கைகளை அசைத்து, நன்றி சொல்லிச் சொல்லிப் பணத்தை வாங்கினாள். மணமகனும் நன்றி சொல்லிச் சொல்லிப் பணம் வாங்கினான். பணம் கொடுப்பவர்களும் பாரபட்சம் இல்லாது இருவருக்கும் ஒவ்வொரு தாளைக் கொடுத்த வண்ணம் சென்றார்கள்.

திடீரென இரண்டு ஜிப்புகளும் ஒரு லொறியும் வேகமாக வந்து திருமண மண்டபத்தின்முன் நின்றன. அந்த லொறியை ஓட்டி வந்தவன் திருமண மண்டபத்தின் வாசலை நன்கு மறிப்பது போல லொறியை நிறுத்திவிட்டு வாகனத்திலிருந்து இறங்கினான். அவர்கள் எல்லோரும் முகமூடி தரித்திருந்தனர். அவர்களின் உடல்களில் பச்சை குத்தியிருப்பது நன்கு தெரிந்தது. அது அவர்கள் யார் என்பதை இனம்காட்டியது. வெளியே நின்ற சில துருக்கிய இளைஞர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவர்கள் திகைத்துப் போய் அப்படியே அசையாது சில கணங்கள் நின்றார்கள்.

ஜீப்பில் இருந்தவர்கள் படபடவெனப் பெற்றோற் குண்டுகளுடனும், சுத்தியல்களுடனும் கீழே இறங்கினார்கள். முதலிற் திருமண மண்டப வாசலுக்கும் லொறிக்கும் இடையில் மூன்று பெற்றோற் குண்டுகளை கொழுத்தி எறிந்தார்கள். பின்பு மண்டப யன்னல் கண்ணாடிகளைத் தாங்கள் கொண்டுவந்த சுத்தியல்களால் உடைத்து ஹோலுக்கு உள்ளே பெற்றோல்க் குண்டுகளை வீசியெறிந்தார்கள். வெளியே நின்ற சில துருக்கியர்கள் அவர்களைத் தடுக்கப்போக, அவர்களைச் சுத்தியலால் தாக்கிவிட்டு, மேலும் பெற்றோல் குண்டுகளை உள்ளே வீசினார்கள். பின்பு வாசலில் நிறுத்திய மற்றைய தங்களது வாகனங்களை எடுத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் அந்த இடத்தைவிட்டு மறைந்து போனார்கள். இவையனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டது போன்று சில கணங்களுக்குள் நடந்து முடிந்தன. என்ன நடக்கிறது என்பதை அங்கு உள்ளவர்கள் ஊகிக்கமுதலே அவை நடந்து முடிந்தன. எங்கும் ஒரே குழப்பமும் கூக்குரலுமாயிற்று.

மண்டபத்தில் இருக்கும் பொருட்கள், அந்த மண்டபத்தின் உள்ளமைப்பை உருவாக்கிய பொருட்கள் என்பன மிகவும் எளிதிற் தீப்பற்றக்கூடியவை. அவை மிகவும் வேகமாகத் தீப்பற்றத் தொடங்கின. திருமணத்தையெட்டி, துருக்கியர் பாவித்த நைலோன் உடுப்புகள் எரியும் நெருப்பில் எண்ணை வார்ப்பதான தீப்பற்றும் தன்மையுடையவை. அனைத்து எரிபொருளையும் தின்று தீயின் கோரத் தாண்டவம் ஊழிக்காலம் வந்துவிட்டதான வேகத்தோடு பரவியது. வானை நோக்கி அது தனது நாக்களை நீட்டியதில் இன்னும் இரைதா என்கின்ற வெறி அதற்கு. பிரபஞ்சத்தையும் தாண்டி வளரவேண்டும் என்கின்ற ஆறாத வேட்கை.

பெண்கள், ஆண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்பதாகத் தீயோடு போராடும் அவலம் கோரமாய் விரிந்திற்று. சிலர் நிலைமை புரிந்ததும் யன்னல்களில் ஏறி வெளியே குதித்தனர். யார் யன்னலில் ஏறி முதலில் வெளியே குதிப்பது என்பதிற் பெரும் இழுபறி உண்டாகிற்று. வாசலில் நிறுத்திவைக்கப்பட்ட லொறியும் நெருப்பும் அவர்களை அப்பக்கம் அண்டவிடாது தடுத்தன. வெளியே நின்ற சில துருக்கிய இளைஞர்கள் தீயணைப்புப் படைக்கு அறிவித்தனர். கற்கள் தேடி எடுத்துவந்து மீதம் இருந்த யன்னல் கண்ணாடிகளை உடைத்து, அதனூடாக மனிதர்களை வெளியே கொண்டுவரப் போராடினார்கள்.

அப்படி அவர்களாற் சிலரைக் காப்பாற்ற முடிந்தது. பலர் புகையால் மயக்கமுற்று விழுந்தனர். சிலர் கருகி எரிந்து நெருப்போடு போராடி மயங்கி விழுந்தனர். அப்படி விழுந்த உடல்கள் அங்கங்கே கிடந்தன. நரமாமிசம் எரிந்த கந்தக நாற்றம் அந்த இடமெல்லாம் பரவியது. சிலர் அந்த நாற்றத்தைப் பொறுக்க முடியாது வாந்தி எடுத்தார்கள். அந்த நாற்றம் மனிதக் கட்டுப்பாடுகளைத் தகர்த்து நாலாபக்கமும் பரவியது.

துருக்கிய இளைஞர்கள் சிறிது நேரம் தீயோடு போராடிய பின்பே தீயணைப்புப் படை, அம்புலன்ஸ், பொலீஸ் ஆகியன அங்கே வந்து சேர்ந்தன. தீயணைப்புபடை மிக விரைவாக அந்த மனிதர்களை மீட்டதோடு, தீயையும் அணைத்தது. அப்படி இருந்தும் நூற்றிப் பத்துத் துருக்கியர்கள் நச்சுப்புகை காரணமாகவும், எரிகாயங்கள் காரணமாகவும் இறந்து போனார்கள். முப்பத்தி ஏழுபேர் தீவிர எரிகாயங்களோடு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்கள். இருபத்தியாறுபேர் சிறிய காயங்களுக்காக மருத்துவமனைக்குச் சென்றார்கள். மீதிப்பேரிற் சிலரைப் புகையாற் பாதிக்கப்பட்டு இருக்கிறார்களா எனப் பரிசோதித்தார்கள்.

பொலீஸ் அங்கு வந்த ஊடகவியலாளரை அழைத்துக் கடுமையான சட்டதிட்டங்கள் பற்றி விளங்கப்படுத்தியது. ஊடகக் கட்டுப்பாடுகள் இருந்ததால் எந்த மனிதர்களையும் காட்டுவதான காட்சிகளை வெளியிடக்கூடாது எனப் பொலீஸ் கடுமையான கட்டளை பிறப்பித்தது. அதற்கு அமைய அனைத்துக் காட்சிகளும் தணிக்கைக்கு அனுப்பப்பட்டு, அவர்களின் அனுமதி பெற்றே வெளியிடப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினர். அதேபோல், தாங்கள் தரும் தகவலை மட்டுமே ஊடகங்கள் வெளியிடலாம் என்பது பற்றியும் அவர்கள் கண்டிப்புடன் அறிவுறுத்தினர்.

இறந்தவர்களிற் சிறு குழந்தைகள் அதிகமாக இருந்தமை அந்த அவலத்தில் தாங்கொணா வேதனையாகியது. பிள்ளைகளை இழந்த பெற்றோரின் கதறல் அந்த நகரை உலுக்கிற்று. இறந்த பிள்ளைகளில் அனேகர் எரிகாயத்தோடு இறந்து கிடந்தமை சகிக்க முடியாதவாறு மனதைப் பிழியும் வேதனை தந்தது. அதற்கு அவர்களின் உடை ஒரு காரணமாயிற்று. அப்படியே சில பெண்களின் உடையும் அவர்களின் வாழ்வுக்கு உலைவைத்தது.

மாபெரும் அவலமாக மணமகனும் மணமகளும் ஒருவரை ஒருவர் அணைத்தவண்ணம் எரிந்துபோய் இறந்து கிடந்தார்கள். அந்தக் காட்சி என்றும் மறக்கமுடியாத வேதனையை, வடுவை அந்த நகரத்துத் துருக்கிய மக்களுக்கு நிரந்தரமாகத் தந்திற்று.

அடுத்த நாட் செய்தி வெளியிட்ட ஜேர்மனிய ஊடகங்கள் எவ்வளவுபேர் இறந்தார்கள் என்பதையோ அல்லது எவ்வளவுபேர் காயப்பட்டார்கள் என்பதையோ வெளியிடவில்லை. அதைப் பெரிதுபடுத்தாது சிலர் காயப்பட்டும் சிலர் இறந்தும் உள்ளார்கள் எனவும், எரிந்ததிற்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்பதாகவும் செய்தி வெளியிட்டன. ஊடகங்களில் வந்த இந்தச் செய்தியைக் கண்டு அந்த நகரத்துத் துருக்கிய மக்கள் கொதித்தனர். அவர்கள் அன்று பிற்பகல் தொழுகை முடிந்ததும் திடீரெனத் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அனுமதி இல்லாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதிற்காய், துருக்கியரைப் பொலீஸார் இடைமறித்துத் தாக்கினார்கள். கோபமுற்ற துருக்கிய இளைஞர்கள் பொலீஸாரை எதிர்த்துத் தாக்கினார்கள். பின்பு பொலீஸின் கடுமையான திட்டமிட்ட எதிர்த்தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியாமல் கலைந்து ஓடினார்கள். ஓடும்போது கோபத்தில் வாகனங்களை அடித்து உடைத்தும், கட்டடங்களுக்கு

நெருப்பு வைத்தும் நாசம் செய்தார்கள். அந்தக் கலவரம் அத்தோடு நின்றுவிடவில்லை. அடுத்து வந்த நாட்களிலும் வாகனங்களுக்கும் சொத்துகளுக்கும் தீவைக்கும் சம்பவமாக அது தொடர்ந்தது.

இச்செயல், பதவியில் இருந்த அதிதீவிரவாத ஜேர்மனிய அரசுக்குக் கடும் கோபத்தை தந்தது. அது வாகனங்களுக்குத் தீவைப்போரையோ அல்லது உடைமைகளுக்கு தீவைப்போரையோ கண்டால், காணுமிடத்தில் சுட்டுக் கொல்லும் அதிகாரத்தைப் பொலீசுக்கு வழங்கிற்று.

அதற்குப் பின்பு பல துருக்கிய இளைஞர்கள் வீதிகளிற் பொலீஸாராற் சுடப்பட்டு இறந்தார்கள். அவர்களது பிரேதங்கள் மதமுறைப்படி அடக்கம் செய்ய முடியாது பயத்திலே தெருக்களிற் கிடந்தன. அது அவர்கள் மத்தியில் பெரும் பீதியை, கோபத்தை உண்டுபண்ணியது. அதற்குமேல் அவர்களுக்கு அரசபயங்கரவாதத்தை எதிர்த்து எப்படிப் போராடுவது என்பது புரியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து அவர்களைப் புனித யுத்தத்திற்குச் சிலர் ஏவினார்கள். அது பெருமளவில் எடுபடாவிட்டாலும் சிலர் அதை நம்பினார்கள். அதற்காகச் சிலர் பெற்றோருக்குக் கூறாது இரகசியமாகப் புறப்பட்டுச் சென்றார்கள். துருக்கியரின் நிலை பட்ட காலிலே படும் என்பதாகிற்று.

## 5.4 துருக்கியர் திருப்பியனுப்பபடுதல்

திடீரென யாரும் எதிர்பாராத முடிவை அந்த அதிதீவிர வலதுசாரி ஜேர்மனிய அரசாங்கம் எடுத்தது. அதன்படி ஜேர்மனில் வாழும் குடியுரிமை பெறாத அனைத்துத் துருக்கியரையும் இனங்கண்டு, உடனடியாக அவர்களை நாடுகடத்துவதென அது அதிரடி முடிவுசெய்தது. அதற்காக விசேட புகையிரதச் சேவைகளை அது ஒழுங்கு பண்ணியது.

இது ஜேர்மனியில் வாழும் துருக்கிய சமுதாயத்திற்குத் தெரிந்தபோது அவர்கள் கடுமெதிர்ப்பில் ஈடுபட்டார்கள். எதையும் பொருட்படுத்தாது அந்த அலுவலை நிறைவேற்றுவதற்குப் பொலீசுக்கு முழு அதிகாரத்தையும் அந்த வலதுசாரி அதிதீவிரவாத அரசு கொடுத்தது.

பொலீஸ் கடமையை நிறைவேற்றுவதில் எந்தத் தயவுதாட்சண்யமும் காட்டாமல் செயற்படலாயிற்று. அது பல மனித அவலங்களைப் புதிய ஜேர்மனியின் வரலாறாக்கியது.

இரவோடு இரவாக 'கிறெயஸ்பெர்க்'(Kreuzberg) இல் வசித்த துருக்கியர்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டார்கள். கணவனிடம் இருந்து மனைவி, மனைவியிடம் இருந்து கணவன், பிள்ளைகளிடம் இருந்து தாய் தந்தையர் அல்லது தாய்தந்தையரிடம் இருந்து பிள்ளைகளென எந்தத் தயவு தாட்சண்யமும் இன்றிக் குடியுரிமை இல்லாது வசித்துவந்த அனைத்துத் துருக்கியரையும் கைதுசெய்து, பெரிய விளையாட்டு மைதானங்களிற் கடுமையான பாதுகாப்போடு அடைத்து வைத்தார்கள். அந்த மைதானங்களைச் சுற்றிப் பலமீற்றர் உயரத்திற்கு நவீன முட்கம்பிகளால் வேலி அமைத்திருந்தனர். அந்த வேலிகளில் இருந்த கூரிய நீளமான கத்தி போன்ற முட்கள் தப்பி ஓடுவதைத் தடுப்பது என்பதற்குப் பதிலாகத் தன்னிடம் வந்து தற்கொலை செய்துகொள் என்பதாகத் துருத்திக்கொண்டு நின்றன. இப்படியான கடும்போக்கு மற்றைய இனத்தவருக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது அவ்வரசின் நோக்கமாகும்.

பின்பு ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புகையிரதங்கள் மூலம் அவர்களை உடனடியாகத் துருக்கியை நோக்கி அனுப்பினார்கள். அப்போது அதை எதிர்த்துப் போராடிய பல துருக்கியருக்குப் பிறந்த ஜேர்மன் நாட்டுக் குடிமக்களையே பொலீஸார் ஈவிரக்கமின்றிச் சுட்டுக்கொன்றார்கள். அதன் உண்மையான எண்ணிக்கைகள் அப்பட்டமாய் மறைக்கப்பட்டன. அதற்குத் தணிக்கை மிகவும் உறுதுணையாகிற்று. என்னதான் தணிக்கை இருந்தாலும் தொலைத்தொடர்பு யுகத்தில் இருக்கும்போது செய்திப் பரிமாற்றத்தை முழுமையாக எவராலும் தடைசெய்ய முடியவில்லை. கமராக்களை முற்றுமாக ஒழிக்க முடியவில்லை. இணையத்தளங்களில், முகப்புத்தகத்தில், ட்விற்றரில் செய்திகள் வெளிவந்தன. அதைத் தொடர்ந்து சந்தேகமான நபர்களுக்கான இணைய இணைப்புக்களை அந்த அரசு துண்டித்தது. கைத்தொலைபேசிகளைப் பிடுங்கியது. இவ்வகையான ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமை மறுப்பு உலகை அதிர்ச்சியடைய வைத்தாலும் எதுவும் செய்ய முடியாத பார்வையாளராக அவர்கள் விடுப்புப் பார்த்தார்கள். இறந்தகால நினைவுகள் நிகழ்கால நடப்பைப் பார்க்கும்போது பலரையும் கிலிகொள்ள வைத்தன. மீண்டும் ஒருமுறையா என்பதை யாராலும் நினைத்துப்பார்க்க முடியவில்லை. மீண்டும் என்பது பலருக்குக் கசந்தாலும் அது சூல்கட்டிவிட்ட உண்மை பலருக்குப் புரிந்தது.

மீண்டும் மீண்டும் உரிமைகளைவிடப் பொருளாதாரத்தைப் பற்றிய கவலையே பல நாடுகளைக் கதிகலங்க வைத்தது. எதிர்த்து அறிக்கைவிட்டாலும் சிலகாலத்தில் குழைந்த வண்ணம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை நாடியோடவேண்டிய அவல நிலையில் அந்த நாடுகள் இருந்தன.

அனுப்பப்பட்ட துருக்கியர்களை, துருக்கிய அரசாங்கம் ஏற்க மறுத்து எல்லையிற் தடுத்து வைத்தது. துருக்கிய மக்களும், பல்கேரியமக்களும் அந்த மக்களுக்கு உணவு, நீர் என்பன வழங்கினர். அரசாங்கம் இப்படிச் செய்தது அம்மக்களைக் கொதிகொள்ள வைத்தது. அதையடுத்து இருகரையிலும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

ஜேர்மனிய அதிதீவிர வலதுசாரி அரசாங்கம் அவர்களைப் புகையிரதத்தோடு திருப்பி எடுப்பதற்கு மறுத்தது. தனது முடிவில் மனிதாபிமானம் என்னும் நெகிழ்ச்சியைக் காட்ட விரும்பவில்லை. மாறாத முடிவோடு மனிதம் மறுத்தது. தன்மக்களை மட்டும் நினைத்தது. அனுப்பிய துருக்கியரைத் திருப்பியெடுத்தால் சிலகாலத்தில் ஜேர்மன் ஒரு துருக்கிய நாடாகவே மாறிவிடும் என்கின்ற எண்ணம் பல அதிதீவிர வலதுசாரி அரசியல்வாதிகளிடம் ஆழமாக வேரூன்றியிருந்தது.

துருக்கியில் நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டங்களைக் கண்ட துருக்கிய அரசாங்கம் திகைத்துப் போனது. நாட்டிற்குள்ளே ஜெர்மனியால் அனுப்பப்பட்டவர்களை எடுத்தால் பல ஐரோப்பிய நாடுகள் இதை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு வருங்காலத்தில் இன்னும் அதிக மக்களை திருப்பி அனுப்புவார்களென அது அஞ்சியது. துருக்கியின் பொருளாதாரத்திற்கான அன்னியச்செலாவணியை இவர்களும், துருக்கிக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளும் அள்ளி வழங்கினர். அந்தப் பணவரவு தடைப்படுவதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதேவேளை மக்களை நடுத்தெருவில் விடுவதால் உள்நாட்டு மக்களின் எதிர்ப்பிற்குப் பலியாகி… தமது அரசை இழப்பதோடு, உள்நாட்டுக் கலவரங்களும் உண்டாகலாமெனத் துருக்கிய அரசு உள்ளூரப் பயந்தது.

துருக்கிய அரசாங்கம் தனது உயர்மட்டப் பிரதிநிதிகளை அவசர அவசரமாக ஜேர்மனிக்கு அனுப்பி, மரதன் பேச்சுவார்த்தை நடத்தியது. எதுவும் பலனளிக்கவில்லை என்கின்றபோது அது சோர்ந்து போய்விட்டது. பின்பு தமது அரசியலையாவது

காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை அது உணர்ந்து தனது முடிவை மாற்றிக்கொண்டது.

அதே வேளை அலுத்துப்போன மக்கள், யாரையும் கேளாது தங்கள் நாட்டிற்குட் புகுந்தார்கள். துருக்கியப் பொலீஸார் தங்கள் மக்களைத் தாங்களே சுட்டுக் கொல்லுவதா என்கின்ற எண்ணத்தில் எதுவும் செய்யாது மௌனம் காத்தனர். பொலீஸின் செய்கையால் அரசு அதிர்ந்தாலும் எதிர்நடவடிக்கை எடுக்காது அது மௌனம் சாதித்தது. ஜேர்மனிய அரசாங்கம் அதை ஒரு வாய்ப்பாக நினைத்து மேலும் மேலும் துருக்கியரைக் கைது செய்து அனுப்பியது. விஸ்தீரணமான வாழ்விடத்திற்கும்... விமர்சையான வளங்களுக்கும்... மக்களின் பெருக்கம் எதிரி என்கின்ற நாஜி வாதத்தை அது தூசுதட்டி அழகுபார்த்தது. அதற்குத் துருக்கியரை நாட்டைவிட்டு வெளியேற்றுவது முதற்படியாக அமைந்தது. பல ஐரோப்பிய நாடுகள் இந்த நாடகத்தை உள்நோக்கத்தோடு மௌனமாகக் கவனித்தன. தமது நாட்டைப் பற்றி மட்டும் சிந்தித்தன.

துருக்கி எதுவும் செய்ய முடியாது இறுதியில் தமது மக்களை ஏற்றது. பொருளாதாரச் சுமையை எண்ணி மருண்டது. அந்த நிகழ்வு ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும் பெரும் மகிழ்வைத் தந்தது. தங்களுக்கும் ஒரு வழி பிறந்ததாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்த பல நாடுகள் இரகசியமாக மகிழ்வு கொண்டன. அந்த அரசுகள் அதைத் தொடர்ந்து இரகசியத் திட்டங்களை உருவாக்கின.

பல நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் மேல் கடுமையான விமர்சனத்தை இம்முறை வைத்தார்கள். அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தங்கள் உள்விவகாரங்களிற் தலையிடக்கூடாதெனக் கடுமையாக அந்த நாடுகளை எச்சரித்தது. அத்தோடு இந்த விமர்சனங்கள் ஐரோப்பிய ஒன்றியத்துடனான பொருளாதார, அரசியல் உறவில் விரிசல்களை ஏற்படுத்தும் எனவும் அது காட்டமாகச் சுட்டிக் காட்டியது.

பொருளாதாரம் என்ற சொல் கேட்டதும் பல நாடுகள் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போயின. வரவும், செலவும், இப்போது தங்களிடம் இருக்கும் போகமும் அவர்களுக்கு முக்கியமாகத் தோன்றின. அதேவேளை அநியாயத்திற்குப் பலியாகும் மக்களிற்காக ஆட்சேபிக்க முடியாததை எண்ணி அந்த நாடுகள் புழுங்கின.

## 5.5 பெரும் கெத்தோக்களான ஐரோப்பிய நகரங்கள்.

இரண்டாயிரம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே லண்டனின் சில புறநகர்ப் பகுதிகள் சுதேசிகளின் வெளியேற்றத்தால் தன்னிச்சையான 'கெத்தோ'க்களாக உருமாறிவிட்டன. அங்கு பல புறநகர்ப் பகுதிகளில் நின்றால், நிறமான வந்தேறுகுடிகளை மட்டுமே பார்க்கக்கூடியதாக இருக்கும். அதையும் மீறிச் சில வெள்ளையரைக் கண்டால், அவர்கள் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து வந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் சில வசதிகளைக் கருதி அங்கு தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ வசிப்பவர்கள். அதைவிட நிற மனிதர்களைத் திருமணம் செய்த சுதேசிகளைக் காணலாம். மற்றைய சுதேசிகள் பட்ட மரத்தை விட்டுப் பறந்த பறவைகளாக நிரந்தரமாய்க் குடிபெயர்ந்துவிட்டார்கள். இந்த மாற்றங்கள் ஏன் நடக்கின்றன? அதை எப்படி நிறுத்துவது என்கின்ற அலசல் அப்போது இருந்த அரசிடம் இருக்கவில்லை. அவர்களின் தனிமனித சுதந்திரத்திற் தலையிடுவதா என்கின்ற மெத்தனத்தில், சமுதாயப் பிளவுகள் பலமாகக் காலுன்றின. லண்டன், சுதேசிகள் அற்ற பல்கலாசாரம் கொண்ட சுதந்திரமான 'கெத்தோ'க்களான பெருநகரமாக உருப்பெற்றது.

இந்தப் புறநகர்ப் பகுதிகளில் நிற்கும்போது தெற்காசிய நகரங்களில் அல்லது ஆபிரிக்காவில் நிற்பதான உணர்வே உண்டாகும். இந்த மாற்றம் லண்டனோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மாற்றமாக இல்லாது பல பாரிய ஐரோப்பிய நகரங்களையும் அது மெல்ல மெல்லப் பாதித்து. சிறிது சிறிதாய் அந்த நகரங்களை அது மாற்றி அமைத்தது. சுதந்திரமான அந்தப் பெரிய 'கெத்தோ'க்கள் நிரந்தரமான பயத்தை உருவாக்கின.

இரண்டாம் உலகயுத்தத்தில் அதிகார பலத்தோடு 'கெத்தோ'க்கள் உருவாக்கப்பட்டன. பட்டினியில் மனிதர்களை வாட்டியெடுத்து, வருத்தத்தில் மனிதரைத் தவிக்கவிட்டு, அவர்களைக் கொலைசெய்த 'கெத்தோ'க்கள் அவை. தெருவோரங்களில் நிர்வாணமான வரண்ட மனிதப் பிணங்கள் கருவாடாக அடுக்கி வைக்கப்பட்ட வரலாற்றுக் காட்சிகள். அந்த யூதப் பிணங்களை வண்டில்களில் அடுக்கி அதை யூதரே இழுத்துச் செல்லும் கோரம். இழுப்பவனிடமும் இம்மியளவு தசையுமில்லா எலும்புக்கூடுகளின் வருத்தமான இயக்கம். இந்த நவீன 'கெத்தோ'க்கள் இன்னொரு வகையானவை. நோக்கமோ திட்டமிடலோ

இல்லாது மனிதனின் அடிப்படையான, மற்றவர்களிடம் இருந்து பாதுகாப்புத் தேடும் குணத்தினால், மற்றைய நிற, கலாசார, மதத்தைச் சார்ந்த மனிதன்மேல் இருக்கும் வெறுப்பால், புரிந்துணர்வு, அவர்கள் பற்றிய அறிவு என்பன இன்மையால் சூல்கொண்டது. ஒருவகையில் வரலாற்றுத் தொடராக. புதைந்த ஐயத்தின் விருட்சமாக. இந்தத் தன்னிச்சையான ‘கெத்தோ’க்கள் ஐரோப்பா எங்கும் பிரமிப்பூட்டும் வகையில் வளர்ந்தன. திணிப்பு அற்ற இக் ‘கெத்தோ’க்கள் பின்பு நிரந்தரமான நகர, சமுதாய அமைப்பாகிவிட்டன. அதன் மூலம் வெறுப்பு, பயம், அறியாமை என்கின்ற சகதிக்குள் வீழ்ந்த சுதேசிகளும் நிறமான வந்தேறுகுடிகளுமான இரு துருவங்களின் பிரிந்துபோகும் ஆறா வேட்கை. அது இப்போது பலரையும் சிந்திக்கத் தூண்டியது.

பெரும்பாலும் சுதேசிகளே இந்த நாடுகளின் அரசியல்வாதிகளாக இருந்து வந்தனர். அந்த அரசியல்வாதிகள் பெரும்பான்மையாக சுதேசிகள் குடியிருக்கும் பணக்காரப் பகுதியிலோ அல்லது நகரத்துக்கு வெளியிலோ குடியிருந்தனர். அவர்களுக்கு இந்தப் பிரச்சனை அயல்வீடல்ல. தொலைதூரத்து ஈனக்குரல்கள் அவர்கள் காதைத் தீண்டுவதில்லை. அவர்கள் இந்தப் பிரச்சனையை ஒரு பொருட்டாக முதலில் மதிக்கவில்லை. அதற்கு மாறாக இந்தப் பிரச்சனையைக் கம்பளத்தின்கீழ் கூட்டித் தள்ளுவதான செயலில் மட்டும் கவனம் செலுத்தினர். இது ஒரு பெரும் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதற்கான முக்கியத்துவத்தை உரிய நேரத்தில் அவர்கள் கொடுக்கத் தவறிவிட்டனர். அந்த மாற்றத்தை நிறுத்தவோ, அல்லது திசை திருப்பவோ அந்த அரசியல்வாதிகள் தவறியது மாபெரும் வரலாற்றுப் பிழையாகப் பிற்காலத்திற் பதியப்படுகிறது. அதை அவர்கள் இப்போது உணரத் தொடங்கினாலும், அரசியல்வாதிகளின் சொற்களை அந்த விடயத்திற் தற்போது மக்கள் கேட்பதாக இல்லை. அந்த மாற்றம் ஒரு புள்ளியில் இருந்து உற்பத்தியாகிய அலையாக, தனது உற்பத்தி நிலையைத் துறந்து, நான்கு திசைகளிலும் விரிந்து, ஒட்டுமொத்த நீர்ப்பரப்பையும் தழும்ப வைத்தது போலச் சமுதாயத்தில் மீளமுடியா மாற்றத்தையும், அதிர்வையும் ஏற்படுத்துகிறது. மீண்டும் ஆரம்பப்புள்ளிக்கு அதை இழுக்கமுடியாது திணறவைக்கிறது.

பெரிய நகரங்களை விட்டு வெளியேறிய சுதேசிகள், சிறிய நகரங்களிலோ அல்லது கிராமங்களிலோ குடியேறினர். அப்படியான குடியிருப்புகள் பெரிய நகரங்களைவிட்டுத் தள்ளியே அமைந்திருந்தன. அவர்களின் வேலைகள் பலமைல் தாண்டி நகரப்பகுதியில் இருக்கும். ஒவ்வொருநாளும் அதற்காக அவர்கள் பயணம் செய்யவேண்டியது கட்டாயமாகியது. அப்படி இருந்தும் அந்த அசௌகரியத்தை அவர்கள் ஏற்பது பலருக்கும் விசித்திரமாய்த்

தோன்றும். மனித வெறுப்பும் அறியாமையும் எந்தவகையான அசௌகரியங்களையும் ஏற்கத் தயாராகிறது என்பது விசித்திரமே.

நிறமான மனிதர்களோடு இருப்பது மிருகங்களோடு இருப்பதற்கு ஒப்பானதா? மனிதனின் முதற் தோற்றம் ஆபிரிக்கக் கண்டத்தில் நடந்தது எனவும், அங்கிருந்தே உலகத்தில் உள்ள அனைத்து மனிதர்களும் பரவினார்கள் எனவும், அவர்கள் இருக்கும் இடத்தைப் பொறுத்துப் பிற்காலத்தில் இசைவாக்கம் அடைந்ததின் தோற்றமே இப்போது உள்ள இனங்களெனவும், அறிவியல் கூறுவது உண்மையாக இருந்தால்... மரபணுக்கள் உண்மை என்று நம்பினால்... பட்டதாரிகளும் அதற்கு மேற் படித்தவர்களும் இந்தச் சிறிய விடயத்தைக்கூடப் புரிந்துகொள்ளாது... தமது நேரத்திற் பல மணித்தியாலங்களை ஓடும் புகையிரதத்தில் கழிப்பதை என்னவென்று கூறமுடியும்? அதுவே இன்றைய ஐரோப்பாவின் யதார்த்தமாகிற்று.

நிறமான வந்தேறுகுடிகளைப் பார்த்து ஓடும் மனிதர்களுக்கு, காந்தியோ, நெல்சன் மண்டேலாவோ, அல்லது மாட்டின் லூதர் கிங்கோ நிறமான மனிதர்கள்தான் என்பதாவது புரியுமா? நிறமான மனிதனிலும் உலகம் போற்றும் உத்தம புருசர்கள் உதிக்க முடியும் என்பதையும், வெள்ளை இனத்திலும் ஹிட்லர், முசோலினி போன்ற, மனிதர்களால் வெறுக்கப்படும் பூதங்கள் தோன்றலாம் என்பதையும் அவர்களாற் சிந்தித்து உணர முடியுமா? ஒரு சில மனிதரைப் பார்த்து ஒட்டுமொத்த சமுதாயத்தையே மதிப்பீடு செய்வது எவ்வளவு மடைமையானது. நீ பொன்னாக இருக்கும் போது, உருக்குவதால் உன் தரம் கெட்டுப்போய்விடுமா? உன் தரத்தில் உனக்கே நம்பிக்கை இல்லை என்றால் அது யாருடைய தவறாக இருக்கும்?

நகரத்தை விட்டு வெளியே ஓடிச்சென்ற சுதேசிகளையும், நாட்டிற்குப் புதிதாக வந்த சனியன்கள் விடுவதில்லை. அதைச் சுதேசிகள் சிறிது காலத்தில் அனுபவித்தனர். பெரிய நகரங்கள்போல் நிறமான மனிதர்கள் அதிக அளவிற் சிறிய நகரங்களிற் குடியேறாவிட்டாலும், வியாபாரத்திற்காய், வேறுசில வேலைகள் செய்வதற்காய் நிறமான வந்தேறுகுடிகள் அந்தச் சிறிய நகரங்களிலும் வந்து குடியேறினார்கள். அப்படிக் குடியேறுவதைப் பெரும் பிரச்சனையாக்காது முதலில் சமுகங்கள் சுமுகமாக இயங்கி வந்தன. அந்த அமைதியிற் கல்லெறிந்ததுபோலச் சில தீவிரவாதிகளும், நவநாஜிகளும் அங்கு வாழும் நிற மனிதர்கள்மீது தாக்குதல் நடத்தினார்கள்.

காய்ந்துபோய்க் கிடக்கும் காட்டுப்புல் போன்றது வெறுப்பு. அதில் நெருப்புப் படும்வரை அது புல்லாகவும், பட்டபின்பு கோரத்தண்டவம் ஆடும் அக்கினி நாக்காகவும் உருமாறும். எரிபற்றுநிலைக்கு எப்போதோ வந்துவிட்டாலும், அறிந்தோ அறியாமலோ அமைதி அங்கு நீடித்தது. பின்பு அந்த அமைதி திடீரெனத் தொலைந்து போயிற்று. இங்கே நடக்கப்போகும் சம்பவம் ஏற்கெனவே உருவாகிவிட்ட சுனாமி. அது தன் வழியிற் கிடைப்பதை உருட்டிப் பிரம்மாண்டமாகும்போது அதை யாரும் தடுக்க முடியாது என்பது பற்றி அவர்கள் சற்றும் கவலைப்படவில்லை.

*

நகுலன், கிங்ஸ்ரன் என்கின்ற லண்டனின் புறநகர்ப் பகுதியில், தனது பலசரக்குக் கடையை விமரிசையாக இலாபத்தோடு பலகாலம் நடத்திவந்தான். பொறியியலாளராகப் பட்டம் பெற்றாலும், வேலை பெறுவதில் நிறமான வந்தேறுகுடிகளுக்கு ஏகப்பட்ட சிரமம் நீடித்தது. நிறமும், பெயரும் வேலை கொடுக்கும் நிறுவனங்களில் இரண்டாம் பட்சமான தெரிவுக்கு இவர்களைத் தள்ளின. அப்படி ஒரு வேலையைப் பெற்றாலும் பெறும் ஊதியம் கையும் கணக்குமாக மாசத்தின் கடைசி நாட்களுக்கு முன்பு முடிந்துவிடும். கணவனுக்கு வேலை கிடைத்தாலும், மனைவிக்கும் வேலை கிடைக்கும் என்பதற்கான எந்த உத்தரவாதமும் கிடையாது. யாழ்ப்பாணத்துக் கலாசாரப் பாதிப்பின் தொடர் இங்கும் இன்றும் தொடர்கிறது. அவர்கள் கோப்பை கழுவுவதற்கு உடன்பட மாட்டார்கள். அது இழிசனர் வேலை என்கின்ற நினைப்பு அழிய மறுத்து அடம்பிடிக்கிறது. கடையென்றால் இருவருக்கும் வேலை கிடைப்பதோடு, கைநிறைய வருமானமும் வரும் என்பது அவர்கள் கணிப்பாகியது. அத்தோடு தனக்குத்தானே முதலாளி என்கின்ற சுதந்திரத்தோடு திரிவதற்கு அது வசதியாகும் என்பதும் புரிந்தது. அதற்காகக் கண்டுபிடித்த வழிதான் தமிழரின் பலசரக்குக் கடை வியாபாராம். இந்தச் சுயதொழிலை இலங்கையில் இருந்து அகதிகளாக வந்தவர்கள் தமது வசமாக்கினர். பெரிய கல்வித் தராதரம் இல்லாது தொடங்கக்கூடிய தொழிலாகவும் இது அமைந்திற்று. லண்டன் நகருக்குள் அதிகமான இடங்களிற் தமிழரின் கடைகள் முளைத்தன. பின்பு அங்கு மூச்சுவிட முடியாது என்கின்ற போது அவர்கள் பார்வை வேறுபக்கம் திரும்பியது. அப்போது கண்ணிற் பட்டவைதான் இந்தச் சிறிய நகரங்கள் ஆகும்.

இங்கு நகுலனிற்கு வியாபாரம் நன்கு போயிற்று. அவன் வீடு ஒன்றையும் அந்த நகரத்தில் வாங்கினான். வருமானம் பற்றி யாரும் கேட்டால் வழமைபோல் பஞ்சப்பாட்டு பாடுவான். அது அவனது

பரவணிக் குணம். அவனது பிள்ளைகளும் அங்கேயே பாடசாலை சென்று வந்தார்கள்.

அன்று வியாபாரம் முடிந்து கடையைப் பூட்டிக்கொண்டு நகுலன் வரும்போது ஒருசிலர் அவனது கடைக்குப் பக்கத்தில் இருந்த பேருந்துத் தரிப்பில் நின்று, அவனை நோட்டமிட்டார்கள். அல்லது நோட்டமிடுவதுபோல அவனுக்குத் தோன்றியது. இலண்டனில் காணக்கூடிய இந்த வகையான எண்ணமுள்ள மனிதர்களை இப்போது புறநகர்களாகிய இங்கேயும் சிலவேளைகளிற் பார்க்க முடிகிறது. அது ஒன்றும் இரசிக்கக்கூடிய அனுபவமாய் நகுலனுக்குத் தித்திக்கவில்லை. அவன் அதிகம் வரலாற்றில் அக்கறை இல்லாதவன். அவனுக்குத் தெரிந்ததும் பிடித்ததும் கணக்கு மட்டும்தான். அதனாற் பார்க்கப்படும் இலாப எண்கள் இப்போது மிகவும் பிடித்திருந்தன. விசைகளையும், பளுக்களையும் கணிப்பதை எப்போதோ அவன் மறந்து போய்விட்டான். இன்று பேருந்துத் தரிப்பில் நின்று அவனைப் பார்த்த கண்களின் இலாப நட்டத்தை அவன் அலசலானான். அந்த அலசலூடே அவன் வாகனத்தை நோக்கி அவசரமாக நடந்தான்.

சிலவேளை கடையைப் பூட்டும்போது அவர்கள் வந்து கொள்ளையடித்து விடுவார்களோ என்பதாக நகுலன் பயந்தான். இவர்களைப் போன்றவர்கள் சிலவேளை கொள்ளை எதுவும் அடிக்காது நிறமனிதர்களை சகட்டுமேனிக்குத் தாக்கிவிட்டுச் செல்வார்கள் என்பது அவனுக்குத் தெரியும். தன்னையும் அப்படித் தாக்கலாம் என்கின்ற பயம் அவன் மனதில் எழுந்தது. அவர்களின் உருவங்களைப் பார்க்க நகுலனுக்கு குலை நடுங்கியது. அதில் நின்ற நான்குபேரில் மூவர் தும்பிக்கை இல்லாத யானைகளாக நிமிர்ந்து நின்றார்கள். ஒருவன் மாத்திரமே நகுலனைப் போன்ற உருப்படி. தாக்க வந்தால் தப்பி ஓடுவதே நகுலனுக்குக் கிடைத்த தெரிவு.

அவர்கள் எல்லோரும் பச்சை குத்தியதோடு மட்டுமல்லாது, ஒரு காதிற் தோடுடையவர்களாக, தங்கள் பச்சை தெரியும் வண்ணம் உடையணிந்து கவர்ச்சியும் காட்டினர். அந்தக் கவர்ச்சி வந்தேறு குடிகளுக்கு ஒரு ஒருவிதமான பயத்தையும், நடுக்கத்தையும் ஏற்படுத்தியது. அந்தப் பச்சையில் சுவாதிகா எனப்படும் பிள்ளையார் கையில் இருப்பது போன்ற குறியீடு இருந்தது. அதைத்தான் ஹிட்லரும் பாவித்ததாக அவன் தொலைக்காட்சியிற் பார்ப்பான். அந்த சுவாதிக்காவுக்கும் ஹிட்லருக்கும் என்ன சம்பந்தம் என்பது அவனுக்குப் புரியவில்லை. ஆரியமும் அதன் சின்னமும் இமயத்தில் இருந்துதான் இங்கு இறக்குமதி செய்யப்பட்டது என்பது பற்றி

அவனுக்கு அக்கறை இருந்ததில்லை. அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் அவர்களைப் பார்த்தபோது அவனுக்கு முதன் முதல் இன்று ஏற்பட்டது.

அவர்களின் கண்களை நகுலன் பார்த்தபோது, இரையைப் பார்க்கும் மிருகங்களின் கோபம் அதில் ஒளிந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவர்கள் கண்கள் நகுலனை அம்புகளாய்த் துளைப்பதாய் அவன் உணர்ந்தான். அவன் அதற்கு மேல் அவர்களைப் பார்க்க முடியாதவனாய், பார்வையை வாகனத் தரிப்பிடத்தை நோக்கிச் செலுத்தினான். பின்பு அமைதி இல்லாதவனாய், ஓட்டமும் நடையுமாக வாகனத் தரிப்பிடத்திற்குச் சென்றான். அவசர அவசரமாக வாகனத்தை இயக்கியவன் அந்த இடத்தைவிட்டு வேகமாக மறைந்தான்.

வீட்டிற்குச் சென்றவுடன் நகுலனின் மனைவி அவனுக்குத் தேனீர் வைத்துக் கொடுத்தாள். அதை வாங்கிப் பருகிவிட்டு, அன்றைய செய்திகளைத் தொலைக்காட்சியில் பார்த்தான். பின்பு இணையத்தில் அந்த சுவாதிகா வைப்பற்றி ஆராய்ந்தான். அது அதிர்ஷ்டம் என்கின்ற குறியீடென அதில் விளக்கம் எழுதி இருந்தது. அவனுக்கு அது புரியவில்லை. அதிர்ஷ்டத்திற்கும் அவர்கள் பார்வைக்கும் ஏதாவது சம்பந்தம் இருப்பதாய் அவனால் ஊகிக்க முடியவில்லை. அவர்களின் நடத்தை அவர்களுக்கோ அல்லது அவர்கள் சார்ந்த சமுதாயத்திற்கோ எந்த அதிர்ஷ்டத்தையும் தரப்போவதில்லை. அதை அவனால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. இரண்டாம் உலகமகா யுத்தத்தை இந்த அதிர்ஷ்டக் குறியீடா கொண்டுவந்தது என்கின்ற கேள்வி அவனுக்கு வியப்பைத் தந்தது. 'இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே' என்கின்ற கண்ணதாசன் வரிகள்தான் அவனுக்கு அப்போது ஞாபகம் வந்தன. பிள்ளையார் கையில் இருக்கும் போது, உலகத்தை இரட்சித்துப் பரிபாலித்து அதிர்ஷ்டத்தை வழங்கும் அந்த அற்புதக் குறியீடு, அற்ப மனிதனிடம் போகும் போது எப்படிக் கோரத்தாண்டவம் ஆடியிருக்கிறது என்பதைத், தான் தொலைக்காட்சியில் பார்த்த வரலாற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தான். அவனுக்கு மண்டை விறைத்தது. அவன் மேற்கொண்டும் அந்த ஆராய்ச்சியில் ஈடுபடாது சாப்பிடச் சென்றான். பிள்ளையார் எப்போதும் கல்லாய்ச் சமைந்திருப்பார். அவர் கையடையாளம் யாரையும் யதார்த்தத்தில் இம்சிக்காது. ஆனால் மனிதன் கொல்லும் இயந்திரமாக மாறுவது யதார்த்தத்தில் நடக்கும்; நடந்தது என்பது பற்றி அவன் மேலும் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.

சாப்பிட்ட பின்பு அவன் மனைவியோடு இருந்து தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சி பார்த்தான். அந்தப் பராக்கில் நாஜிகளின் நினைவு தற்காலிகமாக அகன்று போயிற்று. சுலோவின் ஸ்பரிசமும், அணைப்பும் அவனைக் கள்வெறி கொள்ளச் செய்தன. அவன் எல்லாக் கவலைகளையும் மறந்தான். அவர்களிடம் இருந்து கிளுகிளுப்புச் சத்தங்கள் தாராளமாய் வந்தன. அவளின் அர்த்தமற்ற அல்லது ஏதோ அர்த்தமான சிரிப்புகளுடன் நகுலன் அவர்கள் படுக்கையறைக்குள் புகுந்தான்.

அடுத்த நாள், காலை நகுலன் 'காஷ் அன்ட் கரி'(Cash and carry) எனப்படும் மொத்தவியாபாரக் கடைக்குப் பொருட்கள் எடுத்துவர வானில் போனான். அதனால் அன்று காலை சுலோவைச் சென்று கடையைத் திறக்குமாறு கூறினான். அவளுக்குத் துணையாகக் கண்ணன் வருவான் என்பது சுலோவிற்குத் தெரியும். இங்கு தனித்துக் கடையைத் திறப்பது இலண்டன் மாநகரத்திற்குள் திறப்பது போன்று பெரும் ஆபத்து இல்லை. காலத்தின் மாற்றத்தில் அந்தப் பாதுகாப்பு இப்போது அடிபட்டுப் போயிற்று. அவளை அந்த ஸ்திரமற்ற உணர்வு பற்றிக்கொண்டது. இலண்டனிற்குள் நிலைமை மிகவும் மோசமாக இருக்கும். களவு எடுப்பதற்காகவே பலர் கடைக்கு வருவார்கள். அவர்களைப் பார்ப்பதற்குக் கமராக்களைவிடப் பிரத்தியேகமாகப் பிடரியிலும் கண்கள் வேண்டும். அவர்கள் களவெடுப்பதைக் கண்டு கேட்டாலும் அடித்து விட்டு ஓடிப் போய்விடுவார்கள். அது ஒரு போராட்டமான வியாபாரமாகும். கறுப்பர்களும் வெளிநாட்டவர்களுமே இப்படியான வேலையை அதிகம் செய்பவர்கள் என்பதும் வருத்தமான உண்மையாகும்.

குறிப்பாக ஆபிரிக்கர்கள்தான் அதில் மோசம் என்கின்ற கருத்துத் தமிழர்களிடம் நிலவி வந்தது. சுலோவுக்கு அந்தக் கூற்றின் உண்மை பொய் தெரியவில்லை. அது பிழையாக இருக்கலாமெனப் பொதுவாக எண்ணுவாள். சிலவேளை ஆபிரிக்காவில் இருந்து வந்திருக்கும் ஒருசிலர் செய்வது எல்லோரது மதிப்பையும் கெடுக்கிறதென எண்ணுவாள். அந்த ஒரு சிலரைக் கண்டு பிடிப்பது இலகுவான விடயம் இல்லை என்பதும் அவளுக்குப் புரிந்தது.

அதைக் கேட்டுக் கேட்டு சுலோவுக்கும் இப்போது ஆபிரிக்க ஆண்கள் வந்தால் குலைப்பன் பிடிக்கும். அந்த அசௌகரியம் மனதையும் உடலையும் வதைக்கும். பலவேளை அவர்கள் நல்ல மனிதர்களாக இருப்பார்கள். சிலவேளை களவு எடுப்பதற்காகவே சிலர் வருவார்கள். ஏதாவது பொருட்களை எடுத்து அவர்கள் மறைக்க முயன்றாலும், நீ அதை எடுத்தாய் என்று கூறுவதற்கே அவளுக்குப் பயமாகிவிடும். அப்படிப் பயமாக இருந்தபோதும், நல்ல தொலைவில் நின்ற

வண்ணம் ஒருவனோடு ஒருநாள் சண்டை பிடித்தாள். அப்போது இவள் அதிர்ஷ்டம், வேறு ஆண்கள் கடைக்கு வந்தார்கள். அவர்கள் வருவதைப் பார்த்த அவன் காசைக் கவுண்டரில் போட்டுவிட்டு ஓடிப் போய்விட்டான். சுலோவிற்கு அதனால் ஏற்பட்ட பயம் மாத்திரம் என்றுமே போகவில்லை. உழைப்பு என்றால் இப்படித்தான் என்று நகுலன் சமாதானம் சொல்லுவான். சுலோவுக்கும் வேறு வழி இருப்பதாய்த் தெரிவதில்லை. எலியும் பூனையுமான விளையாட்டை எப்போதும் எங்கும் எல்லாவற்றிலும் தொடரவேண்டிய இம்சை. வெறுத்தாலும் விலகமுடியாத வாழ்க்கை.

சுலோ கடைக்குப் போகும்போது, சில தீயணைப்பு இயந்திரங்களும், தீயணைப்புப் படையினரும் எங்கோ வேலையை முடித்துவிட்டுத் திரும்பித் தமது நிலையத்தை நோக்கிச் சென்றார்கள். எங்கேயாவது எரிந்திருக்குமென எண்ணியவள், குளிர்காலம் என்றால் இன்னும் அதிகமாய் எரியும் எனவும் எண்ணினாள். அவள் தனது வாகனத்தை நிறுத்தும்போதுதான் தங்களது கடைக்குப் பக்கத்தில் இருந்து அதிகமான ஆட்கள் வருவதைக் கண்டாள். அத்தோடு அங்கே இன்னும் ஒரு தீயணைப்புப்படை இயந்திரம் நிற்பதையும் கண்டாள்.

அதற்கு மேற் பொறுக்க முடியாதவளாய்க் கடையை நோக்கி ஆத்துப்பறக்க ஓடினாள். கடையைப் பார்த்த சுலோவிற்குத் தாங்க முடியாத அதிர்ச்சியாயிற்று. அவள் தலையிற் கைவைத்தவண்ணம் அப்படியே நிலத்தில் இருந்தாள். அவளுக்கு உலகம் இருண்டு போய்விட்டது. எவ்வளவு நேரம் அப்படித் தன்னை மறந்து இருந்திருப்பாளோ தெரியாது. “இப்பிடியே இருந்தது போதும் எழும்புங்க அக்கா” என்று கண்ணன் கூறியபோதுதான் அவளுக்குச் சுயநினைவு வந்தது. அவள் கண்ணனைப் பார்த்து “எல்லாம் முடிஞ்சு போச்சுது... எல்லாம் முடிஞ்சு போச்சுது...” எனத் தேம்பித் தேம்பி அழுதாள். “அழாமல் வாங்க அக்கா. கிட்டப் போய்ப் பார்த்து வருவம்” என்று கண்ணன் கூறினான். அதுதான் சரியென ஒப்புக்கொண்ட அவள், எழுந்து கண்ணனுடன் கடைக்கு கிட்டவாகச் சென்றாள்.

கடை முற்றுமாக எரிந்து போயிற்று. கடையெரிந்தால் அந்தத் தகவல் நகுலனின் கைத்தொலைபேசிக்கு வரும். அப்படி வந்தால் நகுலன் அவளுக்குப் ஃபோன் செய்திருப்பான். அப்படிப் ஃபோன் வராமல் இருந்ததை அவளால் நம்பமுடியவில்லை. கடைக்கு அருகிற் சென்று சிறிது நேரம் நின்றவளுக்கு மீண்டும் அழுகை வந்துவிட்டது. தன்னைக் கட்டுப்படுத்த முடியாத வேதனையில் தேம்பித் தேம்பி அழுதாள். கண்ணனும் சமாதானப்படுத்த முயற்சி செய்தான்.

அவள் அழுவதைப் பார்த்த பொலீஸார் அவளை நோக்கி வந்தனர். பின்பு அவளைப் பார்த்து "கடை உங்களுடையதா" என வினவினர். தன்னைச் சமாளித்தவண்ணம் சுலோ "ஆம்" என்றாள்.

## 5.6 துருக்கியும் கிரேக்கமும்

கிரேக்க அரசாங்கம் அன்று அவசரமாகக் கூடியது. அந்த நாட்டில் மக்களின் குழப்பநிலை அரசையே கவிழ்த்துவிடும் என்பதாக நிலைமை மாறிற்று. ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லை நாடான, ஏழை நாடான கிரேக்கத்தின் தலையில் தாங்கமுடியாத பளுவை ஏற்றிவிட்டு, வசதியாகத் தங்கள் கண்களை மூடிக்கொண்டன. பாராமுகம் காட்டின. கிரேக்கத்தின் முகம் அந்தப் பளுவில் அழுந்திக் கோரமாகிற்று.

உலகச் சட்டதிட்டங்களைப் பார்ப்பதா, அல்லது உள்நாட்டு அரசைப் பாதுகாப்பதா என்கின்ற கேள்வியே கிரேக்க அரசாங்கத்தின் முன்பு பூதாகரமாகியது. அரசாங்கம் என்ன செய்வது என்பது தெரியாது திகைத்தது. இந்தச் சங்கடத்தை அவர்கள் இவ்வளவு விரைவாக எதிர்பார்க்கவில்லை. சும்மாய் இருப்பதால் மட்டும் அரசைக் காப்பாற்ற முடியாது என்பதை உணர்ந்த அமைச்சர் ஒருவர் அந்த யோசனையைக் கூறினார்.

அவரின் எளிய யோசனைப்படி, வெள்ளைநிறச் செஞ்சிலுவைச்சங்கப் பேருந்துகளில் அகதிகளை ஏற்றிச்சென்று துருக்கிய எல்லைக்குள் விட்டுவிட வேண்டும். அது ஒரு பரீட்சார்த்தம். அவர் அதற்குத் தொடர்ந்து இப்படி விளக்கமளித்தார். "அவர்கள் எல்லைக்குள் அகதிகளை அழைத்துச் சென்று விடும்போது என்ன நடக்கிறது என்பதை முதலிற் பார்ப்போம். அவர்கள் அதை அனுமதித்தால் வலுக்கட்டாயமாக எல்லா அகதிகளையும் அனுப்பும் பணியை மேற்கொள்வோம். அகதிகள் வந்ததிற்கான பதிவுகளை நிறுத்திவிட்டு, அவர்களை ஒரு முகாமில் அடைத்துவைத்து உடனடியாக அப்படியான பேருந்துகளில் ஏற்றி அனுப்பிவிடுவோம். இது ஒரு முயற்சி மட்டுமே. நிச்சயம் பயனளிக்குமா என்பது தெரியாது. முயற்சி இன்றி நாங்கள் தொடர்ந்தும் கையைப் பிசைந்த வண்ணம் காலத்தைப் போக்கமுடியாது" என அவர் தனது எளிய திட்டத்தைப் பற்றி மேலும் விளக்கிக் கூறினார்.

"இதைத் துருக்கி அரசு ஏற்றுக்கொள்ளுமா? நாங்கள் ஒரு சிறு சல்லிக்கல்லை எல்லையைத் தாண்டி எறிந்தாலே அவர்கள்

சண்டைக்கு வந்துவிடுவார்கள். அப்படி இருக்க பஸ்கள் பஸ்களாக அகதிகளை அவர்கள் பக்கம் அனுப்ப விடுவார்களா, அல்லது போர்க்கொடி தூக்குவார்களா" என அதை ஆட்சேபித்த ஒருவர் வினாவினார். அதற்கு அந்த அமைச்சர் "நாங்கள் இப்படித் தத்துவ விவாதங்கள் செய்து இனியும் காலத்தைப் போக்குவதற்கு இது நேரம் இல்லை. முயற்சி செய்து பார்ப்போம், சரி வந்தால் சரி. அல்லது வேறுவழியைக் கண்டு பிடிப்போம், அல்லது இதைவிட சிறந்த வழி உங்களுக்குத் தெரிந்தாற் கூறுங்கள்" என்று மடக்கினார்.

பேருந்தால் அனுப்பும் நடைமுறை சரிவராவிட்டால் விமானத்தால் அகதிகளைச் சொந்தநாட்டிற்கு அனுப்பி வைக்கலாம் எனச் சிலர் அபிப்பிராயம் கூறினார்கள். அவர்கள் நாட்டிற்குள் வந்ததாக எந்தப் பதிவும் இல்லாவிட்டால், அது மிகவும் வசதியாக இருக்குமென மீண்டும் ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

"விமானத்தில் அனுப்புமளவுக்கு அரசாங்கம் பணத்தை அந்த விடயத்தில் தற்போது செலவுசெய்ய முடியுமா என்பது தெரிந்தாக வேண்டும். அல்லது அதைவிட மலிவான வழிகள் வேறு ஏதாவது இருந்தால் அதைக் கையாளலாம். கப்பல் மலிவாக இருக்கும். இதற்காக விசேட கப்பல்களை அனுப்பலாம். சாப்பாட்டிற்குச் செயற்கையாகச் செய்யப்படும் புறோட்டின் பிஸ்கற், பருகுவதற்கு நீர், சில மருத்துவ வசதி ஆகியன இருந்தால், அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தலாம். ஆனால் அந்த நாடுகள் அகதிகளை ஏற்க மறுத்தாற் பெரிய பிரச்சனையாகிவிடும்." எனச் சிலர் அபிப்பிராயப் பட்டார்கள்.

"சொந்த நாடுகளே அந்த நாட்டு மக்களை ஏற்கமறுத்தால், நாங்கள் அகதிகளைக் கடலில் தள்ளிவிட்டுக் கப்பலைக் கொண்டுவர வேண்டியதுதான்." என்பதாக ஒரு அமைச்சர் சிறுபிள்ளைத்தனமாகவும் கோபமாகவும் கூறினார். பிந்திய காலங்களில் அந்தச் சிறுபிள்ளைத்தனங்களையும் சிலவேளைகளில் ஆழ்கடலில் வைத்து நடைமுறைப்படுத்தினார்கள் என்று கூறப்படுகிறது.

இப்படியாகக் கிரேக்க அரசாங்கத்தின் இரகசியக் கூட்டத்திற் பல கருத்துகளும் முன்வைக்கப்பட்டன. பல வாதங்களின் பின்பு, முதற்கட்டமாய்த் துருக்கிக்கு வெள்ளைநிறப் பேருந்தில் அகதிகளை அனுப்பும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதென அங்கு தீர்மானிக்கப்பட்டது.

*

அன்று, பதியப்படாத அகதிகள் ஐம்பது பேரை வெள்ளைப் பேருந்து ஒன்றில் ஏற்றினார்கள். பின்பு அவர்களை ஆயுதம் தரித்த காவலாளிகளோடு எல்லை வரையும் கொண்டுவந்தனர். அங்கிருந்து ஆயுதம் தாங்காத காவலாளிகள் சகிதம் பேருந்தை எல்லையைத் தாண்டி அனுப்பி வைத்தார்கள். துருக்கிய எல்லைக் காவலர்கள் இதன் தாற்பரியம் தெரியாது போலிக் கடவுச்சீட்டை நம்பிப் பேருந்தை உள்ளே அனுமதித்தனர். உள்ளே சென்ற பேருந்து இரண்டு மணித்தியாலப் பிரயாணத்தில் ஒரு நகரத்தை அண்டியது. அங்கே வலுக்கட்டாயமாக அனைத்து அகதிகளையும் இறக்கிவிட்டுக் கடவுச்சீட்டுகளையும் எடுத்துக்கொண்டு திரும்பி அது கிரேக்கம் புறப்பட்டுச்சென்றது.

சில மணி நேரத்தில் இந்தச் செய்தி துருக்கி அரசிற்கு எட்டியது. அவர்கள் இராணுவப் பேருந்துகளோடு, நூறு அதிரடிப்படையிரையும் அந்தச் சிறிய நகரத்துக்கு அனுப்பிவைத்தார்கள்.

அந்த அகதிகளுக்குத் துருக்கிய இராணுவம் உணவும், நீரும் கொடுத்து இளைப்பாற வைத்தனர். அடுத்தநாட் காலை கிரேக்க எல்லையைத் தாண்டி; கிரேக்கத்திற்குள் அவர்களை அழைத்துவந்து விட்டனர்.

கிரேக்க அதிதீவிர வலதுசாரி அரசாங்கம் மீண்டும் கூடியது. வெள்ளைப் பேருந்துத் தோல்வியை அடுத்து என்ன செய்வது என்பதை அவர்கள் ஆராய்ந்தார்கள். ஒவ்வொரு நாடாக, அந்தந்த நாட்டைச் சார்ந்த அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டும் எனத் திட்டமிட்டார்கள். அவர்களுக்குப் போதுமான உணவையும், நீரையும், சில மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும் எனவும் முடிவு செய்தார்கள். அப்படியான பாரிய கப்பல்களில்... உரிய அடிப்படை வசதியோடு… அகதிகளைத் திருப்பி அனுப்புவதை அனைவரும் ஆதரித்தனர். அடிப்படை வசதிகளோடு அகதிகளை அனுப்பி வைத்தால் பலரிடம் இருந்து வரும் விமர்சனத்தைக் குறைக்கலாமென நம்பினார்கள். இந்தத் திட்டம் பலருக்கும் பிடித்தது. அப்படி அனுப்பி வைப்பது நியாயமான செயலென்று கருதினார்கள்.

கதிர்வீச்சாற் பாதிக்கப்பட்டு, நோயுற்று இருப்பவர்களைக் கப்பலில் இப்படி அனுப்ப முடியுமா என்கிற கேள்வியைச் சிலர் எழுப்பினார்கள். அப்படி அனுப்ப முடியாது என்பது பலரது விடையாகியது. அப்படி

என்றால் விமானத்தில் அனுப்பலாம் எனச் சிலர் அபிப்பிராயம் கூறினார்கள். அவ்வளவிற்குப் பொருளாதாரத்தை அவர்களுக்காகச் செலவிட முடியாது எனப் பிரதிப் பிரதமமந்திரி மீண்டும் எதிராக வாதிட்டார். பின்பு அவரே "அதிலும் பார்க்க அவர்களுக்குச் சுகமான மோட்சம் கொடுக்கலாம்" எனச் சட்டென்று கூறினார்.

அவர் கூறியதை நம்பமுடியாதவர்களாய்ப் பலர் தவித்தனர். கிரேக்க அரசாங்கத்தின் அந்தக் கூட்டம் சில கணங்கள் உறைந்து போயிற்று. உதவிப் பிரதமரிடம் இருந்து திடீரென இந்தக் கொடூரமான வார்த்தைகளை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. உதவிப் பிரதமர் மிகவும் கடுமையான அதிதீவிர வலதுசாரி என்பது பலருக்குப் புரியும். கிட்டத்தட்ட அவரை ஒரு நவநாஜி என்றே பலர் எண்ணினர். அப்படி இருந்தும், அவரிடம் இவ்வளவு விரைவாக அந்தப் பாரதூரமான வார்த்தைகள் வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அவர் தனது கருத்தில் இருந்து பின்வாங்கவில்லை. "வேதனையோடு இயலாது சாகக் கிடப்பவர்களுக்கு, மருத்துவர்கள் செய்வது போல, சாவதற்கான மனிதாபிமான உதவி செய்வதுதான் இந்தத் திட்டமே தவிர, இது இரண்டாம் உலகப்போரில் நடந்த நச்சு வாயு அடித்துச் செய்யப்படும் கொலைகளைப் போன்றதல்ல. இதில் சுகபோகிகளாக இருப்பவர்களை நாங்கள் எதுவும் செய்யப்போவதில்லை." என்று வாதிட்டார். பின்பு நிலைமையை உணர்ந்து வழிந்தார். சமாளித்தார். உண்மையில் அவரது கூற்று அதிதீவிர வலதுசாரிகளையும் நடுங்க வைத்தது என்பதே உண்மை.

எனினும் அது தொடர்ந்து வாதமாகியது. அவரது கருத்திற்குச் சிறிது சிறிதாக ஆதரவு கூடியது. அவரின் திட்டத்தை "மோட்சவழி" எனப் பெயர் மாற்றிச் செய்யலாம் என்றனர். பிரதமரோ அதைக் கடுமையாக எதிர்த்தார். தான் பதவியில் இருக்கும்வரை அப்படியான எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற அனுமதியேன் என்பதாக அடம்பிடித்தார்.

திடீரென உதவிப் பிரதமர் "நாட்டின் நன்மை கருதி இதைச் செய்யவேண்டி உள்ளது. அதற்கு உங்களால் ஒத்துக்கொள்ள முடியாவிட்டால் நீங்கள் உங்கள் பதவியை யாரிடமாவது கொடுத்துவிடுங்கள். கட்டுப்பாடற்றுப் போகப்போகும் நாட்டைக் காப்பாற்றுவதற்கு வேறுவழி எங்களுக்குத் தெரியவில்லை. தயவு செய்து இதை உங்களுக்கு எதிராகச் சொல்லுங் கருத்தாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நாட்டின் நன்மை கருதி மட்டுமே நான் இப்படி யோசிக்கிறேன்." என்றார். பலர் அதற்குக் கைதட்டினார்கள். பிரதமருக்குக் கோபத்தில் முகம் சிவக்க அதரத்தால் வெக்கை

பறந்தது. அவரது கன்னங்களும் கண்களும் குங்குமமாய்ச் சிவந்தன. அவர் சினம் கொண்டவராக “நான் இந்தப் பாவத்திற்குச் சற்றும் துணைநிற்க முடியாது. எனக்கு இந்தப் பாவத்தில் ஒரு துளி சம்பந்தம் இருப்பதைக்கூட வெறுக்கிறேன். இவ்வளவு அசிங்கமான எண்ணமுடைய மனிதர்களோடு நான் அரசு அமைத்தேன் என்பதை எண்ணவே வெட்கப்படுகிறேன். உண்மையில் நான் இந்த நாட்டை அழிவுப் பாதையில் விட்டுவிட்டுச் செல்லமுடியாது. கட்சியின் பொதுக்கூட்டம் கூட்டி அதிற்தான் என்னைப் பதவியில் இருந்து நீங்கள் விடுவிக்க முடியும். பொதுச் சபையில் உங்கள் கருத்து என்னவென்று தெரியவேண்டும். ஒரு நாட்டின் பொறுப்பை மக்களாற் தெரிவு செய்யப்பட்டவர்களிடம் மட்டும்தான் கொடுக்க முடியும்.” என அவர் கடுந் தொனியிற் கூறினார். இப்படிப் பேசியது உதவிப் பிரதமருக்குச் சற்றும் பிடிக்கவில்லை. “உங்களுக்கு எங்கும் இப்போது பெரும்பான்மை கிடையாது என்பது புரியவில்லையா? இங்கு உங்களுக்குப் பெரும்பான்மை இருந்தாற் கட்சிக்கு எடுத்துச் செல்லுங்கள். இல்லாவிட்டால் மரியாதையாகக் கட்சியை விட்டு இப்பொழுதே விலகிச் செல்லுங்கள். மந்திரிசபை உங்களால் நியமிக்கப்பட்டதாய் இருக்கலாம். இருந்தாலும் மந்திரி சபையிலும் கட்சியின் பிரதிநிதித்துவம் இருக்கிறது. இங்கு என்ன பிரதிபலிக்கிறதோ அதுவேதான் கட்சிப் பொதுக்கூட்டத்திலும் பிரதிபலிக்கும். அதுவேதான் மக்களின் கருத்தாகவும் இருக்கும்.” என்றார் கோபமாக. “இது என்னை வலுக்கட்டாயப்படுத்திப் பதவியில் இருந்து விலக்குவது போல இருக்கிறது. அப்படிப் புரட்சி செய்தால் அதற்கு என்ன தண்டனை உண்டு என்பது புரியுமா?” என்றார் பிரதமர் பயமுறுத்தும் தொனியில். “நாங்கள் இதற்குமேல் இவரோடு கதைத்துப் பிரயோசனம் இல்லை. உங்கள் பூச்சாண்டியை இத்தோடு நிறுத்துங்கள். நாங்கள் கட்சியை அவசரமாகக் கூட்டுவோம். அப்போதுதான் இவர் எந்த உலகத்தில் இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வார்” என்றார் உதவிப் பிரதமர். “தேவையில்லை... எதற்காகப் பிரதமருக்கு பயப்படவேண்டும்? முதலில் இங்கு வாக்கெடுப்பு வைப்போம். பின்பு வேண்டுமென்றாற் கட்சியைக் கூட்டுவோம்.” என்றார் ஒரு மந்திரி. அவருக்கு ஆதரவாகப் பல குரல்கள் ஒலித்தன.

அதையடுத்துப் பிரதமரின் விருப்பிற்கு எதிராக வாக்கெடுப்பு நடந்தது. பிரதமர் பெரும்பான்மையினரின் நம்பிக்கையை இழந்துபோனார். வாக்கெடுப்பு முடிந்த பின்பு வெறுப்போடு தனது ராஜினாமாக் கடிதத்திற் கையெழுத்து வைத்தார்.

பலரது வேண்டுகோளுக்கும் இணங்க, உதவிப் பிரதமர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

சிறிது நேரத்திற் பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்பட்டது. குடும்ப விடயம் காரணமாகப் பிரதமர் உடனடியாகவே பதவி விலகிவிட்டார் எனவும், உதவிப் பிரதமர் பிரதமராகப் பதவி ஏற்கிறார் எனவும் அறிவிக்கப்பட்டது. கட்சியின் நன்மை கருதி இப்படித்தான் அறிக்கை விடவேண்டும் என்று முடிவாகிற்று. பிரதமரால் அதை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், நிம்மதி வேண்டிப் பேசாது மௌனமானார்.

பிரதமர் சிறிது நேரத்தில் அரசியல் அபலையாக அங்கிருந்து வெளியேறினார். அரசியல் அபலையானாலும் பெரும் பாவத்தில் இருந்து தப்பித்த நிம்மதியை அவர் சுகித்தார். அந்த நாட்டைவிட்டே விரைவில் வெளியேற வேண்டும் போல் இருந்தது அவருக்கு.

செய்தி காட்டுத் தீயெனப் பரவத் தொடங்கியது. பல பத்திரிகை நிருபர்களுக்கு அந்த முடிவின்மீது கடுமையான சந்தேகம் இயற்கையாகவே எழுந்தது. இவ்வளவு அவசரமாகப் பிரதமர் பதவி துறந்ததின் மர்மத்தை அறிய அவர்கள் துடித்தார்கள்.

சில மணித்தியாலத்திற்குள்ளாகவே புதிய பிரதமர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அதில் அகதிகள் பிரச்சனையை ஒழித்து, நாட்டைப் பழைய நிலைமைக்கு ஒரு வருடத்தில் தன்னாற் கொண்டுவர முடியுமென அவர் வாக்குறுதி அளித்தார்.

மக்கள் அதை நம்ப மறுத்தனர். எல்லா அரசியல்வாதிகளைப் போலவே இவரும் வாக்குறுதிகளை மட்டும் நன்கு அள்ளி வீசுகிறாரென எண்ணினர். துணைப் பிரதமரின் கடும்போக்குத் தெரிந்த பத்திரிகையாளரும், சில மக்களும் இந்த மாற்றத்திற்குப் பின்னே ஏதோ சதியிருக்க வேண்டுமென நம்பினார்கள். அப்படி ஏதாவது இருந்தால் அது மிகவிரைவில் வெளிவர வேண்டுமென அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஊகங்கள் இருந்தாலும் வாய் திறக்கும் துணிவு அற்றவர்களாய்ப் பலர் அடங்கிப் போனார்கள். அரசுகள் வன்முறையைப் பாவிப்பதற்கு எப்போதும் தயங்குவது இல்லை என்கின்ற உண்மை மக்களின் பேச்சுச் சுதந்திரத்தை மெல்லக் களவாடியது. அதற்கும் மேலாக ஐரோப்பிய ஒன்றியமும் அதில் உள்ள நாடுகளும் சட்டங்களை மிகவும் இறுக்கின. அவர்கள் ஜனநாயகத்தின் குரலைப் பிடுங்கிவிட்டு, ஜனநாயகம் என்னும் பெயரில் சத்தமில்லாது சர்வாதிகாரத்தை நடத்தினார்கள்.

## 5.7 புதிய பிரதமர்

கிரேக்கத்திற் புதிய பிரதமர் பதவியேற்றவுடன் பழைய மந்திரி சபையைத் தலைகீழாக மாற்றி அமைத்தார். மாற்றுக் கருத்தாளர்கள், ஜனநாயக விசுவாசிகள், மனிதநேய அபிமானிகள், பழைய பிரதமரின் விசுவாசிகள் ஆகியோரை மெதுவாகத் தனது அரசாங்கத்தில் இருந்து ஓரங்கட்டினார். அதற்குப் பதிலாக எதிர்க்கேள்வி கேட்காத தனது விசுவாசிகளை உள்ளே கொண்டு வந்தார். தங்களுக்குப் பிரச்சனையாக இருந்த இடதுசாரிக் கட்சியொன்றைத் திட்டமிட்டு ஒரு பொய் வழக்கில் மாட்ட வைத்தார். பின்பு தங்களுக்கு இருந்த பெரும்பான்மையில் அந்தக் கட்சியைத் தடைசெய்தார். முக்கியமானவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தார். மற்றக் கட்சிகளின் பலத்தையும் ஊடுருவல் மூலம் குறைத்துத் தனது பதவியின் பலத்தைக் கூட்டினார். பயமும் சர்வாதிகாரமும் அனைத்துக் குரலையும் எதிர்த்தெழாது மௌனிக்க வைத்தன. அநியாயத்திற்கு எதிரான அந்த மௌனமே சர்வாதிகாரத்தின் உரமாகியது.

மூன்று மாதத்தில் ஜனநாயகத்தைத் தொலைத்து, அந்த நாடு ஒரு சர்வாதிகார ஆட்சிக்குள் முழுமையாகப் புதைந்து போயிற்று. அதன்பின்பு அந்த அதிதீவிர வலதுசாரிப் பிரதமர் பிரச்சனையின் மூலகாரணங்களை எப்படிப் பிடுங்கி எறிவது என்கின்ற செயற்திட்டத்தில் மும்முரமானார்.

ஐந்து பெரிய கப்பல்களில் அகதிகளாய்த் தடுப்பு முகாங்களில் அடைத்து வைத்திருப்பவர்களை திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு மந்திரி சபையிற் கதைத்தது போலச் சில வசதிகள் செய்யப்பட்டன. முகாங்களில் இருந்தவர்கள் வலுக்கட்டாயமாகக் கொண்டுவரப்பட்டுக் கப்பல்களில் ஏற்றப்பட்டார்கள். அதற்கு ஒத்துழைக்க மறுத்தவர்களைப் பொலீஸார் கடுமையாகத் தாக்கினர். எந்தவித ஊடகங்களும் அந்தச் செய்திகளைச் சேகரிக்கவோ, தணிக்கையின்றி வெளியிடவோ இடமளிக்கப்படவில்லை.

ஐரோப்பாவில் இருந்து ஆசியாவுக்கு, ஆபிரிக்காவிற்கு, மத்திய கிழக்கிற்கு எனத் தனித்தனியான கப்பல்கள் தயாராகின. அந்தக் கப்பல்களில் ஆயிரக்கணக்கான மக்களை ஏற்றி அனுப்பத் திட்டமிட்டனர். உலகத்தின் கண்டனங்களைக் குறைக்க, தாங்கள் மனிதாபிமானமாக நடந்து கொண்டோம் என்பதைக் காட்டும் வகையில் சில ஒழுங்குகள் செய்யப்பட்டன. அகதிகளுக்கு

உதவுவதற்கு ஒரு மருத்துவக் குழுவும் அக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டது.

கப்பல்களுக்குள் எந்தவிதப் புரட்சி அல்லது கலகம் ஏற்பட்டுவிடாது இருப்பதற்காய்ப் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. கப்பலில் வேலை செய்பவர்களுக்குச் சகல வசதிகளும், வழமையான உணவும் வழங்கப்பட்டது. அகதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளும், செயற்கைப் புரோட்டின் பிஸ்கற்களும், குடிப்பதற்கு நீரும் கொடுக்கப்பட்டது. அந்த அகதிகள் குளிப்பதற்கு மழையை நம்ப வேண்டியதாகிற்று. அவர்களின் ஐரோப்பியக் கற்பனைகள் வதைமுகாங்களிலும், அசௌகரியக் கப்பற் பயணத்திலும் முடியுமென அவர்கள் கற்பனை செய்திருக்கவில்லை. இப்போது உயிரோடு விட்டுவைத்த வகையில் அவர்கள் நிம்மதி அடையவேண்டியதாகிற்று.

தாங்கள் சொந்த நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்பு இருந்ததைவிடப் பிச்சைக்காரர்களாக, மீண்டும் சொந்தமண்ணை வந்தடைவது அகதிகளுக்கு மிகவும் வேதனை தந்தது. உயிரின் பெறுமதி என்பது எல்லாவற்றையும்விட மேலானது என்பது இப்போது அவர்களுக்குப் புரிந்தது. காந்தீயம் மரித்த காந்திதேசம் போரைத் தொடங்காது விட்டிருந்தால் தாங்கள் சுவர்க்கத்தைவிட்டுப் போயிருக்க வேண்டி வந்திருக்காது என்று எண்ணினர். இப்போது சுவர்க்கத்தை நரகமாக்கிய பின்பு அந்த நரகத்தில் வாழவேண்டியது அவர்கள் விதியாகியது.

அதேவேளை கிரேக்கத்தின் மிகச் சிறந்த பொறியிலாளர்கள், தொழில் வல்லுனர்கள், மருத்துவர்கள் எனப் பலதரப்பட்ட நிபுணர்களையும் அழைத்துப் பிரதமர் ஒரு விடயம் பற்றி இரகசியமாக, இரவுபகல் ஓய்வின்றிப் பேச்சு வார்த்தை நடத்தினார். அவர் இந்த விடயம் வெளியுலகிற்குத் தெரிந்துவிடலாகாது என்பதில் மிகவும் அக்கறை காட்டினார். கட்டி முடிந்த பின்பு கட்டியவர்களுக்குக் காலன் காட்டுவது பற்றியும் மனதிற்குள் திட்டமிட்டார்.

முதற்கட்டமாக அனுப்பப்பட்ட கப்பல் ஆசிய, மத்தியகிழக்கு நாடுகளைப் பல இன்னல்களுக்கு மத்தியிலும், சில அகதிகளின் உயிரிழப்பிற்கு மத்தியிலும் சென்றடைந்தது. அந்த நாடுகள் அகதிகளைக் கப்பலால் நாட்டிற்குள் இறங்கவிடாது தடுக்க முயற்சித்தாலும், அகதிகள் அதை உடைத்து எறிந்துவிட்டுத் தமது சொந்த நாட்டிற்குட் சென்றார்கள். வசதியான வாழ்வை எண்ணி

ஐரோப்பியப் புதைகுழிகளில் இனியும் விழுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. கதிர்வீச்சு என்றாலோ, பட்டினி என்றாலோ சொந்த நாட்டில் அனுபவித்து விடுவதென அவர்கள் முடிவு செய்தார்கள். தெரியாத தேசத்து சுவர்க்கத்தைவிடத் தெரிந்த தேசத்து நரகம் அவர்களுக்கு மேலாகப்பட்டது. ஐரோப்பாவில் இருந்து வரும் அகதிகளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் தற்போது தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், மற்றைய சில நாடுகளுக்கும் வலுவில் வழங்கப்பட்டது. ஏற்கெனவே மருத்துவ வசதிகள், உணவு என்பன இந்த நாடுகளில் தட்டுப்பாடாய் இருந்த நிலையில், ஐரோப்பாகூட இரக்கமின்றி அகதிகளைத் திருப்பி அனுப்பியதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தும் அவர்களைப் பராமரிப்பதைத் தவிர அவர்களுக்கு மாற்று வழி இருக்கவில்லை.

அதேநேரம், கிரேக்கப் பிரதமரின் முயற்சியில் அந்தப் பாரிய திட்டம் உருக்கொண்டது. அதற்காகப் போக்குவரத்து வசதியோடு அமைந்த ஒதுக்குப்புறமான இடம் ஒன்று பரம இரகசியத்தோடு தெரிவு செய்யப்பட்டது. அது காடுகளோடான மலைப்பாங்கான இடமாகவும், நகரத்தைவிட்டு அதிகம் ஒதுங்கிய ஒரு பகுதியாகவும் இருந்தது. அந்தப் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுப் பணிகள் துரிதமாக முடுக்கிவிடப்பட்டன. அந்த இடத்திற்கும் வெளியிடத்திற்குமான போக்குவரத்து, புகையிரதம் மூலம் மட்டும் இடம்பெறவேண்டும் என்பதற்காகப் புதிய தண்டவாளங்களை அமைத்தனர். பிரதமர் தனது கைப்பட அந்தப் புதிய கட்டடத்தை வரைந்திருந்தார். அதற்குள் இருக்க வேண்டிய வசதிகள் பற்றிய விபரங்கள் மிகவும் தெளிவாக நுணுக்கமாக விபரிக்கப்பட்டு இருந்தன. பிரதமரின் அந்தத் திட்டத்தைக்கூட வரலாற்றைப் படித்தவர்களால் வாசித்து அறிந்து கொள்ள முடியும் என்பதை அவர் அறிந்து இருந்தாலும், இதற்குச் சரியான முடிவு இதுதான் என்பதில் அவர் மிகவும் உறுதி காட்டினார். அந்தத் திட்டம் மிகவிரைவில் செயற்படவிருந்தது. அப்படிச் செயற் படுத்தும் பொழுது, அங்கு வேலை செய்பவர்களுக்கு எந்தவிதமான மனவியற் பிரச்சனையும் வந்துவிடக்கூடாது என்பதற்காய் விசேடமான ஏற்பாடு செய்யப்பட்டது. அதிதீவிர வலதுசாரிகள், நவநாஜிகள் ஆகியோரில் இருந்து ஐநூறு பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்றன. அந்தப் பாடத்திட்டம் அவர்கள் செய்வதை நியாயப்படுத்துவதோடு, எந்தவிதக் குற்ற உணர்வையும் பெற்றுக்கொள்ளாது அவர்களை அதிலிருந்து காப்பாற்றுவதாக அமைந்தது. மனரீதியாக அந்தக் கொடூரத்தைத் தாங்குவதற்கு அவர்கள் தயார் செய்யப்பட்டார்கள். மனமே அற்ற மனிதர்களாக வாழ அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

பிரதமரின் திட்டப்படி ஒரு முறையில் பத்தாயிரம் பேரைக் கொள்ளக்கூடியதாக அந்தப் பிரமாண்டமான இரகசிய அரங்கம்

எல்லா வசதிகளோடும் அமையும். அது முழுக்க முழுக்க ஒரு சினிமா அரங்கம் போல இருக்கும். அந்த அரங்கத்தை வெளியே நின்று பார்க்கும்போதே, உள்ள செல்ல வேண்டும் என்கின்ற ஆவலை அது தூண்டும். அதற்காகப் பல வரைபுகளைப் பரிசோதித்து, புத்த விகாரை போன்ற வரைபு ஒன்று அவரால் தெரிவுசெய்யப்பட்டது.

உலகத்திற் கடைசியாக வந்துள்ள தொழில்நுட்பமே அங்கு பாவிக்கப்பட வேண்டும். உள்ளே வந்தவர்களுக்குத் தேவையான வசதிகள் இருந்தாலும் வெளியே தொடர்புகொள்ளும் வசதிமட்டும் அங்கு இருக்காது. இன்பமான உணர்வோடே, வருபவர்கள் உள்ளே செல்ல வேண்டும். என்ன நடக்கப் போகின்றது என்கின்ற சிந்தனையோ பயமோ அவர்களிடம் இருக்கக் கூடாது. அந்த அளவிற்கு உள்ளழகு அவர்களை மயக்க வேண்டும். வரலாற்றில் விட்ட தவறுகளை அவர் நுட்பமாகத் திருத்தினார். மனிதத்தை அதில் மட்டும் பேணினார்.

வந்து இறங்குபவர்களை அங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் மிகவும் பண்பாக வரவேற்க வேண்டும். பின்பு சாதாரண லோகங்கள், வெடிமருந்து, தொலைத்தொடர்புக் கருவிகள் போன்றவற்றை அடையாளம் காணும் கருவியின் பரிசோதனையின் பின்பு அவர்களை உள்ளே அனுமதிக்க வேண்டும். மண்டபத்திற்குட் பொருத்தப்பட்ட உலோகங்கள் மிகவும் வித்தியாசமானவை. முதன்முதல் உலக கட்டடக்கலையில் இங்கு மட்டுந்தான் பாவிக்கப்பட்டிருந்தன. அந்த அதிவிசேஷ உலோகம் அதிகளவு வெப்பத்தை நீண்ட நேரம் தாங்கக்கூடியது. மற்றைய சாதாரண உலோகங்கள் அந்த வெப்பத்தைத் தாங்காது உருகிப்போய்விடும். அதனால் மண்டபத்தின் செயற்பாட்டிற் தொய்வு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, அந்த விதிமுறை கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். 'நாசா'வுக்கே சவால் விடுவதாக அது இருக்க வேண்டும் என்று பிரதமர் விரும்பினார். அத்தோடு அங்கு முஸ்லீம் தீவிரவாதிகளையும் கொண்டுவரவேண்டி இருக்கலாம். அப்படிக் கொண்டுவரும்போது தற்கொலைத் தாக்குதல் செய்து, அந்தச் சாலைக்கு ஏதாவது பழுதை எற்படுத்திவிடலாம். எல்லாவற்றையும் ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த இந்த 'ஸ்கானிங் ' மிகவும் வசதியாக அமையும். அதைவிட மனிதர்களைப் பயமுறுத்தாத வகையில் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்படும். இப்படி நடக்கும் செய்தி வெளியே போகாதவாறு எல்லாத் தொடர்புச் சாதனங்களும் வாங்கப்பட்டு அதற்கான போலிப் பற்று அட்டை வழங்கப்படும்.

அந்தச் சோதனையை முடித்து உள்ளே வருபவர்களுக்குச் சிற்றுண்டியும், அருந்துவதற்குக் குளிர்பானமும் கொடுக்கப்படும்.

எல்லோரும் அந்த மண்டபத்துக்கு வந்து சேரும்வரை வயிறு குலுங்கச் சிரிக்கும் படங்கள் காட்டப்படும். எல்லோரும் வந்த பின்பு ஒரு பரபரப்பான படம் ஆரம்பமாகும். மக்கள் அதில் தமது கவனத்தைத் செலுத்தத் தொடங்குவார்கள்.

அந்தப் படம் ஆரம்பித்த ஐந்து நிமிடத்தில் அங்கு தொழில் புரிபவர்கள் மண்டபத்தைவிட்டு வெளியேறுவார்கள். பின்பு கதவுகள் தானாகச் சத்தம் இல்லாது தாளிட்டுக்கொள்ளும். அடைக்கப்பட்ட அந்த அமைப்பு உடனே தொழிற்படத் தொடங்கும். மண்டபத்திற்கும் அதன் சுற்றாடலுக்குமான காற்றோட்டம் மூடப்படும். பின்பு மெதுவாக அந்த மண்டபம் முழவதும் வாசனையற்ற மயக்க மருந்தை அவர்கள் சுவாசிக்கும் காற்றிற் பரப்பிவிடும். அதை யாரும் உணராதவாறு மிகவும் நுட்பமாக அது செயற்படுத்தும். அதன் இயக்கம் கட்டுப்பாட்டு அறையில் இருந்து அவதானமாக கவனிக்கப்படும். அந்த அளவிற்கு அவர்கள் தொழில்நுட்பத்தை அங்கு பயன்படுத்தினார்கள். மயக்க மருந்தைச் சுவாசித்த மனிதர்கள் மயங்கிச் செல்லும்போது நச்சுவாயு மெதுவாக அந்த மண்டபத்திற்கு தாராளமாய் நிரப்பப்படும். மயங்கிய மனிதர்கள் அதைச் சுவாசிக்கும் போது எந்த வேதனையும், சத்தமும், அனுங்கலும், துடிப்பும், பயமும் இல்லாது ஆயிரக்கணக்கில் அமைதியாக உயிர்களை விடுவார்கள். முதன்முதல், துன்பத்தில் இருந்து மிகவும் மனிதாபிமான முறையில் உயிர்களை விடுவிக்கும் உன்னதமான திட்டம் இதுவெனக் கிரேக்கப் பிரதமர் அதை வர்ணித்தார். துடிக்கத் துடிக்கக் கொல்வது அவர் திட்டம் இல்லை. அது அவருக்கு அறவே பிடிக்காத ஒன்று. ஏன் அப்படி அவர்கள் செய்தார்கள் என்பது இன்றும் அவருக்குப் புரியவில்லை. இது அனைவருக்கும் உதவிசெய்யும் நோக்கோடு திட்டமிடப்பட்ட ஓர் அற்புதமான மையமென அவர் கருதினார்.

நச்சுவாயு நிரப்பப்பட்டு மனிதர்களின் உயிர்கள் ஆயிரக்கணக்கில் பறிக்கப்பட்ட பின்பு, புதுவகையான சுவர்கள் அந்த மண்டபத்தின் அனைத்துப் பகுதிகளையும் அடைத்துக் கொள்ளும். அந்தச் சுவர்கள் வித்தியாசமான உலோகத் தகடுகளாலும் வெப்பத்தைக் கடத்தாத பின் படையாலும் நுட்பமாகச் செய்யப்பட்டவை. அந்த உலோகம் எங்கிருந்து வரவழைக்கப்பட்டது என்பது பிரதமருக்கும் அவரோடு நெருங்கியவர்களுக்கும் மட்டுமே தெரியும். தொடர்ந்து கதிரைகள் மடிந்து நிலத்திற்கு கீழே செல்ல, பிரேதங்கள் மாத்திரம் மேலே பத்திரப்படுத்தப்படும். அதையடுத்துப் பிரேதங்கள் உயர்த்தப்பட்டு மீண்டும் விசேட உலோகத்தட்டுகள் நிலத்தையும் முகட்டையும் சுற்றவுள்ள பகுதிகளையும் நுட்பமாக மூடிக்கொள்ளும். பின்பு உயர்த்திகள் பதிந்து நிலத்தின்கீட் சென்று மறையும். பிரேதங்கள் இப்போது விசேட உலோகத் தளத்தின்மீது கிடக்கும். புதுவித தொழில் நுட்பத்தின் உதவியோடு பெரிய போறணை போன்று அது

உருவெடுக்கும். பின்பு அதீத வெப்பத்தோடு அது சுயமாக எரியும். அந்த அதீத வெப்பத்தில் சகல மனித உடம்புகளும் சில நிமிடங்களில் நீறாகும். தகனம் முடிந்து அந்த மண்டபத்தைக் குளிரவைக்கும் பணி முதலில் தொடங்கும். பின்பு சுயமாகவே துப்பரவுப் பணி தொடங்கும். முதலில் அங்குள்ள இயந்திரங்கள் உட்பகுதியைத் துப்பரவு செய்து சாம்பலையும் தூசியையும் முற்றாக வெளியேற்றும். பின்பு முதல் வெப்பம் கடத்தாத உலோகச்சுவர் உள்ளிழுத்துக் கொள்ள போறணைக்கான இரண்டாவது சுவர் உள்ளிளுத்துக் கொள்ளும். அதன் பின்பு கிழே சென்ற தளம், பக்கச்சுவர்கள், கதிரைகள், கதவுகள், திரைகள் எல்லாம் மீண்டும் மேலே வந்து அந்தந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளும். பின்பு வாசனைத் திரவியங்கள் தெளிக்கப்படும். அப்போது அது மீண்டும் புதிதாகக் கட்டப்பட்ட திரையரங்காய்த் தொடர்ந்தும் தனது பணியைச் செய்யத் தயாராகிவிடும். அந்த அலுவல்களை எந்தச் சிக்கலும் இன்றிச் செய்வதற்கு அதீத தொழில்நுட்பவசதியும், அழகும் கொண்டதொரு நவீன கொலைத் தொழிற்சாலையாக அது அமைக்கப்பட வேண்டும் என்பது பிரதமரின் குறிக்கோள். அதற்கான கட்டுமானங்கள் பிரதமரின் விருப்பப்படி வெகு அவசரமாக நடைபெற்றன. இத்தால் வரலாறு விட்ட தவற்றைத் தானும் விட்டுவிடக்கூடாது என்பதிற் பிரதமர் மிகவும் அவதானமாக இருந்தார்.

முதலாவது கப்பற் பயணம் வெற்றி அளித்ததைத் தொடர்ந்து, கிரேக்கம் மீண்டும் மீண்டும் நிறமான வந்தேறுகுடிகளை அவர்களின் தாய்நாட்டிற்கு விரைவாக அனுப்பத் தொடங்கியது. தனது முயற்சி பலனளித்ததில் அது மிகவும் பெருமைப்பட்டது. பின்பு அகதிகள் அந்தஸ்து கிடையாமல் இருந்தவர்களையும் இரவோடு இரவாகக் கைதுசெய்து, அனுப்பத் தொடங்கியது. அதற்கு அந்நாட்டு மக்களின் அமோக வரவேற்புக் கிடைத்தது. அதைக் கண்ட அரசு, அகதிகள் அந்தஸ்துப் பெற்றவர்களையும், அவர்களது விசாவை இரத்துச் செய்து அனுப்பியது. அப்படி அனுப்பும் போது அவர்கள் எந்தச் சட்ட நடவடிக்கையும் செய்யவிடாது தடுத்தது. பின்பு, மிகவும் குறுகிய காலத்தில், குடியுரிமை பெற்றவர்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டத்தை அது நடைமுறைக்குக் கொண்டுவந்தது. பெரும்பான்மை மக்கள் அதற்கும் தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள். அதன் பின்பு அவர்களையும், அவர்களின் சொந்த நாட்டிற்குக் கிரேக்க அரசு திருப்பி அனுப்பி வைத்தது.

கப்பலில் அனுப்பிவைக்க முடியாத பலரையும் புகையிரதத்தின் மூலம் அனுப்பி வைக்க முயற்சித்தது. அதுவும் இயலாது என்கின்றபோது தடுப்பு முகாங்களில் அவர்களை அடைத்தது. பின்பு அவர்களை “மோட்சவழி மையம்” எனப்படும் அந்தப் பிரதமரின் மனிதாபிமான மரண மையத்திற்கு அனுப்பிற்று.

கிரேக்கத்தின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி மற்றைய நாடுகளையும் ஊக்கப்படுத்தியது. அவர்களும் கப்பல்கள் மூலமாகப் பல நாடுகளுக்கும் வேண்டப்படாத நிறமான வந்தேறுகுடிகளை அனுப்பத் தொடங்கினார்கள். ஏற்கெனவே ஏழ்மையில் வாடும் நாடுகள் இப்படியாக முளைத்த புதிய பிரச்சனையாற் திண்டாடின. அதைப் பற்றிய கவலை இல்லாது, அதிதீவிர வலதுசாரிகள் ஐரோப்பாவில் இருந்து அகதிகளை வேகமாகத் திருப்பி அனுப்பினார்கள்.

கிரேக்கத்தைப் போலவே பல நாடுகளும் தயவு தாட்சண்யம் இல்லாது அகதிகளின் குடியுரிமைகளைப் பறித்து, மறந்து போய் இருந்த நாடுகளைத் தாய்நாடாக்கி, அனாதைகளாக அவர்களைத் திருப்பி அனுப்பினர். பல அகதிகளின் குழந்தைகள் ஐரோப்பிய நாடொன்றே தமது தாய்நாடு என்பதாக வாழ்ந்திருக்க, திடீரென ஓர் ஆசிய நாட்டை, அல்லது ஓர் ஆபிரிக்க நாட்டை உங்கள் தாய்நாடு என்று காட்டி, அங்கு அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தது. அதை அவர்கள் ஏற்கமுடியாது தவித்தனர்.

ஐரோப்பிய நாடுகள் இதை மனிதவுரிமைமீறல் என்றும் பாராது, தங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டன. அதேவேளை சில ஆபிரிக்க ஆசிய நாடுகள் கிரேக்கத்தில் நீண்டகாலம் வாழ்ந்தவர்களை எற்கமறுத்து, விமானங்களில் அவர்களை அந்த ஐரோப்பிய நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைத்தார்கள். ஐரோப்பிய நாடுகள் தாங்கள் செய்யும் அநியாயத்தைப் புரிந்து கொள்ளாது திரும்பி வந்தவர்களைத் தடுப்பு முகாங்களில் அடைத்தனர். எவரும் ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு மோட்சவழியே இறுதி முடிவாகிற்று.

# 6

## 6.1 ஐநா செயலிழத்தல்

ஐக்கிய நாடுகள் சபையில் அகதிகள் பிரச்சனை தொடர்பில் வறிய நாடுகள் கொடுத்த தொந்தரவைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பல நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையைத்

தாங்கள் பகிஷ்கரிப்பது எனவும், அதன் முடிவுகளுக்குத் தாங்கள் இனிக் கட்டுப்படப்போவதில்லை எனவும் அறிவித்தன. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து ஏற்கெனவே முறுகலில் இருந்த இரசியாவும், ஜப்பானும் தற்காலிகமாகத் தமது பங்களிப்பை நிறுத்தின. அந்தச் செயல் அமெரிக்காவிற்குக் கோபத்தை உண்டு பண்ண, தான் மட்டுமே ஐ.நா வை நடத்துவதற்கான அவசியம் என்ன என்பதாக அதுவும் தனது பங்களிப்பை நிறுத்தியது. அதைத் தொடர்ந்து, செயற்படுவதற்குப் போதிய பணம் இல்லாமையால் ஐக்கிய நாடுகள் சபை ஸ்தம்பித்தது. செயலிழந்த அமைப்பில் தாங்கள் இருப்பதிற் பயன் இல்லை என்கிற காரணத்தோடு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அதில் இருந்து மெல்ல விலகின. அதைப் பார்த்த பல நாடுகள் ஒவ்வொன்றாகத் தாங்களும் விலகின.

ஐக்கிய நாடுகள் சபை செயலிழந்து போனமை, மனிதவுரிமை மீறலில் ஈடுபட்டுவந்த நாடுகளுக்குச் சுதந்திரமாய்ச் செயற்படுவதற்கு வழிசமைப்பதாயிற்று. கேட்பதற்கான சட்டம்பி காணாமற்போன வகுப்பறையாய் உலகம் மாறியது. அகதிகள் பிரச்சனையே தமது நாட்டின் இனச் சமநிலையைப் பாதிக்கிறதென எண்ணியவர்களுக்கு, அந்த அகதிகள் மேற் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அது கைகொடுத்தது.

அமெரிக்காவோ, ஜப்பானோ கண்டித்தால் அது பெருமளவில் எடுபடாத நிலை புதிதாகத் தோன்றிற்று. சி.ஐ.ஏ மேற்கொண்ட அமெரிக்காவின் மனிதவுரிமை மீறல்களைப் பற்றிய விமர்சனங்கள் அதற்கு எதிராக எடுத்துக்காட்டப்பட்டன. அமெரிக்காவும் அண்டைய நாடுகளில் இருந்துவரும் அகதிகளாற் பெரும் பிரச்சனையை எதிர் நோக்கியதால், பலவேளை பேசாது இருப்பதிற் சுகம்கண்டது. அத்தோடு அமெரிக்காவும் ஜப்பானும் தமது வர்த்தகம் பாதிக்கப்படக்கூடாது என்கின்ற எண்ணத்தோடு, தமது விமர்சனங்கள் பலவற்றை இயன்ற அளவு அடக்கி வாசிக்கப் பழகிக்கொண்டார்கள்.

ஐநா செயலிழந்ததை அடுத்து, உலகிற் பெரிய அழிவுகள் ஏற்படும்போது, முறையான உதவிகளை அந்த அழிவைச் சந்திக்கும் நாட்டிற்குச் செய்ய முடியாத நிலை தோன்றியது. அப்பொழுது பெரிய பெரிய நாடுகள் தங்களது சொந்த உதவி அமைப்புகள் மூலம் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளை அந்த நாடுகளுக்குச் செய்துவந்தன.

ஐநாவின் வீழ்ச்சிக்குப்பின் குற்றம் செய்யும் நாடுகளைத் தண்டிக்கும் முறை முற்றுமாக இல்லாமற் போயிற்று. ‘ஹேக்’கில் இருந்த

சர்வதேச நீதிமன்றம் கலைக்கப்பட்டது. இது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு, இந்திய பாகிஸ்தான் யுத்தத்திற்குப் பின்பாக ஐரோப்பாவை வந்தடைந்த அகதிகளினதும், அதற்கு முன்பு வந்த அகதிகளினதும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழியைத் திறந்துவிட்டது. அந்த நாடுகள் ஐநாவின் வீழ்ச்சியோடு ஜெனிவா ஒப்பந்தத்திற்கும் தாங்கள் இனிக் கட்டுப்படத் தேவையில்லையென அறிவித்தன.

முதலில் அவுஸ்ரேலியாவில் வாழ்ந்த இந்தியர்கள் மீதுதான் தாக்குதல்கள் நடந்தன. அப்படித் தாக்குதல் நடத்தியவர்களுக்கும் பின்னாளில் அவுஸ்ரேலிய அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற அதிதீவிர வலதுசாரிகளுக்கும் நிறையத் தொடர்புகள் இருந்தன. அவர்கள் நிறமான வந்தேறுகுடிகள் மீது எவ்வித தயவுதாட்சண்யமும் காட்ட விரும்பவில்லை. அதுவும் ஆசியாவில் இருந்து கப்பல்களிற் தொகை தொகையாக வறிய மக்கள் வருவதை அறவே வெறுத்தார்கள். அப்படி வருபவர்கள் தங்கள் நாட்டை அசிங்கப் படுத்துவதாய் அவர்களிற் சிலர் இனவெறித்தனமாகச் சிந்தித்தார்கள்.

அதேவேளை அவுஸ்ரேலியா தனது பல தீவுகளில் அகதிகளை அடைத்துவைத்து, அவர்களுக்குப் பல வருடங்களாகச் சுதந்திரத்தைக் கொடுக்க மறுத்தது. அது மனிதாபிமானத்தை முற்றுமாய்ப் புறக்கணித்தது. அதிதீவிர வலதுசாரிகளே பெரும்பான்மையாக அனேக நாடுகளில் ஆட்சியில் இருந்ததால், சட்டங்கள் மூலம் தாங்கள் நினைத்ததை இலகுவாகச் சாதித்தனர். இந்த மாற்றத்திற்குப் பின்பு அவுஸ்ரேலியாவுக்கு போவதற்குப் பலர் அஞ்சினார்கள். யாரது நாட்டையோ களவு செய்தவர்கள், பின்பு யார் யாரோ வருவதைத் தடுத்து, அவர்களைச் சிறைவைத்த புதினம் அவுஸ்ரேலியாவிற் பலகாலமாகத் தொடர்ந்தது. உலகம் ஆதிகாலத்தில் இருந்தது போல இன்று இல்லை. அதைப் புரிந்து கொண்டு மற்றைய மனிதனோடு பங்கிடுவதற்கும் சகமனிதன் தயாராக இல்லை. கனவிற்கூடப் பங்கு கொடுக்கும் கருணை மனிதனிடம் இல்லாமற் போயிற்று. வறிய நாடுகளில் வாழ்பவர்களுக்குப் போதிய வளங்கள் இல்லை. அவர்களின் வறுமையைப் பயன்படுத்தி வாழ்வை நாசமாக்க, சுரண்டும் பல்தேசிய நிறுவனங்கள் காத்திருந்தன. அரசு அதிகாரிகள் ஊழலைத் தமது பிரதான தொழிலாக்கிய அவலம் தொடர்ந்தது. செல்வந்த நாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் இலாப நோக்கிற்காய் அவர்கள் வறுமையைத் தொடர்ந்தும் கொடூரமாகப் பயன்படுத்தினர். பதவியில் இருப்பவர்களுக்கு லஞ்சம் கூச்சமில்லாது கொடுத்து ஆதாயத்தை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். தேசிய நிறுவனங்களும் தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதாக இறுமாப்புக் காட்டினர்.

## 6.2 கிரேக்கத்தில் கொடூரம்

கிரேக்க அரசாங்கம் அன்று இரகசிய கூட்டம் ஒன்றைக் கூட்டியது. அழகாகக் கட்டப்பட்டு... ஐந்து வலது குறைந்தவர்களுக்கு மோட்சமளித்து... பரிசோதனையிலும் வெற்றி கண்ட அந்த "மோட்சவழி" மையத்தை... இனி முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்கின்ற தனது திட்டத்தை அறிவிப்பதற்கே பிரதம மந்திரி அந்தக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டினார். இப்படியான கூட்டங்களில் அறிவித்த பின்புதான் தனது திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற அவசியம் கிரேக்கப் பிரதமருக்கு இருக்கவில்லை. அவருக்கு அதற்கும் மேலான அதிகாரத்தை ஏற்கனவே வழங்கிவிட்டனர். எனினும் ஒரு மரியாதைக்காக அவர் அதைத் தொடர்ந்தும் செய்துவந்தார்.

ஐரோப்பாவிற் தற்போது ஆட்சியில் இருப்பவர்களின் அதிகாரம் அந்தந்த நாட்டில் எதையும் எப்போதும் செய்யும் அளவிற்கு விஸ்தீரணமாயிற்று. இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ஜேயார் ஜெயவர்த்தனா கூறியதைப் பொய்யாக்குவது போல ஆணைப் பெண்ணாக்கி, பெண்ணை ஆணாக்குவதையும் அவர்களால் செய்விக்க முடிந்தது. அவர்களின் கைகளில் யார் வாழ்வது யார் மாள்வது என்கின்ற விதி ஒட்டு மொத்தமாய் ஒப்படைக்கப்பட்டது. மனிதர்களின் விதியையே நிர்ணயிக்கும் அந்த அதிகாரம் படைத்த மனிதர்கள், பேதங்களைக் காட்டித் தங்களுக்குச் சாதகங்களை ஏற்படுத்துவதிற் சற்றும் கூச்சமின்றிச் செயற்பட்டார்கள்.

அன்றைய கூட்டத்திற்கு வந்த பிரதமர் பரபரப்போடு அங்குமிங்கும் உலாத்தினார். சிறிது நேரத்தில் அவரது மனப்போராட்டம் முடிந்தது. தனது செயலிற் தப்பில்லை என்று தெளிவானார்.

பின்பு, சில நாட்களில் முதற் கட்டமாக மூவாயிரம் பேருக்குப் படம் காட்டப்படும் என்பதைப் பற்றி அங்கு அறிவித்தார். அவர் எந்தவிதமான குற்ற உணர்விலும் தற்போது வாடவில்லை. அவர் வதனத்திற் கவலையொழிந்து துணிவு ஒளிவீசியது. அங்கு இருந்த எல்லோருக்கும் பிரதமரின் படம்காட்டல் என்கின்ற சொல்லிற்கு என்ன அர்த்தம் என்பது புரிந்தது. அது ஒருவித திடீர் அமைதியை அங்கு பிரசவித்தது. அந்தச் சொற்களின் அர்த்தம் என்ன என்பது புரிந்திருந்தும் யாரும் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கத்

துணியவில்லை. அவர்கள் ஆழ்ந்த மௌனத்தில் இருந்தார்கள். ஒரு சிலரிற்கு மட்டும் அது ஒருவித அசௌகரியத்தைத் தந்தது.

வரலாற்றுக் குற்றவாளிகள் பலரும் தப்பி விடுவதான வரலாறு இல்லை என்பது அவர்களுக்குப் புரிந்தது என்றாலும், ஐரோப்பாவும் உலகமும் தற்போது மாறியுள்ள மாற்றத்திற்கு இன்னும் பல நூற்றாண்டுகள் சென்றாலும் தங்களைக் குற்றவாளிகளெனக் கூண்டில் ஏற்றும் நிலைமை வராது என்கின்ற துணிவு அவர்களுக்கு இருந்தது. இந்த நிறமான வந்தேறுகுடிகள் ஐரோப்பிய மண்ணில் இல்லாது ஒழிந்தாலும், தொடர்ந்தும் ஜிப்சிகள், யூதர்கள் எனப் பலரையும் அழிக்காது இத்திட்டம் ஓயாதென எண்ணினர். அதற்கு இன்னும் பல வருடங்கள் செல்லும். ஐரோப்பிய ஒன்றியம் என்னும் பூதத்தை எதிர்ப்பதற்கு யாருக்கும் தற்போது துணிவு இல்லை. இதற்காகத் தாங்கள் தேவையில்லாது கவலைப்பட வேண்டியது இல்லை என்பதாக அலட்சியம் செய்தார்கள்.

திடீரென நிலைமை மாறினாலும், அடையாளத்தை மாற்றி வேறு இடங்களில் வாழ்வதற்குக் கிரேக்க அரசு அப்போதே ஏற்பாடு செய்துவிட்டது. அது அரசோடு மிகவும் நெருக்கமான ஒவ்வொருவருக்கும் மற்றவர்களுக்குத் தெரியாத இன்னும் ஓர் அடையாளத்தை இரகசியமாகக் கொடுத்தது. ஆபத்தான நேரத்தில் அந்த அடையாளத்தோடு குறிப்பிட்ட இடத்திற்கு மாறிவிடவேண்டும் என்பது அதன் திட்டமாகும். அது அவர்களுக்கு மேலும் துணிவைத் தந்தது. தங்களை யாரும் எதுவும் செய்யமுடியாது என்கின்ற துணிவு திமிர்த்தது.

பிரதமர் தமக்குத் தற்போது படம் காட்டுவதைத் தவிர வேறு எந்தத் தெரிவுகளும் இல்லை என்பதையும், இதன் மூலம் நிறமான வந்தேறுகுடிகளின் தொகை குறைந்தாலே தமது பொருளாதாரமும், கலாசாரமும் பாதுகாக்கப்படுவதோடு கிரேக்கர்கள் என்கின்ற அடையாளத்தைத் தாங்கள் தக்கவைக்க முடியும் எனவும் விபரித்தார். இந்தத் திட்டத்தைக் கிரேக்கத்தில் மட்டுமல்லாது ஐரோப்பிய ஒன்றியம் முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலம்தான் ஐரோப்பிய ஒன்றியம் முழுமையும் தூய்மை அடையும் எனவும் விளக்கினார். தான் செய்யப் போகும் கொடுமை பற்றிய மனச்சாட்சியின் குத்தல் இருப்பதாக அவரது உணர்ச்சியோ சொற்களோ பிரதிபலிக்க மறுத்தன. மனிதத்திற்குச் செய்யப் போகும் படுபாதகத்தைக்கூடச் சாதாரண விடயம் போல் அவர் கூறினார். சிலருக்கு அது வியப்பைத் தந்தது. எனினும் இருப்பை எண்ணி வாய் திறக்க மறுத்தனர்; மறந்தனர்.

வேறு சிலர் அதற்கும் ஒத்துப் பாடினார்கள். பலர் தொடர்ந்தம் பயபக்தியாக மௌன விரதம் பிடித்தார்கள். அரசியல்வாதிகள் என்பது அவர்களுக்குப் பொருத்தமாயிற்று. ஆட்சேபம் இல்லாத மௌனத்தில் சர்வாதிகாரம் தொடர்ந்தது. இன்னும் சில நாட்களில் மூவாயிரம் உயிர்கள் செயற்கை முறையிற் பறிக்கப்படப்போவது, தமது மத நம்பிக்கைக்கு முரணாய் இருப்பது அவர்களிற் சிலரைக் கலங்கவைத்தது. எனினும் வேறு வழிகள் இருப்பதாய் அவர்களுக்குத் தெரியவில்லை. சுயநலம் பிடித்த மனிதர்களிடம் பிதாசுதன் தோற்றார். சாத்தான் விருந்துண்ணத் தயாரானான்.

*

அன்று விசேட புகையிரதங்கள் மூன்றில் அந்தப் பயணிகள் அரங்கிற்கு அழைத்துவரப்பட்டனர். அவர்களுக்குத் தாங்கள் எதற்காக அழைத்துச் செல்லப்படுகிறோம் என்பது தெரியாது. அந்தப் புகையிரதப்பெட்டிகள் வழமையான பயணிகளுக்கான புகையிரதப் பெட்டிகளாகவே இருந்தன. இருப்பதற்கு மாத்திரமே ஆசனம் இருந்த அந்தப் பெட்டிகளில் பெரிய அசௌகரியங்கள் இன்றிப் பயணிக்க முடிந்தது. வரும் வழியிற் கிரேக்கர்கள் மிகவும் மனிதாபிமானத்தோடு அவர்களை நடத்தினார்கள். அவர்கள் பயணம் ஒரு மூன்று மணித்தியாலத்தில் முடிவு பெற்றுவிட்டது. அவர்கள் உடைமைகள் எதையும் எடுத்துவரவில்லை. அது தேவையில்லையென அவர்களுக்குக் கூறப்பட்டது. முகாமில் இருந்த அனைவரும் அழைத்து வரப்பட்டனர். சில நோயாளிகள் மாத்திரம் தங்களால் பிரயாணம் செய்ய முடியாது என்று தப்பித்துக் கொண்டார்கள். பெட்டியில் ஏறியபின்புதான் படம்பார்க்கப் போவதாகக் கூறினார்கள்.

படம் முடிந்ததும் அவர்களை மீண்டும் முகாமிற்குக் கொண்டுவந்து விடுவதாகச் சொல்லி இருந்தார்கள். இருப்பினும் அதிதீமான பாதுகாப்பு மட்டும் அவர்கள் கூறுவதில் சிறிது ஐயுறவை சிலருக்கு ஏற்படுத்தியது. பின்பு பயணத்தின் போது இருந்த சுமுக நிலை அந்த ஐயத்தை மெல்ல அவர்களிடம் இருந்து போக்கியது.

தங்கள் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது தெரியாது பயணிகள் கூட்டம் அலைமோதியது. படம் பார்க்கப் போகும் தியேட்டரைப் பார்த்த போது அவர்கள் அதிசயித்தனர். இவ்வளவு

நவீனமாக, பெரிய அளவில் ஒருபோதும் அவர்கள் தியேட்டர் ஒன்றைப் பார்த்ததே இல்லை. அதன் பிரமாண்டமும் நவீனத்துவமும் அனைத்துச் சந்தேகங்களையும் ஓட ஓட விரட்டின. அதைவிட அவர்களின் உபசரிப்பு முகாமிற் கிடைத்த உபசரிப்பிற்கு நேர்மாறாக இருந்ததில் மெய்மறந்து போனார்கள். இந்தப் பெரிய நவீன தியேட்டரை எதற்காக ஒரு மலைப்பாங்கான காட்டுப்பகுதியில் கட்டினார்கள் என்பதை மட்டும் சிலராற் புரிந்துகொள்ள முடியவில்லை.

புகையிரத்தால் இறங்கிப் பலரும் விழுந்தடித்துத் தியேட்டரை நோக்கி ஓடினார்கள். அழகாய் இருந்தாற் பிசாசைக்கூடத் திருமணம் செய்து கொள்ளும் மனிதர்களாய் அவர்கள் இருந்ததில் வியப்பில்லை. அவர்களின் அவசரத்திலும், ஆர்வத்திலும் உள்ளே மட்டும் நடக்கவேண்டிய காரியம் வெளியேயும் நடந்துவிடாது பாதுகாவலர்கள் அவசரமாக அவர்களை ஒழுங்குபடுத்தி அமைதியாகப் போகுமாறு பணித்தனர்.

அந்தப் புகையிரத்தில் அப்துல்காதரும், அவனது மனைவியும், மகனும் வந்தார்கள். அத்தோடு இலங்கை இராணுவத்தில் இருந்த இருவரும், அவர்களது மனைவிமாரும், பிள்ளைகளும் வந்தார்கள். அவர்கள் வன்னி யுத்தத்தில் முன்னணியில் நின்ற இராணுவத்தினர். அப்போதும் மனிதம் காப்பதாகக் கொலைகள் செய்யப்பட்டன. போராளிகளை நிராயுதபாணிகளாக்கி, நிர்வாணமாக்கி, கற்பழித்து மனிதம் வெட்கும்படி கொலை செய்தனர். அப்பொழுது இலங்கை இராணுவத்திற்கு அது சரியான செயலாகத் தோன்றியது. இன்று கிரேக்க அரசியல்வாதிகளுக்கு இது சரியாகத் தோன்றுகிறது.

அப்துல் காதருக்கு அந்தத் தியேட்டரையும், அதற்குட் தாங்கள் கொண்டு செல்லப்படுவதின் நோக்கத்தையும் நிதானிக்க முடியவில்லை. எதுவும் செய்ய முடியாதவனாய், தனது மனைவியுடனும் பிள்ளையுடனும் இறங்கிவந்தான். அவனுக்குத் திடீரென இலங்கையின் சர்வதேச விமானநிலையம் நினைவுக்கு வந்தது. அதுவும் அப்போது திருத்தப்பட்டு மினுங்கியது. விமானத்திற்கு ஏறும் இறங்கும் அதன் உட்பகுதி மீண்டும் ஞாபகம் வந்தது. அது ஐரோப்பிய விமான நிலையங்களுக்கு எந்த வகையிலும் குறையாத வண்ணம் அப்போது பளிங்காக விம்பம் காட்டியது. அதைக் கடந்து வந்தபோது தனது சாவு என்பது தொலைவில் உள்ளதென எண்ணினான். அப்படி வந்தாலும் அது மனிதனால் வராது என்று நம்பினான். விமான நிலையத்தைவிட ஆயிரம் மடங்கு இந்தத் தியேட்டர் மின்னுவதாய் அவனுக்கு

தோன்றியது. அது உண்மைதானா என்கின்ற கேள்வி மீண்டும் அவனிடம் எழுந்தது.

அன்று காத்தான்குடியில் இருந்து கொழும்பிற்கு வந்து விமானத்தில் ஏறும்வரைக்கும் அவன் அனுபவித்த கணங்கள் மிகவும் அவஸ்தையானவை. அந்த அவஸ்தையான கணங்களின் வேதனையை இப்போதும் காரணம் இல்லாது உணர்ந்தான். அன்று அந்தத் தாக்குதல் உலகத்தை இவ்வளவிற்கு மாற்றுமென அப்துல்காதர் கனவிலும் நினைக்கவில்லை. இன்று அது எவ்வளவு பெரிய அழிவை உலகத்திற்கு தந்திருக்கிறது என்பதை எண்ண அவனுக்கு வேதனையாகியது. தான் ஒரு பெரிய பாவத்திற்குத் துணைபோனது அவனுக்கு இப்போது புரிந்தது. தனது பாவத்திற்கு அல்லா மன்னிப்பு அளிப்பானா என்பது அவனுக்குப் புரியவில்லை. அவன் தியேட்டருக்குட் போகும் சனங்களைப் பார்த்தவண்ணம் சிறிதுநேரம் அப்படியே நின்றான். அதைப் பொறுக்க முடியாத அவன் மகன் உள்ளே போக வருமாறு இழுத்த போதுதான் அவன் உலகஞானம் பெற்றவனாக அசைந்தான்.

பின்னால் வந்த சிங்களப் பிள்ளைகளும், காதரின் பிள்ளைகளின் பின்னாற் தியேட்டரை நோக்கி ஆர்வத்தோடு ஓடினர்.

“அப்பா நாங்களும் போவம்” என்கின்ற இன்னும் ஒரு தமிழ்க்குரல் அதற்கும் பின்னால் கேட்டபோது “அல்லாவே எனக்கு மன்னிப்பு உண்டா?” என அப்துல் காதர் எதையோ நினைத்துப் பொறுக்க முடியாது தனக்குள் முணுமுணுத்தான்.

கிரேக்க அரசாங்கம் நாட்டில் இல்லாத அகதிகளின் உடைமைகள் அனைத்தையும் உடனுக்குடன் வகைப்படுத்தி அழித்துவிட வேண்டும் என்பதாகக் கடுமையான உத்தரவு பிறப்பித்து. எந்தவிதத் தடயங்களையும் நாட்டின் எந்தப் பகுதியிலும் விட்டுவைக்கக் கூடாது; அப்படி விட்டால் அது வரலாற்றுத் தவறாகிவிடும் என்பது அவர்களுக்கு நன்கு புரிந்தது. அதன்படி அனைத்து உடைமைகளும் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு அவை வகை பிரிக்கப்பட்டு, பின்பு மீள்தயாரிப்புச் செய்யக் கூடியவற்றை மீள்தயாரிப்புச் செய்தனர். மிஞ்சியவற்றை முற்றுமாக அழிப்பதில் மிகவும் கவனமாகச் செயற்பட்டார்கள்.

## 6.2 கொலை வெறி

கிரேக்கம் கப்பல் கப்பலாக அகதிகளைத் திருப்பி அனுப்பத் தொடங்கியதில் இருந்து கிரேக்கத்திற்கும் ஐரோப்பாவிற்குமான அகதிகளின் வருகை ஓய்ந்தது. வறிய நாடுகளில் இருந்து கிரேக்கத்திற்கு அகதிகளாய்ச் சென்ற பலரின் தொடர்பு அறுந்து போயிற்று. தாய்நாட்டில் வாழ்ந்த உறவினர்கள் தங்கள் உறவுகளை எண்ணித் தவித்தனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது புரியாது திகைத்தனர். அவர்கள் ஏன் தொடர்பு கொள்ளவில்லை என்பதும், அவர்களிடம் இருந்து ஏன் ஒரு பதிலும் வரவில்லை என்பதும் பயம்தரும் மர்மமாகியது. மேலும் காலம் செல்லச்செல்ல அவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, அப்படி இருந்தால் எதற்காகத் தொடர்பு கொள்ளவில்லை என்கின்ற அச்சம் அவர்களை கதிகலங்க வைத்தது. இலங்கையில் இருந்தவர்களுக்குக் கடந்த காலங்களில் நாட்டிற் காணாமற் போனவர்களிடமிருந்து எந்தத் தொடர்பும் வராது இருப்பது போல இதுவும் இருப்பதாகத் தோன்றியது. இலங்கையிற் காணாமற் போகின்றவர்களின் முடிவு எப்போதும் அவலத்தில், தாங்க முடியாத வேதனையுடன், கடமை செய்வதற்குகூட ஒரு எலும்புத்துண்டும் கிடைக்காத முடிவாக இருக்கும். அடையாள அட்டையைத் தூக்கிக்கொண்டு எங்கு ஏறி இறங்கினாலும் அந்த முடிவில் மாற்றம் இருக்காது. அப்படியான முடிவா இவர்களுக்கும் ஏற்படும் என்கின்ற கேள்வி, அந்த உறவினர்களின் இரத்தத்தை உறைய வைத்தது.

பல உறவினர்கள் இலங்கை அரசு மூலம் கிரேக்க அரசோடு தொடர்பு கொண்டு தங்களது உறவினர்களைப் பற்றி விசாரணை செய்ய முயற்சித்தனர். அப்போது அப்படியான பெயரில் யாரும் அங்கு இல்லையென இலங்கை மக்களுக்கு வரலாற்றிற் பழக்கப்பட்ட விடை ஒன்று பதிலாக கிடைத்தது. அதை அறிந்து அவர்கள் அதிர்ந்தனர். இந்தச் செய்திகள் காட்டுத்தீபோல ஆசிய ஆபிரிக்க நாடுகளிற் பரவின. இப்போது ஐரோப்பாவிற்குப் போவதென்பது இடியமினின் நாட்டிற்குப் போவதாயிற்று.

அப்போழுதுதான் ஊடகங்களில் ஒரு வீடியோ வெளிவந்தது. அது பழைய கைத்தொலைபேசியைப் பயன்படுத்திக் கிரேக்கத்தில் எடுக்கப்பட்டது. அதில் பெரும் தியேட்டர் ஒன்றைக் காட்டி, அந்தத் தியேட்டர் இரண்டாம் உலகமகா யுத்தத்தில் இருந்த நச்சுவாயுக் கூடங்கள் போன்றது என்கின்ற செய்தியும் கூறப்பட்டது. அங்கே கிரேக்கத்தில் இருந்த பல்லாயிரக் கணக்கான நிறமான வந்தேறுகுடிகள் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்றும் விபரித்தார்கள். அதைப் பலராலும் முதலில் நம்ப முடியவில்லை.

கிரேக்கம் சென்று அண்மையில் நாடு திரும்பியவர்கள் அதை முதலில் நம்பினார்கள். பின்பு கிரேக்கத்துக்குச் சென்ற பலரிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை என்பது பலரையும் சந்தேகம் கொள்ள வைத்தது. இது அந்தக் கதைக்கு உயிர் உள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும் என்கின்ற துடிப்பைப் பலரிடம் ஏற்படுத்தியது.

அமேரிக்கா தனது நாட்டில் அதிதீவிர வலதுசாரிகளாற் கடும்பிரச்சனையை எதிர்கொண்டாலும், இன்னும் அவர்களிடம் தமது ஆட்சியை இழந்துவிடாது தக்கவைத்துக் கொண்டது. அது உடனடியாகக் கிரேக்கத்தின்மீது விசாரணை வேண்டுமென்றும், தம்மை அந்தக் கட்டடத்தைப் பார்க்கவிடுமாறும் கோரியது.

அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தாங்கள் அந்த விடயத்தைச் சுயமாக விசாரிப்போம் எனவும், ஐரோப்பிய ஒன்றியப் பிரச்சனையில் யாரும் தலையிடக்கூடாது எனவும் கடுமையாகக் கண்டித்தது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா வழமைபோல மௌனம் சாதித்தது.

ஐரோப்பிய ஒன்றியத்திலும் அந்த விடயம் இணையத்தின் மூலம் பரவத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து அவை "எஸ்.டி" அட்டைகளில் அடித்துப் பலருக்கும் வினியோகிக்கப்பட்டன. இதைப் பார்வையிட்ட நிறமான வந்தேறுகுடிகளும், சில சுதேசிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அதை அடக்குவதற்குப் பொலீஸாரைக் கடுமையாக ஏவின. அதன்படியே பொலீஸார் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார்கள்.

கிரேக்கத்தில், பொலீஸார் கடுமையாக நடந்துகொண்டது மட்டுமல்லாது, நிறமான வந்தேறுகுடிகளைக் கைதுசெய்து அவர்களை முகாங்களில் அடைத்தனர். அப்படிச் சட்டத்துக்குப் புறம்பாக அடைத்து வைப்பதற்கு ஏற்கெனவே பொலீஸிற்கு அந்த அரசு அனுமதி கொடுத்துவிட்டது. அப்படி அடைத்து வைத்திருந்தவர்களின் பெயர் விபரங்கள் சேகரிக்கப்பட்டு, அவர்களைக் கிரேக்கப் பதிவுகளில் இருந்து நுணுக்கமாக அகற்றும் வேலை முதலில் நடந்தது. அப்படிப் பதிவுகளில் இருந்து அகற்றப்பட்டவர்கள் அதன்பின்பு இந்த உலகத்தில் வாழ்ந்ததற்கான ஆதாரம் கிட்டத்தட்ட இல்லாது போயிற்று. அவர்களின் எல்லாச் சுவடுகளையும் அழிக்க முடியாவிட்டாலும், இயலுமானவரை அவர்களின் சுவடுகளை அழிப்பதில் அந்த அரசு வெற்றியும் கண்டது.

அதன்பின்பு அப்படியானவர்களை வைத்து உணவளிப்பதற்குக் கிரேக்க அரசாங்கம் விரும்பவில்லை. அவர்களுக்கும் படம்காட்டும் திட்டத்தைச் செயற்படுத்தியது. அப்படி அவர்களை அழைத்துச் சென்று படம்காட்டுவதற்குப் பொலீஸாரோடு தெரிந்து எடுக்கப்பட்ட இராணுவத்தையும் அது பயன்படுத்தியது. இப்படியான கைதிகளுக்குப் பிளாஸ்ரிக் விலங்கிட்டே படம்காட்ட வேண்டிதாயிற்று.

கைது செய்யப்படும் நிறமான வந்தேறுகுடிகளும், ஆட்சிக்கு ஆபத்தானவர்களும் நிரந்தரமாகக் காணாமற் போவதையிட்டுக் கிரேக்க மக்கள் பெரும் அச்சத்துக்கு உள்ளாகினர். அதன்பின், அரசிற்கு எதிராக வாய் திறப்பதற்கு அவர்கள் அஞ்சினர். மௌனத்தைத் தமது மொழியாய் வரித்தனர். அது கிரேக்க அரசிற்கு மேலும் துணிவைக் கொடுக்க, அவர்கள் மேலும் மேலும் நிறமான வந்தேறுகுடிகளை தேடித் தேடிக் கைது செய்து, படம்காட்டத் தொடங்கினார்கள்.

திடீரெனக் கிரேக்கத்தில் வேலையில்லாப் பிரச்சனை குறைவதாய்க் கிரேக்க அரச புள்ளிவிபரம் காட்டியது. அது தமது அரசின் கெட்டித்தனத்தால் வந்த பயன் எனப் பிரச்சாரம் செய்தது. வேலை செய்யக்கூடிய பல இலட்சம் நிறமான வந்தேறுகுடிகளின் இருப்பு இல்லாது போனதால் வந்த தற்காலிக வேலை வாய்ப்புக்கள் என்பதை அது மூடிமறைத்தது. சுதேசிகள் அனேகமானோருக்குக் கிரேக்க அரசு வேலைவாய்ப்புக் கொடுத்தாலும், அதன் மொத்த வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை அது தடுக்க முடியாது போய்விட்டது. அவற்றை மக்களிடம் ஊடகங்கள் எடுத்துச் செல்லாதிருக்கக் கிரேக்க அரசாங்கம் ஊடகசுதந்திரத்தை முற்றுமாய்ப் பறித்தது. பின்பு அது மக்கள்மீது கட்டுப்பாட்டை மேலும் இறுக்கியது.

கிரேக்கத்தில் நிறமான வந்தேறுகுடிகளின் தொகை குறைந்து செல்லச் செல்ல இராணுவத்தின் பிரசன்னம் தெருக்களில் அதிகமாகியது. அது அந்நாட்டு மக்களின் மனதில் ஒருவித அச்சத்தை உண்டுபண்ணியது. கிரேக்கத்தின் திட்டமிட்ட நிறமான வந்தேறுகுடிகளின் அழிப்பு சத்தமில்லாது பெருவெற்றியை அளித்தது. தகவல்கள் கசிவதைத் தடுக்க அது அதிகமான இணைய இணைப்புக்களைத் தொடர்ந்தும் துண்டித்தது. கையடக்கக் கருவிகளைப் பறிமுதல் செய்தது. இருக்கும் இணைய இணைப்புகளும் கடுமையான தணிக்கைக்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்படலாயிற்று. இந்தச் செய்தித்தடை அந்த நாட்டின் அவலங்கள் கசிந்துவிடாது நெருப்புச் சுவராகக் காத்து நின்றது. அது தனது மரணத் தொழிற்சாலையைச் செய்மதி மூலம் அறியாத வண்ணம்

அதிக பணம் செலவழித்து மறைப்புச் செய்ததோடு, தனது பணியை இரவில் மாத்திரம் செய்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்த நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் பலர் இரகசியமாகக் கிரேக்கத்திற்கு வருகை தந்து, அதன் நகரங்களில் ஏற்பட்ட மாற்றத்தைப் பார்த்து வியந்தார்கள். கிரேக்கம் உலகத்தின் கருத்துக்களைக் காதிற் போடாது தனது திட்டத்தை நிறைவேற்றியது. இப்படிப் பல ஐரோப்பி யநாடுகள் நிறமான வந்தேறுகுடிகளான சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக இயங்கின. அவை அதில் வெற்றியும் கண்டன. கிரேக்கம் தனது திட்டத்தை இப்போது யார்மேற் பாவிப்பதற்கும் பயப்படவில்லை. அது அதில் முன்னணி நாடாகத் திகழ்ந்தது. கிரேக்கம் வெள்ளை இனத்தவரை மட்டும்கொண்ட ஒரு நாடாக மெதுவாக உருப்பெற்றது.

வடதுருவத்தில் இருந்த சிலநாடுகளில் ஒரு பிரச்சனை எப்போதும் புகைந்து வருகிறது. நாட்டின் வடக்குப் பகுதியில் இருக்கும் ஆதிக்குடிகளான சாமருக்கு அதிக உரிமை கொடுக்கப்பட்டதாகப் பல அதிதீவிர வலதுசாரிகள் கருதினார்கள். சாமரில் சிலர் நிறமனிதர்களை வெறுத்தனர். அநாகரிகமாக அவர்களை நடத்தினர். வெறுப்பின் உச்சத்தில் எந்தக் கத்தி எந்தப் பக்கம் பாய்கிறது என்கின்ற வரைமுறை அங்கு இல்லாதுபோக அது எல்லாப் பக்கமும் பாய்ந்தது. சில ‘சாமர்களின்’ வெறுப்பை எதிர்கொண்ட நிறமனிதர்களின் கருத்தோ வேறாக இருந்தது. இவர்களைவிடச் சுதேசிகள் பலமடங்கு மேல் என்பதாக அவர்கள் கருதினர். மற்றவர் மீதுள்ள வெறுப்பிற்கு, மற்றைய மனிதர் பற்றிய அறிவின்மையே முதற் காரணமாய் இருந்தாலும், அது மட்டுமே காரணம் இல்லை என்பது புரிந்தது.

இதுவரைகாலமும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் வந்த அகதிகளை, அவர்கள் முதலில் வந்திறங்கிப் பதிந்த இடத்திற்கே திருப்பி அனுப்பினார்கள். அப்படிச் செய்வதிலேயே ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மும்முரம் காட்டின. அதைக் கிரேக்கம் தனது திட்டத்தின் மூலம் ஓரளவிற்குத் தீர்த்து வைத்தது. கிரேக்கத்தைப் பற்றிய அவதூறான செய்திகள் உலகெங்கும் பரவின. அத்தோடு மற்றைய ஐரோப்பிய நாடுகளும் கிரேக்கத்திற்கு அகதிகளை அனுப்பி வைக்கிறது என்கின்ற கருத்தும் உலகம் முழுவதும் பரவிற்று. அகதிகளை மிருகங்களைப் போலக் கப்பலில் ஏற்றி வந்து சொந்த நாடுகளில் விட்ட காட்சிகளும் தொடர்ந்தும் தொலைக்காட்சியில் உருண்டன. அது கிரேக்கத்தின்மீதும் மற்றைய ஐரோப்பிய நாடுகளின் மீதும் தணியா வெறுப்பை உலகெங்கும் உருவாக்கியது.

## 6.3 சுவீடன்

கிரேக்கம் களைபிடுங்கப்பட்டுத் தனிச் சுதேசிகளின் நாடாகிய தற்போதைய நிலைமையை அங்கு நேரடியாக வந்து ஆராய்ந்த சுவீடன் நாட்டு அதிதீவிர வலதுசாரிப் பிரதமர் அதிசயித்தார். தங்கள் நாடு உலகத்தின் ஒதுங்கிய ஒரு மூலையில் இருந்தாலும் இப்படி இல்லையேயென அவர் ஏக்கம் கொண்டார். தற்போது தங்கள் நாட்டிற்கான அகதிகளின் வரத்து தடைப்பட்டுப் போனதால் நிலமை ஓரளவிற்கு மேம்பட்டு இருக்கிறது என்பது அவருக்குத் தெரியும். அப்படியிருந்தும் ஏற்கெனவே வந்து குடியேறியவர்களாற் தொடர்ந்தும் தொல்லை இருப்பதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்பது அவருடைய நீண்டநாள் ஆசையாகியது.

“அகதிகளாய் வந்து குடியேறியவர்களின் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் தாய்நாட்டிற்குச் சென்று பின்பு இஸ்லாமியத் தீவிரவாதிகளாய்த் திரும்பி வருகிறார்கள். அல்லது இஸ்லாமியத் தீவிரவாதிகள் சண்டைசெய்யும் இடங்களுக்குச் சென்று ஆபத்தான தீவிரவாதிகளாய்த் திரும்பிச் சுவீடனுக்கு வருகிறாகள். அப்படி வந்தவர்கள் மனித வெடிகுண்டாகிச் சுவீடனில் வெடிக்கிறார்கள். அல்லது வேற்று நாட்டிற்குச் சென்று வெடிக்கிறார்கள். ஏதாவது ஒரு பிரச்சனையென்றால், தெருவில் இறங்கி வாகனங்களைக் கொழுத்துவதும், மற்றும் உடமைகளை அடித்த நொருக்கிக் கொழுத்துவதுமாக அட்டகாசம் செய்கிறார்கள். அப்படியான வன்முறையாற் பல நகரங்கள் பல நாட்கள் ஸ்தம்பிக்கின்றன.” என எண்ணினார். ‘ஜொர்த்தபோர்க்’கில் நடந்ததை ஒரு முறை நினைவு படுத்தினார். அவர் உள்ளம் கொதித்தது. அது அந்த அதிதீவிர வலதுசாரிப் பிரதமருக்கு அறவே பிடிப்பதில்லை. “எங்கள் நாட்டிற் பிறந்துவிட்டார்கள் என்பதற்காய் முஸ்லீம்களுக்கும், நிறமான வந்தேறுகுடிகளுக்கும் தாங்கள் நினைத்ததையெல்லாம் செய்யும் சுதந்திரம் கொடுக்கக்கூடாது. சட்டத்தை மதிக்காதவர்களைத் தயவுதாட்சண்யம் இன்றி நாட்டைவிட்டுக் கலைக்கவேண்டும்” என்பது அவர் எண்ணமாகியது. இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காணவேண்டும் என்பது அவருடைய நீண்டநாள் ஆவலாகியது.

கிரேக்கத்தைப் பார்த்த சுவீடன் நாட்டு அதிதீவிர வலதுசாரிப் பிரதமர் பூரித்துப் போய்விட்டார்.

ஆக்கிமீடீஸ், அரிஸ்ரொற்ல், ஹிப்போகிறாரெஸ், பெத்தோகிறோஸ், கோமர், சோக்ரட்டீஸ், எல் கிறேகோ (Archimedes ,Aristotle ,Hippocrates ,Pythagoras ,Homer ,Socrates ,El Greco) ஆகிய பல அறிவாளிகளைத் தந்த அதிசயதேசம் அல்லவா கிரேக்கம்? தற்போது அகதிகள் பிரச்சனையை எப்படித் தீர்த்து வைக்கவேண்டும் என்பதையும் ஐரோப்பாவிற்கு மீண்டும் நிருபித்துக் காட்டியதில் அவர் பூரித்தார். இப்படியான தூய்மையைச் சுவீடனிலும் உண்டுபண்ணவேண்டும் என்கின்ற அடங்காத மோகம் கிரேக்கத்தின் தலைநகரமாகிய ஏதென்சைப் பார்த்த போது அவருக்கு உண்டாகியது. இன்றும் தாங்கள் கிரேக்கத்தைப் பார்த்துத்தான் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது என்பதை அந்த சுவீடன் நாட்டு அதிதீவிர வலதுசாரிப் பிரதமர் மனமின்றி மனதிற்குள் ஒப்புக்கொண்டார்.

“ஸ்ரொக்ஹோமை, யொர்த்தபேர்க்கை இப்படி மாற்றிக் காட்டினால், சுவீடன் நாட்டுப் பிரதமராக ஆயிரம் வருடங்கள்கூட இருக்க என்நாட்டு மக்கள் அனுமதிப்பார்கள்” என அவர் எண்ணினார். “இடதுசாரிகளும் வலதுசாரிகளும் நாட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டார்கள். உலகத்தில் உள்ள சாத்தான்களான அனைத்து இனங்களையும் நாட்டிற்குள் அனுமதித்து, நாட்டின் தூய்மையைக் கெடுத்ததைக்கூட மன்னித்துவிடலாம். ஆனால் முஸ்லீம்களை நாட்டிற்குள் எடுத்து, எமது நாட்டையே இஸ்லாமிய மயமாக்கிய தேசத்துரோகத்தை எப்படி மன்னிப்பது” என்பதாக எண்ணிய அவருக்குக் கோபம் வந்தது. “எங்கு பார்த்தாலும் வெறுக்கப்படவேண்டிய மொஸ்குகளும் கற்கால மனிதர் போன்று மூடிக்கட்டிய பெண்களுமாக, முகம் காட்டாத மனிதர்கள் எங்கள் நகரங்களின் நாகரிகத்தையும், கலாசாரத்தையும் அதன்மூலம் அதன் முகத்தையும் மாற்றி விடுகிறார்கள்” என எண்ணி அவர் புழுங்கினார்.

“நல்ல வேளையாக மக்கள் உரிய நேரத்திலாவது இந்த கலாசார அழிவைக்கண்டு, எங்களிடம் பதவியைத் தந்திருக்கிறார்கள். இஸ்லாமியரின் கொட்டத்தை எங்களால் மட்டும்தான் அடக்கமுடியும் என்பது அவர்களுக்குப் புரிந்திருக்க வேண்டும். இஸ்லாமியரின் கொட்டத்தை அடக்குவதோடு நாட்டை நிறமான வந்தேறுகுடிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்து, அதைத் தூய்மைப்படுத்த வேண்டும். இப்படியான பணியை வேறு எவர் ஒழுங்காகச் செய்து முடிப்பார்கள்?” எனவும் அவர் மனதிற்குள் எண்ணினார்.

“இன்றைய ஏதென்சின் தூய்மை இன்னும் சிலகாலத்தில் எங்கள் பெரிய நகரங்களில் வந்தாக வேண்டும். அதற்காக எமது உயிரைக் கொடுப்பது என்றாலும் அஞ்சக்கூடாது.” என அவர் முடிவு செய்தார்.

கிரேக்கப் பிரதமர் தாங்கள் எப்படி நாட்டைச் சுத்திகரித்தோம் என்பதைச் சுவீடன் நாட்டுப் பிரதமருக்குக் கூறுவதற்கு முதலில் மறுத்துவிட்டார். ஆனால் சுவீடன் நாட்டுப் பிரதமரோ அதை அறியாது விடுவதில்லை என்கின்ற பிடிவாதத்தோடு அவரோடு உரையாடினார். அவர் கிரேக்கப் பிரதம மந்திரியோடு பிரதம மந்திரிகள் என்கின்ற சம்பிரதாயத்தோடு பழகாது மிகவும் நெருங்கிய நண்பரைப்போலப் பழகினார்.

மேற்கொண்டு சுவீடன் நாட்டுப் பிரதமர் கதைக்கும் போது தானும் 'யூரியூப்'பில் (Youtube) அந்த கட்டடத்தைப் பார்த்ததையும், உண்மையில் சுவீடனையும் கிரேக்கம் போல் மாற்ற வேண்டும் என்று தான் மிகவும் விரும்புவதாகவும், தாங்கள் எல்லோரும் அதிதீவிர வலதுசாரிகளாய் இருந்தும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதற்குத் தயங்கினால் எப்படி என்றும் கேட்டார். அதைத் தொடர்ந்து கிரேக்கப் பிரதமர் மெதுவாகத் தங்கள் திட்டங்களைக் கூற நினைத்தார். பின்பு அதை மாற்றி அதற்கு முதல் அவரை அந்த இரகசிய இடத்திற்குக் கூட்டிச் சென்று, அதன் அமைப்பைக் காட்ட எண்ணினார்.

சுவீடன் வெகுகாலமாகப் பாரியதொரு தொழில்மய நாடாக இருந்தாலும், சுவீடன் நாட்டுப் பிரதமருக்கு அந்தத் தியேட்டர் மிகவும் பிரமிப்பைத் தந்தது. அவர் அதை வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டார். அது கிரேக்கப் பிரதமருக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. தொழில்மய நாடுகளே தங்கள் தொழில்நுட்பம் கண்டு மெச்சியது அவரைத் துள்ளவைத்தது.

பின்பு கிரேக்கப் பிரதமர் கூறுவதை அவதானமாகக் கேட்டு வந்த சுவீடன் நாட்டுப் பிரதமர், "எங்கள் நாட்டில் இருக்கும் ஒரு நிறமான வந்தேறுகுடியை உங்கள் நாடு ஏற்கும் என்றால் நாங்கள் உங்களுக்கு ஆயிரம் யூரோக்களைத் தருகிறோம்... நீங்கள் அந்தப் பணியை ஏற்க முடியுமா?" எனத் திடீரெனக் கேட்டார்.

கிரேக்கப் பிரதமர் அப்படியான ஒரு கேள்வியைச் சுவீடன் நாட்டுப் பிரதமரிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அவருக்கு அது பதிலளிக்க முடியாத சங்கடத்தை உருவாக்கியது. அவர் கிரேக்கத்தில் இன்னும் மிஞ்சி இருக்கும் யூதர்களை, ஜிப்சிகளை அழிக்க முதல் வேற்று நாட்டில் இருந்து நிறமான வந்தேறுகுடிகளை ஏற்று அழிப்பது தங்களுக்குச் சௌகரியமாக இருக்காது எனக் கருத்துத் தெரிவித்தார். அதற்கு சுவீடன் நாட்டுப் பிரதமரோ "உங்கள்

பொருளாதாரத்தை மேம்படுத்த அந்த பணத்தைப் பாவிக்கலாம் அல்லவா?" என்று ஆசையூட்டினார். "அது போதாது" எனத் திடீரெனக் கிரேக்கப் பிரதமர் பேரம் பேசத் தயாராகினார்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நினைத்த சுவீடன் பிரதமர் "அப்படி என்றால் தங்களுக்கு என்னதான் வேண்டும்?" எனக் கேட்க, "எங்களுக்கு ஒருவரைப் பொறுப்பேற்பதற்கு ஐயாயிரம் யூரோக்களும், அவர்களைத் துப்பரவு செய்வதற்காக ஒரு புதிய தொழிற்சாலையைக் கட்டுவதற்கான பணத்தையும் தந்தால் மட்டுமே எங்களால் உதவமுடியும்" எனக் கிரேக்கப் பிரதமர் தனது முடிவைக் கூறினார்.

சுவிடன் நாட்டுப் பிரதமருக்கு அப்போதே அந்த ஒப்பந்தத்திற் கைசாத்திட வேண்டும்போல் இருந்தது. என்றாலும் ஒருவித பந்தாவில், தனது அரசாங்கத்துடன் கதைக்க வேண்டுமென்றும், அப்படிச் சம்மதம் கிடைத்தால் தனது வெளிநாட்டு அமைச்சரை அந்த இரகசிய ஒப்பந்தம் எழுதுவதற்கு அனுப்பி வைப்பதாகவும் கூறினார். பின்பு ஏதென்சைப் பலமுறை சுற்றிப்பார்த்து மகிழ்ந்தார். மனத்திருப்தியுடன் அவர் தனது தாய்நாட்டிற்கு திரும்பினார்.

*

சுவீடனிற் பிரதமரின் அலுவலகத்தில் அந்த இரகசியக் கூட்டம் அன்று நடைபெற்றது. அதில் இராணுவத்தைச் சார்ந்த முக்கியமானவர்களும் கலந்து கொண்டார்கள். இராணுவத்தைச் சார்ந்தவர்களைப் பிரதமர் இந்தக் கூட்டத்திற்கு முன்பே அழைத்து, அவர்களுக்குப் பிரமாதமான விருந்தும் கொடுத்து, அவர்களுக்குத் தனது திட்டத்தைக் கூறி, அதற்கு அவர்களிடம் ஒப்புதலும் வாங்கியிருந்தார். இந்தக் கூட்டத்தில் அவர்கள் சம்பிரதாயத்திற்காக முகத்தைக் காட்டினர்.

சுவீடன் நாட்டுப் பிரதமர், தான் ஏதென்சில் கண்டதை முதலில் விபரமாக அங்கு இருந்தவர்களுக்கு விபரித்தார். பின்பு ஏதென்ஸ் போல இந்த நகரத்தையும் மாற்ற வேண்டும் என்பதையும், அதற்காக அந்த நாட்டோடு பேசிவிட்டு வந்திருப்பதையும் கூறி, உடனடியாக

ஒப்பந்தம் எழுதுவதற்கு வெளிநாட்டு அமைச்சரை அங்கு அனுப்பவேண்டும் எனவும் கூறினார்.

பலருக்கும் அங்கு தாங்கள் காதாற் கேட்பதையும், பார்ப்பதையும் நம்பமுடியாத தவிப்பு ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போர் நடந்தபோது… நடுநிலையாக இருந்து… நாஜிகளிடம் இருந்து தப்பி ஓடிவந்து தஞ்சம் கோரியோருக்கு... அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றிய நாடு என்கின்ற பெருமையில் இன்றுவரை இருந்தவர்கள். அதைத் தலைகீழாக மாற்றுவதுபோல் இன்று நிலைமை மாறியதால்… எதைச் செய்யவேண்டும், எது சரியாக இருக்கும் என்பதை முடிவு செய்வது சற்றுச் சிரமமாகிற்று. நிறமான வந்தேறுகுடிகளும், அவர்களின் மதங்களும், கலாசார விழுமியங்களும், தங்கள் கலாசாரத்தை, மதத்தை, அதன் இருப்பை இல்லாது ஒழிக்கிறது என்கின்ற எண்ணமே அந்த அதிதீவிர வலதுசாரிகளிடம் மேலிட்டு நின்றது. அதற்கு எதிராக என்ன செய்தாலும் தற்போது தகும் என்கின்ற எண்ணத்தை அது அவர்களுக்கு உண்டுபண்ணியது.

பின்பு சிறிது நேரம் பிரதமர் அமைதியாக ஏதோ யோசித்த வண்ணம் இருந்தார். திடீரென மீண்டும் அந்த அமைதியில் இருந்து விடுபட்டவர் “அதைவிட ஒரு முக்கியமான அலுவலை நாங்கள் செய்யவேண்டும்” என்றார். “அதாவது இப்படியான முக்கியமான காரியங்கள் செய்யும் போது முழு அதிகாரமும் என் கையில் இருப்பதோடு, ஊடகங்களுக்குத் தகவல்கள் கொடுக்கும் உரிமையும் அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமே இருக்கவேண்டும். அல்லது அவரவர் தங்களுக்கு விரும்பிய கருத்துகளை வெளியிடலாம். அப்படி நடப்பதைத் தடுக்க வேண்டும். அதற்காக நாங்கள் அரசரின் பதவியைத் தற்காலிகமாக இல்லாமற் செய்ய வேண்டும் எனவும் எண்ணி உள்ளோம்.” என்றார்.

இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் அப்படியே உறைந்து போயினர். யாரும் எதிர்த்து எதுவும் சொல்ல விரும்பவில்லை. அப்படிச் சொன்னால் அது தங்கள் பதவிக்கு ஆபத்தாய் முடிவதோடு, வருங்காலத்திற் தங்கள் உயிருக்கும் உலை வைக்கலாம் என்பதை உணர்ந்தவர்களாக, மௌனம் காத்தனர்.

பிரதமர் தொடர்ந்தும் பேசினார். “நாங்கள் அரச குடும்பத்தைப் பாதுகாப்பாக வேறு ஓர் இடத்திற்கு அனுப்பி, அங்கு சகல வசதிகளோடும் வீட்டுக்காவலில் வைக்கப் போகின்றோம். இந்த வேலைகள் முடிந்து நாடு தூய்மை அடையும் வரையும் அப்படி

வைத்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாக உள்ளது. எனக்கும் அதையிட்டு மிகவும் மனவருத்தமாய் இருந்தாலும், ஒருவரின் கையில் நாடு சிலகாலம் இருக்கவேண்டும் என்கின்ற கட்டாயத்தை எண்ணி, வேறு வழியின்றி இதைச் செய்யவேண்டி உள்ளது. அனைவருக்கும் இது நன்கு புரியுமென எண்ணுகிறேன். அத்தோடு உங்கள் ஒத்துழைப்பும் எனக்குத் தொடர்ந்து இருக்கும் எனவும் எண்ணுகிறேன்.” என்றார். அப்போது சிலர் கைதட்டினார்கள். பலர் பேசாது இருந்தார்கள். அரசியல் என்கின்ற சுழல்காற்றின் திசை எந்தப் பக்கமும் மாறலாம் என்பதை நேரடியாகக் காண்பது பலருக்குத் கலக்கத்தைத் தந்தது. இந்தத் திசைமாறும் காற்று எங்களையும் ஒருநாள் அடித்துச் சென்றுவிடுமோ என்கின்ற கேள்வி அங்கே முக்காட்டோடு ஒளிந்திருந்தது.

சில நாட்களுக்குள்ளாகவே சுவீடனில் எங்கும் இராணுவத்தின் பிரசன்னம் அதீதமாகியது. சிலர் இவ்வளவு இராணுவத்தினர் எங்கிருந்து படையெடுத்தார்கள் என்று எண்ணி வியந்தனர். அரசகுடும்பத்தினர் அரண்மனையில் இருந்து எங்கோ அதிதூரத்திற்கு மாற்றப்பட்டிருந்தார்கள். அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது தெரியாவிட்டாலும் நலமாய் இருப்பதான வீடியோப் படங்கள் காட்டப்பட்டன.

பிரதம மந்திரியின் நேரடிப் பணிப்பில்... பல பெரிய பொருள் ஏற்றும் விமானங்களைப் பயணிகள் செல்லும் வகையில் மாற்றி அமைத்தனர். அதன் வசதிகள் மனிதரைச் சித்திரவதை செய்யாத அளவிற்கு இருக்கும்படி அவர்கள் பார்த்துக்கொண்டார்கள். விமானத்தின் உள்ளமைப்பை விரைவாக மாற்றியமைத்து, அதில் நிறமான வந்தேறுகுடிகளை ஏற்றிக் கிரேக்கத்துக்கு அனுப்பத் தயார் செய்தனர். அதற்குப் பரீட்சாத்தமாய் முதலில் ஆயிரத்திருநூறு கைதிகளை விமானத்தில் ஏற்றிக் கிரேக்கத்திற்கு அனுப்பி வைத்தனர். அந்த முயற்சி வெற்றி அளித்தது. அந்தக் கைதிகள் இல்லாது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அனுமதி இல்லாது நாட்டில் இருந்தவர்களை முதலிற் தேடிப் பிடித்தனர். இதையறிந்த சிலர் தப்பி அயல் நாடுகளுக்குச் சென்றனர். இம்முறை எந்த அயல்நாடும் அவர்களுக்குக் கருணை காட்டவில்லை. அந்த அயல்நாடுகள் அடைக்கலம் தேடி வந்தவர்களை உடனுக்குடன் கைது செய்து, திருப்பி அனுப்பின. அத்தோடு தாங்களும் அவசரமாகக் கிரேக்கத்தோடு ஒப்பந்தம் செய்ய முயற்சி செய்தன. கிரேக்கம் அதிகமாக நிறமனிதர்களை எடுப்பதற்கு முதலில் தயக்கம் காட்டியது. பின்பு அதற்கு இணங்க மறுத்து விட்டது.

அதைத் தொடர்ந்து அப்படியான எண்ணம் உடைய நாடுகள் தமது சொந்த நாடுகளில் அல்லது அயல் நாட்டுடன் சேர்ந்து இரகசியமாய் அந்த பெரும் மரணத் தொழிற்சாலையை உருவாக்கின. அப்படிச் செய்வது மனிதத்தை மறுதலிக்கும் என்பது அவர்கள் நிறமான மனிதர்கள்மேல் கொண்ட வெறுப்பில் அழிந்து போயிற்று. இரகசியமாகப் பல இடங்களில் அப்படியான தொழிற்சாலைகள் உருவாகின. அந்தத் தொழிற்சாலையிற் கிரேக்கத்தைவிட அதிநவீன தொழில்நுட்பங்கள் பரீட்சிக்கப்படலாயிற்று.

சிறிது சிறிதாக ஐரோப்பாவின் நகரங்களில் இருந்து நிறமனிதர்கள் காணாமற் போனார்கள். காணாமற் போபவர் பற்றிக் கவலைப்பட்ட ஒருசிலரும்... உயிருக்கு அஞ்சி மௌனம் காத்தார்கள். அதை மீறியும் பேசித்திரிந்தவர்களைக் கைதுசெய்து, இரவோடு இரவாகப் படம்பார்க்க அனுப்பி வைத்தார்கள்.

## 6.4 நோர்வே

அருகில் உள்ளவர்களையே கண்டு பிடிக்க முடியாதவாறு மேகங்கள் பூமியை முத்தமிட்டு மூடிக்கொள்ளப் புகார் வானத்தைவிட்டுக் கீழே இறங்கிப் பூமியை ஆலிங்கனம் செய்து தனது ஈரலிப்பைப் பாய்ச்சுவதும் முத்தமிடுவதுமாய்த் தனது லீலையைத் தொடர்ந்தது. தெருவிளக்குகள் சில தெரியாது மறைந்து கொள்ள, அருகே உள்ள தெருவிளக்குகளும் மின்மினிப் பூச்சிகளாய் மின்னின. அந்த இயற்கையின் மன்மதப் புணர்வும், புகையடிப்பும் அவர்கள் செய்யப்போகும் காரியத்திற்கு மிகவும் வசதியாகிற்று.

நோர்வேயிலும் நிலைமை தற்போது தலைகீழாக மாறிப்போயிற்று. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதான நிலைமை நிறமான வந்தேறுகுடிகளைப் பயம்கொள்ள வைத்தது. நோர்வே நிறமான வந்தேறுகுடிகளைத் திருப்பி அனுப்ப முடியுமானவரைத் திருப்பி அனுப்பி, மிகுதி இருந்தவர்களை முகாமில் அடைத்து வைத்தது. அவர்களையும் இப்போது எங்கோ இரகசியமாகக் கொண்டு செல்கிறார்கள் என்பதான வதந்திகள் நிறமான வந்தேறுகுடிகளிடம் நிலவி வந்தன.

அன்று இரவு திட்டமிட்டது போலப் பொலீஸ் தனது அலுவலைத் தொடங்கியது. எந்தத் தயவு தாட்சண்யமும் காட்டக்கூடாது என்பது அவர்களுக்குக் கிடைத்த கட்டளையாகும். விக்னேசுக்கும் திரிக்கும் இவ்வளவு கெதியாக இது நடைபெறும் என்கின்ற எதிர்பார்ப்பு

இருக்கவில்லை. நடுச்சாமத்தில் பொலீஸ் கதவைத் தட்ட அவர்கள் திகைத்துப் போய்விட்டார்கள். வந்தவர்கள் எந்தவித கருணையும் இன்றிக் கட்டளைகள் பிறப்பித்தார்கள். அந்தக் கட்டளைகளுக்கு அதிகாரம் சேர்க்கும் வகையில் தானியங்கித் துப்பாக்கிகள் அவர்கள் கைகளில் இருந்தன.

காவலர்கள் உடையை அணிந்துகொண்டு வருமாறு இருவரையும் அவசரப்படுத்தினர். தாமதித்தால் இழுத்துச் செல்வார்கள் போன்று திரிக்குத் தோன்றியது. திரி துணிவாக நாங்கள் ஏன் இப்போது வரவேண்டும் என்று கேட்டபோது, "அகதிகளாய் இருந்தவர்களை அனுப்பும் போது செய்த ஆர்ப்பாட்டத்தைப் பற்றி விசாரிக்க வேண்டும்." என்று கூறிச் சிரித்தார்கள். "எப்போதோ நடந்து முடிந்த ஆர்ப்பாட்டத்திற்கு இப்போது விசாரணை ஏன்?" என்பது அவளுக்கு அப்போது புரியவில்லை. கைது செய்ய வந்தவர்களிடம் பத்துக் கேள்விகள் கேட்டால் ஒரு கேள்விக்கு மட்டும் அலட்சியமாகப் பதில் வந்தது. அதையடுத்துத் திரி வெறுப்பில் அமைதியாகினாள். துப்பாக்கிகள்கூட இந்தக் காலத்தில் பேசினால் வியப்புற ஏதும் இருப்பதாய் அவளுக்குத் தோன்றவில்லை.

விக்னேஸ் கைது செய்யப்பட்டதில் இருந்து எதுவும் பேசவில்லை. அவனுக்குத் தன்னைப் பற்றிய கவலை பெரிதாக இல்லாவிட்டாலும் தனது மகளின் வாழ்வை எண்ணி மிகவும் வேதனையாக இருந்தது.

சிறிது நேரத்தில் அவர்கள் இருவரையும் பொலீஸ் ஒரு பேருந்தில் ஏற்றும் போதுதான், இது ஆர்ப்பாட்டத்திற்காய்ச் செய்யப்பட்ட கைது இல்லை என்பது அவர்களுக்குப் புரிந்தது. அந்தக் கைது தோலின் நிறத்தால் மட்டும் வந்த விளைவு என்பது அப்போது வெட்ட வெளிச்சமாகியது. அந்தப் பேருந்திற் பல முஸ்லீம் குடும்பங்களை வயது பால் என்கின்ற வித்தியாசம் இன்றி ஏற்றி வந்தார்கள். அவர்களும் என்ன நடக்கிறது என்பது புரியாது, வெட்டக் கொண்டுபோகப்படும் ஆடுகளைப் போல விழித்தார்கள். மனிதத்திற்கும் குரூரத்திற்குமான கோடுகள் இந்தநாட்டிலும் அழிந்துபோய்விட்டதான தவிப்பு திரியை வாட்டியது. யாரும் கற்பனை செய்ய முடியாத நிகழ்வாய் இது இருப்பதாகப் பேருந்தில் இருந்த சில முஸ்லீம்கள் ஆத்திரப்பட்டார்கள். அதிகம் ஆத்திரப்பட்டவர்களுக்குக் காவலர்கள் கைவிலங்கு போட்டார்கள். அதன்பின்பும் எதிர்ப்புக் காட்டியவர்களுக்குக் கால் விலங்கும் இட்டார்கள். அந்த விலங்குகள் பிளாஸ்ரிக் விலங்குகள் என்பதைத் திரி அவதானித்தாள். விக்னேசிற்கு இது ஐரோப்பிய மண்ணின் குணமாக இருக்க வேண்டும் எனத் தோன்றியது. நடந்ததை மறந்ததால் மீண்டும் நடப்பதாய் இருக்கவேண்டுமென அவன்

எண்ணினான். பலியாவது மாத்திரம் ஏன் பாவப்பட்ட நாங்களாய் இருக்கவேண்டும் என்பது மட்டும் அவனுக்குப் புரியவில்லை.

பேருந்தில் இருந்த அனைவரையும் அழைத்துக்கொண்டு அந்தப் புதிய துறைமுகத்திற்குச் சென்றனர். அது ஒஸ்லோவில் இருந்து பல மைல்கள் தூரத்திற்கு அப்பால் இருந்தது. மலையின் காலடியில் கடல் கொஞ்சும் இயற்கை வழிந்தது. அங்கே புதிதாக ஏதோ ஒரு நோக்கத்திற்காக அந்தத் துறைமுகம் கட்டப்பட்டதாய்த் தோன்றியது. பேருந்து அந்தத் துறைமுகத்திற் பலத்த பாதுகாப்போடு நின்றிருந்தது. அந்தத் துறைமுகத்திற்கு வந்தவர்களுக்காக ஒரு நவீன கப்பல் காத்திருந்தது.

பேருந்தில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக இறக்கப்பட்டார்கள். அங்கு ஆயுதப் பாதுகாப்பு இன்னும் இறுக்கமாகிற்று. யாரும் தப்ப நினைத்தால் தங்கள் உயிரைப் பலியாக்க வேண்டிவரும் என்பதை அது சொல்லாமற் சொல்லியது. அந்த நவீனக் கப்பலில் உள்ள திரையரங்கிற்குட் செல்லும்படி பயணிகள் பணிக்கப்பட்டார்கள். சிறுவர்கள், சிறுமியர்கள் சந்தோசமாய்த் துள்ளிக் குதித்துப் படம் பார்க்கும் ஆவலில் ஓடினார்கள். மனிதனை மனிதன் எவ்வளவு இலகுவாக ஏமாற்றி, சாவுக்குள் வரவழைத்து விடலாம் என்பதை அது காட்டியது. துள்ளிக் குதித்து ஓடிய சிறுவர்களுக்குச் சிற்றுண்டியும் குளிர்பானமும் கொடுக்கப்பட்டது.

திரி அப்பாவின் கையைப் பிடித்தவண்ணம் ஒரு கதிரையில் இருந்தாள். அவள் அருகில் விக்னேஸ் இருந்தான். அவள் அப்பாவைப் பார்த்து “இது எங்கள் கடைசிக்கணங்கள் அப்பா.” என்றாள். அவளுக்குக் கிரேக்கத்திலும், மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் நடப்பது பற்றிய அறிவு இருந்தது. விக்னேஸ் அழுதான். கண்களில் இருந்து இடையறாத வெள்ளிக் கோடுகள் தடையில்லாது நிலத்தை நோக்கிச் சென்றன. “உன்னை இந்த ஐரோப்பாவிற் பெற்றதிற்காய் என்னை மன்னித்துக் கொள் திரி.” எனக் கூறியவண்ணம் அவன் அவளது கைகளைப் பிடித்து முத்தமிட்டான். பின்பு அவன் உயிரே போகும் வேதனையில் குலுங்கிக் குலுங்கி அழுதான். அவள் கைகள் அவன் கண்ணீரால் நனைந்தன. அவளும் தாங்க முடியாது அப்பாவைக் கட்டிப்பிடித்து அழுதாள். இறுதிக்கணங்கள் வரப்போகும் இரணம் அவர்களை அணுவணுவாகக் கொன்றது.

வேறு சிலருக்கும் இந்தத் தியேட்டரின் வேலை என்ன என்பது புரிந்தது. அவர்கள் தங்களது கடைசிப் பிரார்த்தனையைச் செய்தனர். அறியாதவர்கள், நம்பாதவர்கள் ஆரவாரமாய்ப் படம் பார்த்தார்கள்.

## 6.5 விடிவு

ஐரோப்பாவில் நடந்த களையெடுப்பு அமெரிக்காவில் இருந்த அதிதீவிர வலதுசாரிகளையும் ஊக்கிவித்தது. அவர்களும் நிறமனிதர்கள்மீது தாக்குதல் செய்தார்கள். கொலைகள் செய்தார்கள். அமெரிக்க அரசு ஐரோப்பாவில் இருந்து வரும் செய்திகளில் அதிர்ந்து போயிற்று. தனது நாட்டிலும் அப்படி நடப்பதை அது ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அமெரிக்கா இனரீதியான சகல ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் சட்டங்களைக் கடுமையாக்கியது. இனவொற்றுமைக்கு எதிராகக் கதைப்பவர்களுக்கு, வன்முறையைத் தூண்டுபவர்களுக்குக் கடுமையான தண்டனைகளைக் கொடுத்தது. அதிதீவிர வலதுசாரிகள் அமெரிக்காவின் அந்த அதிரடி நடவடிக்கையிற் தங்கள் செயற்பாட்டை உறைய விட்டார்கள். அதன்பின்பு அமெரிக்கா ஐரோப்பாவில் நடப்பதையும் கட்டுப்படுத்த வேண்டும் என்கின்ற முயற்சியில் இறங்கியது.

எதிரிகளான அமேரிக்காவும் சீனாவும் அந்த விடயத்தில் முதல்முறை ஒற்றுமையாகின. அதற்கு இந்தியா, இரசியா, ஜப்பான் உள்பட பல ஆசிய ஆபிரிக்க, லத்தின் அமரிக்க நாடுகள் ஒத்துழைப்பு வழங்கின. அவர்கள் நடத்திய அந்த மகாநாட்டிற் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. ஐநாவை மீண்டும் உயிர்ப்பித்து, அதன்மூலம் ஐரோப்பிய நாடுகளில் நடந்த மனிதநேயக் குற்றத்தை விசாரிப்பது என்பது அங்கு முடிவாகிற்று. இரண்டாவதாக ஐரோப்பிய ஒன்றியம் என்பதைத் தற்காலிகமாகத் தடைசெய்வது என்பதும் முடிவாகிற்று. அதை மறுக்கும் நாடுகள் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்துவது எனவும் அங்கு முடிவாகிற்று. தொடர்ந்தும் நிறமனிதர்களைக் கொலை செய்யும் நாடுகளைப் போரினால் அடிபணிய வைப்பது என்பதும் அத்தோடு முடிவாகியது. அதற்காகத் தாங்கள் அணுகுண்டுகளைக்கூடப் பாவிப்போம் என்கின்ற தொனிப்பட அமெரிக்கா, சீனா, இரசியா, இந்தியா உட்படப் பல நாடுகள் அறிக்கை விட்டிருந்தன.

ஐரோப்பா இது வெறும் அறிக்கை என்று பாராமுகமாக இருந்தது. அமெரிக்காவும் அதன் தற்போதைய கூட்டாளிகளும் அவசர அவசரமாக யுத்தத் தயாரிப்புகளில் ஈடுபட்டார்கள். அதற்காக மீண்டும்

ஒருமுறை மிகப்பெரிய ஐதரசன்அணுகுண்டு ஒன்றை அலாஸ்காவில் வெடிக்க வைத்தார்கள். அதன்பின்பு அறிக்கை விட்டிருந்த அமெரிக்கா இது சாதாரண பரீட்சார்த்தமெனவும் இன்னும் சில நாட்களுக்குள் கொலைகளை நிறுத்தி, ஒப்பந்தத்திற்கு வராத நாடுகளின் நகரங்களில் இப்படியான அணுகுண்டுகள் வெடிக்கலாமெனவும் கூறிற்று.

அதன்பின்பு இருப்புக்கு நாசம் என்பதைப் புரிந்துகொண்ட ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றாக ஒப்பந்தம் செய்யத் தயாராகின.

அதையடுத்து அதிதீவிர வலதுசாரிகள் பலர் கைது செய்யப்பட்டு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். இந்தியபாகிஸ்தான் யுத்தத்திற்குப் பொறுப்பானவர்களும் அங்கு கொண்டுவரப்பட்டார்கள். அங்கு அவர்களுக்கு எதிரான விசாரணைகள் நடந்தன. மனிதத்தை நிந்தித்தமைக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டன. அவர்களின் பல கட்சிகள் நிரந்தரமாகத் தடைசெய்யப்பட்டன.

பின்பு வந்த காலங்களில் அதீத பொருளாதார வீழ்ச்சி ஐரோப்பாவைத் தாக்கியது. அதேவேளை பெருகிப் போய் இருந்த வயதுபோனவர்களைக் கவனிப்பதற்கு ஆள் இல்லாத அவலம் தொடர்ந்தது. அவர்கள் அந்தப் பொருளாதார வீழ்ச்சிக்குப் பெரும் காரணமாய் அமைந்தார்கள். இளம் வயதினர் தொகை மிகவும் குறைவாக இருந்ததால் வேலைசெய்யக் கூடியவர்களின் தொகையும் குறைவாகிற்று. அது மேலும் மேலும் பொருளாதாரத்தையும், சமுக சேவைகளையும் கடுமையாகப் பாதித்தது.

ஐரோப்பாவின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அதிக இளம் வயதினர் தேவைப் பட்டார்கள். ஆசியாவிலும் மற்றைய பகுதிகளிலும் அந்த வலு இருந்தும், வரலாறு அவர்களை ஐரோப்பா செல்லாது தடுத்தது. ஐரோப்பாவில் இருந்து வயது போனவர்களைப் பராமரிப்பதற்கு ஆசியாவுக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் வந்தது. அதற்கும் பொருளாதார வசதிகள் இல்லாது பல ஐரோப்பிய நாடுகள் திண்டாடின. அதேவேளை ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமரிக்க பொருளாதாரம் மிகவும் பலமாக வளரத் தொடங்கியது.

ஐரோப்பா தனது பல தேவைகளைச் சுயமாகப் பூர்த்தி செய்யமுடியாது, குடியேற்ற வாசிகளுக்குப் பல சலுகைகளைச்

செய்தது, அவர்களைக் கவர முயன்றது. சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது என்பதாய் நிறமனிதர்கள் தங்கள் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் அந்தந்த நாடுகளைவிட்டு வெளியேற விரும்பவில்லை. அது ஐரோப்பாவில் பெரும் மனித அவலங்களை ஏற்படுத்தியது.

தகவல்கள்


http://en.wikipedia.org

youtube.com

Holocaust : historien og menneskene

Wood, Angela Gluck

Nazismens fremvekst

Freeman, Charles